வெளியீடு :
யாழ். இந்துக்கல்லூரி
91 பிரிவு சக மாணவர்கள்..



# நினைவுகளுடன் பேசுதல்...

வெளியீடு :
யாழ். இந்துக்கல்லூரி
91 பிரிவு சக மாணவர்கள்..



# நினைவுகளுடன் பேசுதல்...





பல்கலைக்கழக வாழ்வில்...

நாட்டுப்பற்றாளன்
சத்தியமூர்த்தி
கடந்து சென்ற
பாதையில்....



இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் குடும்பத்தினருடன்...

## நாட்டுப்பற்றாளன் சத்தியமூர்த்தி கடந்து சென்ற பாதையில்....





ஆய்வரங்குகளில் கருத்துக்களின் தெளிவுடன்...



ஓவியர் புகழேந்தி, முன்னாள் கல்வியமைச்சர் குருகுலராஜா ஆகியோருடன்...



இலக்கிய நண்பர்களுடன்....

# நாட்டுப்பற்றாளன் சத்தியமூர்த்தி
# கடந்து சென்ற பாதையில்....







குட்டியம்மா சிந்துவின் முதலாவது பிறந்தநாளில் பூரித்தபடி...



குடும்பத்தினருடன்....

# நாட்டுப்பற்றாளன் சத்தியமூர்த்தி
# கடந்து சென்ற பாதையில்....



அன்பு மகளின் இறுதி முத்தங்கள்....



காதல் மனையாளின் அழுகுரல் கேட்கிறதா...?



அப்பா வியர்க்கிறதா....



ஆறுதல் கூற வார்த்தையின்றி
அருட்தந்தை றெஜினோல்ட் அடிகள்...


படையல்...

எங்கள்
பு.சத்தியமூர்த்திக்கும்
உலகெங்கும்
அடக்குமுறைக்கு எதிராகவும்
மானுட உரிமைகளுக்காகவும்
எழுதுகோல் ஏந்திப் போராடிய
சக
ஊடகப் போராளிகள்
அனைவருக்கும்...

## நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | "பு.சத்தியமூர்த்தி<br>நினைவுகளுடன் பேசுதல்" |
| நூற்பதிப்பு | : | 12.02.2019 |
| பதிப்புரிமை | : | திருமதி நந்தினி சத்தியமூர்த்தி,<br>சிந்து சத்தியமூர்த்தி. |
| பிரதிகள் | : | 1000 |
| மலர்த் தொகுப்பு | : | ராதேயன்<br>வேலணையூர் சுரேஸ்,<br>பு. கமல நந்தினி<br>கை. சரவணன்<br>ஜெ.கோகிலவாசன் |
| அனுசரணை | : | யாழ். இந்துக்கல்லூரி<br>91 பிரிவு சக மாணவர்கள். |
| அச்சுப்பதிப்பு | : | எவகிறீன் அச்சகம்,<br>கே.கே.எஸ்.வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>தொ.பே: 021 221 9893 |

| | |
|---|---|
| Name | : Pu.Sathiyamoorththi<br>Speaking with memories... |
| Published by | : 12.02.2019 |
| copy Right | : Mrs.Nanthini Sathithiyamoorthi<br>Sinthu Sathithiyamoorthi |
| Number of copies | :1000 |
| Edition | : Ratheyan<br>Velanaiyoor Suresh<br>pu.Kamalananthini<br>Kai.Saravanan.<br>J.Kokulavasan |
| Sponsor | : J/Hindu collage<br>91 Batch Students |
| Printers | : Evergreen Printers,<br>K.K.S.Road,<br>Jaffna,<br>T.P: 021 221 9893 |



# சத்தியமூர்த்தி நினைவுகளுடன் பேசுதல்...

தசாப்தம் கடந்த பின்னரும்

பல தசாப்தங்களுக்குத் தொடரப் போகும் அவன் பதித்துச்சென்ற அழியா நினைவுத் தடங்கள் தொடர்ந்து சென்று கொண்டே இருக்கும்.

இலட்சிய இலக்கும், இலக்கிய ஓர்மமும் அவனது ஊடகப் பயணத்தில் ஆயுத பலம். அத னால் அவன் காலத்தால் வீழப்போவதில்லை. காலம் கடந்தும் வாழப் போகிறான்.

சொந்த வாழ்விலும் சரி, பொதுவாழ்விலும் மானுட நேயம் மாறாக் குறிக்கோளுடன் வாழ் வோர் வெகு சிலரே.

சத்தியமூர்த்தி அத்தகைய உணர்வோடிணைந்த வாழ்வை வாழ்ந்தவன்.

எனவே அவன் எமது பெருமிதத்திற்குரிய தோழன் என கம்பீரமாக எம்மால் கூறிக்கொள்ள முடிகிறது.

வரலாற்றில் வாழும் அவன் நினைவுகளும் அவன் கனவுகளை நனவாக்க நாமும் அவனது சுவடுகளில் பாதம் பதித்து பயணிப்பதே எமது இலக்கு.

இச்சிறு நூலில் அவன் நினைவுகளை ஆவணப் பதிவாக்க சக மாணவ நண்பர்கள் நாம் முயன்றுள்ளோம், அவ்வளவு தான்.

நீங்காத நினைவுகளுடன்....
பள்ளித் தோழர்கள்
91 பிரிவு மாணவர்கள்.

**யாழ்.இந்துக்கல்லூரி**
**சகமாணவர்கள்.**
(91 பிரிவு)

# சத்தியமூர்த்தி நினைவுகளுடன் பேசுதல்...



நினைவுகளுடன் பேசுதல் என்பதும் நினைவு களால் பேசுதல் என்பதும் வரையறைகளுக்குள் அடங்காதவையே. அதிலும் உண்மைக்கும் உழைப் புக்கும் நேர்மைக்கும் பொறுப்புக்கும் உதாரண மான ஒருவரது நினைவுகள் என்பது நிதான மானது. ஆழமானது. இருக்கும் போது பேசுவதற்கும் இல் லாத போது பேசுவதற்கு மிடையிலுள்ள பெருவெளி பரந்தது.

எதையும் எப்படியும் வயிற்றுக்கு நிறைவாக சோறு வரும் விதமாக பேசிப் பழகியவர்களுள்ள சூழலினுள் நின்று பேச விளைதல் என்பது கடின மான தொன்று. உண்மைதான் என்பதற்காக எதை யும் பேச முடியாது. கூடாது. தளம் கூறும் யதார்த்த நிலை இது.

தொண்டைக்குத் தெரியாமலேயே நெஞ்சுக் குழிக்குள் பொத்தி வைக்க வேண்டி யவையும் ஏரா ளம் உண்டு. வகைப்படுத்தல் என்பது தவிர்க்க முடி யாத தாக முன்னே நின்று உறுமுகிறது.

பு.சத்தியமூர்த்தியின் நினைவுகளுடன் பேசி னாலும் சரி அவருடைய நினை வுகளைப் பேசி னாலும் சரி முதற்கூறிய யதார்த்தம் உறுத்துகிறது. "கோழி திண்டாய் எண்டதிற்காய் சிறகுகளைக் கோத்து மாலையா போடுவாய்?" என்ற பேச்சு சத்தியமூர்த்தியாலும் பல தடவை பேசப்பட்டது. அதுவும் உண்மைதான்.


கலை இலக்கிய சமூக அமைப்பாகப் பெற்றுப் பிரசவித்த "எழு"விற்கு தந்தை இல்லை. காப்பா ளரும் இல்லை. ஆனால் "எழுதி முடியாக் கதை"யை காப் பாளருக்கும் "நினை வுகளுடன் பேசுதலை" தந் தைக்குமாய் படையலிடுவது பிள்ளையின் கடமை யாயிற்று. செய்கிறோம் செய்யவேண்டியவற்றைப் பட்டியலிட்டபடியே.

தேடல்- அறிதல்- உயர்தல் என மகுட வாசகம் சூட்டிய தந்தையினது நினைவு களுடன் பேசிய படியே எழுவின் தடம் மாறாப் பயணம் தொடரும்.

**எழுகலை இலக்கியப் பேரவை,**
யாழ்ப்பாணம்.







# கார்ல் மார்க்ஸ் சொல்கிறார்....

"எவன் ஒருவன் பணம் கொள்ளை அடிக்கப் பத்திரிகையைப் பயன்படுத்துகிறானோ, அவன் தண்டிக்கப்பட வேண்டியவன். ஏனென்றால், அவன் வணிக நோக்கங்களுக்கு அடிமையாகி விடுகிறான்' என்ற பத்திரிகை இலட்சியங்களைக் கொண்டவர் மார்க்ஸ். அதனால்தான் எனது ஆசிரியர் பதவியை விட்டு விலகினேன்" என்றார். அவர் ஆசிரியர் பதவியை விட்டு விலகியதும் விற்பனைக் குன்றியது. பிறகு பத்திரிகை நிறுத்தப்பட்டு விட்டது.

நிறுத்தப்பட்ட பத்திரிகையை பற்றி அவர் ஒரு மேடைப் பேச்சில் மக்களுக்கு விளக்கம் தந்தார். அந்தப் பேச்சு இது :

'ஒரு பத்திரிகை நின்று விட்டது என்றால் என்ன பொருள்? சுயமாகச் சிந்திப்பவர்களுக்கும், மக்களுக்காகப் போராடுகிறவர்களுக்கும் இனி ஜெர்மனியில் இடம் கிடையாது என்பது தானே?"

'மக்களுக்கு அவர்களுடைய நிலைமைகளை எடுத்துக் கூற வேண்டும் என்றால், மக்களோடு பத்திரிகை ஏராளமாகப் பேச வேண்டாமா? அவ்வாறு பேசிட உரிமை வேண்டாமா?"


'அந்த உரிமை இல்லையென்றால் மக்களுக்காகப் போராடுகிறோம் என்று கூறிக் கொள்வதில் என்ன பயன்?"

'ஓர் அரசின் தயவில் இருந்து கொண்டு மக்களுக்காக உழைக்கிறோம் என்பதெல்லாம் வெறும் பாசாங்கு! ஏமாற்று வித்தை!' என்றெல்லாம் சற்று விரிவாகவே முழக்கமிட்டார் மார்க்ஸ். வேறொரு மேடையிலே பத்திரிகைச் சுதந்திரம் பற்றி மார்க்ஸ் பேசும்போது :

'பத்திரிகைக்கு சுதந்திரம் வழங்குகிறோம் என்று ஓர் அரசு கூறிக்கொண்டு, அதனை வளரவிடாமல், அரசைத் தட்டிக் கேட்க உரிமை வழங்காமல், கீழறுப்பான் வேலைகளைச் செய்வது மகா கேவலம் வெளி வேஷம் முட்டாள் தனம்!







## பத்திரிகை பற்றி புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீ தான்! இந்தப்
பாரிடைத் துயில்வோர் கண்ணில்
பாய்ந்திடும் எழுச்சி நீ தான்!
ஊரினை நாட்டை இந்த
உலகினை ஒன்று சேர்க்கப்
பேரறிவாளர் நெஞ்சில்
பிறந்த பத்திரிகைப் பெண்ணே

அறஞர்தம் இதய ஓடை
ஆழநீர் தன்னை மொண்டு
செறிதரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக்
குவலயம் ஓங்கச் செய்வாய்!
நறுமண இதழ்ப் பெண்ணேஉன்
நலம்காணார் ஞாலம் காணார்.

கடும்புதர் விலக்கிச் சென்று
களாப்பழம் சேர்ப்பார் போலே
நெடும்புவி மக்கட்கான
நினைப்பினிற் சென்று நெஞ்சிற்,
படும்பல நுணுக்கம் சேர்ப்பார்
படித்தவர். அவற்றை யெல்லாம்
"கொடும்" என அள்ளி உன்தாள்
கொண்டார்க்குக் கொண்டு போவாய்!

வானிடை நிகழும் கோடி
மாயங்கள், மாநிலத்தில்
ஊனிடை உயிரில் வாழ்வின்
உட்புறம் வெளிப்பு றத்தே.

தொகுப்பு - ரெஜினா





ஆன நற்கொள்கை, அன்பின்
அற்புதம் இயற்கைக் கூத்துத்,
தேனிதழ் தன்னிற் சேர்த்துத்
தித்திக்கத் தருவாய் நித்தம்!

சிறுகதை ஒன்று சொல்லிப்
பெருமதி யூட்டும் தாளே!
அறைதனில் நடந்தவற்றை
அம்பலத்திழுத்துப் போட்டுக்
கறையுளம் தூய்மை செய்வாய்!
களைப்பிலே ஊக்கம் பெய்வாய்!
நிறைபொருள் ஆவாய் ஏழை
நீட்டிய வெறுங்கரத்தே.

ஓவியம் தருவாய்! சிற்பம்
உணர்விப்பாய்! கவிதை யூட்டக்
காவியம் தருவாய்! மக்கள்
கலகல வெனச் சிரிப்பு
மேவிடும் விகடம் சொல்வாய்!
மின்னிடும் காதல் தந்து
கூவுவாய்! வீரப் பேச்சுக்
கொட்டுவாய்க் கோலத் தாளே!

தெரு பெருக் கிடுவோருக்கும்
செகம்காக்கும் பெரியோர்க் கும்,கை
இருப்பிற் பத்திரிகை நாளும்
இருந்திடல் வேண்டும்! மண்ணிற்
கருப்பெற் றுருப்பெற் றிளநடை
பெற்றுப் பின்னர் ஐந்தேஆண்டு
வரப்பெற்றார், பத்திரிகை நாளும்
உண்டென்றால் வாழ்க்கை பெற்றார்!





**த. குருகுலராஜா,**
முன்னாள் வடமாகாண
கல்வி அமைச்சர்,
கானான், தருமபுரம்.



# சொற்ப மானுட வாழ்வில் நிறைவு கண்டு ஒப்பற்றவனாகியுள்ளான்...

**கா**லம் அவ்வேளையில் புதிய நியமனம் பெற்று எனது பணிமனையில் எழுதுவினைஞராக பலர் நியமனம் பெற்றுவந்தார்கள். அவர்களிலொருவன் சத்தியமூர்த்தி.

அக்காலம் அவர் எழுது வினைஞர்களுக்கெல்லாம் வசந்தமாக இருந்தாலும் இழப்புக்களும் முட்டி மோதின. இவற்றை எல்லாம் கறை எனக் கழைந்து புதிதாக வந்த புதிய கரங்கள் மிகச் சிறப்பான பணியை ஆற்றினார்கள். இப்போதும் அவர்களில் பலர் மிகச் சிறப்பான சேவை செய்கிறார்கள். சத்தியமூர்த்தி இருந்திருந்தால் அதையே நந்தியினியுடன் சேர்ந்து செய்திருப்பான். 2000- 2001 ஆண்டு காலப் பகுதியில் முல்லைத்தீவு கல்வி வலயத்தின் முறைசாராக் கல்விப் பிரிவினரால் நடத்தப்பட்ட ஊடகத்துறைப் பயிற்சியில் பல வித்துவான்கள் சேர்ந்தனர். அவர்கள் எல்லோரும் சேர்ந்து பயிற்சியின் போது "பூராயம்" என்ற நாமத்தில் ஒர் செய்திப் பிரசுரத்தை பல இதழ்களை வெளியிட்டனர். காரசாரமாக செய்திகளை வெளிப்படையாகப் பொறித்தனர். உண்மைகள் பல வெளிவந்தன. மிக காத்திரமான, வாண்மைமிகு பயிற்சியாக முடி வடைந்தது. பலர் தமது எழுத்தைத் தொடர்கதையாக்கினார்கள். அப்பயிற்சியில் சத்தியமூர்த்தியின் காதல் கனவு நந்தி னியுடன் நனவாகிற்று.





நான்கு வருடங்களின் பின்னர் கிளிநொச்சியில் கல்விப் பணியாற்றியபோது நந்தினி மூர்த்தியின் கனவாகிய காதல் திருமணமாயிற்று. கிளிநொச்சியில் காலத்தின் கோலமாயிற்று. வெகு எளிமையான மணப்பந்தல் வைபவம் நிறைவேற்றி மனம் மகிழ்ந்து சத்தியமூர்த்தியின் எழுத்துலக நண்பர்கள் புடைசூழ திருமாங்கல்யத்தை சத்தியமூர்த்தி அணிவித்தார்.

அந்த நினைவு இன்றும் மனதிலுள்ளது. இவ் வைபவத்திற்கு சில தினங்களுக்கு முன்பதாக அமெரிக்க நாட்டுப் பிரபல்யமான பாடகல் ஜோன் டென்வர் இயற்றிப் பாடிய ஆங்கிலப் பாடலை நீண்ட நாட்களுக்குப் பின்னர் கேட்கும் வாய்ப்புப் பெற்றிருந்தேன். அது டென்வர் தனது மனைவிக்காக அர்ப்பணித்த காதல் பாட்டு, உலகப் பிரசித்தி பெற்றது.

இப்பாடலை தமிழாக்கம் செய்து எனது திருமணப் பரிசாக மூர்த்தி, நந்தினி தம்பதிக்கு வழங்க வேண்டும் என்ற விருப்பில் யார் மூலம் இதனை மொழி பெயர்க்கலாம் என்று எண்ணும் போது பெரியவர் ஜோசேப்பின் ஞாபகம் வந்தது.

ஆனால் மொழிபெயர்க்க அவரிடத்தில் ஆங்கிலப் பிரதியை அனுப்பும் முன் என்னைச் சந்திக்க வந்த ஆங்கில ஆசிரியர் ஒருவரிடம் ஆங்கிலப் பிரதியைக் கொடுத்து அதனை மொழிபெயர்க்கக் கேட்டேன் எனது அலுவலக அறையிலே இருந்து மிக விரைவாக அதனை மொழி பெயர்த்து வழங்கியிருந்தார். பின்னர் ஜோசேப் அவர்களின் மொழிபெயர்ப்பும் கிடைத்தது. இரண்டு மொழி பெயர்ப்பையும் ஆங்கிலப் பிரதியையும் மணமக்களிடம் வழங்கிய ஞாபகம் மீண்டெழுகிறது.

சத்தியமூர்த்தி நந்தினி மேல் கொண்ட காதலை இப்பாடல் அற்புதமாகச் சொல்கிறது. சத்தியமூர்த்தியும் " அற்புதம்" என்ற சொல்லை அடிக்கடி தனது பேச்சுக்களில் சொல்லியதை உணர்ந்துள்ளேன். சொற்ப மானுட வாழ்வில் நிறைவு கண்டு மறைந்த ஒப்பற்றவனாகியுள்ளான் சத்தியமூர்த்தி. இவனது நினைவு நீடித்து நிலைக்க இச்சிறிய நூல் உலகின் பல மூலைகளுக்கும் செல்ல வேண்டும்.

பசுமையான சத்திய நினைவுடன் வாழும் நந்தினியும், மூர்த்தியின் உயர்... .. நீடூழி காலம் சத்தியத்தின் ஒளியாக வாழ வாழ்த்துகின்றேன்.



ஓவியர் புகழேந்தி



## பு.சத்தியமூர்த்தி...

என்னுடைய "புயலின் நிறங்கள்" ஓவியக் காட்சியை தமிழீழத்தில் 2005 ஆம் ஆண்டு இயக்கம் பல இடங்களில் நடத்தியது. முதல் இடமாக கிளிநொச்சியில் மே 18 லிருந்து 21 வரை நடைபெற்றபோது ஒரு நாள் தன் மனைவி நந்தினியோடு ஓவியக் காட்சியை பார்வையிட வந்திருந்தார். அப்போது தான் அறிமுகம். கூட்டம் அதிகமாக இருந்ததால் அதிகம் பேச முடியவில்லை.

வன்னி மண்ணில் பல இடங்களில் ஓவியக் காட்சி நடைபெற்று நிறைவுற்றதைத் தொடர்ந்து கிளிநொச்சிப் பண்பாட்டு மண்டபத்தில் 04.06.2005 அன்று எனக்கு கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது. அன்றும் சத்தியமூர்த்தி வந்திருந்தார். நீண்ட நேரம் என் அருகில் இருந்தத்தோடு சிறிது நேரம் உரையாடவும் முடிந்தது.

அதன் பிறகு பலமுறை தமிழீழம் சென்று மாதக் கணக்கில் நின்றிருந்தாலும் அவரை சந்திக்க வாய்ப்பில்லாமல் போய்விட்டது.


புயலின் நிறங்கள் ஓவியங்களை இயக்கம் நூலாக்கம் செய்தது. அதன் வெளியீட்டு நிகழ்வு கிளிநொச்சிப் பண்பாட்டு மண்டபத்தில் 30.11.2005 அன்று நடைபெற்றது. அந்நிகழ்விற்கும் வந்திருந்தார். மிக நெருக்கமாக பழக வாய்ப்புக் கிட்டவில்லை என்றாலும் என் செயல்பாடுகளோடு நெருங்கி நின்றவர். பழகுவதற்கு இனிமையான நண்பர். சிறந்த ஊடகவியலாளர்... அவருடைய ஆக்கங்கள் பலவற்றை நான் படித்திருக்கிறேன். இறுதிவரை தமிழ்த்தேசிய உணர்வோடு செயலாற்றியவர். அவருடைய எழுத்துகளும் செயல்களும் காலங்கள் கடந்தும் நிற்கும். எதிர்காலத் தலைமுறையை வழிநடத்துவதற்கு அவற்றை ஆவணமாக்க வேண்டும்.





# சத்தியத்தின் மறுவடிவம் சத்தியமூர்த்தி

பண்டிதர்
**ச.வே.பஞ்சாட்சரம்**
**கனடா.**



**உ**ள்ளத்தால், பேச்சால், செயல்களால் பொய்மை கலவாத வாழ்வு கொண்ட ஒருவனுக்கு சத்தியமூர்த்தி என்று பெயரிட்டு வைத்த பெற்றோரின் தீர்க்க தரிசனம் பாராட்டப்பட வேண்டியதாகும். இளைய இனிய ஏராளம் உயிர்களை இன விடுதலைக்காக ஆகுதியாக்கிக் கொண்டு தொடர்ந்த தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இலட்சியப் பிழம்பாய் இறுதி வரை வாழ்ந்து இரைபோன என் மாணவனான ஊடகவியலாளன் சத்தியமூர்த்தி பற்றியே இங்கு எழுதுகிறேன்.

யாழ்.இந்துக் கல்லூரியில் என் தமிழ்ப்பாட மாணவர்களுள் ஒருவனாக விளங்கிய சத்தியமூர்த்தி எல்லோரிடமும் குழைந்து குழைந்தும் ஆசிரியரான, மூத்தவர்களான என் போன்றவர்களிடமும் அந்தக் குழைவோடு பணிவாகவும் பழகும் பண்பானது எனக்கும் அவனுக்கும் இடையில் நிலவிய உறவை நெருக்கம் மிக்கதாக்கியது. அதனால் எனது ஊரின் மேற்கெல்லைக் கற்பக விநாயகர் ஆலயச் சூழல் அவனது பூர்வீகம் என்றும் அவனது தாயார் பாட்டி வீட்டில் இருந்து இணுவில் இராமநாதன் கல்லூரிக்கு எங்கள் தோட்டத்தின் ஓரமாக நான் காண நடந்த சென்று படித்து வந்தவர் என்றும், அவர் கிழக்கு மாகாணத்தில் மன்னம்பிட்டியில் மணமாகிச் சென்று பின் இணுவில் வைத்தியசாலையில் பெற்றெடுத்து அங்கு கொஞ்ச காலம் வளர்ந்த பிள்ளை அவன் என்றும்



அறிய நேர்ந்தது. அதனால் எங்கள் உறவு இன்னும் இறுக்கமாகியது. அவனது நண்பன் ஒருவனின் கவிதைகளை வீடு தேடி என்னிடம் கொணர்ந்து தந்து திருத்துவித்து, சாற்று கவி எழுதுவித்து அச்சிட்டு நூலாக்கி யாழில் குமாரசாமி மண்டபத்தில் வெளியீட்டு விழாவும் நடத்துவித்திருந்தான்.

அன்று அவ்வாறு பிறருக்குரியவனாக விளங்கிய அவனை, 1995 செம்மணியூடான வலிகாம ஒட்டுமொத்தத் தமிழரின் இடப்பெயர்வில் வன்னி போய்ச் சேர்ந்து அங்கு நாமிருவரும் சந்தித்த போது அவனை சிங்களப் பேரினவாதத்தின் தமிழின அழிப்பு வெறியை எதிர்க்கும் அதே வேளை நடுநிலை தவறாத உத்தம ஊடகவியலாளனாகவும் கண்டு பெருமிதமுற்றேன். அக்காலத்தில் புதுக்குடியிருப்பில் இணுவையூர் சிதம்பர திருச்செந்தில்நாதன், வேலணையூர் சுரேஷ், முல்லைக்கமல், கை.சரவணன் முதலியவர்களுடன் சேர்ந்து எழுகலை இலக்கியப் பேரவையை ஆரம்பித்து "ஈழநாடு" மாத இதழின் உதவி ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டு "பு.சிந்துஜன்" என்ற புனை பெயரில் கவிதைகளும், சிறுகதைகளும் எழுதி வந் தான்.

2005 இல் அவனுக்கு சமனான பணிவும், பண்பும் கொண்டவளும் ஈழநாடு, ஈழநாதம் பத்திரிகை ஆசிரியர் குழாங்களில் பணியாற்றியவளும் திருமலையைச் சேர்ந்தவளுமான பொன்னுத்துரை நந்தினி என்னும் மங்கைநல்லாளை கந்தர்வ மணம் புரிந்து சிந்து என்னும் மழலைச் செல்வத்தைப் பெற்றான்.

2006 இல் நான் கனடாவுக்கு வந்த பின் கனடாவிலிருந்து வெளிவந்த உலகத் தமிழ் பத்திரிகை, கனேடியத் தமிழ் வானொலி, ரீ.ரீ.என் தொலைக்காட்சி என அவன் எழுதிய, வழங்கிய துணிகரமான, நேர்மையான அரசியல் ஆய்வுகளால் அவன் 2009 இல் எறிகணைக்கு இரையான போதும் இன்று வரையும் அவனை கனேடியத் தமிழ்சமூகம் நினைந்து நினைவு கூருகிறது. ஈழ விடுதலை இலட்சிய நெருப்பைத் திரி தூண்டி வருகிறது. அவனைத் தமிழினம் என்றும் ஏத்தும் என்பதில் ஐயம் இல்லை.





# சத்தியமூர்த்தி எங்கள் வரலாற்றின் ஓர் அங்கம்!

**நல்லையா விஜயசுந்தரம்**
பிரதம ஆசிரியர்,
வலம்புரி நாளிதழ்.



**என்** அருமைத்தம்பி சத்திய மூர்த்தியின் நினைவுக் குறிப்பைப் பதிவு செய்கின்ற இந்த வேளை என் இதயம் கனத்துக்கொள்கின்றது. சத்தியமூர்த்தி இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கின் றான் என்ற என் நினைப்பிற்கு அவன் இல்லை என்பதாக நினைவுக் குறிப்பை எழுதுவது வேதனைக்குரியதுதான்.

இழப்பின் வலியை காலம் மாற் றுகிறது என தத்துவவாதிகள் கூறிக் கொள்வர். உண்மை அதுவன்று. இழப் பின் வலியை மாற்றுவதற்காக மனித மனம் இறப்பில் இருந்து ஓர் உயிர்ப்பை தன்னுள் உருவாக்கிக் கொள்கிறது. உயிர்த்தெழுதல் என்பதனூடாக அல் லது விதைக்கப்பட்டவன் என்றோவொரு நாள் முளைத்தெழுவான் என்ற நம்பிக் கையை வலிகொண்ட மனங்கள் தமக் குள் உருவாக்கிக் கொள்கின்றன.

சத்தியமூர்த்தியை அறிந்தவர்கள், அவனோடு பழகியவர்கள், உடனிருந்து கற்றவர்கள், கடமையாற்றியவர்கள் என அனைவரும் சத்தியமூர்த்தி இன்ன மும் வாழ்கின்றான் என்ற அங்கீ கரிப்போடுதான் அவனின் இறப்பை மறந்து வாழ்கின்றனர். இயற்கையின் சூழலில் நிலையாமையை உணர்ந்து கொண்ட மனம் தன்னைத் தேற்றிக்



கொள்ள முற்படுகின்றதாயினும் நினைவுகள் ஒருபோதும் அழிவற்றவை.

ஆம், தம்பி சத்தியமூர்த்தி என் மண்டைதீவு மண்ணில் வாழ்ந்தவன். அவனின் ஆரம்பக் கல்வி மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் ஆரம்பமானது. என் இல்லிடத்திற்கு அருகில் அவனின் வீடும் இருந்ததால் அவனை அடிக்கடி சந்திக்கின்ற சந்தர்ப்பம் அதிகம்.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சத்தியமூர்த்தி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சேர்ந்து கொண்டான். எனினும் மண்டைதீவில் இருந்தே யாழ். இந்துக் கல்லூரிக்குச் சென்று வருவது வழக்கமாய் இருந்தது.

அவனோடு அவனது தம்பி கணேசமூர்த்தியும் மண்டைதீவில் தங்கியிருந்து மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் படித்துக் கொண்டிருந்தான். அமைதியான, இயற்கையின் எழில் மிகுந்த கிராமத்தின் உறவுப் பண்பாட்டை தன்னகத்தே கொண்டிருந்த மண்டைதீவு சத்தியமூர்த்திக்கு மிகவும் பிடித்தமான ஊராயிற்று.

மண்டைதீவு திருவெண்காட்டுப் பிள்ளையார் ஆலயத்தில் வெள்ளிக்கிழமை தோறும் இடம்பெறும் கூட்டுப் பிரார்த்தனையில் சத்தியமூர்த்தியின் பங்கேற்பு சக மாணவர்களை உற்சாகப்படுத்தும். திருவெண்காட்டின் மேற்குத் திசையில் அமைந்த தாழ்வு கிணற்றுக் குளியல் குற்றாலத்து நீராடலுக்கு நிகரானது. அந்த அற்புதமான சூழலில் எம்மோடு ஒருவனாக வாழ்ந்த சத்தியமூர்த்தி தமிழினத்தை- தமிழ் மக்களை, தமிழ் மண்ணை ஆழமாக நேசித்தவன். அவனின் இனப்பற்று எந்தச் சந்தர்ப்பத்திலும் இளகிக் கொண்டதல்ல.

யாழ்ப்பாணத்துப் பல்கலைக்கழக மாணவனாக இருந்த வேளையிலும் வன்னிப் பெருநிலப்பரப்பில் அவன் வாழ்ந்த போதிலும் ஊடகத்துறையில் அவனின் பணி உயர்வுற்றிருந்த போதிலும் தமிழர் தாயகமே அவனின் இதயத் துடிப்பாக இருந்தது.

என் செய்வது, யுத்தத்தின் இறுதி நேரத்தில் சத்தியமூர்த்தி நம்மை விட்டுப் பிரிந்து விட்டான் என்ற செய்தியை வானலையில் கேட்டபோது தாளா வேதனை நெஞ்சை அடைத்துக்கொண்டது.

சத்தியமூர்த்தி, அவனின் தம்பி கணேசமூர்த்தி இவர்கள் இன்று நம்மோடு இல்லை என்ற நினைப்போடு தங்கள் பிள்ளைகள் போல இருவரையும் வளர்த்தெடுத்த சின்னையா தாத்தா, பாட்டி அவர்களின் பரிவு. எல்லாவற்றையும் சேர்த்து நினைத்துப் பார்க்கின்றேன்.

இந்த நிஜங்கள் நாங்கள் வாழ்ந்த காலத்தில் நடந்த தியாகங்களின் வரலாற்று அம்சங்கள். இந்த உண்மையோடு என் அருமைத்தம்பி சத்திய மூர்த்திக்காக வெளிவரும் இந்நினை வேடு அவனுக்கான அன்புக் காணிக்கையாகும்.

ஓம் சாந்தி





மூத்த ஊடகவியலாளர்
**ராதேயன்.**

# வரலாற்றில் வாழும் ஊடகவியலாளன்....



**என்** மனதிற்குரிய இளவல் சத்தியமூர்த்தி நம்மைவிட்டு விலகி-அல்லது பிரிந்து போய் ஒரு தசாப்தகாலமாகி விட்டது என்ற காலக் கணக்கு நம்பமுடியாத ஒன்றாக உள்ளது.

அவன் எம்மிடமிருந்து ஒரு காலக் கட்டாயத்தால் எம்மைவிட்டுப் பிரிந்தாலும் அவனது புன்னகையும் புதுநிலவு போல் வரும் தோற்றமும் இன்னமும் அப்படியே பசுமை காட்டி நிற்கும் விந்தையை நான் எப்போதுமே வியப்புடன் உணர்வதுண்டு.

அந்த அளவுக்கு அவனுக்கும் எனக்குமான தொடர்பு அர்த்தமும் ஆழமும் மிக்க சகமனித நேயத்தின் அடிப்படையில் உருவானதொன்று என்ற விடயம் நானும் அவனும் மட்டுமே புரிந்துகொண்ட உண்மை.

-"நான் சத்தியமூர்த்தி" என அவன் தன்னை எனக்கு அறிமுகம் செய்தபடி எனது வீட்டிற்கு வந்துநின்ற முதல் நாள் என் மனதில் இன்னமும் பசுமையாக நினைவில் உள்ளது.

யாரோ ஒரு போராளித் தங்கையுடன் ஏதோ ஓர் முக்கிய கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்த நான் சற்றே நிமிர்ந்து மெலிதான தயக்கம் கலந்த புன்னகையுடன் நின்றிருந்த அவனை நோக்கி-

"யார்? நா.பார்த்தசாரதி எழுதிய குறிஞ்சி மலர் நாவலின் நாயகன் சத்தியமூர்த்தியா? வாங்கோ என்ற போது



குபீரென அவனுள் இருந்த அந்த குபீர்ச் சிரிப்புடன் தன்னை அவன் இனம்காட்டிய நிகழ்வு ஒரு அற்புதமான ஆரம்பமே...!

இது நடந்தது 1996 நடுப்பகுதியாக இருக்கலாம்.

"சேர்... உங்களைப் பற்றி புதுவை யண்ணர், செந்திநாதன் அண்ணை அதி கம் கதைப்பார்கள்... அதுதான் உங்களைச் சந்திக்க வேண்டும் எண்டு வந்தன்... நீங்க பிஸியாக இருந்தால் இன்னொருநாள் நான் வருகிறேன்..." என அதே மாறாப் புன்ன கையுடன் கூறிய அவனிடம் "ஒரு பத்து நிமிடம் இருங்கள் பேசலாம்" என்று விட்டு மேசையைக் காட்டி அங்கு புத்தகங்கள் உள்ளன பாருங்கள் இதோ வருகிறேன்" என்று கூறிவிட்டு அந்த போராளித் தங்கை யுடனான உரையாடலை முடித்துக் கொண்டு சத்தியமூர்த்தியுடன் பேசத் தொடங்கினேன்.

அவரைப் பற்றிய விபரம் அறிந்து விட்டு. பரஸ்பர நலவிசாரிப்புக்களின் பின்னர், எங்கள் பேச்சுக் கிளைக்குக் கிளை மாறி பல்வேறு விடயங்களையும் தொட்டுச் சென்றது.

சுமார் காலை பத்து மணியளவில் ஆரம்பித்து அந்த உரையாடல் மதியம் சுமார் ஒரு மணி வரை தொடர்ந்தது.

அந்த இடைநேரப் பொழுதில் அவ னது கேள்விகள். சந்தேகங்கள். எண்ணங் கள், கருத்துக்கள், குழப்பங்கள் என பல தையும் வெளிப்படையாகப் பகிர்ந்து கொண்டு ஒரு வகையான தேடல் உத் வேகத்துடன் அவன் என்னோடு பேசிய விதம் அவனது ஆளுமை இயல்பினை எனக்கு உணர்த்தவே செய்தது. அந்த சத்தியமூர்த்தி என்ற இளைஞனுள் ஒரு நித்திய கீர்த்தி மிக்க ஒரு எதிர்கால மனித னின் முகிழ்வினை என்னை இனம்காண வைத்தது.

உரையாடல் முடிவில் "சேர் உங் கள் நேரத்தை மிகவும் பாழாக்கிவிட்டேன் மன்னிக்கவும்...." - என்றான்.

"இல்லை... நான்தான் உங்கள் எண்ணங்களில் முரண் நிலையை ஏற் படுத்திவிட்டேனோ என எண்ணுகிறேன் நான்" என்றேன்.

"இல்லை சேர் நான் மீண்டும் மிண்டும்.... உங்களைச் சந்தித்துப் பேசி குழப்பங்களில் இருந்து தெளிவுபெற விரும் புகிறேன். அது எனக்கு பல தெளிவுகளை ஏற்படுத்தியுள் ளது.... இனி எப்ப சேர் Free ஆக இருப்பீர் கள்?" என்றான்.

"எப்பவென்றாலும் ... பின்னேரம் ஆறுமணிக்கு மேல்..." என்றேன்.

விடை பெற்றான்.

அது அவனுடனான முதற் சந்திப் பும், அவன் குறித்த முதற் பதிவினை எனக்குள் ஏற்படுத்திய நாளுமாகும்.

***

அதன் பின்னர் 2009 வரையி லான காலப்பகுதிக்குள் சத்தியமூர்த்திக்கும் எனக்குமான தொடர்புகள் பல்வேறு வகை யிலும் பல்வேறு பரப்பிலும் இடையறாத இறுக்கமானதாகவும் மட்டுமல்லாது மிக அர்த்தமுள்ள செயற்பாடுகளுடன் ஒன்றிய தாகவும் இருந்தது. காலத்தின்தேவையை ஒட்டியதாகவும் இருந்தது.

ஊடகப்பரப்பு அதன் அடித்தளமாக வும் ஆதாரத்தளமாகவும் இருந்தது.

இடையறாத சுறுசுறுப்பான உழைப்பு.

எதையும் முழுமையாகச் செய்யும் ஆர்வம். இலட்சியத்திலும், கொள்கையி லும் இறுக்கமான பிடிப்பு.





சிறுமை கண்டு பொங்கும் குணம்-ரௌத்ரம் பழகு என்ற பாரதியின் புதிய ஆத்திசூடி வரிகளுக்கு அர்த்தம் காட்டும் தன்மை.

கோபத்தை மட்டுமல்லாது மகிழ்ச்சியையும் கூட வெளிப்படையாக உடனுக்குடன் வெளிப்படுத்தும் உணர்ச்சிப் பிழம்பான பண்பு.

எழுத்திலும் பேச்சிலும் முரண்படா இறுக்கம் என அவனது வாழ்வின் அனைத்து இயக்கத்திலும் ஒரு உண்மையான மனிதனின் குணாம்சம் விரவிக் கிடந்தது என்றால் மிகையில்லை.

அதுவே சத்தியமூர்த்தியின் தனித்துவம். அதுதான் அவன் மீது எனக்குப் பிடிப்பினை ஏற்படுத்திய விடயமாகும்.

மேற்குறித்த அவரது ஒவ்வொரு இயல்புபற்றியும் தனித்தனி அனுபவ ரீதியான அத்தியாயங்களே எழுத்தலாம். அதனை ஒரு தனிநூலாக கூட எழுத முடியும்.

இந்த வகையில் குறுகிய காலத்தில் அவன் என்னுள் ஏற்படுத்திச் சென்ற அழுத்தமான பதிவுகள் அதிகம்.

வரலாறு எப்போதும் தனி மனித ஆளுமைகள் பலவற்றை தன்னுள் மௌனமாக அடக்கியே வைத்துள்ளது.

சத்தியமூர்த்தி அத்தகைய ஆளுமைகளுள் ஒருவன்.

அவனுடைய கனவுலகம் மிகப் பெரியது. அபூர்வமானது. அதனை நான் நன்குணர்வேன்.

மனோதிடமும் மனோதர்மமும் ஒருவனுக்கு ஒன்றாக அமைவது வெகு குறைவு. அது சத்தியமூர்த்தியிடம் அற்புதமாக அமைந்திருந்தது.

அதுவே அவனை ஒரு முழுமையான மனிதனாக இந்த நூலில் பதிவாகியுள்ள ஆக்கங்கள் மூலம் அவனை கம்பீரம் காட்ட வைத்துள்ளது.

ஒரு கொள்கைவாதியாக, ஒரு ஆழமான சிறிய குடும்பத்தின் தலைவனாக, அற்புதமான கலை இலக்கியப் படைப்பாளியாக, மிக உயர்ந்த சிகரங்களைத் தொடவேண்டியவனின் வாழ்வு இடைவழியில் முடிந்தது ஏற்றுக் கொள்ள முடியாத இயற்கை விதியானது பெருந்துயரம்.

ஆனால், இருக்கும் வரை வாழ் வாங்கு வாழ்ந்த ஒருவனாக அவன் தன்னை தமிழுலகிற்கு அடையாளப்படுத்தி விட்டே சென்றுள்ளான்.

எனவே வரலாற்றில் அவன் வாழும் மனிதனாகவே இருப்பான்.

●



மூத்த ஊடகவியலாளர்
**காக்கா அண்ணா**



# சத்தியமூர்த்தியின் ஊடகப் பயணம்...

தமிழரின் ஆயுதப் போராட்டத்தின் போது களமுனையில் பல்வேறு தரப்பின ரும் தம்மை ஆகுதியாக்கியுள்ளனர். போரா ளிகளைத் தவிர்த்து துணைப்படை. எல் லைப்படை, போருதவிப்படை என பலரும் ஆபத்து வரும் என நன்கு தெரிந்தே களப் பணி புரிந்துள்ளனர். இதனைவிட ஊடகப் பணியையும் சவால்களுக்கு மத்தியில் முன் னெடுத்தவர்களுண்டு. அமெரிக்க நாட்டுப் பெண் பத்திரிகையாளர் மேரி கெல்வின் களத்தில் செய்தி சேகரிக்கச் சென்ற சமயத் தில் படையினரின் தாக்குதலில் ஒரு கண்ணை இழந்தார். 29.06.1992 அன்று செய்தி சேகரிக்கச் சென்ற ஈழநாதம் பொறுப் பாளர் மேஜர் அழகன் (செல்வராசா இளங்கோ) படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி வீரச்சாவெய்தினார். அழகன் ஒரு போராளி. ஒரு கடமையின் நிமித்தம் அங்கு செல்ல வேண்டியிருந்தது. ஆனால் களத் தில் நின்று யுத்த நிலைமைகளை வானொ லியில் நேர்முக வர்ணனையைச் செய்த ஒருவர் பின்னாளில் போராளியாகி இறுதிச் சமரில் காற்றோடு காற்றாக விண்ணில் கலந்தார். புலிகளின் குரல் தவபாலன் அவர்கள் உலகிலேயே யுத்தத்தை நேர்முக வர்ணனை செய்தவர் அவர் ஒருவராகத் தான் இருப்பார். தமிழர் வீரத்தில் மட்டுமல்ல ஊடகப் பணியிலும் தனித்து விளங்கினர் என்பதற்கு இங்கு எடுத்துக்காட்டு.

இவ்வாறான பணிகளில் ஈடுபட்ட வர்களில் ஒருவர் சத்தியமூர்த்தி. ஓயாத அலைகள் - 3 நடைபெற்றுக்கொண்டிருக் கும் காலப்பகுதியிலேயே கள நிலைமை களை அவதானித்து ஈழநாதத்தில் பதிவு செய்தார் அவர். அது ஒரு காலத்தின் பதிவு. ஒரு ஒற்றை ரவை அவரது வாழ்வை முடித்துவிடும் சூழ்நிலை இருந்தது.





எனினும், சவாலான அப்பணியை மேற்கொண்டார் என்றால் அதற்கான மனத் திடம் அவரிடம் இருந்தது. ஊடகத்தைத் தொழிலாகக் கொண்டவர் என்றோ அது தான் அவரது வாழ்க்கைக்கு ஒரே ஆதாரம் என்றோ அவர் கருதவில்லை. அவருக் கென்று ஒரு அரசபணி இருந்தது. வாழ் வியல் முறையில் தனிப்பட்டளவில் அவருக் கும் அவரது எதிர்காலத்திற்கும் சட்டப்படி பாதுகாப்பு இருந்துது. எனினும் தனது ஆத் மாவைத் திருப்திப்படுத்தவே இவ்வாறான பணிகளைச் சவாலாக அவர் மேற்கொண் டார். மிக எளிமையான நடையில் இவரது கட்டுரைத் தொடர் அமைந்திருந்தது.ஒரு போராளி எவ்விதம் அணுகுவானோ அந்தப் பார்வையும் இருந்தது. இவரது சகோதரன் மாவீரன் என்பதும் இதற்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம். இந்த மாவீரரின் பெய ரில் சத்தியமூர்த்தி தனது கவிதை களை எழுதி வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

விநாயகமூர்த்தியின் மகனால் தமிழ்த்தேசியத்துக்குச் சோதனை வந்த காலங்களில் இவர் கல்குடாவிலுள்ள கல்வி வலயத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தார். மிகவும் எச்சரிக்கையுடன் நடக்க வேண்டியி ருந்தது. இவரது தந்தையார் மன்னம்பிட்டி யைச் சேர்ந்தவர் தாயார் தீவுப்பகுதியைச் சேர்ந்தவர். வடபகுதியைச் சேர்ந்தவர்கள் சந்தேகக் கண்களால் பார்க்கப்படும் வேளையிலும் தமிழ்த் தேசியத்துக்கு ஆதரவான பல விடயங்களை அஞ்சல் மூலம் அனுப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட் டோருக்குப் பக்கத்துணையாக இருந்தார். இவர் மட்டக்களப்பில் உள்ள அதிகாரிகள், பொது அமைப்புப் பிரதிநிதிகளிடம் சரியான கருத்துக்கள் சென்றடைய வேண்டுமென்ப தற்காக அவர்களது விபரங்களையும் வழங் கினார். இதில் சந்தேகப்பொறி தட்டியிருந் தால் கூட இவரது வாழ்வு முடிந்திருக்கும். இக்காலகட்டத்தில் கம்பீரமானவர்கள் எனக் கருதப்படும் பலரிடம் தமிழ்த் தேசியத்தை வலுப்படுத்த ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து விளக்கமளித்தார்.

“எழு”கலை இலக்கியப் பேரவை யின் உருவாக்கத்தில் இவரது பங்கும் முக்கியமானதே. இளம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்களுக்கான கற்கை நெறியை புதுக்குடியிருப்பில் ஒழுங்கு செய்ததில் இவரது பணியும் காத்திரமா னதே. பூராயம் என்ற வெளியீட்டில் இவரது பங்களிப்பும் முக்கியமானது. ஊடகக் கற்கை நெறியினை மேற்கொள்வோருக் கான ஆரம்பக்களமாக இது அமைந்தி ருந்தது. எங்களாலும் எழுத முடியும் என்ற நம்பிக்கையை இளம் எழுத்தாளர்களுக்கு ஊட்டியவர் என்றால் மிகையாகாது. ஈழ நாடு, ஈழநாதம், வெளிச்சம், என ஆரம்பித்த இவரது ஊடக எழுத்துப் பணி சமாதான காலத்தில் T.T.N, N.TT புதினம், சங்கதி, IBC விசாலமடைந்ததே. எதையும் நேருக்கு நேர் கேட்கும் இவரது பண்பு அரசியலைத் தொழிலாகக் கொண்டோருக்கு சினமூட்டி னாலும், உண்மையைத் தரிசிக்கும் போராட்டத் தலைமை இவரது கருத்துக்க ளுக்கு மதிப்பளித்தது.

தேசியத்தையும், தலைமையை யும் நேசித்த இவர் இறுதி யுத்தத்தின் போது 12.02.2009 அன்று எறிகணைத் தாக்குத லுக்கு இலக்காகினார். மனைவி நந்தினி, மகள் சிந்து ஆகியோருடன் இவரை நேசித்த உறவுகள் அனைத்தையும் துக் கத்தில் ஆழ்த்திவிட்டு இறுதி விடைபெற் றார். இவருடனான சந்திப்புக்கள், கருத் துக்கள் பற்றி இவருடன் பழகிய அனைவர் மத்தியிலும் உயர்வான நினைவுகளே மீதமுள்ளன. நாட்டுப்பற்றாளர் என்ற கௌர வத்துடன் இவரது பெயர் தமிழர் வரலாற் றில் பதியப்பட்டுள்ளது.



**கலாநிதி K.T.கணேசலிங்கம்**
தலைவர்,
அரசறிவியல்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.



# உயர்ந்த இலட்சிய கனவுடன் வாழ்ந்தவர் பு.சத்தியமூர்த்தி!

அமரர் சத்தியமூர்த்தியை நினைவு கொள்வது துயரகரமானதே. இளவயது ஊடகவியலாளரின் துயரத்தை இரட்டிப்பாக் கின்றது. ஊடகப்பரப்பு என்பது போல் சத்திய மூர்த்தியின் எண்ணமும் பரந்தது. அவ னது பதிவுகள் ஈழவிடுதலைபட போராட்டத் தின் ஒருபகுதியாகவே உள்ளது.

ஈழவிடுதலைப் போராட்டம் தந்த ஆளு மைகளில் ஓரங்கமாக சத்தியமூர்த்தியை நான் கண்டுகொண்டேன். எத்தனையே ஆளுமைகளின் உயிரச் சுவடுகளைத் தந்த மண்ணின் மைந்தனாக சத்தியமூர்த்தி யின் பயணம். அமைந்தது நேர்கொண்ட பார்வையும் நம்பிக்கை ஊட்டும் பதிவுக ளும் அவனுக்கே உரியது. யாரையும் கண்டு அஞ்சாத மனநிலை கவலைக்கும் உண்மைக்கும் மட்டுமே அவனிடம் தாள் பணியும் பழக்கம் உண்டு. எந்த யாம்ப வானாலும் வெளிப்படுத்த முடியா உண் மையை வெளிப்படுத்தும் மனதிடமுடைய ஊடகவியலாளன். எப்போதுமே அசைக்க முடியாத மனோதிடத்துடன் பயணித்தவன்

அவனிடம் கண்டு கொண்ட இன் னோர் அம்சம் இயற்கை மீதான அவனது நேசிப்பும் நம்பிக்கையும். இயற்கையை பேணுவது, பாராமரிப்பது மட்டுமல்ல அதன் வழி பயணிக்கும் மன உணர்வை வெளிப் படுத்துபவன். இயற்கை எடுக்கும் முடிவுக ளுக்கும் மனிதன் கட்டுப்பட்டவன் என்னும் கருத்தாடல்களை பல தடவை இருவருமே





உரையாடியிருகின்றோம். போர்களைக் கூட இயற்கை தீர்மானிக்கும் வல்லமை பொருந்தியது என்பதில் சத்தியமூர்த்திக்கு நம்பிக்கை அதிகம் இருந்தது. இயற்கையை நேசிக்காத மனிதவாழ்க்கை அர்த்தமற்றது என்பதை பல எடுத்துக்காட்டுகளுடன் உரை யாடியுள்ளோம்.

இலக்கியத்தின் மீது அதிக நேசிப்புக் கொண்டதுடன் அரசியல் அதன் அச்சாணி என்பதனை தனது இலக்கிய அறிவின் பரப்புகளுக்குள்ளால் நிறுவும் தகமையுடை யவனாகக் காணபட்டவன் சத்தியமூர்த்தி. அவனது இலக்கிய அறிவும் வாசிப்பும் மிகப் பிரம்மாண்டமானது. வாசிப்பின் எல் லையைத் தொடவேண்டும் என்ற அவாவு டைய ஒரு இலக்கியவாதியாக விளங்கி யவன். அவ்வாறே பொது அரங்கில் அறிவுப் பரப்பைத்தொட்ட டாக்டர் வரதராஜன், கிருஷ்ண மூர்த்தி, அறிஞர் அண்ணாத் துரை, கலைஞர் கருணாநிதி, போன்றவர்க ளின் எழுத்துக்களையும் வாழ்வியலையும் நன்கு கற்றிருந்தவன் எப்போதும் ஆதாரங் களையும் மூலநூல்களையும் முன்வைத்து உரையாடும் திறன் உடைய ஊடகவிய லாளர்.

சத்தியமூர்த்தியிடமிருந்த இன்னோர் வியக்கவைக்கும் பண்பு ஓய்வின்றி உழைப்பதாகும். எந்த வேலையைக் கொடுத்தாலும் அதனை பொறுப்பெடுத்து நம்பிக்கையுடன் உழைக்கும் மன உறுதி யுள்ளவன். உயிர் அச்சுறுத்தல் வந்தாலும் அதனையும் தாண்டி அந்த விடயத்தை நினைவு செய்யும் பக்குவமும் திராணி யும் உடைய பத்திரிகையாளன்.

குறைகளையும் நிறைகளையும் நேருக்குநேர் சொல்லும் துணிச்சல் உள் ளவன். எவராக இருந்தாலும் தவறைத் தவ றென உரைக்கும் துணிவு சத்திய மூர்த் திக்கே உரியது. ஆயுதப் போராட்ட சூழலில் வாழ்கின்றோம் என்ற உணர்வைக் கடந்து தவறுகளையும், பலவீனங்களையும் சுட்டிக் காட்டித் திருத்திக் கொள்வதற்காகக் கருத்து சொல்லும் ஊடகவியலாளன். முதுகுக்குப் பின்னால் ஒரு வார்த்தையைக் கூட உச்ச ரிக்கத் தெரியாதவன். உயர்ந்த இலட்சியக் கனவுடன் வாழ்ந்த சத்தியமூர்த்தியின் நினைவுகள் என்றுமே மறக்க முடியாதது

அவனது ஆத்மாவின் சிதறல்கள் ஈழத் தமிழன் ஒவ்வொருவனிடமும் பதியப்பட வேண்டும்.அவனது உயர்ந்த இலட்சியத் தின் தடங்களை நோக்கி பயணிப்பதே அவனுக்கு கொடுக்கும் அஞ்சலியாகும்.

●




மீடியாக்கள் வியாபாரம் தான் பார்கிறார்கள் என்ற எண்ணம் தான் மக்கள் மனதில் .ஆனால், ஒவ்வொரு ஊடகவியளாரரும் உயிரை கொடுத்துப் போராடுகிறார்கள். உண்மைகளை உங்களிடம் சேர்க்க. ஆனால், நிஜங்களை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்கள் இல்லை நிழல்களின் பின்னால் சென்றுகொண்டு நிஜத்தை நிழலாக்குகின்றீர்கள் இது தான் உண்மை.



கலாநிதி சி. ரகுராம்



# சத்தியமூர்த்தி ஓர் இலட்சிய மனிதன்!

கண்களில் அறிவுச் சுடர் மிளிர, ஒவ்வொரு வார்த்தையையும் அளந்தெடுத்தாற் போல செம்மையாகப் பேசும் சத்தியமூர்த்தி இன்னும் மனக்கண்களில் நிழலாடுகின்றார்.

ஒரு விடயத்தை எவர் சொன்னா லும், அதனைச் சத்தியமூர்த்தி எடுத்துச் சொல்லும் பாங்கே தனியாக இருக்கும். அது, அவரது அறிவுப் புலத்தை மாத்திர மல்ல, ஆளுமையையும் எடுத்துக் காட்டியிருப்பதைப் பல சந்தர்ப்பங்களில் நான் கண்டி ருக்கிறேன்.

அந்த ஆழமும் விவேகமும் - அவரது பேச்சுக்களில் மாத்திரமல்லாமல், அவரது எழுத்துக்களிலும் அவ்வாறேதான் பிரதி பலித்தது.

உண்மையில், சொல்லுக்கும் செயலுக்குமான இடைவெளி நிரம்பப்பெறும் மனிதர்கள் மத்தியில், சத்தியமூர்த்தி தனித்துத் தெரிந்ததும் இந்த வகையில்தான்.

ஊடகம் என்பது அவரைப் பொறுத்தவரையில், அது அவரது சுவாசமாக இருந்தது. சஞ்சிகையாக இருந்தாலென்ன, பத்திரிகையாக இருந்தாலென்ன தொலைக் காட்சிப் பிரதியாக இருந்தால் என்ன சத்தியமூர்த்தி எழுதியதை வாசிக்கும் போதெல்லாம், அவரே அங்கு பிரசன்னமாயிருந்து குரல் தருவதாய் அவரது எழுத்துக்கள் அமைந்திருந்தது அவருக்கே உரித்தான அடையாளமாய் இருந்தது என்றால் மிகையில்லை என்றே கூறலாம்.





குடும்பம் கிழக்கிலிருக்க, தனிய னாய் அவர் வாழ்ந்த காலங்களில் அவரைச் சந்தித்தபோதெல்லாம் - தனது சொந்த வாழ்க்கையைவிட, தன்னால் தனது தேசத் திற்கும், விடுதலைப் போராட்டத்திற்கும் எத னையாவது செய்துவிடமுடியுமென்றால் - அதனையே அவர் உயிரனைய நேசித்து வந்ததை அவர் வழிகேட்டு, பலமுறை வியந்திருக்கிறேன்.


தனது ஆத்மார்த்தமான காதலைத் தனது மண்ணின் மீதும் மக்களின் மீதும் வைத்திருந்ததால்தான் எத்தனை நெருக்க டிகள் சூழ்ந்த போதெல்லாம் அவரால் அவற் றிலிருந்து எழுந்துவர முடிந்தது என நான் திடமாக நம்பினேன்.

கண்முன்னே ஒவ்வொரு நண்பர் களையும் இழந்து வந்த போதும் - ஊடகத் துறையில் எனது மனதிற்கு மிகவும் நெருக் கமாகியிருந்த இருவரை இழந்தபோதுதான் நான் ஆற்றமுடியாது, கட்டுப்படுத்த முடியாது கண்ணீர் கோர்த்திருந்தேன்.

ஒருவர்-நிமால் - மற்றையவர் சத்தியமூர்த்தி. அதிலும் சத்தியமூர்த்தியின் பிரிவுச் செய்தியுடன் அவரது புகழுடல் அதன் இறுதிப் பயணத்திற்காய் காத்திருக்க, அவர் பெற்றெடுத்த மகள், அந்தச் சிறுவயதில், தனது தந்தையின் பிரிவுகூடத் தெரியாமல், தனது தந்தை முகத்தைத் தடவிச் சென் றதை கண்ணுற்றபோது - அந்த வேத னையை வார்த்தைகளில் விபரிக்க முடியா திருந்தது.

என்றும் புன்னகை தவழும் அந்த முகம், எவரையும் மனம் நோகாது இனி மையாக உரையாடும் அந்தப் பண்பு, தனக் கென வரித்துக்கொண்ட இலட்சிய வாழ்வு, அதற்காகவே உயிரையும் தந்த தியாகம், சத்தியமூர்த்தி என்றும் எம் நெஞ்சங்களில் பொது வழிகாட்டியாகும்.

●




“

இருந்த இடத்தில் எதுவும் கிடைப்பதில்லை
உயிரை கையில் பிடித்தபடி வெயிலில் மழையில் அடி உதை
இவைகளையும் மீறி செய்திகளை உண்மை என்று உறுதி
படுத்தி பின் அதை ஊடகம் ஒன்றிடம் ஒப்படைக்கிறான்
அது உண்மையான ஊடகமாக இருக்கும் பட்சத்தில்
அந்த செய்தியை வெளியிடும் முன் படும் பாடுகள் உங்களுக்கு
புரியாது உண்மையை உங்களுக்குகாக உயிரோடு போரடி
தெளிவு படுத்தும் போது நீங்கள் உணராமல் கடந்து
செல்வீர்கள் பாருங்கள் அப்போது, அடி உதை திட்டல் வெயில்
மழை இவை எதிலும் கிடைக்காத வலியினை ஒவ்வொரு
ஊடகவியலாளனும் உணர்வான் .

”



மூர்த்தியின் நண்பன்
**சி.செவ்வேள்.**



# மூர்த்தியும் கீர்த்தியும்

**1984** இல் அரைக்காற் சட்டைச் சிறுவர்களாக பன்னிரெண்டு வயதில் யாழிந்து ஆரம்பப் பாடசாலையில் இருந்து ஆறாம் வகுப்புக்கான நுழைவுத் தேர்வெழுதி இந்துக் கல்லூரிக்குச் சென்றோம்.

அங்கு பல புதுமுக சிறுவர் ஏ, பி, சீ, டீ, ஈ, எப் என ஆறு வகுப்புக்களாகப் பிரித்து குமாரசுவாமி மண்டபத்தில் கல்வியாரம்பித்தது. அவர்களில் பலர் பல மாவட்டங்களிலிருந்தும் இசுலாம், கிருத்தவம் எனப்பல நம்பிக்கை சார்ந்தோரெனப் பல் வகையினர் இணைந்தோம். சிலர் தூர இடங்களில் இருந்தும் சிலர் பாடசாலை விடுதியில் தங்கியும் பாடசாலைக்கு வந்திருந்தனர்.

இதில் சுருள்முடித் தலையும் காதுச் சோணையின் மேற்புறத்திலொரு அடையாளமும் கொண்ட அமைதியான சிறுவனாக சத்தியமூர்த்தியை தனியே அவதானிக்க முடிந்தது.

மூர்த்தி பின் நாட்களில் புண்ணியலிங்கம் வாத்தியாரை வகுப்பாசிரியராகக் கொண்ட வகுப்பில் முன் வாங்கு மாணவனாகவும் அதிகம் அமைதிச் சுபாவமுடையவனாகவும் கட்டுரை எழுதுவதில் ஆர்வமுடையவனாகவும் அறியப்பட்டான்.

நாம் பகிடியாக ஏதும் கதைத்தாலோ சேட்டைவிட்டாலோ உடன் சினந்து விடுவது அவனியல்பாக இருந்தது. அதனால் அதிகம் நெருங்குவதில்லை அவனுடன் நான்.





ஆரம்பத்தில் பாடசாலை விடுதியில் தங்கிப் பாடசாலை வந்த மூர்த்தி இந்திய இராணுவ காலப்பகுதியில் வெளியே நண்பர்களுடன் தங்கிப் பாடசாலை வந்து கொண்டிருந்தான். இவனது சிறுவயது முதல் அப்பம்மாவுடன் மண்டைதீவில் வசித்து அங்கிருந்தே பாடசாலையில் இணைந்திருந்தான்.

இவ்வாறே நகர்ந்த கல்லூரி நாட்களில், நாம் உயர்தரத்தில் வர்த்தகப்பிரிவிற்கும் கணிதத்திற்கும் பிரிந்து சென்றதால் தூரங்கள் அதிகமாகியது.

பின்னரான நாட்களில் தாவடி கொக்குவில் பகுதியில் சைக்கிளில் சில தடவைகள் வேலணையூர் சுரேசுடன் கண்டதான ஞாப கங்கள். மூர்த்தி அப்போது பல்கலைக்கழ கம் தெரிவாகியிருந்ததாகவும் அதே வேளை தமிழீழ விடுதலைப் புலிகளின் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தில் பணியாற்றியதாகவும் அறிந்திருந்தேன். அவ்வேளைகளில் எதிர்ப்படும் நேரங்களில் ஒரு தலையசைப்புடன் கடந்து செல்வதாக இருந்தது எம்முறவு.

காலம் ஓடியது. இராணுவம் துரத்தியது. 1996 இல் வன்னிக்கு இடம்பெயர்ந்தோம். அங்கு சும்மா திரிந்த என்னை சக நண்பன் தான் பணி செய்யச் சென்ற பொருண்மிய மேம்பாட்டுக் கழக உட்கட்டுமானப் பகுதிக்கு என்னையும் கூட்டிச் சென்றான். அங்கு சந்தித்தேன் பல முகங்களை அதில் பலர் யாழ்.இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களாக இருந்தனர். ஆக்கிரெக் ஐயா தொடக்கம் கேசவன், கிருபா(கிரி), சிறீ, கௌரி அண்ணர், கிறிஸ்ரி அண்ணர்(தங்கன்), மூர்த்தி இவ்வாறு ஆரம்பித்த புதுப்பிக்கப்பட்ட நட்புகள் பணியில் ஆர்வமும் ஒற்றுமையான உறவும் நீடிக்க வழிவிட்டது. கிளிநொச்சியிலிருந்து இடம்பெயர்ந்து மாங்குளம் போய் அங்கிருந்து ஒட்டுசுட்டான் வரை தொடர்ந்து ஒட்டுசுட்டானில் சிறு காட்டிற்குள் நாம் தங்குமிடம் அமைத்து தொடர்ந்த பணி வேளையில் மலேரியாவால் அதிகம் துன்பப்பட்டோம். இவ்வேளையில் மூர்த்தி ஒரு தாதியாக இருந்து "குளோரோக் குயின்", "பிறீமாக் குயின... மருந்துக் குளிகைகளை வைத்தியசாலையில் பெற்று வந்து தனது ஆஸ்மா வருத்தத்தின் மத்தியிலும் சீராக எம்மைக் குடிக்க வைத்து சாப்பாடு தந்து கவனிப்பதில் தாயாக இருந்தான். அவனது கண்டிப்பும் கவனிப்பும் அக்கறையும் அலாதியானது.

இவ்வேளையில் அரசியல் வகுப்பு ஒன்றைப் பணியாளர் மத்தியில் ஏற்பாடு செய்யும் வகையில் நானும் மூர்த்தியும் ஓமந்தை கொந்தக்காரன்குளத்திற்குச் சென்றோம். அங்கு மூனாத் தீனா (மு.திரு நாவுக்கரசு - முன்னாள் விரிவுரையாளர் அரச அறிவியல் துறை) அவரை வகுப்பிற்கு ஏற்பாடு செய்து கொண்டு அவர்களை எனக்கும் அறிமுகம் செய்து வைத்தான். இவ்வாறு ஒன்றித்துப் பணியாற்றி வந்தபொழுதுகளில் ஒரு தடவை புதுவை இரத்தினதுரை அவர்களைச் சந்திக்க அவர் தங்கியிருந்த முள்ளியவளை ஆசிரிய விடுதிக்குச் சென்ற போது என்னையும் கூட்டிச் சென்று அறிமுகமாக்கியிருந்தான். இவ்வாறு பலருடனும் நட்பும் அறிமுகமும் கொண்டிருந்த மூர்த்தி பணியில் திறனும் மற்றவர்களுக்கு அதனைப் புரிய வைத்து செயற்பட ஊக்கமும் வழங்கி வழிகாட்டியாகவும் செயற்பட்டது அவனது ஆளுமையின் வீச்சாகும்.

நாம் அங்கிருந்து பணி வேறாகிப் பிரிந்தாலும் அவனைக் காணும் போதிலெல்லாம் அவனொரு பணியில் ஆழமாகவும் ஆர்வமாகவும் புத்தாக்க எண்ணப் பாங்குடன் செயல் வீரனாக செயற்படுபவனாகவும் காணப்பட்டான்.



பின்னர் புதுக்குடியிருப்பில் தங்க வேண்டி ஏற்பட்டவேளை தான் ஏற்பாடு செய்த வீட்டில் தங்கவும் அற்றா (திரு.ஜோசப் அண்ணன்) வீட்டில் உணவுக்கும் எற்பாடு செய்து கொண்டு இருவரும் பணியாற்றி வந்தோம். இவ்வேளையில் எப்போதும் வாசிப்பிற்காக புத்தகங்களைத் தன்னுடன் வைத்திருக்கும் பழக்கத்தையும் சாப்பிடும் போதும் அதனை வாசித்துக் கொண்டிருப்பதையும் அதில் குறிப்பெடுப்பதும் அவனது தொடர் பழக்கமாக இருந்ததை அவதானித்திருந்தேன். இக்காலப் பகுதியில் சிறீலங்கா அரச எழுதுநர் பரீட்சைக்குத் தோற்றி அதில் தேர்வடைந்து எழுதுவினைஞர் பணியும் கிடைத்தது. 1996 இல் இடம்பெயர்ந்த போது தனது பல்கலைக்கழகப் பட்டப்படிப்பை இடை நிறுத்தி விட்டு இடம் பெயர்ந்து வந்திருந்தானவன்.

மூர்த்தியுடைய ஆரம்பத்திலிருந்தான எழுத்தார்வமும் வாசிப்புப் பழக்கமும் ஊடகத்துறையில் செயற்படும் ஆர்வத்தைத் தூண்டவே முல்லைத்தீவு கல்வித் திணைக்கள ஏற்பாட்டில் இதழியல் புற நிலைக் கற்கை ஒன்றினை ஏற்பாடு செய்து அதற்கான அறிவித்தலை விடுவித்தபோது பலர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். அதில் நானும் இணைந்து கொண்டேன். அவ்வேளை மூர்த்தி வன்னியில் வெளி வந்து கொண்டிருந்த ஈழநாடு பத்திரிகைக்கு ஆசிரியராக செயலாற்றி வந்த இணுவையூர் திருச்செந்தில்நாதனுக்கு துணையாக எழுதி வந்தான். அவ்வேளை அங்கு என்னையும் அறிமுகப்படுத்தியிருந்தான் மூர்த்தி.

இலக்கிய ஆர்வ மிகுதியால் சக நண்பர்களை இணைத்து "எழு" கலை இலக்கிய பேரவை எனும் அமைப்பை நிறுவி அதனூடாக இலக்கிய ஆர்வமுள்ளோரை இணைக்கவும் செயற்படவும் இலக்கிய வெளியீடுகளை வெளியிடவும் முயன்று வரலாயினான்.

அதேவேளை விடுதலைப் புலிகளால் எல்லைப்படை என்ற கட்டுமானம் ஒன்றை சிறீலங்கா இராணுவம் தமிழர் நிலத்துள் முன்னேறாத வகையில் எல்லையைக்காவல் காக்கத் தமக்குத் துணையாகத் தோற்றுவிக்கப்பட்ட மக்கள் கட்டுமானப் படைச் செயற்பாட்டில் தன்னையும் இணைத்துக் கொண்டு ஆயுதப் பயிற்சியைப் பெற்று, தனக்கான சந்தர்ப்பங்களில் எல்லாம் எல்லைகளுக்குச் சென்று காவற் பணியில் ஈடுபடவும் தவறவில்லை.

அத்துடன் அங்குள்ள போராளிகளுக்கும் தன்னால் ஆன உதவிகளைச் செய்துவந்தது போராளிகள் மீதான அவனுடைய அக்கறையும் அன்பையும் வெளிக்காட்டுவ தாக இருந்தது.

இக்காலப் பகுதியில் மூர்த்திக்கு தமிழீழ நீதி நிர்வாகப் பிரிவின் சட்டக்கல்லூரியில் இணைந்து சட்டம் பயிலும் ஆர்வம் ஏற்படவே அதற்கான தருணத்தில் இணைந்து சட்டம் பயிலத் தொடங்கினான். அதில் சித்தியெய்தியதும் அங்கு இவனது திறனை அவதானித்த அதன் பொறுப்பாளர் பரா அவர்கள் சட்டக்கல்லூரியில் கற்பிக்கவும் பின்னர் கல்லூரியின் அதிபராக செயற்படவும் வழி ஏற்பட்டது. மூர்த்தியின் திறனும் ஆளுமையும் மேலும் மெருகேறியது.

இந்நேரம் இதழியல் கற்கையின் போது அதில் கற்க வந்து அறிமுகமாகிய நந்தினி ஈழநாடு பத்திரிகையில் பணியாற்றியவரும் எழு கலை இலக்கியப் பேரவையில் இயங்கியவருமானவரின் நட்பும் புரிந்துணர்வும் இருவரும் திருமணம் செய்யும் தீர்மானத்திற்கு ஏதுவானது. அதனால் தன்





பெற்றோரின் சம்மதம் பெற பொலநறுவைக் குச் சென்று சம்மதமும் பெற்று அவர்களை யும் அழைத்து வந்து கிளிநொச்சி கந்தசாமி கோயிலில் திருமணம் நடந்தேறி அறி வியல் நகரில் காணி வாங்கி வீடமைத்து குடும்ப வாழ்க்கையை ஆரம்பித்தமை மூர்த்தியின் முதிர்ச்சியின் வெளிப்பாடு.

நற்குடும்பத்தின் பயனாக பெண் சிசு சிந்து உதித்தாள். அவ்வேளை சுகாதாரத் திணைக்கள வேலையுடன் விடுதலைப் புலிகளின் அனைத்துலகச் செயலகத்தின் வெளியீட்டுப் பகுதியில் ஊடகராகச் செயற் பட்டுப் பொது வெளியில் அரசியல் போர் நில வரத்தை தொலைக்காட்சி ஊடகமூடே வெளிக்கொணர்ந்ததன் வாயிலாக தமிழர னைவருக்கும் குறிப்பாக வெளிநாடு வாழ் தமிழருக்கு அறிமுகமான முகமாயினான் மூர்த்தி.

இவ்வாறு தொடர்ந்த மூர்த்தியினு ழைப்பு 2009 இறுதிப் போரின் போது ஊர் விட்டு ஊரோடிச் சென்று கொண்டிருந்த போதும் ஒலிவாங்கியில் அவன் களநில வரம் சொல்ல மறக்கவில்லை. இவ்வாறு போர் மூர்க்கமடைந்த தருணத்தில் தேவி புரத்திலிருந்து இரணைப்பாலை நோக்கி இடம்பெயர்ந்த வேளையில் அன்று எறி கணையில் சிக்கும் நிலை ஏற்படவே அவ னின் உழைப்பும் துடிப்பும் செயல் வீச்சை யும் எம்மிடம் தந்துவிட்டு விழிமூடி நாட்டுப் பற்றாளனானான்.

அவனுடையதும் இவனைப் போன்ற எண்ணற்ற எம்முறவுகளின் எண்ணத்தை ஈடேற்ற தொடர்ந்து ஒற்றுமையாக உழைக்க வேண்டியவர்களாக அவர்களது கடமை எம்கையில். அத்தாகத்துடன் மூர்த்தியின் கீர்த்தி நிலைபெற உழைப் போம்.



கவிஞர்,
**வேலணையூர் சுரேஸ்**



# சத்தியமூர்த்தி இன்று இருந்திருந்தால்...

நின்றுவிடாது இன்றளவும்
நீள்வது நின்நினைவு மட்டும்தான்.
அன்று போலவே நீ
அப்படியே இருப்பதாய்
என்னுள் ஓர் உள்ளுணர்வு.

சென்றுவிட்ட காலங்களில்
செதுக்கிய நினைவுகளை
ஒன்றும் விடாமல்
பதுக்கி வைத்துள்ளேன் பக்குவமாய்.

இந்து அன்னையின் பிள்ளையாய் நானும்
வந்தபோது வருடிக் கொண்டது உன் நட்பு.
அந்தநாள் முதல்
என்னுள் நீ உன்னுள் நான்.

இருவருமாய் நாமிருந்த போதும் நம்மை
ஒருவராய்ப் பார்த்தவர்களே அதிகம்.

நகமும் தசையுமாய் நம்
சுகதுக்கங்களைக் கூட சேர்ந்தே சுகித்தோம்,
அகமும் புறமும் இடைவெளியற்று
அப்பழுக்கில்லா நட்பும் அன்பும் நம்மை
சகோதரர்களோ என்கின்ற பிரமிப்பு பலருக்கு.

எங்கே போயினும் ஒன்றாய்
என்ன செய்யினும் ஒன்றாய்...

அங்கே நீ நின்று





எங்கே அவன் என்று உன்னைக் கேட்க
இங்கே என்று நீ என்னைக் காட்டுவாய்.

அப்படித்தான் கழிந்தது நம் ஜீவிதம்
நல்நெறி காட்ட நானூறு பேரிருப்பினும்
செல்நெறி காட்டி வாழ்க்கையை
செப்பனிட்டவன் நீ தான்.

பழகிய காலம் முதல் உன்னைவிட்டு உயிர்
விலகிய கணம்வரை நாம்
ஒழுகியதே உன் சொற்படிதான்.

நிதானமாய் முடிவெடுக்கும் பக்குவம்
நிறைவாக நல் வழிப்படுத்தும் கெட்டித்தனம்
நீ நீயாகக் கற்றுக் கொண்ட பாடங்கள்.

ஒற்றை மிதிவண்டியில் இருவருமாய்ச்
சுற்றித் திரிந்த அனுபவங்கள் போதும்
இற்றை வரை நீ என்னுள் வாழ.

வேம்படிச் சந்தியில் விபத்தில் இருவரும்
விழுந்த போதும் நீ முதலில்
எழுந்து என்னைத் தூக்கி
எங்கே நோகுது என வினாவிய போது கூட
உன் வலியை விட நீ
என் வலியையே ஆற்றத் துடித்தாய்.

இதுதான் நீ.
உண்மையும் அதுவே.
உன்னோடு பழகுவது என்பது
கஸ்டத்திலும் கஸ்டம்.

உண்மையை உறைக்கும்படி
உணர்த்தும் வைராக்கியம் பல தடவைகள்
பொய்யர்களுடன் உராய்வை ஏற்படுத்தின.

சத்தியமூர்த்தி என்பதற்கும் அப்பால்
சத்திய கீர்த்தியாய் நீ உன்னை நிலைநிறுத்தினாய்.

நாம் இருவரும் ஒன்றாகப் படித்தோம் என்பதைவிட
ஒன்றாக வாழ்ந்தோம் என்பதே சத்தியம்.

கடைசியாய் உயிர்பிரிந்த நாளிற்கூட
காலையில் உன்னைச் சந்தித்தேன்.

உயிரானவர்களை பாதுகாப்பாக நகர்த்திவிட்டு
உடமைகளை எடுத்துவரச் சென்ற தருணமே
நடக்கக்கூடாதது நடந்தது.

காலத்தையே கனமாக்கிய உன் குரலைக்
காலமே அடக்கிவிட்ட கோரம் நிகழ்ந்தது.



ஓலத்தை ஒப்பாரியை அவ்வப்போது
ஓங்கி உலகிற்கு அறைந்த ஜீவன் அடங்கியது.

நிலத்திலும் - புலத்திலுமாய் உறவுப்
பாலத்தை இணைந்த தர்மக் குரலை ஒரு
துப்பாக்கிக் குண்டு துவம்சம் செய்தது.

தீங்கெண்ணாப் பிறவி - இவன்
எல்லோரும் இன்புற வேண்டுமென
உள்ள நாள் வரை உணர்த்திய ஆன்மா.

அருகில் நிற்கும் பிள்ளைகளுக்கு
ஐஸ்கிறீம் இல்லையென்றால்
தன் பிள்ளைக்கும் குடிக்கக் கொடுக்காத
பழக்கம் இவன் வழக்கம்.

மற்றவர்களுக்காகவே மனதைக் கசக்கிய
மாசற்ற சுடர் அணைந்தது.

இற்றைவரை இருந்திருந்தால்
இருக்க மாட்டார்கள் அரசியலில் பலர்
திருந்தி இருப்பார்கள் வாழ்க்கையில் சிலர்.

ஊடகச் சூறாவளியாய் இவனே
ஊடாடித் திரிந்திருப்பான்.
பூடாகமாய்ப் பல வேலை விடிவிற்காய்
புலத்திலும் நிலத்திலும் புரிந்திருப்பான்.

நாடகமாடும் அரசியல் நடிகர்களுக்கு எல்லாம் தன்
நா வன்மையால் பேருண்மையை உணர்த்தியிருப்பான்

ஈடாட்டம் கண்டு நிற்கும் ஊடகத் துறையில்
ஈடுஇணையற்ற ஒருவனாய் இவனே திகழ்ந்திருப்பான்.

நாடுபற்றி எள்ளளவும் நினையாமல்
நம்மவர் கண்ணீரில் சிறிதும் நனையாமல் - தத்தம்
வீடுபற்றிக் கதைக்கவே கதிரையேறும்
விரோதிகளுக்கெல்லாம் பட்டை உரித்திருப்பான்.

நீண்டபெரும் நினைவுகளில்
நீத்துப் போகாமல் நின்நினைவுகள் மட்டுமே.

பூண்ட வடிவங்களில் பலவற்றை
பூடகமாகவே புனைந்துள்ளேன்.

ஆண்ட இனமொன்றின் அடையாளம் நீ
ஆதிக்கக் குரல்களுக்கு ஒரு காலத்தின்
சிம்ம சொப்பணம் நீ.

அண்டமெல்லாம் உன் அசரீரி கேட்பதற்கு
அலை மோதிய காலத்தையும் வடிவமைததவன் நீ
உண்மையின் சாட்சியாய் நீயும் உன் குரலும்
உள்ளளவும் வாழும்
இந்த நீர் நிலம் காற்று உள்ளவரை.





## கவிஞர் கு.வீரா



எத்துயரம் வந்தாலும் ஏது நிகழ்ந்தாலும்
பக்குவமாய் பணி செய்து
முத்திரை பதித்து முன்னே செல்கின்ற
முயற்சியுள்ள பேராளன்
பத்திரிகை வானொலி தொலைக்காட்சியென
பல்லூடக ஆளுமையில்
சத்திய மூர்த்தியெனும் சரித்திரம்
சாதித்தவைகளோ ஏராளம்.

உயிர்ப்பை ஏந்தி ஊடக வரலாற்றில்
உண்மையை தந்த விரல்
நேர்மையைத் தொட்டு நித்தம் செய்தி சொன்ன
நிமிர்வான நெருப்பின் குரல்
போர்க்களம் தனிலும் சத்தியம் காத்தபடி
அறம் உரைத்த அலையின் கடல்
வேர் பிடித்த தாய் மடிக்கு உயிரும் ஈந்து
நேர்பட நின்ற நிஜத்தின் கனல்.

பூட்டிய விலங்கை தெறிக்க விட
புனிதப் பயணத்தில் நடைபோட்ட
நாட்டுப் பற்றாளர் சத்தியமூர்த்தி
நாட்டிய சாதனை வரலாறு.
வேட்டொலி முழங்கும் களத்தில் நின்று
விரும்பி ஊடகப் பணி செய்து
காட்டிய அவனின் தீரமதை
கவிதையில் சொல்லிட முடியாது....



ஆண்டு பலவாச்சு
அக்கினிக் குஞ்சை இழந்து - எனினும்
நீண்ட நம் வரலாற்றில்
நிச்சயம் அந்த நெருப்பிருக்கும்
தாண்டியே தடைகள் வென்ற
தமிழர் ஊடகப் பயணத்தில் - என்றும்
வேண்டிய அளவு வியாபகமாய்
சத்திய மூர்த்தியின் பெயரிருக்கும்.

ஆழக் கடல் மடியில்
முடித்து வைத்த பொக்கிஷமாய்
ஈழமதின் எண்ணங்களை
இதயத்திலே சுமந்த மகன்
வாழுகின்ற நிமிஷமெல்லாம்
வலிசுமந்த போதினிலும்
நாளும் தமிழர் தங்கள்
நன்மையையே நினைத்த மகன்.

பாடுபட்டு பாடுபட்டு
பலம் சேர்த்த தேசமதில்
ஊடகத்து பெருவீரனாய்
உயர்ச்சி கண்ட உண்மை மகன்
காடுகளில் வீடுகளில்
போகும் இடங்களெல்லாம்
பீடுடனே கடமையினை
செய்து நின்ற சிறந்த மகன்.





வைத்தியக் கலாநிதி
**டாக்டர் செல்வலிங்கம் தெய்வகுமார்**
மண்டைதீவு. 5ம் வட்டாரம்.



# சத்தியவழியில் சத்தியமூர்த்தி

மண்டைதீவு மண்ணில் அமைதியும் ஆனந்தமும் நிரம்பியிருந்த காலமது. நெல் விளையும் வயல் வெளிகளும் தென்றல் தரும் மரநிழல்களும் தாராளமாக இருந் தன. புகையிலை, மரக்கறி, வெங்காயம் மிளகாய் என வகை வகையாக பருவத் தொழில் செய்யும் விவசாயிகளும், தடை யின்றிக் கடல் சென்று மீன் செல்வம் அள்ளி வரும் மீனவரும் வருமானத்தில் நிம்மதி யாய் உறங்கி எழுந்த காலம். இசை பாடும் கிளிகள் குண்டுப் பயமின்றி பாட்டுப்பாட, பரு வம் முடிந்த வயல் வெளியில் பால் தரும் பசுக்கள் புல்மேய, கன்றுகள் ஷெல் பய மின்றி துள்ளித்திரிந்த காலம். எதிர் காலத் தில் வரவிருக்கும் சூன்யமான, மயான நிலையை எதுவுமே அறியாத மண்டைதீவு மண் நிம்மதியாய் உறங்கியது. 1981ம் ஆண்டு ஆரம்பப்பகுதி மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் 3ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். அன்று வழக்கம் போல புத்தகங்களை அடுக்கி தோளில் வைத்து சுமந்துகொண்டு பள்ளி சென்றேன். ஆரம்ப மணி ஒலித்ததும் முண்டியடித்து எனது அமர்வில் அமர்ந்தேன். வகுப்பாசிரியர் ரஹமத்துல்லா வந்தார். யாவரும் எழுந்து நின்று காலை வணக்கம் சொல்லியமர்ந் தோம். சற்று நேரம் கழித்து அதிபர் சண்முக நாதன் எமது வகுப்புக்கு வந்திருந்தார். யாவரும் எழுந்து நின்று குட்மோர்னிங் சேர் சொல்ல, அதிபர் எங்களை அமரச் சொன் னார். அவர் பின்னே ஒரு வாட்டசாட்டமான



வெள்ளைப் பையன் ஒருவன் புத்தம் புதிய ஆடைகளுடனும்தோளில் லெதர் புத்தக பையுடனும் வாயில் புன்னகையுடனும் நின்றிருந்தான். "இவன் சத்தியமூர்த்தி உங்கள் வகுப்பில் படிக்க வந்துள்ளான்" என சொல்லிவிட்டு அதிபர் சென்று விடடார். அந்த பையனின் வசீகர தோற்றமும் புன்னகையும் எல்லோரையும் கவர்ந்தது. அவனை தன்பக்கம் அமர ஆசிரியர் சொல்ல மாட்டாரா என்று யாவரும் ஏங்கினர். சத்தியமூர்த்தியுடன் நட்பு வைக்க மற்றவர் போல் நானும் முயற்சி செய்தது ஞாபகம். சில நாட்களிலேயே சத்தி பலரது நட்பை சம்பாதித்து ஆசிரியர்களின் பெரு மதிப்பையும் தனதாக்கிக்கொண்டான். படிப்பில் புலி, வந்த முதல்தவணை பரீட்சையிலேயே முதலாம் பிள்ளையாக வந்தான் சத்தி. இவன் வெற்றி, பணிவு, திறமை கண்டு, ஏன் என்னால் இவனைப்போல் இருக்கமுடியவில்லையே என்று ஏங்கியிருக்கிறேன். மிகக்குறுகிய காலத்திலேயே இவன் புகழ் பள்ளி முழுவதும் பரவி சத்தி ஒரு உதாரண மாணவனாக உருவெடுத்தான். கோவில் திருவிழாக் காலங்களில் marble விளையாடி அவனிடம் பல தடவை தோற்றுப்போனது ஞாபகம். கிட்டி விளையாட்டிலும் கில்லாடி அவன். கல்வியிலும் பல விளையாட்டிலும் சிறந்து விளங்கிய சத்தி ஊரில் நடந்த சமய அறிவுப்போட்டி, திருக்குறள் மனனப் போட்டி, பேச்சுப் போட்டி தேவாரப்போட்டி என பலபோட்டிகளிலும் முதல்பரிசு தட்டிச்செல்ல சத்தி ஊருக்கே உதாரண பிள்ளையாக மாறிவிட்டான். சத்தியைப் பார்த்து முன்னுக்கு வர வழிபார் என என் பெற்றோர் சத்தியை உதாரணப் படுத்தியதும் ஞாபகம். வாசிப்பதில் நல்ல ஆர்வம் கொண்ட அவன், மண்டைதீவு நூல்நிலையத்தில் பெரும் நேரம் செலவழிப்பான். ஆனந்த விகடன், குமுதம் என சாதாரண நூல்களை மட்டும் வாசிக்க நூல் நிலையம் நான் போவேன், ஆனால் சத்தியமூர்த்தியோ சரித்திர நூல்கள், கல்கி நாவல்கள் என மகத்தான நூல்களை வாசிப்பதில் ஆர்வம் காட்டுவான். அந்த வயதிலேயே தினசரி பத்திரிகைகளை பக்கம் விடாமல் படிப்பான் சத்தியமூர்த்தி. பொது அறிவுப் பொக்கிசமாகவே திகழ்ந்தான் அவன்.

திருவெண்காடு சித்திவிநாயகர் கோவில் திருவிழாக்களில் 6 மணிப் பிரசங்கம் கேட்க சத்தியும் நானும் தவறாமல் போவதுண்டு. தமிழ் சமய அறிவு சத்தியமூர்த்திக்கு அப்பவே அதிகமுண்டு. தெற்குத்தெரு முருகன் கோவில் திருவிழாக்கள் கிழக்குத்தெரு அம்மன் திருவிழாக்கள் என ஒன்றாக கூடித்திரிந்திருக்கிறோம். கச்சான் கடலை வாங்கி உண்டு மகிழ்ந்திருக்கிறோம். டியூசன் வகுப்புகளுக்கும் சேர்ந்தே திரிந்திருக்கிறோம். பாடசாலையில் இவன் புகழ் மேலும் மேலும் உயர்ந்தது. அனைவரது எண்ணத்திலும் சத்தி ஒரு நேர்மையானவன் கெட்டிக்காரன் சங்கடம் தராதவன் என்று முத்திரை பெற்றுக்கொண்டான். தமிழ், சமயம், ஆங்கிலம், கணிதம், சுற்றாடல், சுகாதாரம் என் எல்லாப்பாட ஆசிரியர்களுக்கும் சத்தியை வெகுவாகப்பிடித்துக் கொண்டது. சுகாதார ஆசிரியர் வகுப்பிற்கு வந்தால் மாணவர்களின் கை நகச்சுத்தம் பார்ப்பதுண்டு. அவசர அவசரமாக கை நகத்தை வெட்டி சுத்தம் செய்ய பிளேட் தேடித்திரிவேன். சத்தியின் கைநகம் எப்பவும் சுத்தமாக இருப்பதோடு மற்றவர்க்கும் பிளேட் தந்து உதவும் நற்குணம் கொண்டவன். எம்முடன் கோகுலவாசன், சாயீஸ்வரன், மோகனபவன், கேதீஸ்வரன், பண்பரசன, விஜயன், அன்பரசி, கேதாரநாயகி, ராதிகா, வக்சலா, திருவாசகி, பாமா, சுதர்சினி, சாயீஸ்வரி என பல மாணவர்கள்





மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றார்கள். இவர்கள் யாவரும் சத்தியுடன் நல்ல நட்புறவை பெருமதிப்புடன் வைத்திருந்ததை நான் நன்கு அறிவேன்.

நான் இருக்கும் பகுதி 5ம் வட்டாரம் அது உவர் நீர்ப் பகுதி. குடி நீர் எடுத்துவர நான் தெற்குத்தெருவிற்கு சென்றுவருவதுண்டு. வழியில் நான் சத்தியின் வீட்டிற்கு சென்று உரையாடிவிட்டு வீடுவர அடிக்கடி சுணங்குவதால் அம்மாவிடம் பேச்சு வாங்கியது உண்டு. சத்தியமூர்த்தி வீடு போயிருந்தேன் என்று சொல்ல அம்மா எதுவும் பேசமாட்டார். ஊர்முழுவதும் திரிந்திருக் கின்றோம். என் வீட்டில் சத்திக்கு ஒரு தனி மரியாதை இருந்தது. சத்தி சாதாரண போட்டி பொறாமைகளுக்கு அப்பால்பட்டே நின்றிருந்தான். அவனின் முகத்தில் ஒரு ஒளி வட்டம் தெரிவதாகவே நான் உணர்ந்திருக்கிறேன். பள்ளியிலும் சரி பொது இடங்களிலும் சரி சத்தியின் நடத்தை கவரக்கூடியதாகவே இருந்தது. இவன் நட்பு எமது வயதொத்தவர்களையும் தாண்டி சீனியர்ஸ் ஜுனியர்ஸ் வரை பரந்து கிடந்தது. பல ஜுனியர்ஸின் பெற்றோர்கள் சத்திய மூர்த்தியை உதாரணப்படுத்தி தம்பிள்ளைகளுக்கு ஊக்கம் தந்ததை அறிவேன். பலருக்கும் பாடம் சொல்லிக்கொடுத்து அவர்களை வகுப்பேற்ற வழிவகை செய்திருக்கிறான் சத்தியமூர்த்தி. வயதிற்கு மூத்தவர்களை பண்போடு மதிப்பதில் சத்திய மூர்த்தி நிகரற்றவன். எனது அக்காமாரை அன்போடு அக்கா என அவன் அழைப்பான், அக்காமாரும் பூரித்து மனம் நிறைந்தது ஞாபகம். பெரியவர்களை கண்டதும் துவிச்சக்கர வண்டியிலிருந்து இறங்கி அடக்கத்துடன் மதிப்பு செலுத்துவான் சத்திய மூர்த்தி. அது இன்னும் ஞாபகம். அந்த வயதிலேயே தன்னலம், செருக்கு, பொறாமை, அகந்தை என்ற குணங்களை அறவே அகற்றிய மகான் அவன். அடக்கம், அறிவு, ஆடம்பரமின்மை, இயல், ஈவு, உண்மை, ஒழுக்கம் என பல நற்குணங் களை தன்னகத்தே அடக்கிய ஒரு பகுத்தறிவாளனாகவே அவன் பரிணமித்தான். சத்தியத்தின் மறு வடிவமாகவே உருவெடுத்தான்.

அகத்திலே அறிவு பொங்க  
ஆணவத்தை அகற்றிய  
இணையற்ற இரக்கமுற்ற  
ஈவுடையான் இவன்.  
உண்மையின் மறுவடிவம்  
ஊருக்கு உதாரணமானவன்  
எண்ணங்கள் சிறந்திருக்க  
ஏணி போல் நின்றவன்  
ஐயம் தெளிந்தவன்  
ஒழுக்கத்தில் ஓங்கியவன்  
ஓங்காரத்தை நம்பியவன்  
அஃதன்றோ சத்தியமூர்த்தி.

காலம் உருண்டோடியது வகுப்பேற்றப்பட்டு 1983ம் ஆண்டு 5ம் வகுப்பிற்குள் பிரவேசித்தோம். புலமைப்பரீட்சை ஆண்டு அது. யாழ் இந்துக்கல்லூரிக்குள் நுழைந்து விட வேண்டுமென்று கங்கணம் கட்டிப் படித்தது ஞாபகம். மண்டைதீவு மகாவித்தியாலத்திலிருந்து மூன்று மாணவர்கள் இந்துக் கல்லூரிக்கு எடுபட்டு இருந்தோம். சத்திய மூர்த்தி. கோகுலவாசன் இவர்களுடன் நானும் இந்துக்கல்லூரிக்கு சென்றோம் 1984ம் ஆண்டு. அங்கே 5 பிரிவுகள் இருந்ததால் சத்தியும் நானும் வகுப்பறையால் பிரிக்கப்பட்டோம். ஆனாலும், எமது நட்பு தொடர்ந்தது. மண்டைதீவில் இருந்து யாழ்ப்பாணம் பாடசாலை van இல் ஒன்றாகத தான் பயணித்தோம். மாலை நேரங்களில் ஒன்றாக விளையாடினோம். துடுப்பாட்டத்தில் மிகவும் ஆர்வம்கொண்ட சத்தி பல மட்ச் கோர்த்து விளையாடினான். டாம் எனும் விளையாட்டிலும் சிறந்த சத்தியின் வீட்டிற்கு அடிக்கடி சென்று டாம் விளையாடி



இருக்கிறேன். ஆண்டுகள் பல சென்றன. சத்தியமூர்த்தியும் தனது கல்வியையும் முயற்சியையும் திறம்பட பெருக்கியே வந்தான்.

உள்நாட்டு யுத்தம் மெல்ல மெல்லச் சூடு பிடிக்க, கோட்டையில் கெடுபிடிகள் அதிகரிக்க மண்டைதீவில் இருந்து தினமும் யாழ் இந்துவுக்கு பயணிப்பது கடினமாக, நாம் யாழில் தங்குமிடமெடுத்து படிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. பாடசாலை விடுமுறைகள் காலங்களில் மீண்டும் மண்டைதீவுக்கு செல்வது வழக்கம். உள் நாட்டு யுத்தகாலங்களில் அடிக்கடி பாட சாலை மூடப்படும் காலமது. அப்போதெல் லாம் நாம் மண்டைதீவில் அடைக்கலம் அடைந்த காலமது. 1986ம் ஆண்டுவரை சிங்கள சிப்பாய்களை காணாத மண் டைதீவு, 1987இல் இந்திய ராணுவம் சற்றே தீண்டிப்பார்த்தது. பல நெருக்க டிக்கிடையில் எமது படிப்பு தொடர்ந்தது. கா. பொ.த. சாதாரணப் பரீட்சையில் மிக நல்ல சித்தி பெற்று வர்த்தகம் படிக்க முடிவு செய்தி ருந்தான் சத்தியமூர்த்தி. அவனின் இந்த பெரு வெற்றியால் முழுமண்டைதீவுமே பெருமை கொண்டது.

AL படிக்க தொடங்கிவிட்டோம். டியூசன் வகுப்புகள், பள்ளிப் படிப்புகள் என ஒரு புறம் நாம் பரபரப்பாக மாற உள்நாட்டுபோர் மறுபுறம் உக்கிரமடைந்தது. 1990 இல் மறுபடியும் பேர்யுத்தம் வெடிக்க,பாடசாலை மறுபடியும் மூடப்பட நாம் மீண்டும் மண் டைதீவில்தஞ்சம்அடைந்தோம். 1990ம் ஆண்டு ஆவணி மாதம் 23ம் திகதி மண் டைதீவு மண் முதல் முறையாக இராணு வத்தால் முழுமையாக முற்றுகையிடப்படு கிறது. மண்டைதீவு மண் பல பிணங்களை சுமந்து மயானமாகிறது. அகதிகளாய் முழுக்கிராமமும் உடுத்த உடுப்புடன் அய லூரான அல்லைப்பிட்டிக்கு அனுப்பப்பட, சத்தியமூர்த்தியும் தனது குடும்பத்துடன் அகதியாகிறான். 91 AL பரீட்சை எடுக்க வேண்டிய நாம் கையில் எதுவுமின்றி அல்லைப்பிட்டி பிலிப் மேரி தேவாலயத்தில் தஞ்சம் அடைகிறோம். மக்கள் இருக்க இட மின்றி உண்ண உணவின்றி தவிக்க இயற்கை மேலும் சோதனை செய்தது. மழை சோவென பொழிய சத்தியமூர்த்தி மற்றவர்களுக்கு இடம் விட்டு வெளியில் காவோலையின் தயவில் படுத்துறங்கியது ஞாபகம். அகதியாய் யாழ்ப்பாணம் வந்து சத்தியமூர்த்தி மீண்டும் படிப்பில் கவனம் செலுத்தினான். இன்னல்கள் பல, துயரங் கள் பல, ஷெல் வீச்சுக்கள், பொமர்கள் போடும் குண்டுகள் பலப்பல. யாழ் வைத்தி யசாலை காயப்பட்டவர்களால் நிரம்ப செஞ் சிலுவைச் சங்கத்தினுடாக சத்தியமூர்த்தி இரத்ததானம் செய்தது ஞாபகம். சுத்திவர துயரங்கள், சுற்றமெங்கும் தடங்கல்கள், ஆனால் புயல் என மீண்டும் எழுந்து படித்து 2A 2B எனும் பெரு வெற்றியை பெற்று மீண்டும் மண்டைதீவு மண்ணிற்கும் யாழ் இந்துவிற்கும் பெருமை சேர்க்கிறான் சத்திய மூர்த்தி. வர்த்தகப்பாடத்தில் அதுவரை யாரும் மண்டைதீவில் தொடாத உச்சம் அது. பல்கலைக்கழக அனுமதியை பெற்று புதிய உலகம் காண ஆவலாய் இருந்த காலமது. 1993ம் ஆண்டு நாம் பிரிய வேண்டிய நிர்ப்பந்தம். நான் கொழும்பு வந்துவிட சத்தியமூர்த்தி யாழ்ப்பாணத்தில் தனது பல்கலைக்கழக படிப்பை தொடர தன்னைத் தயார் படுத்தினான். ஆனாலும் மக்கள்படும் துயரங்கள் அவனை வாட்டி வதக்கியது. உண்மையின் மைந்தன் உறங்காத உண்மையை உலகுக்கு எடுத்துரைக்க பத்திரிகைத்துறையை தழு வினான். பல்கலைக்கழகப் படிப்பு ஒருபுறம் பத்திரிகைத்துறை மறுபுறம் எனத் தன்னை





மக்களுக்காய் அர்ப்பணிக்கத் தயாரா கினான் சத்தியமூர்த்தி. 1995ம் ஆண்டு வன்னி இடைப்பெயர்வில் பல்கலைக் கழ கப்படிப்பு பாதியில் தடைப்பட சத்தியமூர்த்திக் தன்னை முழுமையாக பத்திரிகைத் துறைக்கு அர்ப்பணித்தான்.

சுதந்திரப் போராட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது. சத்தியமூர்த்தி வன்னிக்கு இடம் பெயர்ந்து தனது மாபெரும் அர்ப்ப ணிப்பைச்செய்கிறான்.நான் எனது படிப்பின் நிமிர்த்தம் கொழும்பு வந்துவிடுகிறேன். அதன் பின்னர் வேலை நிமிர்த்தம் லண்டன் வர சத்தியமூர்த்தி தனது மாபெ ரும் சுதந்திரப் பயணத்தையும் அர்ப்பணிப் பையும் வன்னியில் இருந்து செய்து கொண் டிருந்தான். தொலைத் தொடர்புகள் யாவுமே துண்ணடிக்கப்பட்டிருந்தன. சத்திய மூர்த்தியை தொடர்புகொள்ள முடியாத காலமது 1996-2009. தமிழ் மண்ணின் உறவுகள் யாவரும் சின்னாபின்னமாக சிதறிப் பிரிந்து வாழவேண்டிய காலத்தின் தேவையது. சத்தியமூர்த்தியின் பத்திரி கையாளர் பணி பல தளங்களில் பரவத் தொடங்கியது. அவன் ஈழநாதம் பத்திரி கைக்காக எழுதியிருந்தான். மேலும் பல தகவல்களை உண்மைநிலை தவறாமல் மக்களுக்காக தந்தான். அவன் 2003ம் ஆண்டு தொடக்கம் ரீ.ரீ.என், மற்றும் யூரோ டெலிவிசன் தொலைக்காட்சிகளில் தகவல் களை கச்சிதமாகவும் உண்மைநிலை மாறாமலும் புலம் பெயர் தமிழருக்காக தந்தான். .. டிவியில் சத்தியமூர்த்தியின் தொகுப்பை காத்திருந்து பார்ப்பேன். சத்திய மூர்த்தியின் தொகுப்பு நன்கு பக்குவப்பட்ட முதிர்ச்சியடைந்த உண்மை நிலை மாறாத ஒரு நிகழ்ச்சியாகவே யாவரும் உணர்ந்த னர். அவன் பெயருக்கேற்ப அவன் நிகழ்ச் சித் தொகுப்பு இருப்பதாகவே பலரும் சொல்லக்கேட்டிருக்கிறேன். சொந்த மண் ணில் நடந்த சோகங்களைக் கேட்க மனம் பாரமாகும் ஆனால் அதை என் உயிர் நண் பனின் நிகழ்ச்சியூடாகக் கேட்பதில் ஒரு வகை பூரிப்பு இருந்தது. சத்தியமூர்த்தியை நினைத்து பெருமைப்படுவேன். யுத்தம் உக்கிரமடைந்த தை மாதம் 24ஆம் திகதி 2009 இல் சத்தியமூர்த்தியின் உடையார் கட்டுப்பகுதி தொகுப்பை கேட்டுக்கொண்டி ருந்த நான் அதுதான் அவனது கடைசி தொகுப்பாக இருக்கும் என நினைக்க வில்லை. இந்த தொகுப்பை பல தடவை கேட்டிருக்கிறேன். துல்லியமான தமிழ், வெண்கலக்குரல் இப்போ கேட்டாலும் அந்தக் காட்சியை நேரில் பார்ப்பது போல் இருக்கும். இறுதிக்கட்ட ஈழப்போர் சத்தி யம் நிறைந்தபத்திரிக்கை நிருபரான சத்திய மூர்த்தியையும் பல்லாயிரக்கணக்கான உயிர்களுடன் சேர்த்துக்குடித்தது. தமிழர்க ளின் தலைவிதியை எழுதியவன் வெட்கித் தலை குனிந்தான். ஒரு சத்தியம் சரிந்தது, சரித்திரம் கண்ணீர்வடித்தது.

அஃதோ சரிந்தது சத்தியம்
ஓய்ந்தது ஒலிநாதம்
ஒழிந்தது தமிழ் மூச்சு
ஐங்கரமும் தவறியது
ஏங்கியது தமிழினம்
என்செய்வோம் இனியென்று
ஊமையாகிப்போனது உலகம்
உறங்கிக்கொண்டது உண்மை
ஈழத்தில் அழிவு
இதயத்தில் கனம்
ஆருயிர் நண்பன்
அரவணைத்தான் மோட்சம்.



# சத்தியமூர்த்தி

**கலாநிதி ரஞ்சித் சிறீஸ்கந்தராஜா,**
பன்னாட்டு விவகார அரசறிவியலாளர்
பத்தி எழுத்தாளர் (ஈழமுரசு)
முன்னாள் தலைமை செய்தியாசிரியர்
(ஐ.பி.சி - தமிழ், 2005-2009)
பழைய மாணவன்
(யாழ் இந்துக் கல்லூரி, 1990-1992)



**நா**ட்டுப்பற்றாளர் புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி -ஒரு போராளி அல்லாத களச் செய்தியாளர் எப்படி செயற்பட வேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாக திகழ்ந்து தாய்மண்ணில் விதையாகிய ஊடகவிய லாளர்.

எனக்கு சத்தியமூர்த்தி அண்ணையுடன் முதன் முதலில் தொடர்பு ஏற்பட்டது 2005ஆம் ஆண்டு மாசி மாதத்தில். அனைத்துலக தொடர்பக ஊடக இல்லத்தின் நிர்வாகத்திற்கு உட்பட்ட புலம்பெயர் தமிழீழ தேசிய ஊடகமாக இலண்டனை தலை மையகமாகக் கொண்டு ஐ.பி.சி - தமிழ் வானொலி இயங்கிய காலப்பகுதி அது. அப்பொழுது ஐ.பி.சி, தமிழ் வானொலியின் தலைமை செய்தி ஆசிரியராக நான் பொறுப்பேற்றிருந்தேன்.

அவ்வேளையில் கிளிநொச்சியில் இயங்கிய ஊடக இல்லத்தில் சத்தியமூர்த்தி அண்ணை பணியாற்றி வந்தார். ஐ.பி.சி , தமிழ் வானொலியின் செய்தியாளராக அப்பொழுது சத்தியமூர்த்தி அண்ணை பணிபுரியாத பொழுதும், எமது சகோதர ஊடகங்களான ரி.ரி.என் (தமிழ்த் தொலைக் காட்சி இணையம்), ஈழமுரசு ஆகிய நிறு வனங்களிற்கு ஊடக இல்லத்தில் இருந்து செய்திகளைத் தொகுத்தும், ஆய்வுகளைத் தயாரித்தும் அனுப்பிக் கொண்டிருந்தவர் என்ற வகையில் அவருடன் உரையாடுவ தற்கான வாய்ப்புக்கள் எனக்கு அப்பொழுது கிட்டியிருந்தன.





ரி.ரி.என், ஈழமுரசு ஆகிய ஊடகங்களுக் கென்று அவர் பிரத்தியேகமாக சேகரித்த செய்திகளும், தயாரித்த நிகழ்ச்சிகளும், சில சந்தர்ப்பங்களில் ஊடக இல்லத்தால் எம் மோடும் பகிரப்பட்டன. அந்த வகையில் ஐ.பி.சி - தமிழ் வானொலியிலும் அவரது மறைமுகப் பங்கு இருந்தது எனலாம்.

அவர் ஒரு பண்பான மனிதர். ஆனாலும் ஒரு நாளும் பண்பாட்டின் பெயரில் எவருக்கும் அவர் முகத்துதி பாடியதாக நான் அறிந்ததில்லை. அதேபோல் தவறுகளை விமர்சிப்பதற்கு ஒரு நாளும் அவர் தயங்கிய துமில்லை. தான் கேள்விகளைத் தொடுக் கும் நபர்கள் எப்படியான அதிகாரத்தைக் கொண்டவர்களாக இருந்தாலும், அதைப் பற்றி எள்ளளவும் சிந்திக்காது துணிச்சலு டன் விமர்சனக் கண்ணோட்டத்தில் கேள் விகளைக் கேட்டுப் பதிலைப் பெறும் அவரது பாணியே தனியான பாணி என்றுதான் கூறுவேன்.

ரி.ரி.என் நிறுவனத்திற்கு அவர் தயா ரித்து அனுப்பிய அரசியல் ஆய்வு நிகழ்ச் சிகள் கனதியானவையாக இருக்கும். அந்தக் கனதியான நிகழ்ச்சிகளில் இன்றும் என் மனதில் நிழலாடுவது அவர் தயாரித்த நிகழ்ச்சியொன்றில் நிகழ்ந்தேறிய நகைச் சுவைச் சம்பவம். 2006ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். அன்றைய தாயக நிலவரம் பற்றி சூடான கேள்விக் கணை களைத் தொடுத்து நிகழ்ச்சியை சத்திய மூர்த்தி அண்ணை நடாத்திக் கொண்டிருந் தார். அவரைக் கேள்வி கேட்கவிடாது ஈ ஒன்று ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தது. கடைசியில் சீற்றம் கொண்டவராகக் கேள்வி களை நிறுத்தி விட்டு ஒளிப்படம் எடுத்துக் கொண்டிருந்தவரிடம் சத்தியமூர்த்தி அண்ணை கூறினார்: "அம்மான், உந்த இலையானை முதல் அடிச்சுக் கொன்று போட்டுக் கதைப்பம். கேள்வி கேட்க விடுகு தில்லை." இவ்வாறு சத்தியமூர்த்தி அண்ணை கூறியதை விட நகைச்சுவை யானதாக இருந்தது, அந் நிகழ்ச்சியை மேற் பார்வை செய்து செழுமைப்படுத்தியவர், சத்தியமூர்த்தி அண்ணை சீற்றத்துடன் கூறிய பாகத்தை ஒளிப்பதிவில் இருந்து அகற்றத் தவறியதுதான். ஆனாலும் ஒரு கனதியான விமர்சக ஊடகர் என்று மட்டும் அறியப்பட்ட சத்தியமூர்த்தி அண்ணையின் நகைச்சுவையான பக்கத்தை தமிழ்கூறும் நல்லுலகம் அறிவதற்கு நிகழ்ச்சிச் செழுமை யாளரின் தவறு உதவியது என்றுதான் கூற வேண்டும்.

நான்காம் கட்ட ஈழப்போர் உச்சக் கட் டத்தை எய்தியிருந்த 2009ஆம் ஆண்டின் தொடக்க நாட்களில் வன்னியில் இருந்து செய்திகளைப் பெறுவதில் பெரும் நெருக்கடி களை ஐ.பி.சி - தமிழ் வானொலி எதிர் நோக்கியது. இதற்குக் காரணம் 2009 தை 2ஆம் நாளன்று கிளிநொச்சி வீழ்ச்சி கண்ட தைத் தொடர்ந்து ஏற்பட்ட இடப்பெயர்வு தான். அப்பொழுது வன்னியில் இருந்த ஐ.பி.சி - தமிழ் வானொலியின் செய்தியாளர களுக்கும், இலண்டனில் இயங்கிய எமது செய்திப்பீடத்திற்கும் இடையிலான தொடர்பு அறுந்து போனதுதான். அவ்வேளையில், அந்த நெருக்கடிக்குள், ஊடக இல்லத்தை விட்டு விலகிச் செல்லாது எமக்கான செய்தி களை சத்தியமூர்த்தி அண்ணை வழங்கி னார். அந் நாட்களில் தான் அவரது அர்ப்ப ணிப்பான ஊடகப் பணியை நான் புரிந்து கொண்டேன்.

எதிரியின் எறிகணை வீச்சிற்கு இலக் காகி மடியும் வரை ஊடக இல்லத்தின் ஊடாக ஐ.பி.சி - தமிழ் வானொலியின் செய் திப்பீடத்திற்குத் தொடர்ச்சியாக சத்திய மூர்த்தி அண்ணை செய்திகளை வழங்கிக்



கொண்டிருந்தார். இது அன்று ஐ.பி.சி - தமிழ் இலண்டன் கலையகத்தில் பணி புரிந்த அறிவிப்பாளர்கள் எவருக்கும் தெரி யாத ஒரு உண்மை. ஊடக இல்லத்திற்கு அவர் வழங்கிய ஒளிப்பதிவுச் செவ்விகள் ஒலிவடிவமாக மாற்றப்பட்டு அன்று ஐ.பி.சி - தமிழ் வானொலியில் ஒலிபரப்பப்பட்ட பொழுதும், யாருக்குமே அவர் ஐ.பி.சி - தமிழ் வானொலியின் செய்தியாளராகப் பணிபுரிகின்றார் என்பது அன்று தெரியாது. இலண்டனில் எனக்கும், வன்னி கிழக்கில் பதுங்கு குழிகளுக்குள்ளும், கூடாரங்களுக் குள்ளும் இயங்கிக் கொண்டிருந்த ஊடக இல்லத்திலும் பணிபுரிந்தவர்களுக்கும் மட்டுமே தெரிந்திருந்த உண்மை அது.

இன்று சத்தியமூர்த்தி அண்ணை எம் மோடு இல்லை. ஆனாலும் அவரது ஆளு மையும், துணிச்சலும் இன்று பல தமிழ்த் தேசிய ஊடகவியலாளர்களை ஆகர்சித்து நிற்கின்றது. அந்த வகையில் மரணத்தின் பின்னரும் வாழும் மனிதர்களில் ஒருவராகத் தமிழ்த் தேசிய விடுதலை வரலாற்றில் சத்தியமூர்த்தி அண்ணனும் நிலைபெற்றுள்ளார்.

## நம்மால் சமூக ஊடகத்தை வரையறுக்க முடியுமா?




சமூக ஊடகம் என்றால் என்ன என்ற வரை யறையை எங்களது ஒரு ஆய்வு திட்டமான "அளவிடக் கூடிய சமுதாயக் குணங்கள்" இல் கொடுத்துள்ளோம், பல்வேறு சாத்தியமான வரையறைகளில் இது ஒன்றே யாகும். மானுடவியலாளர்கள், சமுதாயக் குணங்க ளில் ஆர்வமாக உள்ளனர். அதாவது சமூகத்தில் மக் கள் எவ்வாறு இணைந்திருக்கிறார்கள் என்பதில். முன்பு ஊடகங்கள் தனியார் வசப்பட்டதாகவோ அல்லது முழுவதும் பொதுத்துறையுடையதாகவோ இருந்தன என மானுடவியலாளரான நாங்கள் சுட்டிக்காட்டுகி றோம். ஆனால் சமூக ஊடகங்களின் தளங்கள் இரண் டுக்கும் இடையே உள்ள இடத்தை ஆக்கிரமிக் கின் றன. பிற சம்பந்தமுடைய மற்ற துறைகளுக்கு வேறு வரையறைகள் உண்டு.

சமூக ஊடகம் என்பது என்ன என்று முடிவு செய்வது நாங்கள் அல்ல, இறுதியில் நீங்கள் தான்நாம் "சமூக ஊடகம்" என்ற பதத்தை தேர்வு செய்ய வில்லை, அல்லது அதற்கு முன் "சமூக வலைப்பின்னல் தளங் கள்" என்பதை. ஆனால் நாம் ஆராயும் மனிதர் களின் விதிகள் மற்றும் நடத்தையை மானுடவியல் பின்பற்று கிறது. சமூக ஊடகங்களின் பரிணாம மாற்றத்தைப் பொறுத்து எங்கள் விதிமுறைகளும், அணுகுமுறைக ளும் தொடர்ந்து மாறும், மேலும் வெவ்வேறு சமூகங் களின் வேறுபட்ட பயன்பாட்டு முறைகளையும் பிரதி பலிக்கும்.





**உடுவில் அரவிந்தன்**



# சத்தியவேள்வியின் சாதனையாளன்

தமிழர்களின் கல்விவளர்ச்சியில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் வகிபாகம் மிகப்பெரியது. அங்கு பயின்றவர்கள் தங்களுடைய சிறப்பான ஆளுமைகளால் உச்சங்களைத் தொட்டிருக்கிறார்கள். அந்த வரிசையில் எங்கள் 1991 உயர்தரப்பிரிவு தனித்துவமானது. எந்த விடயமானாலும் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக விளங்குவது. அதற்கான ஆதாரங்கள் பொதுவெளியில் கொட்டிக்கிடக்கின்றன. அதே போன்று, ஈழவிடுதலைப்போராட்டத்தில் இந்துமைந்தர்களின் பங்களிப்பு மிகக் கனதியானது. அத்தகைய மாண்புடையோரின் திருப்பெயர்கள் மக்களின் மனங்களில் அழுத்தமாக எழுதப்பட்டுள்ளன. வரலாற்றின் நெடிய பக்கங்கள் அவர்களைப் பற்றிய சொற்களைப் பெருமிதத்து டன் சுமந்துநிற்கின்றன.

சத்தியமூர்த்தி மன்னம்பிட்டி, மண்டைதீவு, இணுவில் போன்ற இடங்களில் தன்னு டைய இளமை வாழ்வைக் கழிந்திருந்தான். அவனுடன் இந்துக்கல்லூரியில் சகமாணவனாகக் கற்றநினைவுகள் இன்னும் பசுமையாகவுள்ளன. அவன் அந்தக் காலத்திலேயே வித்தியாசமாகச் செயற்பட்டுக்கொண்டிருப்பான். சிறுமைகண்டு பொங்குமியல்பு அவனுடைய உதிரத்திலேயே ஊறிக்கிடந்தது. எங்களுடைய பிரிவில் அவனைப்போல இன்னும் பலரிருந்தார்கள். அந்தப் போர்க்குணத்தின் ஊற்



றானது கல்லூரியில் வழி காட்டிகளாக விளங்கிய அண்ணன்களிடமிருந்தே சுவறி யிருந்தது எனலாம்.

சத்தியமூர்த்தி எந்த விடயமானாலும் நிதானமாக யோசித்தே அணுகுவான். அவன் ஒரு முடிவை எடுத்துவிட்டால் அதிலிருந்து விலகாத பண்பினை இறுதி வரை கடைப்பிடிப்பான். அவனுடைய அட்ட காசமான சிரிப்பு பல அர்த்தங்களை வெளிப் படுத்தும் ஆற்றல் வாய்ந்தது. அவனுடைய செவிமடல்களின் நிமிர்வு அறிவாற்றலைச் சுட்டுவதாக நாங்கள் பகடியாகக் குறிப்பிடு வதுண்டு. கல்லூரியில் மாணவமுதல்வ னாக அவனாற்றிய சேவைகளை இளைய வர்கள் எப்போதும் நினைத்திருப்பார்கள்.

அவன் உயர்தரத்தில் படிக்கும்போது வணிகத்துறையை விரும்பித் தேர்ந்தி ருந்தான். அவனும் அவனுடைய நெருங் கிய நண்பன் வேலணையூர் சுரேசும் உயர்தரப்பரீட்சையில் பெற்றுக்கொண்ட சிறந்த பெறுபேறுகளின் காரணமாக யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தின் முகா மைத்து வபீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டி ருந்தார் கள். எப்போதும் இரட்டையர்களா கத் திரிந்தவர்கள் கல்விப்புலத்திலும், எழுத்து வன்மையிலும் காட்டிய அதீதமான திறன் களைப் பார்த்து எங்களன்னை எப்படி யெல்லாம் அகமகிழ்ந் திருப்பாள்!

காலநீட்சியின் ஒரு புள்ளியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்திலே தன்னார்வத்துடன் சேவையாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருந்தது. நான் இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன் ஆசிரியராக இருந்த ஆதாரம் சஞ்சிகைக்கு வருகின்ற படைப்புகளைச் செவ்வை பார்க்கும் பணியைச் செய்திருந்தேன். ஏற்கனவே அங்கு சத்தியமூர்த்தியும் சுரே சும் மிகுந்த ஈடுபாட்டுடன் வேலைகளைச் செய்துகொண்டிருந்தார்கள். அவர்களு டைய அர்ப்பணிப்பான மனப்பாங்கு தொண்ணூற்றைந்தில் வலிகாம இடப் பெயர்வின்போது, பல்கலைக்கழகக் கல் வியைத் துறந்துவிட்டு வன்னிக்குச் செல்லு மளவுக்கு உறுதியாக இருந்தது. அடங்காப் பற்றென அழைக்கப்படும் வன்னி மண் அவர் களை முழுமையாகத் தத்தெடுத்துக் கொண்டது.

அதற்குப்பிறகு, சத்தியமூர்த்தியைச் சந் திக்கக்கூடிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்க வில்லை. ஆனாலும், இணையத் தளங்க ளிலும் அச்சு ஊடகங்களிலும் எல் லையற்று விரிந்த அவனுடைய ஆளுமை யைக் கண்டு வியந்துகொள்வேன். அரசியல், சமூகவியல், பொருண்மியம், இலக்கியம் என்று அவன் தொடாத இடங்களே யில்லை. வன்னிப்பெருநிலத்தில் எழுகலை இலக்கியப்பேரவையின் உருவாக்கத் துக்கு வித்திட்டவர்களின் அவன் மூலவன். தமிழ்த்தேசியம் சார்ந்து மிகத் தீவிரமாக இயங்கியவன், அதற்காகத் தன்னுடைய உயிரையும் கொடுத்தான். எங்கள் உயர் தரப்பிரிவைச் சேர்ந்த சில நண்பர்களைப் போலவே அவனும் இலட்சிய வேள்வியில் ஆகுதியானான். வாழ்வின் இறுதியான அந்தக் கணப்பொழுதிலும் போரின் கொடு ரங்களையும் அழிக்கப்பட்டுக் கொண்டி ருந்த எங்கள் இனத்தின் அவலங்களையும் செவிகளற்ற உலகுக்கு உரத்துச் சொல்லி விட்டே விடை பெறாமல்போனான். ஆனால், நாடகீயமான நடத்தைகளைக் கொண்ட நாடுகள் அவற்றைக் கண்டு கொள்ளவேயில்லை. மானுடப் பேரழிவின் எல்லையைத் தரிசித்த திருப் தியுடன் அவை

உறங்கிக்கொண்டிருக்கின்றன. ஆனாலும், அந்த நாட்டுப் பற்றாளனின் கணீர்க் குரல் இப்போதும் அதே ஏக்கத்துடன் காற்றுவெளியில் அலைந்து திரிகின்றது.

நண்பன் சத்தியமூர்த்தி தன் செல்ல மகளின் மழலையைக் கேட்டுக் கிறங்கியவன். அவளுடைய அருகாமையை அர்த்தங்களுடன் சுவாசித்தவன். அவள் அன்பினால் தன்னை ஆள்வதை இரசிக்கின்ற வரத்தைத் தொடர்ந்து அனுபவிக்காமல் போன அவலத்தை என்ன வென்பது? காலம் மிகப் பொல்லாதது. அது தாங்க முடியாத துயரங்களை எமக்குப் பரிசளிக்கின்றது. அதுவே அந்தத் துயரங்களுக்கு மருந்து மாகின்றது. நண் பனின் நினைவுச் சரடுகளைப் பற்றுவதும் அவனுடைய கனவுகளைப் போற்றுவதும் எம்கடன். அதுதான் அவனைப்போன்று இலட்சியத் துக்காக விதைக்கப்பட்டவர்களுக்கு நாங்கள் அளிக்கக்கூடிய உன்னதமான கௌரவமாகும்.

●




ஊடகங்கள் என்றால் என்ன? அதன் வரலாறு என்ன? என்பதை நாம் அறிந்து கொண்டு இந்த தலைப்பினுள் நுழைந்தால் தஃவாவிற்கும் ஊடகங்களுக்கும் உள்ள தொடர்பு என்ன? அவசியம் என்ன? முக்கியத் துவம் என்ன? என்பதை இலகுவில் புரிந்து கொள்ள முடியும்.

தகவல் தொடர்பு சாதனங்கள், மீடியாக் கள் வெகுஜன தொடர்பு சாதனங்கள் என்று பல பெயர்களில் இந்த ஊடகங்கள் அழைக்கப் படுகின்றன.

'தனித்திருக்கும் தன்மையை மாற்றி ஐக்கியப்படுத்துதல்' மீடியா எனலாம்.

'தகவலை அனுப்புபவருக்கும் பெறுபவருக்குமிடையே நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துவது, இருவர் அல்லது இரு அமைப்புக் களுக்கிடையே நடைபெறுகின்ற செய்திப் பரிமாற்றமும் அதனால் ஏற்படும் தெளிவும் தகவல் தொடர்பு (மீடியா)' என்பர்.



திருமதி சத்தியமூர்த்தி நந்தினி



# மீண்ட நினைவுகள்....

**ஊ**டகவியலாளரும் அரசியல் ஆய் வாளரும் நாட்டுப்பற்றாளரும் தமிழ் மக்க ளின் மனங்களில் அல்ல அனைத்து ஊடக நண்பர்கள் மனதிலும் நிலைத்து நின்று எம்மைவிட்டுப் பிரிந்து பத்து வரு டங்கள் ஆகிவிட்டாலும் இன்றும் பேசப்படுகிற எனது கணவர் புண்ணியமூர்த்தி சத்திய மூர்த்தியின் பதியப்படாத சில நினை வுகளுடன்...

1972.10.30 அன்று அவர் இணுவில் வைத்தியசலையில் பிறந்து மன்னம்பிட்டி என்னும் தமிழ் கிராமத்தில் எட்டு வயது வரை வளர்ந்தார். இவரது தந்தை ஒரு கிராம சேவகர். அம்மா, ஒரு அக்கா, இரண்டு தம்பிகள். ஒருவன் மாவீரன் கப் டன் சிந்துஜன், மற்றயவன் காணாமல் ஆக் கப்பட்டவன். மன்னம்பிட்டி மகாவித் தியால யத்தில் முதலாம் வகுப்பு படிக்கும் போது அவரின் அக்கா இரண்டாம் வகுப்பு படித்து கொண்டிருந்தா அப்போது அக்காவின் வகுப்பில் கேட்கும் கேள்விகளுக்கு முதலாம் வகுப்பில் இருந்து கொண்டு பதில் சொல்லி விடுவாராம். அதனால் ஆசிரியர் இரண்டாம் வகுப்புக்கு அனுப்பி விட்டாராம்.....

பின்பு எட்டு வயதில் யாழ்.மண்டை தீவில் தனது அம்மம்மா வீட்டில் இருந்து மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் தனது கல்வியை தொடங்கி அங்கிருந்து ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்தி பெற்று யாழ்.இந்துக் கல்லூரியில் சேர்ந்து உயர் கல்வியை முடித்து... யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ கல்வியைத் தொடர்ந்த





வேளையிலிருந்தே தனது பட்டப்படிப்பில் அரசியலை ஒரு பாடமாக எடுத்து கொண்டிருந்தார். பள்ளிக்காலத்திலிருந்தே கவிதை, சிறுகதை, பேச்சு, கட்டுரை என அவரது எழுத்து காலம் தொடங்கியது.

1990 ஆம் ஆண்டு அவரின் தம்பி தன்னை மண்ணின் மைந்தனாக இணைத்துக் கொண்டிருந்தான். அவனின் பல்துறை ஆற்றல் கண்டு தனது பங்களிப்பை வெளியில் இருந்து தொடர்ந் திருந்த வேளை 1995.07.10 அன்று கப்டன் சிந்துஜனாக மண்ணிற்குள் விதையானான். அவனின் இழப்பை அவரால் தாங்கிக் கொள்ள முடியாது தள்ளாடி நின்ற போது அவனின் நினைவாக அவர் எழுதிய நினைவு குறிப்பில் இருந்தது."இன்று நீ சென்றுவிட்டாய் நாளை நான் உன்னை தொடர்ந்து வருவேன். நீ நிம்மதியாக உறங்கு" என்று...

1995 யாழ் இடப்பெயரவினூடாக பல்கலைக்கழக வாழ்வை இடையிலேயே நிறுத்தி விட்டு வன்னி மண்ணில் கால் பதித்தவர். தன் இறுதி காலம் இவ்வளவு வேகமாக வன்னிக்குள்ளேயே முடியும் என்று அவர் அன்று எண்ணியிருக்கமாட்டார். தன் எழுத்துக்களால் வெளியில் அனைவரதும் மனங்களில் நிலைத்து நின்றாலும் தேச விடுதலைக்காக அவர் செய்தவைகள் வன்னிக்குள்ளேயே பேசப்படாது அடங்கி விட்டது.

அவர் யாழ்ப்பாணத்தில் இருந்த போதே பொருண்மிய மேம்பாட்டு கழகத்தில் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் அவர்களால் வேலைக்கு சேர்க்கப்பட்டு பின்பு "ஆதாரம் " சஞ்சிகையை வெளியிட்டு கொண்டிருந்தார்கள். அதில் தனது எழுத்துக்களை தொடர்ச்சியாக எழுதி கொண்டிருந்தார்.

பின்பு ஈழநாடு, ஈழநாதம், ஈழமுரசு, பத்திரிகைகளில் அரசியல், கள நிலவரம், விமர்சனம் மற்றும் வெளிச்சம் சஞ்சிகையில் கவிதை, சிறுகதைகள்(பு.சிந்துஜன், பு. சத்தியமூர்த்தி, விவேகானந்தன், கதிர் காமத்தம்பி, ஹம்சத்வனி, எனும் பெயர்களில்) என எழுதத் தொடங்கி இருந்தார்.

அக்காலப் பகுதியில் தமிழீழ சட்டக்கல்லூரியில் சட்டகற்கை முடித்து சான்றிதழ் வாங்கினார். பின்னர் சட்டக்கல்லூரியின் அதிபர் பொறுப்பினை ஏற்று பணி புரிந்தார். அப்போது அவருக்கு கொடுக்கப்படும் கொடுப்பனவு 3000ரூபா. அந்த கொடுப்பனவை தனது பயன்பாட்டிற்கு எடுப்பதில்லை. களத்திலே நின்று வேலி அமைத்திருந்தவர்களின் சில தேவைகளை ஒவ்வொரு மாதமும் பூர்த்தி செய்து வந்தார்.

அத்தோடு மட்டுமல்லாது அக்காலப் பகுதியில் களத்திலே நின்றவர்களுக்கு உதவியாக எல்லைப்படை ஒன்று உருவாக்கப்பட்டிருந்தது. போராளிகள் அல்லாது வெளியே அலுவலகங்களில் பணிபுரிபவர்களுக்கு இராணுவ பயிற்சி அளிக்கப்பட்டு ஈடுபடுத்தப்பட்டார்கள். ஒவ்வொரு மாதத்திலும் ஒரு கிழமை பணிக்கு செல்வது வழக்கம். ஒவ்வொரு மாதமும் பணிக்கு சென்று விடுவார். அப்போது அவர் ஒரு ஆத்துமா நோயாளி. குளிசை இல்லாமல் அவரால் இயங்க முடியாதிருந்த நிலையிலும் மழைக் காலப்பகுதி என்றாலும் அவர் தனது நாள் வரும்போது நிறைய சாமான்களை வாங்கி பையை நிறைத்து விடுவார். என்ன என்று கேட்டால் அங்கு தொடர்ந்து பணியில் நிற்கும் போராளிகள் வெய்யில் மழை பார்க்காது நிற்கிறார்கள் என்னால் முடிந்தவற்றை வாங்கி கொண்டு போய் கொடுக்கிறேன் என்பார். பணி முடியும் வரை நின்று விட்டு வீட்டுக்கு வரும் போது கடுமையான வருத்தத்



தோடுதான் வருவார். வந்தவர் வீட்டில் படுத்து விடுவார். பிறகு சூப் காய்ச்சி கொடுத்து கவனித்த பிறகே பழைய நிலைக்கு திரும்புவார்.

"ஏன் எத்தனையோ பேர் சாட்டுச் சொல்லி நிற்கிறார்கள் உங்களுக்கு வருத்தம் என்று சொல்லி நிற்கலாம் தானே" என்று கேட்டால் அவரின் முகத்தில் கோப ரேகைகள் ஓடும்.

"எனக்கு மட்டுமா வருத்தம் அங்கு எத்தனை பேர் காயங்களோடும் வருத்தங்களோடும் நிற்கிறார்கள் இப்படியே எல்லாரும் சொன்னால் எங்கே போய் முடியும்" என்று வாயை அடைத்து விடுவார்.

அவரிடம் எல்லைக்குமீறிய அன்பு, நல்ல நட்பு எல்லாம் நிறையவே இருந்தது. அது குழந்தைகளிலிருந்து பெரியவர்கள் வரை நீண்டிருந்து. இயற்கை மீதும் சரி தாயகத்தின் மீதும் சரி குடும்பத்தின் மீதும் சரி அளவு கடந்த காதல் கொண்டிருந்தார். யாரும் கண்ணீர் சிந்தினாலோ தம் துயரத்தை பகிர்ந்தாலோ தன்னால் முடியாதிருந்தாலும் யார் மூலம் அதைக் கொண்டு செய்விக்க முடியுமோ செய்து முடித்த பின்புதான் ஓய்வார்.

எழுத்துவ உதவி பரீட்சையில் சித்தி பெற்று அவருக்கு முல்லைத்தீவு கல்வி திணைக்களத்தில் முகாமையாளராக வேலை கிடைத்தது. வேலை செய்து கொண்டிருந்த வேளைகளில் எல்லாருக்கும் தன்னால் முடிந்த உதவிகளை செய்து கொடுப்பதில் முன்னிற்பவர். கல்விச் சமூகம் இவர் மீது அளவு கடந்த மதிப்பைக் கொண்டிருந்ததை கண்டு கொள்ள முடிந்தது.

முல்லைத்தீவு கல்வி திணைக்களத்தால் நடாத்தப்பட்ட முறைசாரா கல்வி பிரிவினரால் இதழியல் கற்கை நெறியை எழுகலை இலக்கியப் பேரவையோடு இணைந்து நடத்தி பல பேரை ஊடகவியலார்களாக வெளிக்கொண்டு வந்தார்.

அதற்கு முன்பு முறைசாரா கல்வி பிரிவினரால் இதழியல் கற்கை நெறியை கற்பித்தபோது தான் நானும் அந்த கல்வியை கற்கச் சென்றிருந்தேன். அங்கு தான் முதன் முதலில் அவரைக் கண்டேன். நான் கொஞ்சம் ஓடியாடி என்ன வேலை என்றாலும் எல்லாவற்றையும் எடுத்து செய்வேன். அதில் யாரும் ஏதாவது செய்யவில்லை என்றால் செய்யும் வரை விட மாட்டேன். அதனால் என்னை அவருக்கு பிடிப்பதில்லை. ஆனாலும் நான் விடுவ தில்லை. அவர் அப்போது ஈழநாடு பத்திரிகையின் ஆசிரியர் பீடத்தில் வேலை செய்து கொண்டிருந்தார். கல்வி கற்று முடிந்து சான்றிதழும் வாங்கியாச்சு வீட்டுக்கு வந்து என்ன செய்வதென்றே தெரியவில்லை. வேலை ஒன்று தேடவேண்டிய தேவை அப்போது எம்மோடு படித்த முல்லைககமல், சத்தியமூர்த்தி எல்லாரும் அங்கு தான் வேலை செய்து கொண்டிருந்தார்கள். முல்லைக்கமலிடம் வேலை ஒன்று வாங்கி தரச்சொல்லி கேட்டேன். அவர் இன்று நாளை என இழுத்தடித்து கொண்டிருந்தார். அப்போது நானே மதியம் பன்னிரண்டு மணிக்கு ஈழநாடு அலுவலத்தின் வாசலில் போய் நின்றேன். அங்கு பிரதம ஆசிரியராக இருந்த இணுவையூர் சிதம்பர திருச்செந்தில்நாதன் அவர்கள் வெளியில் வந்தார். என்னை அவருக்கு வகுப்பு எடுக்க வந்த போது தெரியும்.

"எனக்கு ஒரு வேலை வேண்டும்" என்று கேட்டேன். அதற்கு அவர்"நாளைக்கு வேலைக்குவாரும்" என்று சொல்லி விட்டு போயிற்றார். என்னால் நம்பவே முடியவில்லை.





அடுத்த நாள் அங்கு போனபோது என்னை ஒப்புநோக்குனர் பணிக்கு தேர்வு செய்துள்ளோம் என்றார்.

நான் அங்கு வேலைக்கு வருவது சத்தியமூர்த்திக்கு பிடிக்கவில்லையாம் காரணம் நாங்கள் படிக்கும் போது ஈழநாடு, ஈழநாதம் இரண்டிலும் வேலை செய்த பணியாளர்கள் சிலர் கற்றனர். அதனால் இரண்டு பகுதிக்கும் போட்டி நான் ஈழ நாதத்தின் பணியாளர்களுடன் சேர்ந்து குழு வேலைகள் செய்வது இவர்களுக்கு பிடிக் காது. அதனால் நானும் ஈழநாட்டுக்கு வந்து தகவல் எடுத்து ஈழநாதத்துக்குச் சொல்லி விடுவேன் என்று வேண்டாமென நின்றா ராம். ஆனாலும் ஆசிரியர் என்னை சேர்த்து கொண்டார் என்று பிறகு அறிந்து கொண் டேன்.

அங்கு வேலை செய்யும் போது எல் லோரிடமும் நான் நட்புடனும் அன்புடனும் நடந்து கொள்வேன். அதனால் என்னிடம் அனைவரும் நல்லபடி பழகினார்கள். என் மீது அவர் கொண்டிருந்த தப்பான அபிப்பிரா யத்தை நான் கொஞ்சம் கொஞ்சமாக முறி யடித்து வெற்றி கொண்டு விட்டேன்.

அவருக்கு மட்டுமல்ல வேறு இடங்க ளில் இருந்து வந்து வேலை செய்யும் பெடிய ளுக்கும் வீட்டில் நல்ல சாப்பாடு செய்தால் கொண்டே கொடுப்பேன். கொஞ்சம் கொஞ் சமாக நட்புடன் பழகத்தொடங்கினோம். பிறகு ஒருவரையொருவர் புரிந்து கொண்டு நல்ல நண்பர்கள் ஆனோம்...

நட்பு தொடர்ந்து கொண்டிருந்தது. நிறைய வேலைகள் சேர்ந்து செய்தோம். எழுகலை இலக்கியப் பேரவை என்ற ஒன்றை ஆரம்பித்து வன்னியில் உள்ள எழுத்தாளர்கள், போராளி எழுத்தாளர்கள் என பலரின் எழுத்துக்களை நூல்களாக வெளியிட்டோம். அதை வெளியீடும் செய்து வைத்தோம்.

பின்பு ஈழநாடு பத்திரிக்கை இடை யில் நின்று போனது. அதன் பிறகு நான் ஈழநாதத்தில் வேலை செய்தேன். அங்கு அவரும் இரவு நேர வேலை செய்தார். செய்தி எழுதினார். கட்டுரைகள் மற்றும் களத்திலே சண்டை நடக்கும் போது நேரடி வர்ணனை செய்தார். நேரில் களத்திலே நின்று பார்ப்பது போல் இருக்கும் எழுத்து நடை. புலிகளின்குரல் வானொ லியிலும் அதைத்தொடரந்து கனேடியத் தமிழ் வானொலியிலும் ஐ.பி.சி வானொலி யிலும் தனது குரல் மூலம் பல பேரிடம் தனது கருத்தை பதிவு செய்தார். பல கள முனைத் தளபதிகளிடம் நேர்காணல் செய்தார். நிதர் சனம் தொலைக்காட்சியிலும் அரசியல் களம் செய்திருந்தார்.

நட்பு பல புரிதல்களை எமக்குள் ஏற்படுத்தி பின் காதலாக உருவெடுத்தது. அன்றிலிருந்து என்ன நிகழ்வுகள் என்றா லும் இணைந்தே செல்வோம், செய்வோம்.

சமாதான காலத்தில் சத்தியமூர்த்தி மட்டக்களப்பு கல்குடா வலயக் கல்வி பணி மனைக்கு இடமாற்றம் பெற்று சென்றார். அங்கு கொஞ்சகாலம் பணியாற்றி விட்டு போர் தொடங்கியதும் மீண்டும் வன்னிக்கு கிளிநொச்சி சுகாதார திணைக்களத்தில் இடமாற்றம் எடுத்து கொண்டு வந்து சேர்ந் தார். 2004 ஆம் ஆண்டு டிசம்பரில் சுனாமி வந்து பலபேர் இறந்தும் உடமைகளை இழந்தும் இருந்த மக்களின் தேவைகளை இரவு பகல் பாராமல் நேரடியாக சென்று எல்லாரோடும் சேர்ந்து செய்தவர்.

அனைத்துலக தொடர்பகத்தால் "ரீரீஎன்" தொலைக்காட்சி ஒன்று ஆரம்பிக்க பட்டது அதில் இணைந்து நாள் நோக்கு, அரசியல் களம், மற்றும் சில நிகழ்ச்சிகளை



செய்தார்.அது புலம்பெயர் சமூகத்தை நோக்கி சென்றது. ஒவ்வொருவரும் நாட்டில் என்ன நடக்கிறது என்பதை உன்னிப்பாகக் கேட்டனர், பார்த்தனர். அதனால் புலம்பெயர் நாட்டில் பல தமிழ் மக்களுக்கு தெரிந்தவரானார்.

உள்ளூரில் நிதர்சனம் தொலைக் காட்சியில் வீராவுடன் நிலவரம் என்ற நிகழ்ச்சியை செய்திருந்தார். அது உள் ளூர் மக்களிடமும் சென்றடைந்து.

கனடாவுக்கும் எமக்கும் நேரவித் தியாசம் அதிகம் எங்களுக்கு காலை வேளையாகும். அப்போது பனிகுளிர் காலம் மூச்செடுக்க கடுமையாக சிரமப்படுவார், ஆஸ்மா இருக்கும்.அதோடு சைக்கிளில் சென்று கனேடியத் தமிழ் வானொலியில் கதைப்பார். "இண்டைக்கு நில்லுங்கள் நாளைக்கு போங்கோ" என்றால் நிகழ்வு ஒழுங்குபடுத்தியவர்கள் எதிர்பார்ப்பார்கள் என்று சென்று விடுவார்.

எங்கள் இருவருக்கும் பல பேரோடு நல்ல நட்பு இருந்தது. எங்களது காதலை அவர் வாழைச் சேனையில் இருந்த போது வீட்டில் சொல்லி எங்களது வீட்டுக்கார ரோடும் கூப்பிட்டு கதைத்து இரு வீட்டாரின் விருப்பத்தோடு 16.06.2005 இணுவையூர் சிதம்பர திருச்செந்தில்நாதன் அண்ணை யின் தலைமையில் அவர்கள் வீடு மாப் பிள்ளை வீடாகவும் எங்களது வீடு பெண் வீடாகவும் இருந்து எங்களது திருமணம் கிளி நொச்சி கந்தசாமி கோவிலில் நடை பெற்றது.

திருமணத்திற்கு எல்லோருக்கும் சொல்ல முடியாத நிலை.அப்போது சமா தான காலம் எளிதாக எல்லோரும் வந்து போக முடிந்தது. எங்களது உறவினர்கள் அவரது அப்பா, அம்மா மற்றும் எங்களது நண்பர்கள். இரவு தான் முகூர்த்தம் அதனால் மிக முக்கியமான 200 பேரோடு மிகவும் எளிதாக நடந்தது. பின்பு 800 பேரோடு அந்த 200 பேரும் சேர்த்து மொத் தம் ஆயிரம் பேருக்கு கூட வரவேற்புக்கு வந்திருந்தனர்.பல பொறுப்பாளர்களது குடும்பங்கள், பிள்ளைகள் எல்லோ ரும் வந்திருந்தனர். எங்களோடு சேர்ந்து கதைத்து சாப்பிட்டு படமெடுத்து விட்டு சென்று விட்டார்கள். சத்தியமூர்த்தியின் அப்பா அம்மா மற்றும் எனது குடும்பத்தினர் எல்லோருக்கும் பெரிய ஆச்சரியம் எப்படி இது சாத்தியம் என்று. சத்தியமூர்த்தியின் அப்பா சொன்னார் "நாங்கள் எதிர் பார்க்க வில்லை இவ்வளவு ஆயிரக்கணக் கில் ஆக்கள் வந்திருந்தனர். அதோடு இவ் வளவு பெரிய பெரிய பொறுப்பாளர்கள் தங் கள் குடும்பத்தோடு வந்திருந்தனர் ஊரில் என்றால் சொந்தங்களோடு முடிந்திருக்கும். நாங்கள் சொந்தங்களோடு மட்டும் தான் பழகுகிறோம். ஆனால் நீங்கள் இருவரும் எவ்வளவு பேரையும் சேர்த்து வைத்திருக் கிறீங்கள். உங்கள் இருவரையும் பாக்க எமக்கு பிரமிப்பாய் இருக்கிறது உன்னை பெற்றதையிட்டு எவ்வளவு பெருமிதம் அமைகிறேன்" என்று ஆனந்த கண்ணீ ரோடு ஆசீர்வதித்ததை பார்த்தி ருந்த வர்கள் அனைவரும் பரவசம டைந்தனர்.

அதிலும் சொல்லாது விடுபட்டவர்கள் ஏராளம். அவர்களில் பலபேரின் பேச்சை வாங்கி கட்டிக் கொண்டோம் பின்பு.

கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் என்ற இடத்தில் தான் நாம் இருந்தோம். அங்கு தான் எங்களது திருமணம் நடந்தது. எங் கள் வீட்டுக்கு முன் தான் தமிழீழ கல்வி கழகம் இருந்து அங்கு தான் நான் வேலை செய்து கொண்டிருந்தேன்.





எங்களது குடும்ப வாழ்க்கை சந்தோச மாக போய்கொண்டிந்தது. தனது சம்பள பணத்தை ஒட்டிய என்பலப்போடு அப்படியே கொண்டு வந்து தந்து விட்டு குடும்ப பொறுப் பிலிருந்து நைசாக விலகி விடுவார். கொஞ் சப் புத்தகம் எடுத்து அறிவமுதில் வைத்திருக் கிறேன் வாங்க பணம் வேண் டும் என்பார். ஏன் அதில் எடுத்து வாங்கி இருக்கலாமே என்றால் இல்லை அதை அப்படியே கொண்டு வந்து தந்து விட்டு வாங்குவதில் ஒரு சுகமே இருக்கு என்பார்.

நாங்கள் திருநகரில் ஒரு வீடு வாடகைக்கு எடுத்து போனோம். அங்கும் அவர்கள் எல்லோரும் எங்களைத் தங்கள் குடும்பம் போலவே நினைத்து பழகினார் கள். ஏனெனில் திருமணம் முடிந் ததும் குடும்பத்தினர் அனைவரும் போய் விட்டார்கள். நாங்கள் சேர்த்த அன்பான குடும்பங்கள் தான் எமக்கு எல்லாமே.

எமது மகள் எனக்கு வயிற்றில் வந்தபோது அவர் பெரிய சந்தோசப்பட்டார். தான் அப்பா ஆகப்போகிறேன் என்று. அது என்ன குழந்தை என்றாலும் அதற்கு தனது தம்பி மாவீரன் கப்டன் சிந்துஜன் என்ற பெயரில் "ஜன்" எடுத்து விட்டு தனியாக சிந்து என்று வைத்தார். தமிழ் பெயர் என்று. அவள் வயிற்றில் இருக்கும் போதே பல வரலாறு, பல நாட்டு போர்கள் என புத்தகங் களை வாசிக்க வைத்து நல்ல நல்ல இசைப் பாடல்களை வாங்கி வந்து கேட்க வைத்து பல ஆர்பாட்டங்கள் செய்தார். அது மட்டு மல்ல தான் சுகாதார திணைக்களத் தில் வேலை செய்வதால் ஒரு கர்ப்பிணிப் பெண் எப்படி எல்லாம் அவர்களது நடை முறைக்கு ஏற்ப இருக்க வேண்டும் என்று வகுப்பு எடுப்பார்களோ என்ன என்ன செய்ய வேண்டும் என்று என்னிடம் பரிட்சித்தார் கள், நடத்தினார்கள். பச்சை காய்கறிகள், பழங்கள், பால், முட்டை, இறைச்சி வகை கள், இலை குழைகள் என்று அதன் படியே சாப்பிட வைத்து ஒரு ஆரோக்கிய மான பிள் ளையாக 2006 அன்று வெளியில் வந்தாள் சிந்து. அதோடு நின்றாரில்லை அவள் எத்தனை கிலோவில் பிறந்தாளோ அடுத்த மூன்று மாதத்தில் இரண்டு மடங்கு நிறை இருக்க வேண்டும் என்று என்னை காலை அரைப்போத்தல் பால் மாலை அரைப்போத் தல் பால் என்று குடிக்க வைத்து அதேபோல் திரும்பவும் சாப்பிட வைத்து சரியாக இரண்டு மடங்கு நிறை வந்தாள் சிந்து அதை படம் எடுத்து திரும்பவும் கொண்டே போட்டு காட்டி வகுப்பு நடத்தினார்கள்.

அவள் பிறந்த இரண்டு நாளில் சித்திரை வருடப்பிறப்பு அதற்கு அறிவமுது புத்தகசாலையில் 550 பக்கங்கள் கொண்ட பஞ்சதந்திரக் கதைகள் என்ற புத்தகத்தை வாங்கி வந்து அதில் "மகளே இதில் உள் ளது கதைகள் மட்டுமல்ல வாழ்க்கை யின் தத்துவங்களும் தான் அடங்கி இருக்கிறது இதைப் பின்பற்றி வாழ வேண்டும்" என்று எழுதி அப்பா அம்மா இருவரும் கையெ ழுத்து போட்டு கொடுத்தார்.

அதோடு நிற்கவில்லை தமிழீழ வைப்பகத்தில் வங்கி கணக்கு திறக்க சென்றார். அங்கு தமிழ் பெயர் வைத்த குழந்தைகளுக்கு விசேட வைப்பு கணக்கும் தமிழ் பெயர் இல்லாதவர்களுக்கு நோமல் கணக்கும் என்றிருந்தது. அதுவும் தமிழ் பெயர் கையேடு என்று ஒரு புத்தகம் இருந்தது அதில் சிந்து என்ற பெயர் இருக்க வில்லை. அதனால் நோமல் கணக்கில் திறந்து விட்டார்கள். அதனால் அவருக்கு கடும் கோபம் என்ன நான் "ஜன்" என்ற பெயரையே எடுத்து விட்டு தனியாக சிந்து என்று வைத்தேன் யார் சொன்னது தமிழ் பெயர் இல்லை என்று என தலைவருக்கு,



தமிழேந்தி அப்பாவுக்கு, வைப்பக பொறுப் பாளருக்கு என்று கடிதங்கள் எழுதி பண்டி தர் பரந்தாமன் ஐயா மற்றும் பலபேர் எழு திய பதிவுகளை கொண்டு தனது மகளின் பெயர் தமிழ் தான் என்று நிரூபித்து உடன டியாக தமிழ் பெயர் தான் என ஏற்க வைத்து கணக்கையே மாற்ற வைத்தவர்.

தனது மகளின் ஒவ்வொரு அசை வையும் கண்டு ரசித்து, அப்துல் கலாம் இளைஞர்களை நோக்கி எழுதிய "அக் கினிச் சிறகுகள்" என்ற புத்தகத்தை முதலா வது பிறந்த நாளுக்கு பரிசளித்து விட்டு தன் மகளை தன் நாட்டின் "ராஜதந்திரி" ஆக்கிப் பார்க்க வேண்டும் என்று

அவளை நோக்கி பல கனவுகள் கண்டதோடு மட்டுமல்லாது வீட்டு சுவரில் மகளை படங்கள் கீற வைத்து அதை பட மெடுத்து கவனமாக வைத்திருந்தார் பிறந்து பதினாறாவது நாளிலிருந்து மிக முக்கிய மான புகைப்படங்களை எடுத்து கழுவி அதை ஒரு அல்பத்தில் போட்டு திகதி மாதம் சம்பவம் எல்லாம் எழுதி ஆவண மாக்கி பாதுகாத்து வைத்திருந்தார். அதை 21ஆவது பிறந்த தினத்திற்கு பரிசளிக்க. "குட்டியம்மா" என்று செல்லமாக அழைத்து அப்பா சொன்ன கதைகள் ஏராளம். இன்றும் அவரின் சில நண்பர்கள் அவளை குட்டி யம்மா என்றே கூப்பிடுகிறார்கள். அப்படி வளர்க்க வேண்டும் இப்படி வளர்க்க வேண் டும் என்று. அவள் மீது அளவு கடந்த பாசம் வைத்திருந்தார். அதனை வார்த்தை களாலோ எழுத்துகளாலோ எழுதியோ சொல்லிவிடவோ முடியாது.

அப்படி இருவரும். இன்று அவளின் வளர்ச்சிகள் அவர் கண்ட கனவுகளில் நிறைந்து நின்றாலும் அவரின் ஆசீர்வாதம் மட்டுமே கிடைக்கப் பெற்றவளாய்... நாளை அவர் கனவை அவரின் குட்டியம்மாவாய் நிலைத்து நின்று நிறைவேற்றுவாள்!

அவர் அவளை விட்டு பிரியும் போது இரண்டரை வயது குழந்தையாக இருந் தாள் சிந்து. உயிரற்ற உடலைக் கண்டு அவள் துடித்த துடிப்பும் நெற்றியில் அவள் கொடுத்த கடைசி முத்தமும் இன்று பதின் மூன்று வந்து பெண்ணாக வளர்ந்தும் இன் றும் பேசும் படமாக ஜெனிவாவில் ஒவ் வொரு வருடமும் நீதி வேண்டி வைக்கப்ப டுகிறது.

நாங்கள் திருமணம் செய்த பின்பு எங்கள் திருநகர் வீட்டில் கை.சரவணன், வேலணையூர் சுரேஷ் இருவரது திருமண வரவேற்பு நிகழ்வையும் செய்தோம். அது ஒரு மறக்க முடியாத நினைவுகள்... புதிதாக திருமணமான எங்களது நண்பர்களைக் கூப்பிட்டு அவர்களுக்கு பிடித்த சாப்பாடு என்ன என்று கேட்டு அதை வாங்கி சமைத்து விருந்து வைப்போம். அவர்கள் வீட்டுக்கு வரும் முன்னரே எல்லாம் துப்புரவாக்கி மரங்களில் இருந்து வடிவான பூக்கள், குறோட்டன் இலைகள் எல்லாம் வெட்டி எடுத்து அழகான பூங்கொத்து செய்து வைத்திருப்பார். அவர்கள் வந்ததும் நாம் இருவரும் சேர்ந்தே கொடுப்போம். பின் விருந்து தடபுடலாக நடந்து முடிந்ததும் அவர்களுக்கு வாங்கி வைத்த பரிசையும் கொடுத்து வழியனுப்பி வைப்போம்.

வீட்டில் இருவருக்கும் சமைத்தோம் இல்லை. மதியம் அல்லது இரவு சாப்பாட் டுக்கு ஐந்து அல்லது ஆறு பேருக்கு மேலே தான் எண்ணிக்கை இருக்கும். வருடத்தில் மூன்று நினைவு நாள் வரும் அதற்கு சிதம்பர திருச்செந்தில்நாதன் அண்ணை, அக்கா,பிள்ளைகள், யோசப் மாஸ்ரர் குடும் பம், சரவணன் குடும்பம், வேலணையூர்





சுரேஷ் குடும்பம், றமணன், மற்றும் சொந் தங்கள், பக்கத்து வீட்டில் உள்ள அனை வரும், ஆதியக்கா, செவ்வேள் எல்லாரை யும் கூப்பிட்டு சாப்பாடு கொடுப்போம். அதில் மரக்கறி சாப்பாடு தான். இவ்வளவு பேரும் ஒரு குடும்பமாகவே இருந்தோம் அன்று. இன்று எல்லோரும் பிரிந்து திக்கொன்று திசையொன்றாய் இருக்கி றோம். தொலை பேசியூடு பேசிக் கொண்டு.

எங்களுக்கும் அறிவியல் நகரில் ஒரு காணி இருந்தது. அதில் அழகான ஒரு வீடு கட்டி குடி புகுந்தோம். அதற்கு "அன்பு இல்லம்" என்று பெயர் வைத்தோம். பெயரில் மட்டும் இல்லை அன்பு அதை நிஜத்தில் காட்டி னோம். வளவு நிறைய அழகழகான பூமரங்கள், வடிவுக்கு குறோட்டன்கள், பழ மரக்கன்றுகள், காய்கறிகள், இலை குழை கள், எல்லாமே பயிரிட்டோம். அதைப் பறித்து பக்கத்து வீடுகளுக்கு மற்றும் நண் பர்கள் வீடுகளுக்கு கொண்டே கொடுப்போம் எங்களது வீட்டில் விளைந்தது என்று. எங்களது வீட்டில் இலக்கிய சந்திப் புகள் நடந்த போதெல்லாம் அனைவரும் கூடி கதைத்து முடித்து சாப்பிட்டு செல்வார்கள். அப்போது அங்கு வீட்டில் இருந்தபடியே தொலைபேசியில் அழைக்க முடியாது. சைக் கிளில் சென்று நேரில் சொல்வோம். என்ன இருந்தாலும் எல்லாரும் வந்து விடுவார்கள்.

என்ன நிகழ்வுகள் என்றாலும் நாம் இருவரும் சேர்ந்தே செல்வோம். வீட்டுக்கு பக்கத்தில் ஒரு அன்புச்சோலை மூதாளர் காப்பகம் இருந்தது. நாம் சிந்துவை கூட்டிக் கொண்டு போவோம் அங்குள்ளவர்கள் எல்லாரும் அவளுக்கு தாத்தா பாட்டி தான். அவர்கள் இறந்தால் காலையே சென்று எங்களது வீட்டில் இறப்பு நடந்தது போல் கடைசி வரை நின்று எல்லா காரியங்களும் முடித்து சுடலை வரையும் கொண்டு போய் எரித்து முடித்து விட்டே வருவார்.

அந்த எங்கள் அன்பு இல்லத்தில் சரியாக ஒரு வருடம் தான் நாங்கள் வாழ்ந் தோம். இடம்பெயர்ந்து மக்கள் வரத்தொடங் கினார்கள். கிளிநொச்சியில் இருந்தும் மக்கள் இடம்பெயரத் தொடங்கினார்கள். நாங்களும் எங்களது சாமான்களை கட்டிக்கொண்டு மூங்கிலாற்றில் ஆதியக்கா வீட்டுக்கு போனோம். அங்கிருந்து கொண்டு விசுவமடுவில் அவரது பணியிடம் இருந்தது அங்கு சென்று வேலை செய்தார். இடப்பெயர்வைக் கண்டு அவர் துவள வில்லை. ஓடி ஓடி தனது பணியை தொடர்ந் தார்.மக்கள் பட்ட துயரங்களை புலம்பெயர் தேசம் நோக்கி எடுத்து விளக்கினார். நாளுக்கு நாள் மக்களின் நிலை கண்டு குமுறினார். ஒரு நாள் விசுவமடு பகுதி எங்கும் "செல் " விழுந்து வெடித்து கொண்டி ருக்க மக்கள் அவலப்பட்டு ஓடிக்கொண்டி ருந்த நிலையை வானலையூடாக அறி வித்து கொண்டிருந்தார். அப்போது அவர் தன் மக்களுக்கு சொன்ன செய்தி "சுற்றி வர குண்டுமழை பொழிகிறது மக்கள் செத்துக் கொண்டிருக்கிறார்கள் இன்று உங்களோடு கதைக்கும் நான் கூட இந்த குண்டுக்கு பலியா கலாம்" என்று சொன்னவரின்குரல் மட்டும் காற்றலையூடாக ஒலித்துக் கொண்டி ருக்கிறது.

விசுவமடுவுக்கு காலையிலேயே சென்று விடுவார். களத்திலே நின்று போராடிய வர்களுக்கு உணவுத் தட்டுப்பாடு அதனால் உலர் உணவுகள் செய்து அனுப்பி வைப்பார்கள் மக்கள். ஒரு பகுதி யில் நின்று போராடிய பகுதியின் பொறுப் பாளர் ஒருவர் இவரின் நல்ல நண்பர். அவர் அன்று



வெளியில் வந்தபோது இவரிடம் சொல்லி யிருக்கிறார்

"பெடியளுக்கு சாப்பாடு பெரிய பிரச்சி னையாக இருக்கு உலர் உணவு கொஞ்சம் செய்து தரமுடியுமா" என்று. அந்த நிலை யில் மக்களிடம் எப்படி கேட்பது என்று என் னிடம் வந்து நின்றார். " பெடியளுக்கு எப்படி யாவது சாப்பாடு செய்து அனுப்ப வேண்டும் ஏதாவது செய்வோம் " என்று.

எங்களது பொருளாதார நிலையில் அவ்வளவு பேருக்கும் செய்ய எப்படி முடியும். ஏதாவது மருத்துவ செலவுகள் அல்லது காயங்கள் ஏற்பட்டாலும் என்று இலங்கை வங்கியில் பத்தாயிரம் ரூபாய் எடுக்காது போட்டு வைத்திருந்தோம். அதைப் போய் எடுத்து வந்து அவ்வளவு காசுக்கும் சாமான் வாங்கி அதில் "பயற்றம் பலகாரம்" செய்தால் ஒருநேர பசியை போக்கும் என்று செய்தோம். (பயற்றம் பலகாரம் என்றால் எல்லார் மனதிலும் அதன் வடிவம் தெரியும். அதுதான் இல்லை இது ஒரு பந்து அளவு பிடித்தது) அதை பதினைந்து பதினைந்தாக எண்ணி பைக ளில் போட்டு கட்டி பெரிய உரப்பையில் போட்டு சைக்கிளில் கட்டிக் கொண்டு போய் உரியவர்களுக்கு அனுப்பி விட்டு வந்தார். அவரின் நண்பர் வந்து கண் கலங்க சொன்னாராம் "அண்ணை பெடியளுக்கு உங்கள் பலகாரம் கிடைத்து அவங்கள் சந்தோசமாக சாப்பிட்டு சண்டை பிடித்தார் கள்" என்று சொல்லிச் சென்றவர் மூன் றாவது நாளிற்குப் பிறகு களத்திலே வீழ்ந் தவர்கள் பட்டியலில் இடம்பிடித்த செய்தி... காதில் பேரிடியாக வந்து நின்ற போது மௌனமாக அவர் அழுது அஞ்ச லித்தார்.

மூங்கிலாற்றில் இருக்கும் போது அவரின் உள்ளுணர்வு சொல்லியதோ தெரியாது அடிக்கடி அவர் சொன்ன வார்த்தை "நாம் இருந்தால் தானே "என்று.

விசுவமடு வரை ஆமி வந்து விட்டான். அதனால் எம்மால் மூங்கிலாற்றில் இருக்க முடியாது. குண்டுகள் வந்து வெடித்து கொண்டிருந்தது. சிறிலங்கா அரசாங்கத் தால் பாதுகாப்பு வலையம் என அறிவிக் கப்பட்ட சுதந்திரபுரத்தை நோக்கி மக்கள் ஓடிக்கொண்டிருந்தார்கள். அங்கு இடம் பாக்கச் சென்றவர் திரும்பவும் உடையார் கட்டுச் சந்திக்கு வந்தபோது நூற்றுக்கும் மேற்பட்ட செல்கள் வந்து விழுந்து கொண் டிருக்க மக்கள் எவருமே இல்லாத போதும் காப்பெடுத்தால் நாங்கள் இருக்கும் இடத் திற்கு ஆமி வந்து விடுவான் என்று நினைத்து மடிந்த மாவீரர்களை மனதில் நினைத்துக்கொண்டு சைக்கிளை வேக மாக மிதித்து கொண்டு வந்ததாக பதுங்கு குழியை விட்டு தலைகாட்ட முடியாதிருந்த எம் அனைவரிடமும் சொல்லிக் கொண் டிருந்தார். "ஒரு உழவு இயந்திரம் மட்டும் தான் சிவாண்ணை அனுப்பி இருக்கிறார் அதற்குள் பத்துக்கும் மேற்பட்ட குடும்பங் களின் மிக மிக அத்தியாவசியமான பொருட்களை மட்டும் எடுத்து ஏத்துங்கோ" என்றார்.

நான் மாத்திப் போடுவதற்கு மூன்று பேரின் உடுப்புகள், சாப்பாட்டுச் சாமான்கள், அதோடு எமது திருமண பட்டுச்சேலை, பட்டுவேட்டி இரண்டையும் எடுத்து வை என்று எனது உள்ளுணர்வு சொன்ன மாதிரி இருந்தது. அது இரண்டையும் எடுத்து வைத்தபோது அதைக் கண்டு போட்டு கூடிப் போயிற்று என்று கோபப்பட் டார். அதுதான் பின்னர் தன்னோடு வரப் போகிறது என்று அவரும் நினைக்க வில்லை நானும் உணரவில்லை.





நாங்கள் சுதந்திரபுத்தில் ஒரு காணிக்குள் தறப்பாள் கூரை போட்டு இருந்தோம். ஒரு கிழமைவரை. அப்போது ஒருநாள் இரவு செல்வந்து நாங்கள் இருந்த கூரைக்கு பக்கத்தில் ஆதியக்காவின் கூரை மீது விழுந்து வெடித்தது. அதிலிருந்து நாங்கள் அனைவரும் உயிர் தப்பியது அதிசயம தான். எதையும் எடுக்காது ஓடினோம். அப்போது எல்லாரும் ஒவ்வொரு திசையில் ஓடினோம். நாங்கள் தேவிபுரம் வந்து சேர்ந்தோம் . அங்கு எமது மருமகன் கீலன் இருந்தான். அவனின் வீட்டில் நாமும் வந்து இருந்தோம். அங்கே தான் தடை செய்யப்பட்ட கொத்து குண்டுகள் போட்டனர் இராணுவம். நாமிருந்த காணிக்குள் பக்கத்தில் இருந்த காணிக்குள் வீழ்ந்து வெடித்தது. அதில் பலபேர் இறந்தும் காயப்பட்டு வைத்திய சாலைக்கு கொண்டும் செல்லப்பட்டனர். அதனையும் அவர் பதிவு செய்யத் தவறவில்லை. ஆனாலும் வீட்டில் இருப்பது மிகவும் குறைவு. தேவிபுரத்தில் இருந்த போது காலில் ஒரு சிறிய விசப்பரு போட்டதால் கால் வீங்கி இருந்தது. நடக்க முடியாது. அதனால் மூன்று நாட்கள் எம்மோடு வீட்டில் இருந்தார். அந்த மூன்று நாட்களும் சிந்துவுடன் தனது பொழுதை கழித்தார்.

தேவிபுரத்திலும் இருக்க முடியாத நிலைமை செல் கிட்டவாக வந்து வெடித்து கொண்டிருந்தது. அதனால் அங்கிருந்தும் வெளியேற வேண்டிய நிலை. காலையிலேயே அவர் தனது சைக்கிளை எடுக்க போய் பார்த்த போது அது பூட்டி இருந்தது. யார் பூட்டியது திறப்பு எங்கே என்று தெரியவில்லை. அதனால் வேறு ஒரு சைக்கிளை எடுத்துக் கொண்டு நாங்கள் இருவரும் ஒரு கொஞ்ச சாமான்களோடும் ஒரு தறப்பாள் கூரை தனது சைக்கிளில் வைத்து கட்டி கொண்டு சிந்துவையும் தூக்கி ஏத்திக் கொண்டு புதுக்குடியிருப்பு நோக்கி புறப்பட்டோம். போகும் வழியெல்லாம் மக்கள் கூட்டம் ஒருபக்கம் வாகனங்கள் ஒருபுறம் பாதையில் எம்மால் சைக்கிளை ஓட்ட முடியாதிருந்தது. உருட்டிக் கொண்டு சென்றோம். அதனால் வழி எங்கும் தெரிந்தவர்கள். எல்லாருடனும் கதைத்து கொண்டு "கவனம் செல் வந்தால் கீழே விழுந்து படுங்கோ, பிள்ளைகள் கவனம் " என்று சொல்லிக் கொண்டே வந்தார். அதுதான் அவர்கள் இவரை கடைசியாக பார்க்கிறோம் என்றோ அல்லது தான் நாளைக்கு இருக்க மாட்டேன் என்றோ யாருக்குமே தெரியவில்லை. செல் வந்து பாதைக்கு கிட்டவாகிழும் போது சிந்துவை கட்டிப்பிடித்துக் கொண்டு கீழே விழுந்து படுத்து விடுவார்.

காலையிலேயே வெளிக்கிட்ட பயணம் மதியம் ஆகிவிட்டது புதுக்குடியிருப்புக்கு வந்து சேர. இரணைப்பாலையில் ஒரு காணிக்குள் பற்றைகள் வெட்டி துப்புரவு செய்து மதியம் சமைத்தோம் நாங்கள் மட்டுமல்ல ஒரு நான்கு குடும்பம் சேர்ந்தே வந்தோம். சமைத்து சாப்பிட்டு விட்டு இருக்கும் போது அந்த காணிக்குள் இருக்க முடியாது என்றதும் கோம்பாவிலில் உள்ள திம்பிலி வெட்டைக்கு போனோம். போகும் போது காலில் வீக்கம் என்பதால் வேலைக்கு போகவில்லை வீட்டில் இருந்தே எழுதி கொடுத்ததால் அலுவலகம் எங்கே என்று தெரியவில்லை அவருக்கு. அப்போது வழியில் கண்ட புரட்சிமாறன் "உங்கள் சூட்கேஸ் பெட்டி இரணைப் பாலையில் உள்ளது வந்து எடுங்கோ" என்றார். நாங்கள் உண்மையிலேயே நினைக் கவில்லை சுதந்திரபுரம் வரை கொண்டு போன பெட்டி விடுபட்டு விட்டது என்றே நினைத்தோம். ஆனால் அது பிறகு போய் தங்கள் சாமான்களை எடுத்த போது எமது பெட்டியும் எடுத்து



வந்ததாக சொன்னார். ரிரிஎன் அலுவலகமும் பக்கத்தில் தான் இருக்கு என்று தெரிந்து கொண்டோம்.

ஒரு தென்னம் தோப்புக்குள் சுரேஸ் இருந்தான். நாங்களும் அவனுக்கு பக்கத்தில் வந்து கொண்டு வந்த தறப்பாளை தென்னையில் கட்டி வீடுபோல் போட்டு களைத்துப் போனோம் இருவரும். சாப்பாடு கூட இல்லை மதியம் சமைத்ததில் கொஞ்சம் எடுத்து வந்தேன் சிந்து சின்னவள் என்பதால். அதை அவர்கள் இருக்கும் சாப்பிட கொடுத்து விட்டு தேநீர் வைத்து குடித்தோம். பதுங்கு குழி இல்லை விடியவும் இரண்டு பேரைப் பிடித்து வெட்ட வேண்டும் என்றார். அன்று களைப்பு, ஓட்டம் அதனால் சிந்துவுக்கு பக்கத்தில் படுத்திருந்து அவளைத் தடவிக் கொண்டு சொன்னார்.

"யாருக்கும் எதுவும் நடக்கலாம் நாளைக்கு நான் வரப்பிந்தினால் பாத்துக் கொண்டு, பயப்பிட்டுக் கொண்டு நிற்கக் கூடாது. முடிவுகளை நீர் எடுத்து சிந்துவை கொண்டு பாதுகாப்பான இடம் நோக்கி செல்ல வேண்டும். நான் பிறகு தேடி வந்து கண்டு பிடிப்பேன்.எனக்கு ஏதாவது நடந்தால் சிந்து கவனம். நீர் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் பிள்ளையை கவனத்தில் கொண்டு எடுத்து வையும். அவளை வளர்க்கும் பொறுப்பு உமது கைகளில் தான் இருக்கு" என்று விடாமல் கதைத்து கொண்டிருந்தார். நான் அவர் யோசிக்கிறாரோ என்று நினைத்து படுங்கோ நாளைக்கு கதைப்போம் என்றேன். ஆனால் அதுதான் எங்களது நட்பு, காதல், எட்டு வருடங்களும். திருமணம், குடும்பம், பிள்ளை, மூன்றரை வருடங்களிலும் அன்றோடு அனைத்தின் கடைசி அத்தியாயம் முடியப்போகிறது என்று இருவருக்கும் தெரியாது. படுத்துவிட்டோம். நல்ல நித்திரை பனிபொழிந்து கொண்டிருந்தது. யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டு கண் விழித்தோம்.

"கீலண்ணா தேவிபுரம் போவதற்கு வாகனத்தில் இருக்கிறார் நீங்களும் வாறீங்களோ என்று கேட்டு வரச்சொன்னார்" என்றான் வந்த சொந்தக்காரப்பெடியன்.

உடனேயே படுத்திருந்தவர் துள்ளி எழுந்து நானும் வாறன் என்று சேட்டை எடுத்து போட்டுக் கொண்டே சிந்துவை இறுக்கி கட்டிப்பிடித்து கொஞ்சினார். அதைப் பார்த்த எனது மனம் பகீரென்றது. கொஞ்சத் தூரம் சென்றதும் திரும்பி தனது சாரத்தை எடுத்து தரும்படி கேட்டார். தற்செயலாக யாருக்கும் காயம் பட்டால் கட்ட வேண்டும் என்று. நான் எடுத்து கொண்டே கொடுத்தேன் அதை வாங்கி இடுப்பில் கட்டிக் கொண்டு. "பதுங்கு குழி வெட்டுங்கள், கிபிர் வரும் சிந்து கவனம் என்று சொல்லி கொண்டே வாகனத்தில் ஏறினார். அது நகர்ந்து கொண்டிருந்தது அவரும் எம்மைப் பார்த்து கையசைத்தபடி சென்று கொண்டிருந்தார்.

நான் ஆட்கள் தேடி இருவரைக் கூடிக்கொண்டு வந்து பதுங்கு குழி வெட்ட விட்டு விட்டு, மருமகன் சுரேஷ் மீன் வாங்கி வந்து தந்தான். கனநாளாகி விட்டது மீன் சமைத்தது என்று அதை சமைத்துக் கொண்டிருந்தேன். அப்போது கிபிர் சுற்றி குண்டு போட்டுக் கொண்டிருந்தது. சிந்து அப்பா அப்பா என்று பயத்தில் கூப்பிட்டுக் கொண்டிருந்தாள். வாகனத்தில் போன மருமகன் கீலன் திரும்பவும் வாறான்.

"என்ன நீ மட்டும் வாறாய் மாமா எங்கே" என்று கேட்டேன். அதற்கு அவன்





"வாகனம் கொண்டு போகேலாது ஒரே செல் லடி அதனால் நான் வாகனத்தை விட்டிட்டு போக வந்தனான். மாமா வழியில் மருந் துகள், ஆஸ்த்துமாக்கு பம் எல்லாம் வாங்கி தந்தவர். போகப்போக கிடைக்குமோ தெரி யாது என்று சொல்லி தந்திட்டு போக வந்த தனான். மாமா நடந்து போய்க்கொண் டிருக்கிறார். இந்தாங்கோ பிடியுங்கள்" என்று கையில் தந்துவிட்டு அவனும் சென்று விட்டான்.

12.02.2009 மதியம் ஆகிவிட்டது வரவில்லை. பின்னேரம் ஆகிவிட்டது அவ ரின் சைக்கிளை காலையில் கூப்பிட வந்த பையன் ஓட்டிக் கொண்டு வருகிறான்.

"எங்கே மாமா என்றேன் "

"அவர் எங்கேயோ வேலையாக போயிற்றார்"என்றான் முகம் இறுக சொல்லி விட்டு அவன் மறைந்து போனான்.

எனக்கு மதியம் இரண்டு மணிக்கு பிறகு உடம்பெல்லாம் நடுங்குகிறது, பட படக்கிறு, என்ன செய்கிறது என்றே தெரிய வில்லை. எனக்கு இங்கே அப்படி எல்லாம் இருக்கும் போதே அங்கு அவர் மதியம் கோழி இறைச்சி கறியும் சோறும் சாப்பிட்டு விட்டு பெரிய வேப்பமரத்தடியில் நின்று கதைத்து கொண்டிருந்தாராம். எங்கேயோ செல் குத்திய சத்தம் கேட்டதும் "செல் போட்டிட்டான் விழுந்து படுங்கோ" என்று சொல்லி வாய் மூடவில்லையாம் அவர்கள் நின்ற இடத்துக்கு கொஞ்சம் தூர விழுந்து வெடித்து அதில் ஒரு சிறிய துண்டு வந்து அவரது இடப்புறத்து கமக்கட்டுக்கு கீழே பட்டிருக்கிறது. உடனேயே தனக்கு காயம் என்று சொல்லி தனது இடுப்பில் இருந்த சாரத்தை எடுத்து கட்டினாராம். பக்கத்தில் நின்ற கீலன் மோட்டச்சைக்கிளில் அவ ரைத் தூக்கி ஏற்றிய போது ஏதோ கதைக்க முயற்சித்தாராம். ஆனால் எதுவும் சொல்ல வில்லையாம். அது எனக்கு தெரியாது. பக் கத்தில் நின்ற பையனுக்கு எல்லாம் தெரிந் தும் எனக்கு சொல்லாது போய் தனி யாக இருந்து அழுது கொண்டிருந்தி ருக்கிறான்.

இரவு எட்டு மணி ஆகிவிட்டது வர வில்லை. புலிகள் குரல் வானொலியில் செய்தி போகிறது வரவில்லை. இறந்தவர்க ளின், காயம்பட்டவர்களின் பெயர்கள் போகிறது அதிலும் சொல்லவில்லை. காலையில் போனவர் ஏன் வரவில்லை என்ற ஏக்கம்.

யோசித்துக் கொண்டிருந்த போது கீலனின் தம்பி நீலன் வருகிறான். அவ னைக் கண்டதும் "என்ன மாமாவைக் காணேல்லை உனக்கு ஏதும் தெரியுமா" என்று கேட்டேன். அவன் கேட்டான் "நீங் கள், குட்டியம்மா இருவரும் சாப்பிட்டீங் களா என்று. இந்த நிலையில் நான் மதியம் கூட சாப்பிடவில்லை. "இல்லை சொல்லு மாமாவுக்கு என்ன" என்றேன். அவன் சொன்னான் "வெளிக்கிடுங்கோ மாமா வுக்கு ஒரு சிறிய காயம் மாத்தளன் வைத்தி யசாலைக்கு கொண்டு போயிருக்கு நான் உங்களை கூட்டிப் போகிறேன்" என்று. நான் என்ன கொண்டு போக வேணும் என்று கேட்க இப்ப ஒன்றும் வேண்டாம் வாங்கோ போவோம் என்று நித்திரையாக இருந்த சிந்துவையும் தூக்கி கொண்டு நடக்கிறான் அடுத்த காணி நோக்கி. அங்கு எல்லாமே அமைதியாக இருக்கிறது. சிந்துவை கொண்டு போய் எனக்கு தெரியா மல் குடிசைக்குள் படுக்க வைக்கி றார்கள். நான் ஏன் இவ்வளவு தாமதிப்பான் வாக னத்தை எடு என்று சொல்லி முடிக்கேல்லை அண்ணாவின் பிள்ளைகள் சுரேஷ், நீலன் மற்றும் நின்ற உறவுகள் எல்லாரும் ஓடி வந்து என்னைக் கட்டிப் பிடித்துக்கொண்டு



அழத் தொடங்கினார்கள்."மாமா எங்களை விட்டு போயிற்றார்" என்று. எனக்கு என்ன செய்வ தென்றே தெரியவில்லை. என்ன நடந்தது? எங்கே மாமா என்றேன் அப்ப டியே ஆடிப்போய்.

அதற்குள் தேவிபுரம் வைத்திய சாலைக்கு கொண்டு போகும்போது அவரின் உயிர் பிரிந்துவிட்டது. அங்கு கொண்டு போனதும் வைத்தியர்கள் உறுதிப்படுத்தி விட்டார்கள். என்ன செய்வது பத்து கிலோ மீட்டர் தூரம் எப்படி உடலை கொண்டு வாறது. உடனேயே நீலனுக்கு அறிவித்து அவன் வந்து எனக்கு தெரியாமல் வாக னத்தை எடுத்து கொண்டு போய் உடலை எடுத்து கொண்டு வந்து எங்கேயோ ஒரு கட்டில் எடுத்து வந்து இருந்த தறப்பாளைக் கட்டி விட்டே என்னிடம் வந்தார்கள். ஆனா லும் உடலை இறக்கவில்லை. பிறகு தான் கொண்டு வந்தார்கள். அப்படியே நித்திரை கொள்வது போலவே இருந்தது அவரது உடல்.

என்ன செய்வது என்றே தெரிய வில்லை போட்டிருந்த உடுப்போடு இருந்தது உடல். நள்ளிரவு தாண்டி விட்டது. என்ன செய்யலாம் என்று கேட்க பக்கத்தில் ஒரு கிடங்கு வெட்டி அதற்குள் போட்டு மூட வேண்டியது தான் என்று சொன்னார்கள். என்னால் அதை ஏற்றுக் கொள்ள முடிய வில்லை. உடனேயே பேப்பரும் பேனை யும் வாங்கி எனது கணவரின் சாவு அறிவித் தலை நானே எழுதி உடனேயே புலிகளின் குரல் வானொலிக்கு அங்குதான் எனது மருமகன் சுரேஷ் வேலை செய்ததால் கொடுத்தனுப்பினேன். அதோடு கீலனை புரட்சிமாறன் வீட்டுக்கு அனுப்பி உடுப்பை வாங்கி வரச் சொன்னேன். அவன் போய் எடுத்து வந்த வேட்டி சேட்டை போட்டு எனது திருமண கூறைச் சேலை யால் போர்த்தி வைத்திருந்தோம். பின் புலிகளின் குரல் வானொலியில் சத்திய மூர்த்தி பற்றியும் அவ ரின் குரலையும் போட்டு செய்தி சொன் னார்கள். அதைக் கேட்டு ரீரீஎன் குடும்பமே வந்து விட்டது. அவர்கள் உடலைப் புகைப் படம் எடுத்து புலம்பெயர் தேசத்துக்கு செய்தி சொன்னார்கள் சத்தியமூர்த்தியின் இழப்பை...!

அவரின் உடலை எங்கே புதைப்பது எதில் வைத்து கொண்டு போவது என்றும் எப்படி கொண்டு போக வேண்டும் என்றும் கதைத்து கொண்டிருந்தார்கள். எல்லாவற் றையும் அனைத்துலக தொடர்பகத்தினர் பொறுப் பெடுத்திருந்தனர். உடனேயே மாவீரர் பணிமனைக்கு சென்று பொன்தியா கம் அப்பாவிடம் பெட்டி கேட்டிருக்கிறார்கள். அதற்கு அங்கு ஐந்து பெட்டிகள்தான் இருந்தனவாம். வித்துடல்களை அதில் வைத்து கொண்டு போய் பிறகு துணிகளில் சுற்றி புதைத்து விட்டு அந்த பெட்டியை கழுவிப் பாவித்தார்கள். அதில் ஒரு பெட்டி யையே தந்தார்கள். இறுதி நிகழ்வுக்கு ஏராளமானவர்கள் வந்திருந்தனர். பல பக்கங்களிலுமிருந்து செல் வந்து வெடிக்கி றது. வந்தவர்களை பாதுகாக்க வேண்டும். 13.02.2009 மூன்று மணியிருக்கும் எந்த சடங்கு சம்பிரதாயங்களோ இன்றி சிந்து வின் அன்பான இறுதி முத்தத்தோடு விடை பெற்றுச் சென்றார் நாட்டுப்பற்றாளர் புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி....!

மாத்தளன் தேவாலய சவக்காலையில் எனக்கு வாங்கி தந்த அந்த கூறைச் சேலை யாலேயே சுற்றி மண்ணிற்குள் புதைத் தோம்....

அன்றோடு அவரின் சகாப்தம் முடிந் தாலும் இன்றுவரை அவர் எம்மோடு மட்டு மல்ல அனைத்து நண்பர்கள் மனதிலும் வாழ்கிறார்... ●





சிந்து சத்தியமூர்த்தி



# அப்பாவும் நானும்...!

ஆண்டுகள் பல முடிந்திட்டாலும் எங்கள் அப்பா உயிருடன் இருந்து என்னுடன் பேசிக்கொண்டிருக்கும் உணர்வு எனக்கு. ஏனெனில் இரண்டரைவயதில் எனது அப்பா எனக்கு செய்தவை செய்ய நினைத்தவை செய்யவைத்து கைதட்டிமகிழ்ந்தவை எல்லாமே இன்று எனக்கு கொஞ்சமே ஞபகமாய்...... இப்ப பார்த்து மகிழும் வயது எனக்கு. ஆனால் எதையும் பெற முடியாதவளாய் உங்களை நிறைய மிஸ் பண்ணிவிட்டன் அப்பா.... மற்றப்பிள்ளைகள் தங்கள் அப்பாவுடன் அன்பைப்பகிரும் போதும் அவர்கள் விரும்பியதை வாங்கிக்கொடுக்கும் போதும் எனது மனம் எவ்வளவு வலிக்குதப்பா....!

அப்பா என்னை தமிழீழத்தின் ராஜதந்திரி ஆக்கி வெளிநாடுகளுக்கு நான் போகும்போது நீங்கள் என்னுடைய பையை தூக்கி கொண்டு என்னோடு வர வேண்டும் என்று பல கனவுகள் கண்டீர்களாமே!

கடைகளுக்கு கூட்டி போனால் உங்களுக்கு பிடிக்காட்டிலும் எனக்கு பிடிக்கும் என்பதற்காக எல்லாம் வாங்கி தருவீர்களாமே. அது எப்படி அப்பா எனக்காக உங்களையே மாற்றிக் கொண்டீர்கள் . ஒரு நாள் இடம்பெயர்ந்து ஓடிக்கொண்டிருந்த போது விசுவமடுவில ஒரு கடைக்கு அம்மாவுடன் போனேனாம் அப்போது ஒரு சப்பாத்து இருந்ததாம் அம்மாவிடம் வாங்கி தரச் சொல்லி கேட்டேனாம் அதற்கு அம்மா



வாங்கி தரவில்லையாம். ஆனாலும் நான் அடம்பிடிக்காது நல்ல பிள்ளை போல் வந்து நீங்கள் வேலை முடிந்து வந்ததும் "அப்பா நான் ஒரு சப்பாத்துக் கண்டு வாங்கி தரச்சொல்லி அம்மாவிடம் கேட்டேன் அவா வாங்கி தரவில்லை" என்று சொன்னேன். அப்போது நான் உங்கள் முழங்காலிற்கு கிட்ட இருந்தேனாம். தன்னிடம் தனது மகள் முதல் முதலாக நிமிர்ந்து நின்று கேட்டு விட்டாள் என்று உடனேயே கூட்டி போய் வாங்கி தந்தீர்களாமே.

நீங்கள் மேடைகளில் பேசும் போது நான் கீழே இருந்து உங்களை பார்த்து விட்டு தவழும் வயதில் தவண்டும் மெல்ல மெல்ல நடக்கும் வயதில் தட்டு தடுமாறி படிகளில் ஏறி வந்து உங்களுக்கு பக்கத்தில் இருப்பேனாம் கேட்டுக் கொண்டு குழப்படி செய்யாமல். இப்போது நானும் மேடைகளில் ஏறுகிறேன் எந்தவிதத்திலும் பயமோ தடுமாற்றமோ இல்லாமல் பலபேர் கைதட்டி பாராட்டுகிறார்கள்... ஆனாலும் நீங்கள் பக்கத்தில் இருக்கும் போல் வருமா?

இன்றும் ஜெனிவாவில் உங்கள் உயிரற்ற உடலை நான் கொஞ்சி வழியனுப்பிய படம் இத்தனை வருடங்களாக நீதி வேண்டி வைக்கப்பட்டிருக்கிறது. உங்களின் மகளாக உங்களின் ஆசைகளை நிறைவேற்றுவேன் அப்பா... அதுவரை நாம் இருவரும் உள்ளுணர்வோடு பேசிக் கொள்வோம்...! ●



போர்க்களத்தில் சிந்தும் குருதியை விட அறிஞனின் பேனா மைக்கு வலிமை அதிகம். இந்த சொல்லில் தான் எத்தனை எதார்த்தங்கள். பத்திரிகைத் துறை. உலக வரலாற்றில் பல மாற்றங்களை ஏற்படுத்திய ஒரே துறை என்றால் அது பத்திரிகைத் துறைதான். எத்தனையோ மாற்றங்கள் , உலக நியதிகளை புரட்டி போட்ட வரலாறுகள் பத்திரிகைத் துறையினால் மட்டுமே தொடர்ந்து செய்ய முடிகிறது .



# சத்தியமூர்த்தி மாமா...!

**நீலன் கீலன்**
மருமகன்கள்.



**மாமா** என்ற அர்த்தத்துக்கு மாறு பாடாக எங்களுடன் சிறந்த நண்பர் போல் பழகுவதுடன் "தம்பி" என்றே அழைப்பார். நாங்கள் மாமா என்று அழைத்ததும் பழகிய தும் கொஞ்சக்காலம் தான். எனினும் பல வருடங்கள் ஒன்றாக சேர்ந்து இருந்தது போலும் இன்றும் எம்முடன் இருப்பது போலும் உணருகிறோம். ஏனெனில் என் கண் முன்னே உங்களை நாம் இழந்த போது ஏற்பட்ட அந்த நொடி, தவிப்பு என் னுள் இன்னமும் ஒரு சஞ்சலத்தை ஏற் படுத்திய வண்ணமே இருக்கிறது.

என்னிடம் நீங்கள் கடைசி நொடியில் ஏதோ சொல்ல வாய் உண்ணிய போதும் உங்களிடம் இருந்து வார்த்தைவர வில்லை. எனது தோளில் உங்கள் தலை சாய்ந்தது. உங்களை நான் எப்படியும் காப் பாற்றி விடுவேன் என்று வைத்திய சாலைக்கு கொண்டு ஓடிச் சென்றேன். ஆனாலும் அங்கு வைத்தியர்கள் நீங்கள் எம்மை விட்டு பிரிந்து விட்டீர்கள் என்றதும் நான் நொருங்கி போனேன்.

அத்தைக்கு, அன்புக் குட்டியம்மாவுக்கு என்ன பதில் சொல்லப் போறேன் என்பதை தவியாய் தவித்து புளு எப்படி வேகமாக துடிக்குமோ அதைவிட வேகமாக துடித் ததை இப்பவும் நான் நினைப்பதுண்டு.

மாமா நீங்கள் அடிக்கடி சொல்வீர்கள் "பிறர் உயிரோடு இருக்கும் போதே செய்ய



வேண்டியதைச் செய்யுங்கோ. அவர்கள் பிரிந்தாலும் பிறகு கவலைப்படாதீர்கள், அழாதீர்கள்" என்று. உங்களை ஒருவர் முதன் முறையாக சந்தித்து கதைத்தால் அவர்களுக்கு உங்களை உடனே பிடித்து விடும்.

என்னுடைய நண்பர்களும் சரி தம்பி யின் நண்பர்களும் சரி உங்கள் வீட்டுக்கு வந்தால் வந்தவர்கள் எத்தனை பேரென் றாலும் சாப்பிட்டு தான் போக வேண்டும் என்று வரவேற்பதில் உங்களுக்கு நிகர் நீங் களே தான். நான் வீட்டுக்கு வரும் போது நைசாக அத்தையிடம் சென்று "அவன் பாவம் எடுக்கும் சம்பளம் காணாது காசு கொஞ்சம் கொடுத்து விடும் " என்று சொல்லி தரவைப்பார். கடைகளுக்கு போனால் தனக் கேற்ற அளவிவை விட கொஞ்சம் சிறிய தான அளவில் உடுப்புகள் வாங்கி வந்து வைத்து விடுவார். ஆனாலும் அவருக்கு கொஞ்சம் இறுக்கி இருக்கும். அதி லொன்றை எடுத்து போடுங்கள் என்று அத்தை சொன்னால் ஓம் ஓம் என்று சொல்லிவிட்டு இருப்பார். நான் அங்கு போன தும் சிறுபிள்ளை போல் அதை எடுத்து வந்து என்னைப் போட வைத்து விட்டு எனக்கே தந்து விடுவார். அத்தை கண்டுவிட்டு "ஓகோ உதுதான் நான் சொன்னபோது போடிறன் என்று சொல்லி போடாதிருந்தனீங்களோ" என்றால் ஒரு புன்னகையுடன் இருப்பார்.

உங்கள் ஊடகம்சார்ந்த வேலையிலும் சரி அரசபணியிலும் சரி அயராது திறம்பட செய்ய வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தீர்கள். " துணையினை தேர்ந்தெடுக் கும் போது எங்களோடு ஒத்துழைத்து போகி றவர்களாக இருக்க வேண்டும் என்று" நீங்கள் சொல்வீர்கள்.

இடப்பெயர்வு காலங்களில் நீங்கள் அத்தையைப் பற்றி கவலைப்படுவதில்லை. ஏனென்றால் உங்களுக்கு அவா மீது நம் பிக்கை இருந்தது உங்களுக்கு ஏதாவது நடந்தால் சிந்துவை கொண்டு பாதுகாப் பான இடம் நோக்கி சென்று விடுவா என்று.

தனது உயிர் பிரியும் கணம் வரையும் உலக நாடுகளுக்கு செய்தி சொல்லி கொண்டே இருந்தவர் தான் எங்களது சத்தியமூர்த்தி மாமா.

●




❝ வாசிப்புப் பழக்கம் அதிகரிக்கும் போதே தனியாள் ஆளுமை விருத்தி பெறுவதுடன் அறிவுத் தரம்மிக்க சமூக அமைப்பும் உருவாகும். இதனை சமூக ஊடகங்களால் நிவர்த்திக்க முடியுமா? என்பது கேள்விக்குரியதே. புதினங்களுக்கப்பால் கல்வி,- விஞ்ஞானம்-, சினிமா-, விளையாட்டு எனப்பல இணைப்புக்களைக் கொண்ட பத்திரிகைத்துறையின் தேவை உணரப்பட்டுள்ள போதிலும் சமூக வலைப்பின்னல் ஊடகங்களுக்குள் நின்று பத்திரிகை தன்னை நிலைநிறுத்தப் போராட வேண்டும் என்பதில் ஐயமில்லை. ❞





ஆதிலட்சுமி சிவகுமார்

# சத்தியமூர்த்தியின் நினைவுடன்...

**தா**யகத்திலும் புலம்பெயர்நாடுகளிலும் தமிழ்மக்களுக்கு மிகவும் அறிமுகமான ஊடகர் சத்தியமூர்த்தியின் பத் தாவது ஆண்டு நினைவுநாள்.....

இந்தநாளில் அவர் எம்மோடு வாழ்ந்த நினைவுகள் முன்னெழுகின்றன...



அழிக்கமுடியாத அந்த நினைவுகள் எம்மை என்றும் வருத்துவனவாக இருக்கும் நிலையில் அவர்பற்றி பதிவிடுவது அவசியமாகிறது. எங்களுடன் சேர்ந்து அன்பும் அரவணைப்புமாக வாழ்ந்து... அன்பை விதைத்துவிட்டு எறிகணையின் தாக்குதலில் சத்தமின்றி உயிர்பிரிந்துவிட்ட அவரின் நினைவுகள் எம்முள் மெலெழுகின்றன.

சத்தியமூர்த்தி என்றவுடன் ஆங்கிலமும் தமிழும் கலந்த அந்த பேச்சு....வியர்வையை துடைத்தபடியே சிரிக்கும் அந்த சிரிப்பு.... எப்போதும் துருவித்துருவி கேட்கும் ஊடகனுக்கேயுரிய இயல்பு... எவ்வளவு நெருக்கமான நட்பெனினும் தன்கருத்தை விட்டுக்கொடுக்காமல் விவாதிக்கும் நுண்ணறிவு.....என எல்லாம் நினைவுக்கு வருகின்றன.

சத்தியமூர்த்தி ஊடகத்துறையின் சொத்து என்றால் மிகையல்ல. ஊடகத்துறையில் நிறைய சாதிக்கவேண்டிய வயதில் காலம் அவரைப்பிரித்துவிட்ட சோகம் இன்னமும் எம்மை வருத்தியபடிதான் உள்ளது.



1972 இல் யாழ்மாவட்டதில் இணுவில் எனும் ஊரில் பிறந்தவர். தாத்தா, அம்மம் மாவின் அரவணைப்பில் மண்டை தீவில் வாழ்ந்து, மண்டைதீவு மகாவித் தியாலயத் தில் தரம் ஐந்தாம் வகுப்புவரை கல்விகற்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து யாழ். இந்துக்கல்லூரிக்கு சென்று படித்துக் கொண்டிருந்த காலத்திலி ருந்தே எழுதும் பணியில் ஆர்வமுற்றிருந்தவர் சத்திய மூர்த்தி. விளையும் பயிரை முளையிற் தெரி யும் என்ற முதுமொழிக்கிணங்க சிறுவயதி லேயே இனங்காணப்பட்டவர். வாசிப்பதில் சிறு வயதில் இருந்தே ஈடுபாடு கொண்டிருந் தவர்.

1995இல் சிறிலங்கா இராணுவபடை யெடுப்பின் காரணமாக யாழ்ப்பாணத்தை விட்டு இடம் பெயர்ந்த பின் வன்னியில் கால் பதித்து ஊடகங்களில் பல்வேறு எழுத்துப பக்கங்களில் பங்களித்து தன்திறமையினை வெளிக்காட்டினார். ஆரம்பத்தில் ஈழநாடு பத்திரிகையிலும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதாரம் சஞ்சி கையிலும் இவரது திறமைகள் பல்வேறு விதமாக வெளிவந்தன.

தொடர்ந்து தன்னுடைய நற்பண்பு களாலும் இன்முகத்தினாலும் ஊடக அறி முகங்களை பெற்று அவர் அதன் மூலமும் ஊடகச் செயற்பாட்டில் முனைப்பு பெற்று முன்னேறினார். வன்னியில் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதனை ஆலோசகராக கொண்டு செயற்பட்ட 'எழுகலை இலக்கியப் பேரவையில்' முக்கிய இடம் வகித்தார். பேர வையின் செயற்பாடுகளுக்கு ஏனைய நண் பர்களுடன் இணைந்து பாடுபட்டார். இளம் படைப்பாளர்களினதும், ஆர்வலர்க ளின தும் அன்பையும் நன்மதிப்பையும் பெற்று அந்த அமைப்பின் வளர்ச்சியில் முக்கியத்து வம் பெற்றார்.

வன்னிமண்ணில் தன்னை நிலை நிறுத்திக்கொண்ட சத்தியமூர்த்தி வெளிச் சம் கலை இலக்கிய சஞ்சிகை, மற்றும் ஈழ நாடு, ஈழநாதம் உட்பட்ட ஊடகங்களில் தன் னு டைய கதைகளை கட்டுரைகளை விமர்ச னங்களை எழுதிவந்தார். அதே வேளை அரசசுகாதார திணைக்களத் திலும் அவருக் கான பணி அமைந்தது.

ஆனால் அவரின் ஆர்வமும் ஈடு பாடும் ஊடகப் பணியிலேயே இருந்தன. அவரிடம் காணப்பட்ட திறமையும் ஆர்வ மும் அவரை புலம் பெயர்நாட்டு மக்களுக் கான செய்தியாளனாக்கியது. புலத்து மக்களுக்காக ரீ.ரீ.என், தரிசனம் தொலைக் காட்சிகளுக்கான நாளாந்த செய்திப்பார் வைத் தொகுப்பு, அரசியல் கலந்துரையாடல் கள், உள்ளூர் நடப்புக்கள் உட்பட்ட நிகழ்ச் சிகளை அவர் செய்தார். தனது செய்தி முறையில் தனக்கென தனிமுத்திரை பதித்து, அதனூடாக சத்தியமூர்த்தி உலகத் தமிழர் களின் விருப்பத்துக்குரிய செய்தியா ளராகத் தன்னை தகவமைத்துக்கொண் டார். குறிப்பாக பரிஸ் ஈழமுரசு, எரிமலை சஞ்சிகை, கனடாவின் உலகத்தமிழர் பத்தி ரிகை உட்பட்ட பல ஊடகங்களில் இவரது பல்வேறு படைப்புக்கள் இடம்பெற்றிருந்தன. அவரது அறிவும் ஆளுமையும் புலம்பெயர் ஊடகங்களையும் அழகுசெய்தன.

கிளிநொச்சியில் இயங்கிய தமிழ் ஊடக அறிவியல் கல்லூரியின் தோற்றம் முதல் அதன் செயற்பாட்டுக் காலம் வரையில் பங்களிப்பு செய்ததில் சத்தியமூர்த்திக்கு மன நிறைவு இருந்தது. எப்போதும் ஒரு செய்தி யாளனுக்குரிய துடிப்போடும் சிந்தனை யோடும் காலத்தை நகர்த்தியவர்.... தன் னுடைய மிதிவண்டியில் எப்போ தும் திரிந்து செய்தியை சேகரித்தவர். ஊடகப்பணியை





தவிர எதுவும் நினைத்ததுகூட இல்லை. சிறந்த நேர்மையான விமர்சகன்....

மூத்தோரையும் இளையோரையும் ஒன்றாக அரவணைத்துச் செல்லும் கலையில் கைதேர்ந்தவர்....தன்னுடைய கருத்தை அழுத்தம் திருத்தமாக வெளிப் படுத்தும் கெட்டித்தனம் கொண்ட சத்திய மூர்த்தி தத்துவார்த்தரீதியாக வாதா டும் திறமைகொண்டவர்.

திட்டமிட்டவகையில் சிறிலங்கா அரசி னால் தமிழ்மக்கள்மீதான போர் முடுக்கி விடப்பட்ட நாட்களில் போகுமிடம் தெரியா மல் அலைந்துகொண்டிருந்த மக்கள் கூட் டத்தினரிடையே அவரும் தன் குடும்பத் தினருடன் அலைந்தார். தன் மிதிவண்டி யில் மகளையும் அத்தியாவசிய பொருட்க ளையும் சுமந்தபடி சென்றார்.

கிளிநொச்சி முதல் உடையார்கட்டு ஈறாக நாளும் பொழுதுமாய் எம்முடன் இடம் பெயர்ந்துதிரிந்த அவர் 12.02.2009 அன்று தேவிபுரம் பகுதியில் அவருக்கெனக் காத்திருந்ததுபோல....எங்கோ வெடித்த எறி கணையின் சிதறிய இரும்புத்துண்டு ஒன்று அவரை சாய்த்தது. ஒரேமூச்சில் அவரது உயிர்பிரிந்தது....

நாட்டை நேசித்து...செய்தியாளனாக வாழ்ந்த சத்தியமூர்த்தி தமிழ் மக்களுக்கு அன்றொரு செய்தியானார்...காலம் அவரை கணக்கில்லாமல் கவர்ந்து கொண்டது.

தன் பெண்குழந்தை பற்றி சத்திய மூர்த்தி பல கனவுகளைக்கொண்டிருந்தார். பனிபொழியும் அதி காலையில் ஆஸ்மா நோயையும் பொருட்படுத்தாது..." கைவீச ம்மா கைவீசு...." என்று மகளுக்கு பாட்டுப் பாடி ஊஞ்சலாட்டும் அன் புத்தந்தை யாகவும் மகளுக்கு அறிவுசார் புத்தகங்க ளையே பரிசளிக்கவேண்டும் என ஆசைப்பட்ட ஒரு தந்தையாகவும் விளங்கியவர்.

சத்தியமூர்த்தியின் கனவுகளை சுமந்த அவரது மகள் சிந்து....இன்று 13 வயதுப்பிள் ளையாய் எம்முன் வளர்ந்து நிற்கிறாள். அதேசாயலுடன். எங்களை காணும் போதெல்லாம் தன் தந்தையைப் பற்றி கேட்ப துடன் அவர் குறித்த பழைய நினைவுகளை யும் மீட்டிக்கொள்வாள்.

போர்க்கொடூரத்தில் தந்தையை இழந்த பல ஆயிரக்கணக்கான குழந்தைக ளில் அவளும் ஒருத்தி. அப்பாவைப் போலவே அனைவரிடமும் அன்புகாட்டு வதில் ஆர்வமாயிருக்கின்றாள் சிந்து.

●



ஊடகவியலாளர்
**இளங்கீரன்**



# போர்க்கால ஊடகப்பயணத்தில் தவிர்க்க முடியாதவர்களில் ஒருவர் அண்ணன் சத்தியமூர்த்தி!

**வ**ரலாறு கடந்துசெல்கிறது. அது கடந்து செல்லும் பாதையில் விட்டுச் செல்கின்ற எச்சங்களில் பெருமளவானவை காலத் தோடு மறைந்தே போய்விடும்.

விடுதலைப் போராட்டத்தோடு பயணித்த ஊடகர்கள் சந்தித்த அனுபவங்கள் ஒவ்வொன்றும் பல இலட்சம் விலை கொடுத்தும் பெற்றுக்கொள்ள முடியாதவை.

விலையில்லா பெருமைமிகு போர்க்கால வாழ்க்கையை சக பயணியாக பயணித்துக்கொண்டிருந்தபோதே மறைந்து போனார் அண்ணன் சத்தியமூர்த்தி.

ஊடகத்துறை புனிதமானது, அது மனதுக்கு திருப்தியும் ஆறுதலும் தரவல்லது என்பதை அனுபவித்து உணரவல்ல காலப் பகுதியில் ஊடகத்துறையில் இணைந்துகொண்டு பயணித்தவர் சத்தியமூர்த்தி அண்ணன்.

ஊடகத்துறையில் கலை இலக்கியப் பக்கத்தையும் செய்திப் பக்கத்தையும் ஆழமாகத் தெரிந்தவர்கள் அரிதாகவே காணப் படுவார்கள். இரண்டையும் ஒருசேர கையாளக்கூடிய ஒருவராகவும் சத்தியமூர்த்தி அண்ணை திகழ்ந்தார்.

விடுதலைப்போராட்ட கால ஊடகப் பணி என்பதும் போராட்டம் நிறைந்தது தான். போராட்டம் பல்துறை வளர்ச்சி கண்டு வந்த நிலையில் விடுதலைப் போராட்டகால ஊடகங்களும் வளர்ச்சி கண்டுவந்தன.

நவீனத்துவத்தின் சடுதியான மாற்றங்கள் ஊடகங்களில் பாரிய அளவிலான





மாறுதல்களை ஏற்படுத்தி வந்திருக்கின் றன. விடுதலைப்போராட்ட கால ஊடகப் பணியினை மூன்று காலகட்டங்களாக வகுத்து நோக்கலாம்.

ஒன்று சமாதானத்துக்கு முன்பான காலப்பகுதி, இரண்டாவது சமாதான காலப் பகுதி, மூன்றாவது சமாதான காலத்துக்கு பின்பான அதாவது இறுதிப்போர் காலப் பகுதி என்பதாக.

சத்தியமூர்த்தி அண்ணனைப் பொறுத்தவரையில் மூன்று காலகட்டங்க ளிலும் ஊடகப்பணி செய்திருந்தார் என்கிற பெருமைக்குரியவர்களில் அவரும் ஒரு வராகியிருக்கின்றார்.

சமாதான காலத்துக்கு முன்பான பொருளாதாரத்தடையை எதிர்கொண்ட காலப்பகுதியில் ஊடகப்பணி என்பது மிகுந்த நெருக்கடியும் சவாலும் மிக்கது. இத ழியல் துறையில் தன்னுடைய ஊடகப் பணியைத் தொடங்கியிருந்தார். அன்றைய கால கட்டம் இணையத்தளப் பாவனை இல் லாத காலப்பகுதி. அந்தக் காலப்பகுதி என் பது மிகவும் சவால் நிறைந்தது. ஊடகத் துறையில் பணியாற்றுகின்றவர்கள் குறிப் பாக ஊடகவியலாளர்களாக விளங்கியவர் கள் நிறைந்த தேடல் உள்ளவர்களாகவும் கனதியான வாசிப்பு பழக்கம் உள்ளவர் களாக இருப்பவர்களால் மட்டுமே பணி யாற்ற மு டியும். தொலைத்தொடர்பு வசதி கள் முற்றாக இல்லாத அன்றைய சூழலில் பத்திரிகைகளின் பக்கங்களை நிரப்புவதற் காக அங்கிருக்கின்ற ஊடகவியலாளர்கள் தங்களுடைய எழுத்துத் திறனை முழுமை யாக பயன்படுத்துவதன் மூலமே பத்திரிகை களையோ சஞ்சிகைகளையோ முழுமை செய்ய முடியும். அவ்வாறான சூழலில் ஊட கப்பங்காற்றியவர்கள் இன்னமும் அசைக்க முடியாத வலிமைபெற்ற படைப்பாளர்க ளாக வும் ஊடகவியலாளர்களாவும் திகழ் கிறார்கள். அவ்வாறான அசாத்தியமான காலத்தில்படைப்புலக மற்றும் ஊடகத் துறை யில் கால் பதித்திருந்தவர் தான் சத்திய மூர்த்தி அண்ணன்.

அதன் பின்பாக சமாதான காலத்தில் நவீனத்துவத்தின் வருகையை விடுதலைப் போராட்டத்துடன் பயணித்த ஊடகங்களும் இலகுவதாக எதிர்கொண்டன. இணையத் தளங்கள், வானொலி, தொலைக்காட்சி என அடுத்த கட்ட ஊடகப்பணியில் தன்னை இணைத்துக் கொண்ட சத்தியமூர்த்தி அண் ணன் இதழியலில் இருந்து இலத்திரனியல் ஊடகத்திலும் வல்லமை பெற்றவராக மாறி னார். ஒரு பத்திரிகை ஊடகவியலாளர் உட னடியாகவே ஒலி, ஒளி ஊடகங்களுக்கு மாறு வது என்பது சில வழமைகளில் நெருக் கடிகளைக் கொடுக்கலாம். ஆனால் சத்திய மூர்த்தி அண்ணன் அதனை இலகுவில் எதிர்கொண்டார். சமாதான காலத்தில் புலம் பெயர் தேசங்களில் பெயர் குறிப்பிடத்தக்க வன்னி ஊடக வியலாளர்களில் ஒருவராக மாறினார்.

சமகால அரசியல் நிலைப்பாடுகள், இலக்கியம் சார்ந்த விடயங்கள் மற்றும் வாழ்வியல் என்பதாக அவருடைய ஊடகப் பரிமாணம் நிலத்தை புலத்துக்கு படம் பிடித் துக் காட்டுவதாக அமைந்திருந்தது. அதே போல சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடை பெற்றிருந்த காலப்பகுதியில் வன்னியில் நடைபெற்றிருந்த பல்வேறு ஊடகவியலா ளர் சந்திப்புக்களிலும் அவருடை பிரசன்னம் இருந்தது. தன்னிலையில் சரியெனப்பட் டதை தயக்கமின்றி பிரதிபலிக் கும் அவரு டைய பண்பியல்பு அந்தச் சந்திப் புக்களிலும் வெளிப்பட்டதை நேரடியாகவே கண்ணுற் றிருக்கிறோம்.

சிறுவயது முதலே தொடர்ந்தும் இடப் பெயர்வுகளையும் வாடகை குடியிருப்புக் களையுமே சந்தித்துவந்த அவர் 2006ஆம்



ஆண்டு கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் தனக்கென ஒரு நிரந்தர காணியில் தற்காலிக வீடு ஒன்றில் குடியேறினார். அவரும் இன்னும் சில ஊடக நண்பர்களும் குடியமர்வதற்காக குறிப்பிட்ட அளவு நிலம் அங்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. அதனை ஊடகவியலாளர் குடியிருப்பாக பதிவாக்க வேண்டும் என்ற நிறைவேறாத அவருடைய ஆசைகளில் ஒன்றாக அதுவும் மாறிப் போனது.

சமாதான காலத்துக்குப் பின்பான இறுதிப் போர்க்காலம் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். லொறிகளிலும் உழவு இயந்திரங்களிலும் தொடங்கிய இடப்பெயர்வுகள் ஈற்றில் கைப்பையுடன் வெளியேறும் அளவிற்கு நலிவடைந்தது. இறுதிப்போரின் வலிகளைக் குறிப்பிடுவதாக இருந்தால் அவை வார்த்தைகளைக் கடந்தவை என்றே குறிப்பிடவேண்டும்.

இடப்பெயர்வு காலத்தில் மருத்துவர்களும் ஊடகத்துறை சார்ந்தவர்களும் சமூக சேவைச் செயற்பாட்டாளர்களும் மக்களுக்கு ஆற்றிய பணிகள் வரலாற்றுப் பக்கங்களில் பதிவாகியிருப்பது மிக மிகக் குறைவானதாகும். இடப்பெயர்வு அவலத்தை குடும்பத்தோடு சேர்ந்து சந்திக்கவேண்டும். தாம் கொண்ட பணியினையும் முன்னெடுக்கவேண்டும் என்ற இருபக்க நெருக்கடிகளையும் சந்திக்கவேண்டிய கடப்பாடு அவர்களுக்கும் இருந்தது. தன் குடும்பம் சந்திக்கின்ற அவலங்களைத் தாண்டி ஒட்டுமொத்த இனமும் சந்திக்கின்ற நெருக்கடிகளை அவலங்களை துயரங்களை எல்லாவற்றையும் உள்வாங்கிக்கொள்ள வேண்டிய தவிர்க்கமுடியாத பணி ஊடகப்பணி.

போர் பற்றிய பதிவுகளும் சம்பவங்களும் ஊடகங்களை நிறைத்தன. ஆனால் அந்தப் பணிக்காக உண்மையாக உழைத்தவர்களை யாரும் நினைத்துக்கூடப் பார்ப்பதில்லை. இறந்துகிடக்கும் தன்குடும்பத்தைப் பார்த்து கதறி அழும் உறவுகளை நோக்கி கமெராவை நீட்டுகின்றபோது அந்த ஒளிப்பதிவாளனோ, அங்கிருக்கின்ற செய்தியாளனோ சந்திக்கின்ற மிகக் கொடூரமான துயரத்தை யாரும் சந்திக்கமாட்டார்கள். சந்திக்கவும் கூடாது.

இவ்வாறான சூழலில் தான் அண்ணன் சத்தியமூர்த்தி அவர்களின் இறுதிக் கால ஊடகப்பங்களிப்பும் இருந்தது. இறுதியாக அவர் புலம்பெயர் தேசங்களில் செயற்பட்ட இலத்திரனியல் ஊடகங்களுக்கான ஊடகவியலாளராக விளங்கினார். களத்தில் நடைபெறுகின்ற சம்பவங்களை புலத்தில் உள்ள உறவுகளுக்கு எடுத்துச் செல்பராக பணியாற்றியிருந்தார். இறுதியாக அவர் அவ்வாறு வழங்கிய ஒலிவடிவக் குறிப்பு ஒன்றில்.."இது தான் என்னுடைய இறுதிப் பதிவாக இருக்கலாம்..." என்ற சாரப்பட போரின் உக்கிரம் பற்றித் தெரிவித்திருந்தார். அவர் குறிப்பிட்டதுபோலவே அதன் பின்னர் அவர் பேசவேயில்லை.

சத்தியமூர்த்தி அண்ணன் அவர்கள் மட்டுமல்லாது ஊடகத்துறையில் பணியாற்றியிருந்த ஒப்பற்ற பல ஊடகவியலாளர்களையும் ஊடக நிர்வாகிகளையும் அவர்களின் நிலை அறியாது இன்னமும் அவர்களின் சுற்றமும் அவர்களின் அன்புக்குரியவர்களும் தேடி அலைகின்ற நிலை தொடர்கிறது.

ஊடகவியலாளராக மட்டுமல்லாது நல்ல ஆளுமை மிக்க நிர்வாகியாக நல்ல கணவனாக அன்பான தந்தையாக எங்களுக்கெல்லாம் நட்பு மிகுந்தஅண்ணனாக விளங்கிய சத்தியமூர்த்தி அண்ணின் பக்கங்கள் ஏராளமானவை. அவரின் உண்மையான தொழில் பக்தியும் அதன் மீது கொண்டிருந்த கரிசனையும் தான் இன்று வரை அவரைப் போற்றுவதற்கு காரணமாகியிருக்கின்றது.

கவிஞர் முல்லைக்கமல்



# "சிதம்பரக்குடில்"

சத்தியமூர்த்தியின் சிரிப்பு இரவின் அமைதியை குலுக்கியதை நானோ சத்திய மூர்த்தியோஅந்த நேரத்தில் யோசிக்க வில்லை. எனது கிண்டலை அவர் மிகவும் ரசித்ததாகவே நான் எடுத்து கொண்டேன். இதுபோலவே எமது ஈழநாடு பத்திரிக்கை அலுவலத்திலும் நடக்கிறது தான். அப் போது "சத்தியமூர்த்தி மெல்லமாக சிரிய டாப்பா" என்ற செந்தில்நாதண்ணையின் அதட்டலுக்கு "சொறியண்ண" என்று விட்டு எழுத்து பிழையையோ கட்டுரையையோ சரிபார்த்து கொண்டிருப்பார். அந்த நேரங் களில் செந்தில்நாதண்ணையை கடுப் பேத்தியதாக நான் உள்ளூர மகிழ்வ துண்டு.

இன்று எங்களுடைய உரையாடல் நான் வாசிக்க கொடுத்த "மௌனி" யின் சிறு கதைகளை பற்றியிருந்தது. "ஒன்றுமே புரிய வில்லை" என்று சத்தியமூர்த்தி கூறியதை யிட்டு நான் அவரை சந்தேகித்தாலும் அவர் அக்கருத்தில் உறுதியாய் இருந்தார்.

"இஞ்ச கமல் மௌனி எவ்வளவு தான் எழுதியிருந்தாலும் புரியும் படி கொஞ்சமா வது எழுத வேண்டும். அதை விட்டு விட்டு உச்சாணிக் கொம்பிலேறி முருங்கைக்காய் பறிக்க எங்களுக்கு சொல்ல கூடாது" அவ ரின் கருத்துக்கு

"சத்தியமூர்த்தி இப்ப நீங்கள் சொன் னது மௌனியையும் மிஞ்சிய ஓர் கருத்து" என்ற போதுதான் சத்திய மூர்த்தியின் அந்த சிரிப்பு நிகழ்ந்திற்று.



நாங்கள் இருவரும் வீட்டு முற்றத்தில் இருந்து கதைத்து சிரித்தது வீட்டுக்குள் படுத் திருந்த அப்பாவுக்கு நித்திரையை குழப்பி இருக்க வேண்டும். மெல்லிய ஒரு செருமல் அதைத் தொடர்ந்து ஓர் சலிப்புமாயிருந்தது. சத்தியமூர்த்தி மிகுந்த அவதானத்துடன் மிக ரகசியமாக என்னிடம் "அப்பாவுக்கும் ஓர் மௌனியின் புத்தகம் ஒன்றைக் கொடுத்தி ருந்தால் உந்த செருமல் வந்திருக்காது " என்றார்.

உண்மையில் என்னாலும் வெடிச் சிரிப்பை கட்டுப்படுத்த முடியவில்லை. " இப்ப என்ன நேரம் என்று நினைக்கிறியள். சாமம் தாண்டி இலக்கியம் பேசிறியள்" அப்பா சொன்னார். இருவரும் எழும்பி படுக்கைக்கு சென்றோம்.

பத்திரிகை அலுவலத்தின் யன்னலுக் குள்ளால் குளிர் காற்று வீசியதையும் மழை வரப் போவதையும் என் உடல் கூறியது. சில்லென்று வீசிய காற்றுக்கு அலுவலகத் தில் தாள்கள் படபடத்தன.எனக்கு முன்னா லுள்ள மேசையில் ராஜின் கிரிக்கெட் விளை யாட்டு தொடர்பான கட்டுரையை சத்திய மூர்த்தி தரச்சொல்லி வாசித்து முடித்துவிட்டு இருவரும் பேசிக் கொண்டிருந்தார்கள். செந்தில்நாதண்ணை தலையை உயர்த்தி என்னைப் பார்த்தபோது எனக்கு மிகவும் சங்கடமாயிருந்தது. அவரது அந்த பார்வை என்னைக் குற்றக் கூண்டில் ஏற்றிவிட்டது போலிருந்தது.

அது ஓர் ஒடுங்கிய அறை. மரச்சட் டங் களால் தைக்கப்பட்டு அரைவாசி மண்சுவரி னாலானது.

அதற்குள் மூன்று மேசைகள் நடுவில் பிரதான ஆசிரியருக்குண்டான மேசையும் கதிரையும். சத்தியமூர்த்திக்கு மேசை யில்லை. ஓர் கதிரையை பிரதான ஆசிரிய ருக்கு முன்னால் உள்ள மேசையை நோக்கி போட்டு கொண்டு அவர் இருந்தார். சத்திய மூர்த்திக்கு கதிரை, மேசை பற்றிய கனவு கள் இல்லை என்பது போல.

"கமல் நீங்கள் எழுதிய செய்தியை மிகவும் சுருக்கமாய் சொல்ல பாருங்கோ" என்று சத்தியமூர்த்தி ஓர் செய்தியை என்னி டம் கொடுத்தார்.செந்தில்நாதண்ணை ஏன் அதைக் கூறவில்லை என்றிருந்தது. செந் தில்நாதண்ணை அதைப் படித்துவிட்டு சத்தியமூர்த்தியிடம் கொடுத்திருக்கலாம் அதுதான் அவர் தானும் படித்து விட்டு அப்ப டிச் சொல்லியிருக்க வேண்டும். அல்லா விட டால் பிரதம ஆசிரியருக்குரிய அடுத்த நிலை யில் சத்தியமூர்த்தியை நியமித்திருக்க லாம். அடுத்த நிலைக்கு அவர் தகுதியான வர் தான். என்றாலும் எனக்குள் ஏதோ வொன்று எட்டிப் பார்ப்பதையும் பிடி வாதம் செய்வதையும் நான் உணர்ந்து கொண்டி ருந்தேன்.

சிறிது நேரத்துக்கெல்லாம் றொபேட் திரும்பி வந்ததையும் வெளியில் பிரபாவுடன் அவர் நின்று கதைப்பதையும் நான் யன்ன லுக்குள்ளால் கவனித்தேன். தலையில் ஒரு வட்டத்தொப்பியுடன் றொபேட் ஒரு கையால் சைக்கிளை தள்ளிக் கொண்டு மிகவும் பதட் டமாக அலுவலத்தை நோக்கி வந்து கொண்டி ருந்தார்.

"கமல் இதில் ஒரே விடயம் இரண்டு முறை சொல்லியிருக்கு அதை நீக்கி விடுங் கள் " என்ற சத்தியமூர்த்தியின் சொல் லுக்கு நான் திரும்பிய போது றொபேட் அலு வலகத்துக்குள் நுழைந்து அந்தச் செய் தியை சொன்னார். மிகவும் அதிர்ச்சியா யிருந்தது. "றொபேட் அந்த செய்தியை கவர் பண்ணுங்கோ" என்றார் செந்தில் நாதண்ணை.





றொபேட் வட்டத்தொப்பியைக் கூட கழற்றவில்லை. தலையை ஆட்டி விட்டு மணல் பாதைக்குள் இறங்கி சைக்கிளை தள்ளி கொண்டு போய் விட்டார். அவர் போவதை என்னைப் போலவே எல்லோரும் எழுந்து நின்று பார்த்துக் கொண்டிருந்தனர்.

செந்தில்நாதண்ணை சத்தியமூர்த்தியிடம் திரும்பி "கமல் எழுதிய செய்தியை போட வேண்டாம். றொபேட் வரட்டும்" என்றார்.

செந்தில்நாதண்ணையின் அவசர கடிதத்துடன் ஓர் மனிதன் அலுவலக வாச லில் நின்று கொண்டிருந்தார். அதை வாங்கி பிரித்துப் படித்துக்கொண்டு பிரபாவின் மேசையை பார்த்தேன். நந்தினி புறாவ் பார்த்துக் கொண்டிருந்தா. பிரபாவைக் காணோம். அதிலிருந்த குறிப்பைப் பார்த்து விட்டு குமார் மெக்கானிக்கின் கடைப்பக்கமாய் போன போது குமார் ஒரு மோட்டார் சைக்கிளுக்கு ஒட்டுப்போட நெருப்பெரித்துக் கொண்டிருந்தார்.

குமார் மெலிந்த உருவமும் கொழுப்பு படிந்த சட்டையும் கலைந்த தலை முடியுமாக இருந்தார். என்னைக் கண்டவுடன் தலையை நிமிர்ந்து பார்த்த போது எனது கையிலிருந்த துண்டுக் காகிதத்தைக் கண்டவுடன் "செந்தில்நாதண்ணை எங்கே நிக்கிறார்" என்றார். எனக்கு பக்கென்று சிரிப்பு வந்தது சிரித்துக் கொண்டேன். பதி லுக்கு காத்திராமல் குமார் திருத்துவதற்கு வந்திருந்த ஏதோ ஒரு மோட்டார் சைக் கிளை எழுமாற்றாய் எடுத்து கொண்டு என்னை அதில் ஏறச்சொன்னார்.

நாங்கள் சிறிது தூரம் போய் கொண்டிருந்த போது தான் நான் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் அலுவலகத்தை விட்டு கிளம்பியது ஞாபகத்துக்கு வந்தது.

செந்தில்நாதண்ணை புதுக்குடியிருப்புச் சுடலையை தாண்டிய ஓர் மணல் தெருவின் தொங்கலில் குடியிருந்தார். அவருடைய பல்லக்கு இப்படி அலுவலகத்துக்கும் வீட்டுக்கும் இடையில் அடிக்கடி பழுது பட்டு நிற்கும். வன்னியின் அப்போதைய இரைச்சல் மிகுந்த சாலைகளில் அவரின் மோட்டார் சைக்கிள் பயணிக்கும் பாதையும் ஒன்று என்பதை நான் ஞாபகமூட்ட வேண்டும்.

குமாரைக் கண்டவுடன் அவரின் முகத்தில் சந்தோசம் தெரிந்தது. குமார் மோட்டார் சைக்கிளை தெருக்கரைக்கு தள்ளிக் கொண்டு போய் விட்டு அதனருகில் குந்தி இருந்து ஏதோ சிலவற்றை கழட்டி பூட்டிக் கொண்டிருந்தார். அது என்ன மாய மந்திரமோ இரண்டொரு நிமிடங்களில் முத்தையன் கட்டு தோட்டத்து வாட்டர் பம் போல அது இரைச்சல் எடுத்து உறுமியது. அவரின் சந்தோசத்தை அளவிட முடியவில்லை. நான் செந்தில்நாதண்ணையின் மோட்டார் சைக்கிளில் தாவியிருந்தேன்.

4

புதுக்குடியிருப்பு காடுகளின் மேலால் வானம் திரையிட்டு நின்றது. பத்திரிக்கையை விட்டு நின்று விட்டாலும் அடிக்கடி ஈழநாடு அலுவலகத்துக்கு போய் வந்து கொண்டிருந்தேன். நாங்கள் அப்போது தான் "எழு கலை இலக்கிய பேரவை" யை தொடங்கி இருந்தோம். அது ஓர் மாற்றத்திற்கான இலக்கிய அமைப்பாயிருந்தது. இளம் படைப்பாளிகளுக்கான ஓர் இடமாக அது விளங்க வேண்டும் என்ற கனவு மட்டும் அதன் அடிக்கல்லாயிருந்தது. சத்தியமூர்த்தி அதன் யாப்பை எழுதிக் கொண்டிருந்தார். பலயோசனைகள், பல கருத்துக்

களை நாங்கள் எதிர்கொள்ள வேண்டி யிருந்தது.

"முதல் கூட்டம் எங்கே வைப்பது " என்றார். நான் மௌனம் காத்தேன். வன்னியில் அப்போது "வெளிச்சம் " என்ற சஞ்சிகை வந்து கொண்டிருந்தது. இளம் படைப்பாளிகள் பலரும் எழுத வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்தார்கள். போதிய இடம் கிடைக்கவில்லை. "எழு" சஞ்சிகையை வெளியிட வேண்டும் என்று நாங்கள் நினைத்தோம்.

சத்தியமூர்த்தி சொன்னார் கமலின் கவிதை தொகுதியைப் போடுவோம் என்று. காசுக்கு எங்கே போவது?

"எனது சம்பளபாக்கிக்கு பேப்பர் கேட்போம். மிகுதிக்கு கடன் சொல்லுவோம் "என்றார் சத்தியமூர்த்தி. செந்தில் நாதண்ணை புன்முறுவலுடன் இருந்தார்.

5

சமாதான காலத்தில் கிளிநொச்சி நகர் விலாசம் கொண்டிருந்தது. A9வீதி எங்கும் பரவசமாக இருந்த காலத்தில் தான் சமாதானம் முறிந்து போயிற்று. யுத்தம் ஓர் வல்லூறைப் போலகொலைவெறி கொண்டு போயிற்று.

கிளிநொச்சியில் நான் திடீரென்று சாட்சிக்கு கையெழுத்திட யாரைத் தேடுவேன். இறுக்கமான பாஸ் நடைமுறை இருந்தது. நான் காலையில் கூட்டி சென்றவருக்கு கையெழுத்து போடுவதற்கு சிரமமாயிருந்தது. முதலொரு சாட்சிக்கு போட்ட நபர் இராணுவ கட்டுப்பாட்டு பகுதிக்கு சென்று திரும்பி வரவில்ல என்பதாயிற்று. வந்தவரோ "இல்லை போனவர் இங்கு திரும்பி வந்து விட்டார்" என்றார். "அவரைக் கொண்டு வந்து பாசை வெட்டச் சொல்லுங்கள்.பிறகு இவருக்கு கையெழுத்து போடலாம்" என்றார் அலுவலர்.

நான் அவரை அனுப்பி விட்டு சத்தியமூர்த்தியிடம் சென்றேன். அவர் கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரிகள் அலுவலகத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தார். பயில்களையும் சேவைகளையும் இணைக்கும் பணி. பணி முடிந்ததும் ஊடக இல்லத்துக்கு ஓடி விடுவார் போல...

நான் அலுவலகத்தில் சத்தியமூர்த்தியை விசாரித்த போது அவர் ஊடக இல்லத்தில் தான் நிற்பார் என்றார் அவருடன் பணிபுரிபவர் ஒருவர். "பாஸ்" அலுவலகம் பூட்டுவதற்கு ஒரு சில நிமிடங்கள் தான் இருந்தது. காலையில் என்னை வெறுப்பேத்திய அலுவலர் மிகவும் அமைதியாக இருந்தார். காகிதத்தில் குறிப்பிட்ட இடங்களில் சத்தியமூர்த்தியைக் கையெழுத்து இடக் கேட்டு கொண்டார்.

"நன்றி சத்தியமூர்த்தி "
"இருக்கட்டும் அதுக்கென்ன...நான் போயிற்று வாறன்" என்றபடி தனது சைக்கிளில் ஏறிப்போய் விட்டார். நான் பாஸ் பெறுவதற்காக காத்திருந்தேன். சட்டங்களால் தைக்கப்பட்ட ஓர் தடுப்புக்கு உள்ளேயிருந்தவர் ஒரு இடுக்குக்குள்ளால் என்னைக் கூப்பிட்டார்.

"அவரை உங்களுக்கு எப்படி தெரியும்" என்றார்.

"அவர் எனது நண்பர் " என்றேன்.

"அப்படியா" என்றார்.

"அவரை உங்களுக்கு தெரியுமா "என்றேன்.

" ஓம் அவர் TV நிகழ்ச்சியில் சமகால அரசியல் நிலவரங்கள் நிகழ்ச்சி செய்கிறவர்" என்றார்.

பாசைக் கையில் கொடுத்தார்.





நான் அடுத்த நாள் இராணுவ கட்டுப் பாட்டு பகுதியான வவுனியாவுக்கு செல்ல இருந்தது. தாண்டிக்குளத்துக்கிடையில் இரண்டு தடைகள் இருந்தது. ஒன்று புலிக ளுடையது. அது மிகவும் இறுக்கமா யிருந் தது. வன்னிக்குள் உள்வரவோ வெளிச் செல்லவோ முடியாதபடி பல கட்டுப்பாடு களைக் கொண்டிருந் தது.

பதிலுக்கு இராணுவத்தின் காவலரண் களும் தடுப்பு வேலிகளுமாயிருந்து. கொடும் வெயிலில் காத்து கிடந்தார்கள் மக்கள். புழுதி பறந்த வெப்பக் காற்று வாரிவாரித்து தூற்றிய போதும் கண்கொத்திப் பாம்பாய் காத்துக்கிடந்தார்கள். யுத்தம் மன்னார் பகுதிகளில் நடந்து கொண்டிருந்தது. தாண் டிக் குளத்தில் சில இராணுவ அணிகள் இலைகுழைகளால் உடல் முழுவதும் மறைத்துக் கொண்டு ஓடுவதும், பதுங்குவ தும், தாண்டுவது மாயிருந்தது. இது போர் உளவியல் யுத்தம் என நான் எண்ணி னேன். புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்குள் போவோர் இராணுவத்தின் வலிமை, பயிற்சி பற்றி அவர்களிடம் கூற வேண்டும் என்பதற்கான ஓர் உத்தியோ என நான் எண்ணினேன்.

கிளிநொச்சி நகரம் அகதிகள் நிறைந்த நகரமாகி விட்டது. சனவெள்ளம், எங்கும் மனிதர்கள். மரங்களுக்கு கீழே. கூடாரங் கள், தண்ணீருக்காய் அலைந்து திரியும் பெண்கள். தெருவெல்லாம் வாகன நெரிசல் கள், அனைத்துலக தொண்டு நிறுவனங்க ளின் சின்னம் பொறித்த வாகனங்கள் கொடிகள் பறக்க கடந்து போயிற்று.

நான் செந்தில்நாதண்ணையின் கிளிநொச்சி வீட்டுக்கு போனபோது வாசலில் மூன்று சோடிச் செருப்புகள் வெளியில் கிடந்தது. உள்ளே யாரோ பலமாக சிரிக்கும் சத்தம் கேட்டு நின்றேன். பலமாக கூவியும் யாரும் எழுந்து வாசலுக்கு வராத போது நான் உள்ளே நுழைந்தேன். யோகி அண்ணை, யோசப் அண்ணை, சத்திய மூர்த்தி, செந்தில்நாதண்ணை எனஎல்லா ரும் இருந்தார்கள்.

என்னைக் கண்டவுடன் "வாங்கோ கமல்" என்றார். "கொம்மா கமல் வந்திருக்கு ஒரு ரீ போடுங்கோ" "இருங்கோ கமல் " அசரீரி மட்டும் கேட்டது. அக்காவைக் காண வில்லை. குசினியில் அலுவலாய் நிக்கிறா போல.... மேசை நிறைந்த பத்திரிக்கைக ளும் வெற்று ரீக்கப்புகளுமாக இருந்தது.

அக்கால அரசியல் நடப்புகள், ஆய்வு கள் பற்றிய பேச்சாயிருந்தது. தராகியின் இராணுவ ஆய்வுக் கட்டுரையின் ஆராய்வு பற்றி சத்தியமூர்த்தி சொல்லிக் கொண்டி ருந்தார். தலைவரின் இராணுவ மூலோ பாயம் குறித்தும் ஓயாத அலைகள் குறித்தும் யோகியண்ணை கூறிக் கொண்டிருந்தார். நான் ஒருவர் மாறி ஒருவராக தலையைத் திருப்பிக் கொண்டிருந்தேன். கழுத்து நோவெடுத்தபோது ஏதோவொரு பத்திரிக் கையைப் புரட்டத் தொடங்கினேன்.

"குடியுங்கோ கமல்" தேநீரை எனக்கு முன்னால் வைத்து விட்டு அக்கா புன்முறு வலுடன் போய் கொண்டிருந்தா.

சிற்றமைதி, பிறகு அதுக்கும் சேர்த்து ஆராய்வும், சிரிப்பும், சிந்தனையுமா யிருந்தது. தலை நிறைந்த சிந்தனை தொற் றிய ஓர் உணர்வுடன் எல்லோரும் விடை பெற்றுக்கொண்டு எழுந்த போது, சத்திய மூர்த்தி சொன்னார் தனது வீட்டுக்கு வரச் சொல்லி" நான் அவரை ஏற்றிக் கொண்டு அவரின் வீட்டுக்கு போனபோது குழந்தை சிந்து தொட்டிலில் தூங்கிக் கொண்டி ருந்தாள்.



அனேகமாக இராணுவம் முன்னகர்ந் தால் தாம் விசுவமடுவில் உள்ள ஆதியக்கா வின் வீட்டுக்கு போகப் போவதாய் நந்தினி சொன்னா.

செல்களுக்கும் குண்டு வீச்சுகளுக்கும் மத்தியில் மனிதர்கள் இடம்பெயர்ந்து கொண்டிருந்தார்கள். ஈக்களுக்கு இருக் கும் மதிப்பை அப்போது இறந்தவர்களுக்கு கொடுக்கப்படுவதாய் சத்தியமூர்த்தி சலித்து கொண்டார். யுத்தத்தின் மீது அவருக்கு வெறுப்பு உண்டாகி விட்டது.எங்களைக் கடந்து போன உதவி நிறுவன வாகனங்க ளின் மீது சத்தியமூர்த்தி கடுப்பாகி விட்டிருந் தார். "இவங்களால் கூடஎம்மினத்திற்கு அழிவு நிச்சயம். யாருக்கும் உண்மை யான அக்கறை - கிடையாது.செத்துக் கொண்டிருக்கும் சனத்திற்கு தறப்பாள் கொ டுக்கிறாங்கள்". என்றார் வெறுமை கலந்த தொனியில்.

நான் மீண்டும் ஒரு தடவை கிளி நொச்சியில் இருந்து புதுக்குடியிருப்பு நோக்கி வந்து கொண்டிருந்தேன். அது ஒரு சிரமம் தரும் பயணம் தான் கிளிநொச்சி துண் டாடப்படும் நிலையில் இருந்தது. விசுவ மடுவிற்கு வரும் போது ஆதியக்காவின் வீட்டு ஞாபகம் வந்தது. சத்தியமூர்த்தியின் குடும்பமும் அங்கிருக்கலாம் என நினைத் தேன். சரியாக ஞாபகம் இல்லாத இடப்பரீச்ச யம். கதவை திறந்து கொண்டு உள்ளே போது மோட்டார் சைக்கிளின் உறுமலுக்கு வாசல் பக்கமாய் யாரோ தெரிந்தார்கள். நெருங்கிப் போனபோது சத்தியமூர்த்தி எழுந்து வந்தார்.ஆதியக்கா தேநீர் கொடுத்தா. விமானங்களின் இரைச்சல் காதைப்பிழக்க ஆதியக்கா, மற்றும் நந்தினி பிள்ளையைத் தூக்கி கொண்டு பதுங்கு குழிக்குள் பாய்ந்தார்கள். ஆதியக்கா எங் களை வாங்கோ என்று அழைத்து கொண்டி ருந்தா. நானும் சத்தியமூர்த்தியும் தரை யோடு தரையாய் படுத்திருந்தோம்.

விமானம் புதுக்குடியிருப்பு பக்கமாய் போய் குண்டு வீசிற்று. சத்தியமூர்த்தியோடு கதைத்து கொண்டு திரும்பிய போதும் புதுக்குடியிருப்பு திரும்பும் வரையில் பல தடவைகள் மோட்டார் சைக்கிளை தெருவில் போட்டு விட்டு தெருவோரம் உள்ள கானுக் குள் பாய்ந்தும் மீளவந்து ஓடுவதுமாயிருந் தது. ஆனால் நீண்ட இடப்பெயர்வில் வருப வர்கள் வாகனங்களை விட்டு இறங்கவோ பயப்படவோ இல்லை. தெருவில் அவரவர் போக்கில் போய் கொண்டிருந்தார்கள். தெரு வோரம் முழுதும் மக்கள் பதுங்குகுழி அமைத்துக் கொண்டும் சமைத்துக் கொண் டுமிருந்தார்கள். எல்லோருடைய தலைக ளும் வாரப்படாமல் கலைந்து தொங்கிற்று.

கிளிநொச்சி நகர் வீழ்ச்சியை இராணு வம் கொண்டாடிக் கொண்டிருந்தது. ராஜ பக்ச நேரில் வந்து வீழ்ந்து கிடந்த நகரத்தின் சாய்ந்த தண்ணீர் தொட்டியின் பக்கத்தில் நின்று உரையாடிக் கொண்டி ருந்தார்.

அந்த நேரத்தில் தேவிபுரம் பகுதி மீது இராணுவ விமானங்கள் குண்டுகளை பொழிந்து கொண்டிருந்தது. இரவு சர்வ தேச வானொலி ஒன்றில் சத்தியமூர்த்தி கிளி நொச்சி, தேவிபுரம் மீதான தாக்குதல், சேத விபரங்கள், இறந்து போன, காயமடைந்த வர்களின் எண்ணிக்கை அவர்களை அப் புறப் படுத்த முடியாமல் இருப்பதன் விபரம் யாவற்றையும் கவலை தோய்ந்து கூறிக் கொண்டிருந்தார்.

எங்கும் பிணவாடை, இரத்தம், புழுதி, ஓலம், வெடியோசை, விமானங்களின் இரைச்சல், வாகனங்களின் பேரலறல், இறுகி கிடக்கும் சாலைகள், உதவிக்காக கையேந்தும் மனிதர்கள்... சத்தியமூர்த்தி தான் என்ன செய்வார்?





கடற்கரை எங்கும் மக்கள் நிறைந்தி ருந்தனர். மாத்தளன் பிரதேசத்தை பீரங்கி குண்டுகளும் துப்பாக்கி ரவைகளும் சல் லடை போட்டுக் கொண்டிருந்தன. "சாலை" என்கிற கடற்கரை பிரதேசத்தை இராணுவ கமாண்டோக்கள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்கள்.

நாங்கள் பதுங்குகுழியில் தான் கிடந் தோம். வெளியில் வந்து 8.30 க்கு புலிக ளின்குரல் இரவுச் செய்தியை கேட்டபோது தலைப்பு செய்தியில் ஊடகவியலாளர் பு. சத்தியமூர்த்தி செல்வீச்சில் கொல்லப்பட்டார் என்றது.

அப்பா ஐயோ! என்றார். அம்மா என்ர பிள்ளை! என்றா. எங்களை யார் தேற்று வார்கள் இனி. நாங்கள் அழுது கொண்டி ருந்தோம். நான் சத்தியமூர்த்தியை இறுதி யாக விசுவமடுவில் தான் பார்த்தேன்.

காற்று மிகவும் கனமாக வீசிற்று. நாங்கள் வலைஞர் மடத்துக்கு போன போது ஓர் கூடாரத்தில் ஆதியக்காவைப் பார்த் தோம். என்னை கண்டதும் "அன்புதம்பி போய்விட்டான்" என்றா. சத்திய மூர்த்தியின் இழப்பை தாங்க முடிய வில்லை. அதே கூடாரத்தில் ஒரு மூலையில் நந்தினி அழுது கொண்டிருந்தா. சத்திய மூர்த்தியின் செல்ல மகள், குருத்து, ஏது மறியாப் பிஞ்சு "அப் பாவைக் கொஞ்சினேன்" என்ற போது எனது இதயம் ஓவென அழுதது. ஓர் மாமனி தனை நாம் பிரிந்தோம். அன்பை, பண்பை, ஓர் உருவத்தில் பார்ப்பது என்றால் சத்திய மூர்த்தியில் தான் பார்க்கலாம்.....

அடக்கமாய் இருந்து அறிவாய் தெரிந்த வன் நம்முள் நினைவாய் நடக்கிறான் என்றும்.......

●




தொடர்பு என்பது மனிதர்கள் செய்திகளை அனுப்புவ தும் அதனை பெற்றுக் கொள்ளுவதுமாகும்.

தகவல் தொடர்பை 'கொமியுனிக் கேஷன்' என்பர். இது கம்மியுனிசி எனும் இலத்தின் சொல்லில் இருந்து பிறந்ததாகும். இதன் பொருள் பகிர்ந்து கொள், செயல் விளைவு, செய்தியைப் பரப்பு என்பதாகும். தொடர்பு என்பது செயல் முறையாகும். அது கருத்துள்ள செய்தியை ஒருவரிடமிருந்து மற்றவரிடம் பரப்புவ தைக் குறிக்கும்.

இத்தகவல் தொடர்பு முறை மனிதன் தோன்றிய காலம் முதல் இருந்து வருகிறது. ஒரு சமுதாயம் வளர அடிப்படைத் தேவையாக கருதப்படுவது தொடர்பு ஆகும்.

தொடர்பியல் என்னும் சொல்லிற்குப் 'பொதுமையாக்கு தல்' எனப் பொருள் கொள்ளலாம். அதாவது, பெறுபவருடைய மன தில் அனுப்புவரின் கருத்து அல்லது கருத்துப் படிவத்தை உரு வாக்குவது பொதுமையாக்குதல் எனப்படும். அதாவது, ஒரு குறிப் பிட்ட சமூகச் சூழலில் செய்தி அனுப்புபவருக்கும் பெறுபவ ருக்கு மிடையே நிகழும் செய்திப் பரிமாற்றச் செயல் முறையே தொடர் பியல் எனப்படும்.



நரேஸ்

# தன்னினக் குரலாய்...

முகம் நிறைந்த புன்னகையே
இவன் முகவரி
அகம் நிறை நட்புக்கும்
இவன் தான் அதிபதி

இனத்துக்காய் எழுந்தது
இவனது பேனா
வானலை வந்து சேதிகள் தந்தது
இவனது செந்நா...!

கொலைக்களம் தனிலும்
குறையாப் பணிகள்
இன்னுயிர் தரும் வரை
தன்னினக் குரலாய்....



ரேணுகா உதயகுமார்

## ஈழத்தின் எழுத்தாணி

அழகான முகம்
அன்பான குணம்
தெளிவான பேச்சு
செறிவான எழுத்து
எழுத்து சமராடி
இவன் ஒரு முன்னோடி
காலத்தின் கண்ணாடி
ஈழத்தின் எழுத்தாணி
சத்தியத்தின் மூர்த்தி



வருடங்கள்
ஓடி மறைந்தாலும்
இருக்கிறாய் எனும்
நினைப்புடன்
இருக்கிறோம் நாங்கள்,
எழுத்துக்களில் உன் முகம்
தெரிவதால்....



சிவா (புவியரசன்)
தமிழீழ தேசியத் தொலைக்காட்சி



# ஊடகவியலாளர் சத்தியமூர்த்தி.....!

சத்தியமூர்த்தி அண்ணையை நான் பார்த்தது 2004 இல் தான். தமிழீழத் தேசியத் தொலைக்காட்சியின் செய்தி வாசிப்பாளனாக இருந்த காலத்தில் அவர் தேசியத் தொலைக்காட்சியில் அடிக்கடி நிலவரம் என்ற அரசியல் நிகழ்ச்சியில் பங்குகொண்டு தனது கருத்துக்களை முன்வைப்பதையும் நேயர்கள் விளங்கிக்கொள்ளக் கூடிய மிக இலகுவான உவாமானங்களின் ஊடாக அரசியல் கருத்துக்களை வெளிப் படுத்துவது சத்தியமூர்த்தி அண்ணைக்கு நிகர் அவர் தான். இவ்வாறு தமிழீழ தேசியத் தொலைக் காட்சியில் நிலவரம் நிகழ்ச்சியில் பங்கு பற்றும் ஒரு அரசியல் விமர்சகராக சத்திய மூர்த்தி அண்ணையின் ஒரு ரசிகனாக நான் இருந்திருக்கிறேன்.

தமிழீழ தேசியத் தொலைக்காட்சி ஆரம்பிக்கப்பட்டபோது அதற்கான அனைத்து முயற்சிகளும் புதிதாகவே தொடங்கப்பட்டன. நிதர்சனம் நிறுவனத்தின் பல தசாப்த அனுபவத்தின் ஊடாக உருவெடுத்த தமிழீழ தேசியத் தொலைக்காட்சியின் வளரச்சி தொடர்பின் அதன் சரி, பிழைகளை ஆய்வு செய்யும் பொருட்டு தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களினால் ஒரு விமர்சகர் குழு உருவாக்கப் பட்டிருந்தது. அந்த விமர்சகர் குழுவில் சத்தியமூர்த்தி அண்ணர் இருந்தார். தமிழீழ தேசியத் தொலைக்காட்சி எவ்வாறு தாயக மக்களுக்கும் புலம்பெயர் மக்களுக்கும் விடுதலைப் போராட்டத்திற்கும் பங்காற்ற வேண்டும் அதற்காக எவ்வாறான





நிகழ்ச்சிகளை படைக்க வேண்டும் என திறந்த மனதோடு நிகழ்ச்சிகளைப்பற்றி விமர்சனம் செய்வார்.

நான் தமிழீழ தேசியத் தொலைக் காட்சியின் செய்தி வாசிப்பாளராக இருந்த காலத்தில் எனது செய்தி வாசிப்பு பற்றி திறந்த மனதுடன் செய்தி வாசிப்பில் நான் விடும் தவறுகளை எனது சக நண்பனைப் போல் மிக உரிமையுடன் தட்டிக் கொடுக் கும் அதே வேளை பிழைகளையும் அவர் சுட்டிக்காட்டத் தவறுவதில்லை. தமிழீழ தேசியத் தொலைக்காட்சியின் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக நான் கடமையாற்றிய போது நாள் தோறும் ஒளிபரப்பாகும் நாள் நோக்கு நிகழ்ச்சிக்கு சத்தியமூர்த்தி அண்ணர் மிகப் பெரிய பங்காற்றியிருக் கிறார். சத்திய மூர்த்தி அண்ணர் ஒரு அரசாங்க உத்தியோகத்தராக இருந்த போதும் அவர் எந்த தயக்கமும் இன்றி விடு தலைப்புலிகளின் அனைத்து ஊடகங்களிலும் கடமை யாற்றினார். அவர் கடமையாற்றியது பணத்திற்காக அல்ல என்பதை இந்த இடத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எமது ஊடகங்களில் கடமையாற்றிய பலர் ஒரு ஊடகத்திலிருந்து இன்னொரு ஊடகத்திற்கு நிகழ்ச்சிகளையோ, செய்திகளையோ வழங்குகின்ற போது பணத்தினை எதிர்பார்திருந்தனர். ஆனால் சத்திய மூர்த்தி அண்ணர் ஒரு நாளும் பணத்தினை எதிர்பார்த்து வேலை செய்யவில்லை. அதே போன்று ஒரு அரச உத்தியோகத்தராக இருந்து கொண்டு தொலைக் காட்சிகளில் அரச பயங்கரவாதம் பற்றி மிகத் தெளிவாக உரையாடுவார். அவர் தன்னுடைய தொழிலை அரசாங்கம் இல்லாமல் செய்துவிடும் என்று எந்த சந்தர்ப்பத்திலும் அடங்கிப்போனதில்லை. விடுதலைப் புலிகளின் ஊடகங்களில் கருத்து தெரி விப்பதற்கு எல்லா அரசாங்க உத்தியோகத் தர்களும் பின்னடிக்கும் நிலை யிலும் சத்தியமூர்த்தி அண்ணர் அந்த தடைகளையெல்லாம் தாண்டி ஒரு அரசியல் விமர்சகராக இருந்தார்.

தமிழீழ தேசியத் தொலைக்காட்சியில் நாள் தோறும் ஒளிபரப்பாகிய நாள் நோக்கு என்ற அரசியல் நிகழ்ச்சியை நான் தயாரித்து வழங்கிய வேளைகளில் பல் வேறு நெருக்கடிகளை நான் சந்தித் திருக்கிறேன். நாள்தோறும் ஒளிபரப்பாகும் ஒரு அரசியல் நிகச்சி அதுவும் அன்றாட அரசியல் பற்றிப் பேசும் நிகழ்ச்சி வன்னியின் பல பகுதிகளில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்துள்ள நிலையில் ஒவ்வொரு நாளும் நிகழ்ச்சி தயாரிப்பது என்பது சொல்லில் சொல்லிவிட முடியாது. இவ்வாறான நெருக்கடி மிகுந்த சந்தர்ப்பங்களில் எனக்கு கை கொடுத்த சத்திய மூர்த்தி அண்ணரை நான் நன்றியுடன் நினைவு கூருவேன். ஒவ்வொரு நாளும் காலை விடிந்ததும் இன்று என்ன விடயம் பற்றி நாள்நோக்கு நிகழ்ச்சியில் பேசலாம் என்று தலையை பிய்த்துக்கொள்வேன். அப்படியான இறுக்கமான சந்தர்ப்பங்களில் எல்லாம் சத்தியமூர்த்தி அண்ணர் எனக்கு வழிகாட்டியிருக்கிறார். இன்று என்ன விடயத்தை யாரிடம் பேசலாம் என்று எனக்கு சொல்லித்தந்து எனது நிகழ்ச்சிக்கு பக்கபலமாக இருந்திருக்கிறார்.

பெரும்பாலான நாட்களில் நாள் நோக்கு நிகழ்சியில் சத்தியமூர்த்தி அண்ணர் தோன்றி அரசியல் கருத்துக்களை முன்வைத்திருக்கிறார். நான் நிகழ்ச்சி தயாரிப்பிற்காக சத்தியமூர்த்தி அண்ணரை சந்திக்கச் சென்றால் அவர் அனைத்துலகத் தொடர்பகத்திலோ அல்லது புலிகளின் குரலிலோ அல்லது விடுதலைப்புலிகள் பத்திரிகை அலுவலகத்திலோ ஏதாவது நிகழ்ச்

சியில் பங்குபற்றிக்கொண்டிருப்பார். ஒரு ஊடகத்தில் ஏதாவது ஒரு விடயம் பற்றி பேசிவிட்டு அதே ஆள் வேறு ஒரு ஊடகத்தில் வேறு ஒரு விடயம் பற்றி சமநேரத்தில் பேசுவது சாதாரணவிடயமன்று. ஆனால் சத்தியமூர்த்தி அண்ணர் அவ்வாறான அசாதாரண விடயங்களை சாதாரணமாக்கியவர். நான் நாள் நோக்கு நிகழ்ச்சிக்கு சத்தியமூர்த்தி அண்ணரின் வீட்டிற்கு செல்வதுண்டு. அவ்வாறான சந்தர்ப்பங்களில் சத்தியமூர்த்தி அண்ணரினதும் அவரது பாரியார் நந்தினி அக்காவின் அன்பான வரவேற்பும் விருந்தளிப்பும் என்னை எத்தனையோ தடவை வியப்பில் ஆழ்த்தி யிருக்கின்றன. நாள் முழுவதும் நிகழ் சிக்காக அலைந்து திரிந்துவிட்டு சத்திய மூர்த்தி அண்ணரின் வீட்டிற்கு செல்லும் போது சிவா சாப்பிட்டு விட்டு நிகழ்ச்சி செய் யலாம் என்று தண்ணீர் செம்பை கையில் ஏந்தியபடி நிற்கும் நந்தினி அக்காவின் உபசரிப்பு என்றும் என்னால் மறக்க முடியாது.

அதேபோன்று இப்போது சேலை உடுத்திய பெரிய பெண்ணாக வளர்ந்து விட்ட சிந்து அப்போது தவழும் வயது. எனது உதவியாளர் சாரங்கன் சிந்துவை பார்த்ததும் தூக்கி அணைத்துக்கொள்வார். உண்மையில் சத்தியமூர்த்தி அண்ணரை நான் ஒரு ரசிகனாக பார்த்த எனக்கு அவர் மிக நெருங்கிய நண்பராகிவிட்டார். சத்திய மூர்த்தி அண்ணர் அவர்களுக்கு ஆஸ்துமா நோய் இருந்தது. ஆனால் அவர் எமது விடுதலைப்புலிகளின் அனைத்து ஊடகங்களிலும் தனது நோயினைக் கூட பொருட்படுத்தாமல் கடமையாற்றினார். 2008 - 2009 காலப்பகுதியில் வன்னியில் மக்கள் பல்வேறு இடங்களில் இருந்தும் இடம் பெயர்ந்து வன்னியின் கிழக்குப் பகுதியை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த காலப்பகுதி அது. 2009 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் எமது தமிழீழத் தேசியத் தொலைக்காட்சி ஒளிபரப்பு செய்ய முடியாத சிக்கலுக்குள் செல்கிறது. இந்த காலப்பகுதியில் தமிழீழ தேசியத் தொலைக்காட்சி உள்ளிட்ட ஊடகங்கள் அனைத்து ஊடகங்க ளுமே பல்வேறு நெருக்கடிகளை சந்தித்திருந்தன. அதன் விளைவாக எமது ஊட கங்கள் தமது செயற்பாடுகளை மட்டுப் படுத்திக் கொண்டன. அதே போன்று தான் சத்திய மூர்த்தி அண்ணர் கடமையாற்றிய T.T.N (தமிழ் ஒளி) யும் தன்னுடைய சேவையை மட்டுப் படுத்திக் கொண்டது.

தான் கடமையாற்றும் ஊடகம் தனது செயற்பாடுகளை மட்டுப்படுத்திய போதும் சத்தியமூர்த்தி அண்ணர் தன்னுடைய ஊடக செயற்பாட்டை என்றுமே மட்டுப்படுத்தியதில்லை. நாள்தோறும் சிங்கள அரச பயங்கரவாதத்தால் பலியெடுக்கப்படும் மக்கள் தொடர்பில் தன்னால் இயன்றவரை ஊடகங்களுக்கு தெரியப்படுத்திக் கொண்டிருந்தார். ஒரு அரச உத்தியோகத்தராக இருந்த சத்தியமூர்த்தி அண்ணர் தன்னுடைய பாதுகாப்பை கருத்திலெடுத்து பதுங்கு குழிக்குள் இருந்திருந்தால் இன்று சத்திய மூர்த்தி அண்ணர் எங்களோடு உயிருடன் இருந்திருப்பார். சத்தியமூர்த்தி அண்ணர் எறிகணை தாக்குதலுக்கு இலக்காகுவதற்கு முதல் நாள் அனைத்துலக ஊடகம் ஒன்றுக்கு வன்னியின் தற்போதைய நிலை என்று வர்ணிக்கும் போது பல மக்கள் இப்போதும் வீதிகளி இறந்து கிடக்கிறார்கள். சில வேளை நாளை நானும் இவ்வாறு இறந்து விடக்கூடும் என்று தெரிவித்திருந்தார். அவர் அவ்வாறு தெரிவித்ததைப் போலவே சத்தியமூர்த்தி அண்ணரின் உயிரை எறிகணை பறித்துவிட்டது. சத்திய மூர்த்தி அண்ணர் தேவிபுரம் பகுதியில் எறிகணைத் தாக்குதலின் போது சாவடைந்து விட்டார் என்ற செய்தியை கேட்டதும்

அதிர்ந்து போனேன். அப்போது இரணைப் பாலை பகுதியில் ஊடகப்பணி யாற்றிக் கொண்டிருந்தேன். அன்று நாள் முழுவதும் தொடர் எறிகணைத் தாக்குதல். பரந் தன் புதுக்குடியிருப்பு வீதியை கைப்பற்றும் நோக் கில் இராணும் தாக்குதல்களை தீவிரப் படுத்தியிருந்தது. அன்றைய தினம் மிக மோசமான உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டி ருந்தன.

போர்க்காலத்தில் போர்க்களத்தில் ஒரு ஊடகவியலாளன் எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்பதை தன்னுடைய அன் றாட வாழ்க்கையின் ஊடாக ஊடகவிய லாளர் களுக்கு வாழ்ந்து காட்டியவர்.

தற்கால ஊடகவியலாளர்களுக்கு சத்திய மூர்த்தி அண்ணர் வழிகாட்டி.

●


விஞ்ஞான தொழில்நுட்பம் வளர்ச்சி கண்டு விண்ணை ஆராய்ந்து கொண்டிருக்கும் இக்காலத்தில் இது!

சாதனைகளில் சிகரம் தொடும் இக் காலத்தில், மனிதன் அன்று முதல் இன்றுவரை தன்னைச் சூழவுள்ள நிகழ்வுகளை அறிந்து கொள்வதிலும் - அறிந்து கொள்ள கையாளும் படிமுறைகளிலும் முன்னேறி வருகின்றான்.

உலகம் உருண்டையானது என்று அறிவுலகம் நிரூபித்துக் காட்டியது போலவே உலகத் தொடர்புகளை ஒன்றுபடுத்தி ஒரு பந்து போல் தந்திருக்கிறது மீடியாக்கள்!

இருபத்தி நான்கு மணித்தியாலங்களும் ஒவ்வொரு நாட்டிலும் நடைபெறுகின்ற அரசியல், சமூக, பொருளாதார, மற்றும் இன்னோரன்ன விடயங்களை எடுத்துக் காட்டுகின்ற நிலமைக்கு வெகுஜன தொடர்பு சாதனங்கள் வளர்ச்சி அடைந்து விட்டன.

தன்னைச் சூழ நடக்கும் விவகாரங் களையும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நடக்கும் விவகாரங்களையும் அறிந்துகொள்ளும் நிலைக்கு மனிதன் உயர்ந்த போது வெகுஜனத் தொடர்பு சாதனங்களின் பரினாமமும் மாறத் தொடங்கியதுளூ வளர்ச்சியடையத் தொடங்கியது.



ந.லோகதயாளன்



# சத்தியமூர்த்தி என்கின்ற சத்தியவானின் நினைவில்...

**ஊ**டகவியலாளரும் எனது இரண்டு தசாப்தகால நண்பருமான சத்தியமூர்த்தி என்கின்ற சத்தியவானின் நினைவின் ஈர விழிகளுடன் தொடரும் எமது கரடுமுரடான பாதைகள்....

சத்தியமூர்த்தி யாழ்ப்பாணத்தை பூர்வீகமாக கொண்டிருந்த போதிலும் தந்தையாரின் பணியின் நிமிர்த்தம் சிறு வயதிலேயே மன்னம்பிட்டியில் வாழ்ந்தவன்.

1981காலப் பகுதியில் யாழ்.மண்டைதீவில் தனது பேரன், பேர்தியுடன் வாழ்ந்து வந்து மண்டைதீவில் இருந்து யாழ். இந்துக் கல்லூரியில் கல்வி கற்றுக் கொண்டிருந்த காலத்திலேயே எழுத்துத்துறையில் நாட்டம் கொண்டிருந்த சத்தியமூர்த்தி 1991ஆம் ஆண்டு உயர் தரத்தில் கல்வி கற்ற காலத்திலேயே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செய்திப் பிரிவில் பகுதிநேரப் பணியில் இணைந்து பணியாற்றினான்.

இக்காலப் பகுதியில் க.பொ.த. சாதாரணத் தேர்வு எழுதிய நானும் இந்த நிறுவனத்தின் மற்றுமோர் பகுதியில் பகுதி நேர ஊழியராக இணைந்ததின் மூலம் உண்டானதே எங்களது ஆரம்ப நட்பு. இந்தக்காலப் பகுதியில் நிறுவனத்தின் பணிப்பாளராக அப்போது பணியாற்றிய றூட்ரவியின் ஒருங்கிணைப்பில் பல பணிகளை மேற் கொண்டோம்.

இருப்பினும் இருவரின் கல்வியின் காரணமாக ஏற்பட்ட இடைவெளி மீண்டும்





வன்னி இடப்பெயர்வுடன் நட்பாகியது. இக் காலத்தில் பல இராணுவ நடவடிக்கைக ளின் காரணமாக பல நெருக்கடிகளைச் சந்தித்தோம்.

இவ்வாறு தனது கல்வியையும் தான் கொண்ட கொள்கையினையும் முன்னெ டுத்து பல்கலைக்கழகத்துக்கு தெரிவான போதும் போர்ச் சூழலினால் அதனை முழுமை செய்ய முடியாது இடையில் காத் திருக்கும் நிலை ஏற்பட்டது.

இக்காலப் பகுதியில் தனது ஊடகப் பணியினை முழுநேரப் பணியாக வீச்சாக் கித் தொடர்ந்த சத்தியமூர்த்திக்கு ஓர் அரச பணிக்கு தெரிவாகி அதன் மூலம் முல் லைத்தீவு வலயக் கல்வி பணிமனையில் பணியாற்றிவாறு தனது ஊடகப் பணியி னையும் முன்னெடுத்தான் சத்திய மூர்த்தி.

2005 நந்தினியைக் கரம்பிடித்து திருமண பந்தத்தில் இணைந்து சிந்து எனும் பெண் குழந்தையின் தந்தையா னான்.

இவ்வாறு காலம் உருண்டோடும் நேரத்திலிலேயே மீண்டும் போர் மூண்ட காலமான 2006 ஆம் ஆண்டு முதல் வன் னிக்கும் சர்வதேசதிற்குமான சகல பாதை கள், தொடர்புகள் அனைத்தும் அற்றுப் போன நிலையில் ஊடகங்களின் வகிபங்கு மீண்டும் முக்கியம் பெற்ற காலம். இருப் பினும் ஊடகவியலாளர்கள் வேண்டும் என்றே இலக்கு வைக்கப்பட்ட காலமும் அது. அந்தநெருக்கடியான காலத்தில் நான் ஊடகப் பணியில் மெல்லக் காலடி எடுத்து வைக்க எமக்கான ஊடக வழிகாட்டியாக நண்பன் முன்னால் சென்றான். பின் எனது திருமண நிகழ்வின் மூலம் இருவழி நண்பனாக மேலும் நெருக்கம் பெற்றது எமது நட்பு. இக்காலப் பகுதியில் தான் வன்னியில் இறுதி போரும் உச்சம் பெற்றது.

கிளிநொச்சி மாவட்டம் அறிவியல் நகர் பகுதியில் வசித்த சத்தியமூர்த்தியின் குடும் பமும் இடப்பெயர்வைச் சந்தித்தது. பல தொடர் இடப்பெயர்வுகளின் மத்தியிலும் இன விடுதலையின் உணர்வு எவரிடம் இருந்தும் இடம் பெயரவில்லை என்பதனை இவனும் வெளிப்படுத்தத் தவறியதில்லை. உயிரின் பெறுமதி கேள்விக்குறியாக மாறிவிட்ட போதும் வன்னியின் அவலங் களை வெளிச் சொல்லும் ஒரே மார்க்கமாக எஞ்சியிருந்த ஒரு சில ஊடகங்கள் வழியாக அதன் பணியை தொடர்ந்த வண்ணமே இருந்தான்.

இந்தச் செயல் வீரன் 2009ஆம் ஆண்டு பிப்ரவரி 12 ஆம்திகதி தேவிபுரத்தில் இடம்பெற்ற எறிகணை வீச்சில் சாவடைந்து எம்மை விட்டு பிரிந்து சென்றான். இவனின் இழப்பு எம்போன்ற வர்களின் இப்பணியில் கொண்ட ஆர்வத்தை மேலும் வளர்க்கும் என்பதில் ஐயம் இல்லை. தமிழர் தேசத்தில் மறைந்த ஊடகவியலாளர்கள் பட்டியலில் சத்தியமூர்த்தியின் பெயரும் இடம்பிடித் துக்கொண்டது.



சிதம்பரபாரதி



# சத்தியமூர்த்தி அண்ணாவின் நினைவுகளில்....

**ச**த்தியமூர்த்தி அண்ணா என்றாலே நினைவில் வருவது அவரின் சிரிப்புத்தான். எப்போதும் சிரித்துக் கொண்டு தான் இருப்பார். அதிலும் ஜோக் ஏதும் கேட்டால் வயிறு குலுங்க குலுங்க சிரிப்பார்... நாங்கள் சொல்வோம் சத்தியமூர்த்தி அண்ணாவை பார்த்தாலே சரி ஜோக் என்ன வென்று கேட்காமலே சிரிக்கலாம் என்று.... எங்கள் வீடடுக்கு வரும் போதெல்லாம் குமுதம், விகடன் போன்ற புத்தகங்களை எடுத்து தன் பாட்டிலேயே வாசித்துச் சிரித்துக் கொண்டிருப்பார்.

சத்தியமூர்த்தி அண்ணாவிற்கும் எங்களுக்குமான உறவு பல வருடங்களைக் கடந்தது. எமது சிறுபராயம் தொட்டே தெரிந்த உறவுகளில் மிகவும் முக்கியமானவர். அப்பா அவரைத் தனது தம்பியாகவே பார்ப்பார். எப்போதும் சொல்வார் சத்தியமூர்த்தி தனக்கு ஒரு வலது கைமாதிரி என்று. அதனால் தான் என்னவோ சத்தியமூர்த்தி அண்ணாவிற்கும் எங்களில் அவ்வளவு விருப்பம். தன் சொந்த அண்ணனின் பிள்ளைகள் போல் தான் எங்க ளோடு பழகுவார். அவருக்கு ஆஸ்த்துமா இருந்தது. ஆனாலும் சைக்கிளில் தான் உள்ள இடமெல்லாம் திரிவார். சைக்கிளை உளக்கி உளக்கி வந்து விட்டு பின்பு மூச்செடுக்க சிரமப்பட்டுக் கொண்டிருப்பார். ஆனாலும் அவர் கடைசி வரை சையிக்கிளை கைவிடவில்லை.





ஒருமுறை சத்தியமூர்த்தி அண்ணா, கமல் அண்ணா, இன்னும் சிலர் இருந்த போது நான் குழப்படி செய்துவிட்டேன். உடனே அப்பா என்னை பேசிவிட்டார். அப் போது சத்தியமூர்த்தி அண்ணாவின் முகம் கறுத்து அவரது சிரிப்பு போய் விட்டது. அவ ருக்கு எங்களை ஆட்களுக்கு முன்னால் பேசுவது பிடிக்காது. அவ்வளவு அன்பு எங்களில்...

அவரது திருமணத்திற்கு எங்களது வீடு தான் மாப்பிள்ளை வீடு. நந்தினி அக்காவிற்கு எங்களது அம்மா அப்பா தான் அப்பா அம்மாவாக இருந்து இரத்தம் பண் ணிக் கொடுத்தார்கள்... அந்தளவிற்கு நெருக்கமானது சத்தியமூர்த்தி அண்ணா நந்தினி அக்காவுக்கும் எங்களுக்குமான உறவு.

திருமணத்திற்கு பின் அவர்கள் இருவரும் அடிக்கடி எங்களது வீட்டிற்கு வரு வார்கள். அதிலும் எங்களின் பிறந்ததினங் களிற்கு தவறாமல் வந்து விடுவார்கள். வரும்போது ஏதேனும் அன்பளிப்பு கட்டா யம் கொண்டு வருவார்கள்.

ஒருமுறை பெரிய கரடிப் பொம்மை வேண்டும் என கேட்டுக் கொண்டிருந்தேன் என்று கடைகள் எல்லாம் தேடித் திரிந்து விட்டு பின்னர் கை மணிக்கூடு வாங்கி வந்து தந்தார் சத்தியமூர்த்தி அண்ணா.

பிறகு சிந்து பிறந்த போது எங்களுக்கு பெரிய சந்தோசம் ஏதோ எங்கள் வீட்டில் ஒரு குட்டிப்பிள்ளை வந்தது போல் உணர்வு. அடிக்கடி போய் அவளைப் பார்ப் போம். அவளை அப்பா "ஆச்சி" என்று தான் கூப்பிடுவார். அவள் பிறந்த பின்பும் கூட சத்தியமூர்த்தி அண்ணாவிற்கு எங்களில் இருந்த பாசம் அப்படியே தான் இருந்தது.

அவர் வேலை செய்த தொலைக்காட் சியில் சிறுவர்களுக்கான ஒரு நிகழ்ச்சி செய்வோம் எனும்போது அவர் என்னை வைத்து செய்யலாம் என்று முடிவெடுத்திருந் தார். பின்பு சூழ்நிலை மாற்றத்தால் அதைச் செய்ய முடியவில்லை. எப்போதும் அவர் எங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்திருந் தார்.

எங்கள் எல்லோருக்கும் அதுவும் அப் பாவுக்கு சரியான கவலை சத்தியமூர்த்தி அண்ணாவின் இறுதி நிகழ்வில் கலந்து கொள்ள முடியாமல் போனது தான். எங்கள் அப்பா மிகவும் கவலையோடு இருந்தார் நந்தினி அக்காவை பார்க்கும் வரை...

இன்று சத்தியமூர்த்தி அண்ணா இல்லை என்றாலும் நந்தினி அக்கா அவரிற் கும் சேர்த்து எங்களில் பாசமும் அக்க றையுமாக இருந்து கொண்டு தான் இருக் கிறா....எப்போதும் அவர் நினைவுகள் எம் மோடு இருக்கும்.



ந.மயூரரூபன்



# நடை மறக்காத நிலம்: பு.சத்தியமூர்த்தி நினைவுகள்

**நி**னைவுகளுடன் பேசுதல் என்பது எமக்கான அனைத்து அடையாளங்களை யும் மீட்பதற்கான குறிப்பானாகவே எண் ணத் தோன்றுகிறது. இது தற்போதைய சூழலில் மட்டுமல்ல எநதச் சுழலிலும் எமக் கான ஒரு வரலாற்றுக்கடைமையாகவே அமைகின்றது. ஏனெனில் இப்போது உருவாகிவருகிற சமூக-அரசியல்- எழுத்து-கருத்துருவ இயங்கியலுக்குள் நுழைந்து கொண்டிருக்கின்ற இளைய தலைமுறை யுடன் இதற்கான இடைவெளி அதிகம் ஏற்ட் டிருக்கின்றது. நாம் கடந்து வந்த வாழ்க்கை யின் வலிகளைப் பேசுதல் என்பது ஒருவித சுரணையற்ற ஸ்தானத்தில் இருந்தே பார்க் கப்படுகின்ற சூழலும் உருவாகிவருகின்றது. அது சிலபேருக்கு சமகால வாழ்க்கையை சுவாரஸ்யமற்றதாகவே ஆக்குகின்றது. கடந்து வந்த வாழ்க்கை, அதன் வலி, அதன் அனு பவம் எல்லாம் தேவையற்ற ஒன்றாகி விடுகின்றதா? என்ற கேள்வியும் உருவாகி விடுகின்றது.

இந்த இடத்தில்தான் பு.சத்தியமூர்த்தி அவர்களின் நினைவுகளைப் பேசுதல் அவசியமாகிறது என நான் உணருகிறேன்.

“அவனை நாம் சுமந்து சென்றபோது
முரசங்கள் ஒலிக்கவில்லை
சோக கீதமும் இசைக்கவில்லை
அவனைப்புதைத்த இடத்தில் எவரும்
அஞ்சலி வேட்டுத் தீர்க்கவில்லை





மெதுவாய் அவனை இறக்கி வைத்தோம்
அஞ்சலி வரியும் பொறிக்கவில்லை
நினைவுக் கல்கூட நாட்டவில்லை
அவன் மகிமையில் அவனைத் தனியே விட்டு
அமைதியாய் எழுந்து நடந்தோம்."
- சாள்ஸ் வூல்வ்

இந்தவரிகள் சத்தியமூர்த்தி அவர்களின் நினைவுகளை கிளர்த்தி நெருடுவதாய் அமைகின்றது. இறுதி நேரங்களில் சாதாரண ஒரு மனிதனுக்கு, அவனது உடலுக்கு, அவனது சாவுக்கு இருக்கின்ற பெறுமதியும் அடையாளமும் உறவுகளின் அழுகைக்குள் மட்டும் அடங்கிவிடும் எனும் அவலத்தை இறுதிக்கட்டத்தில் பலரும் அனுபவித்ததே.

சர்வதேசம் பேசுகின்ற அல்லது வெறும் கருத்து குவியலாய் அடங்கிவிட்ட "மனிதாபிமான தலையீடு என்பது இவ்வாறான உயிர்களின் பெறுமதியை உயிர்ப்பிக்க வல்லனவாய் அமைந்திருக்க முடியும். அந்தக்குற்ற உணர்ச்சி எல்லாத் தேசங்களிலும் பழியாடையாகவே போர்த்தப்பட்டிருக்கும்.

நல்ல பண்பு, மனித நேயம், எல்லோரையும் மதிக்கும் மனம், கருத்தியல் தெளிவு, அயராத உழைப்பு, அநீதியை கண்டு பொங்குகின்ற அறச்சீற்றம் என்பவற்றால் நிறையப் பெற்ற ஒரு மனிதன். நான் இவரின் இயக்கத்தை பிரமிப்புடன் பார்க்கின்ற சிறுவனாய் இருந்தேன். என்னுடைய சந்தேகங்களுக்கெல்லாம் சத்தியமூர்த்தி அண்ணையிடம் பதில்கள் இருந்தன. சமூகவியலில் எனக்கொரு நடைமுறைப்புரிதலை ஏற்படுத்தியவர் இவர்.

சரவணன் ஊடாகவே சத்தியமூர்த்தி அண்ணையின் அறிமுகம் எனக்கு ஏற்பட்டது. நமதுஈழநாடு மாதமலராக வெளிவந்து கொண்டிருந்தபோது கவிதை யொன்றுடன் அவரைச் சந்தித்தேன். எனது ஆரம்ப நிலைக் கவிதையும் கவிதைபற்றிய புரிதலும் அனுபவங்களால் நிறையாத காலப் பகுதியது. ஆயினும் சத்தியமூர்த்தி அண்ணை அக்கவிதையின் ஒருவரியின் கவித்துவத்தை என் முந்நிலையில் நண்பர்களுடன் சிலாகித்துப் பேசினார். ஒரு ஆரம்ப நிலை எழுத்தாளனை உற்சாகப்படுத்துகின்ற மனம் சத்தியமூர்த்தி அண்ணையிடம் அதிகம் இருந்தது.

இன்று பல்வேறு வடிவங்களிலும் வேறுபட்ட தளங்களிலும் பு.சத்தியமூர்த்தி அவர்களை நாம் அறிந்துகொள்ள முனைந்தாலும் ஒரு நல்ல நண்பனாகவும் ஒரு நல்ல வழிகாட்டியாகவும் அவர் இருக்கின்றார் என்ற எண்ணமே எனது மனதுக்குள் அதிகமாய் துருத்திக் கொண்டிருக்கின்றது.

சத்தியமூர்த்தி அவர்கள் "நிலம்" எனும் சொல் தருகிற சிந்தனை வடிவங்களில் அதிகமாக உறவினைக் கொண்டிருந்தார் என எண்ணத்தோன்றுகிறது. அதிகமாக அவரது சிறுகதை, கவிதைகளில் இது பல் வேறு வடிவங்களில் வெளிப்படுவதை உணர முடிந்தது. அது நிலத்தின் அழகியலாக, உயிர்ப்பாக, வலியாக, தொன்மமாக, மொழிக் கூறாக பல்வேறு தளங்களில் வெளிப்பட்டிருக்கின்றது.

அவருடைய கவிதையொன்று, "எம் மண் ணின் இந்நாட்கள் அல்லது இரு பரிமாணங்கள் என்ற தலைப்பிலானது.

"நிலவுமறைந்த இரவு
சூழ்ந்திருந்த புல்வெளியின்
இடுப்புயரப் புல்நுனிகள்
சூடிய பனித்துளியை மனம் உணரும்""

இது மண்ணின் நிலவிரிப்பின் அழகையும்
""தூரத்தே உச்சியிலே பனிமுகர்ந்த காடும்
அதன் வேரணைந்து ஓடும் சிற்றாறும்""
என்பது அவரது கவித்துவ மொழியை யும் காட்டுகின்றன.

"இருளிலிருந்து" என்கிற இவரது சிறு கதை தனித்துவமானது. மட்டக்களப் போடிணைந்த கிழக்கு மாகாணப் பேச்சு மொழியை மிக அற்புதமாக கையாண்டுள்ள கதையது.

"மாடும் கண்டும் எங்கட ஊரின் கண் மாதிரி பட்டிக்காறர் காட்டு ஓரத்தில காலையில மாடுகள அடைச்சிருப்பாங்க. வெள்ளாப போடயே போய்ப்பால் கறந்துபோட்டு மாடுகளச் சாய்ச்சுக் கொண்டு போய் விடுற. என்பதுவும்

"அம்மா கொண்டு வந்த காசிக்க சாமான் வாங்கி சமைச்சுச் சாப்பிடக்குள்ள பின்னேரமாகிப் பொழுதும் மங்கிற்று. இனி ஒருத்தரும் வெளியில வெளிக்கிட ஏலா. அடுத்த வீட்ட கூடப்போகேலா."

என்பதும்

"அதோட அவனுகள் நிண்டாலும் நிப்பானுகள்"

என்பதுவும் சில எடுத்தக்காட்டுகள்.

ஒரு மனிதன் தன்னுடைய தேசத்தை அதன் உயிர்ப்பை எந்தளவிற்கு நேசிக்கிறான் என்பதற்கு சத்தியமூர்த்தி அவர்கள் தனது மனதுக்குள் படிமமாக்கிய "நிலம்" எடுத்துக்கூறக் கூடியதாக அமைந்துள்ளது. அவரது எழுத்தின் படிமங்கள் எம்முடன் தொடர்ந்து உலவவில்லை என்கிற துக்கமே அந்த நிலத்தில் இப்போதும் படிந்துள்ளது.

"நான் வரலாற்றின் கைதியல்ல. என் விதியின் அர்த்தத்தை வரலாற்றில் தேட முடியாது. வரலாற்றில் இருந்து விடுபட்டு எழுந்து விரிகிறது என் சுதந்திரத்தின் வட்டம்" என்றார் ஃபனான். அந்த வட்டத்தின் விரிவு தான் சத்தியமூர்த்தி அவர்களின் நினைவுகளை எங்கும் விரித்துச் செல்கின்றது.



செ.சதீஸ்குமார்
(விவேகானந்தனூர் சதீஸ்)


# சமூக நன்மைக்காக அணி சேர்ந்தவர்களில் ஒருவர் சத்தியமூர்த்தி

"சிதிலமடைந்து போயுள்ள கருத் தாடல் கொட்டகையை செம்மையாக்கல் சம மந் தமானது" என்ற தலைப்பிட்டு கனதிமிகு சொல்லாட்சியில் கட்டிறுக்கமான வார்த் தைப்பாங்கில் கடிதமொன்றை கையில் தரு கிறார் காரியாலய எழுதுனர். "தலைமைப் பணிமனையில் தாமதமின்றி கொடுத்து



விடப்பு" இது அவரது அன்புக் கட்டளையும் கூட. கடிதத்தில் கண்களை மேயவிட்டேன். அகராதியின்றி என்னால் விரிவறிய முடி யாத வரிகளில் எழுதப்பட்டிருந்தது அந்த திறந்த நிலை அலுவலகக் கடிதம். எனது அன்றைய அறிவுப் பெறுமானத்தை அதற் குள் அடகு வைத்து தலையை பிய்த்துக் கொள்ள நான் துணியவில்லை.

அது சரி எந்தக் காரியாலயம்? அவர் யார்? நான் யார்?

இன்றைக்கு பதின்நான்கு வருடங்க ளுக்கு முன்னர் நான் கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் சாரதி யாகக் கடமையாற்றிய அந்தக்காலம். அப் பணிமனையில் முகாமைத்துவ உதவி யாளராகக் கடமையாற்றிக்கொண்டிருந்த வர் தான் பு.சத்தியமூர்த்தி அவர்கள். அவர் தான் அந்தக் கடிதக் காரியவாதி. கடிதத்தை இரண்டாக மடித்து இடதுகையில் எடுத்துக் கொண்டு அருகிலுள்ள தலைமைப் பணி மனைத் தெரு நோக்கித் திரும்புகையில் சக பணியாளரான சகோதரி குகவதனி கண் ணில் தட்டுப்படுகிறார். "அக்கா! இந்தக்



கடிதம் அகராதித் தமிழில் எழுதிக் கிடக்குது. யார் இவர்?" ஆம்.அன்று அச்சகோதரி எனக்கு சொன்ன பதில்தான் "சத்தியமூர்த்தி அண்ணன்" மீது நான் கொண்ட மதிப் பார்ந்த நட்புக்கு கால்கோளிட்டதென்பேன்.

சு.ப.வைப் போன்ற சிரித்த முகம். சினமறியா மென்மைச் சுபாவம். அர்த்தம் பொதிந்த அவையடக்கமான பேச்சு. மேதா வித்தனமற்ற பண்பு. மிதிவண்டியே அவ ரது மகிழுந்து. இவ்வாறு பகட்டார வாரமற்ற எளிமையின் அடைமொழியாய் அன்று அவரை நான் கண்டு மகிழ் வடைந்தேன். அரச அலுவலர் என்பதற்கப்பால் ஒரு ஊடகவியலாளன் பத்தி எழுத்தாளன் என் கின்ற அவரது மறுபக்கம் பெறுமதிமிக்கது.

எமது சமூக மாற்றத்துக்கான சாத்தி யப்பாடுகள் குறித்த ஆழ்ந்த கரிசனையுடை யவராக இருந்த அவர் உலக நாடுகள் பல வற்றில் நிகழ்ந்த மாற்றத்துக்கான போராட் டங்கள் சம்மந்தப்பட்ட வாசிப்புக்களில் தீவி ரம் காட்டியிருந்தார். வாசிப்பின் மேல் தீராக் காதல் கொண்டு அவர் புத்தகங்களோடு அலைந்து திரிந்துகொண்டிருந்தது இன் னும் என் நினைவுச் சேகரத்தில் நிழலாடிக் கொண்டிருக்கிறது. அதுவே அவர் தன் கண் களால் கண்டிராத விளிகளால் சுவாசித் தறியாத இடங்களையும் தளங்களையும் பகைப்புலமாக வைத்து படைப்புக்களை சிருஷ்டிக்க பாதை காட்டியதெனலாம். ஒரு கைதேர்ந்த வாசிப்பு வேட்டைக்காரனாக புத்தகங்களை சுமந்து திரிந்த சத்தியமூர்த்தி அண்ணன் எழுத்தறிவு சார் ஈடுபாட்டில் நூல் களின் முக்கியத்துவத்தை நன்கு ணர்ந்தவர். அவர் தனது ஊழியக் காலத் தில் கொஞ்சும் தமிழை அத்தி பாரங்களாக வும் வரலாற்றுப் பொக்கிஷங்களான இலக்கி யங்களை தூண்களாகவும் நிறுத்தி ஈழப் போராட்ட வரலாற்றின் பல அத்தி யாயங்களை பொதுக்களப்படுத்திய ஓய்வ றியா எழுத்துப் போராளி. பலர் எழுதப் பின் னடித்த விசயங்களை நசுக்கப்படும் பாத்தி ரங்களின் பங்காளனாக இருந்து படைப்புத் துணிவுடன் பதிவு செய்தவர்.

தேடல் தாகம் மிகுந்த அவருடன் தோழமையை வலுப்படுத்தி என் அனுபவத் தென்றலை அகலப்படுத்திக்கொள்ள எண்ணி தோற்றுப்போன நாட்கள் பல. அவர் பணிக்களத்திலிருந்து வெளியே சென்று வர வேண்டிய தேவைகளின் போது "சத்தியமூர்த்தி அண்ணா! வாங்களன் ஒவிஸ் வாகனத்தில போய் வரலாம் தானே?" என அவரை வலிந்து நான் அழைத்திருக்கிறேன். அவர் ஒரு நயமாக "இல்லை சதீஸ் சைக்கில்லை நாலு உழக்கு உழக்கினால் போய் வந்திரலாம் அதுக் கேன் வாகனம்?" என ஒரு சில்லறைப் புன் னகையுடன் சென்றுவிடுவார்.

ஒரு அரச உத்தியோகத்தராக சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் கட மையாற்றிய அதே வேளை தேசியத் தமிழ் தொலைக்காட்சி உட்பட இன்னும் சில அச்சு மற்றும் .இலத்திரணியல் ஊடகங்களிலும் சம விகிதப் பணி செய்யக் கடமைப்பட்டிருந் தார். எவ்வாறாயினும் தவறான புரிதல்கள் ஏற்பட்டுவிடக்கூடாதென்ற சிவப்பு அலா ரத்தை விரல்களில் வைத்துக்கொண்டு இரு தளங்களிலும் நுண் தவறுகளுக்கப் பாலான தொய்வுகள் ஏற்படாமல் பார்த்துக் கொண்டார். ஆனாலும் உணர்வுச் சுரண்ட லுக்கு தம்மை ஒப்புக்கொடுத்திருந்த சில அப் பாவித்தனமான உத்தியோகத்தர்களுக்கு அவருடன் ஒரு விலகல் இருந்தது. இத னால் சில நேரங்களில் மனச்சாட்சியின் குறுக்கு விசாரணைக்கு அவரால் விடைய ளிக்க முடியாமல் தவித்திருந்தமையைக் கண்டு நான் உள்ளுக்குள் புளுங்கியி ருக்கிறேன்.

சக பணியாளர்களினதும் நண்பர்களினதும் சுப காரியங்களுக்கு செல்லும் போது சத்தியமூர்த்தி அண்ணன்தனது வாழ்க்கைத் துணையுடன் சென்று வாழ்த்தும் சிறந்த பண்பை பேணியிருந்தார். அது அனைவரிடத்திலும் அவருக்கொரு சகோதரப்பற்றை படரச் செய்தது. அது தவிர என்னதான் வேலைப்பளு விரவிக்கிடந்தாலும் அவர் பணிமனையின் பொது நிகழ்வுகளில் கை நனைக்கத் தவறுவதரிது.

எதிரியின் எறிகணை வந்து உயிர் பறிக்கும் இறுதித்தருணம் வரை குருதியாற்றில் நின்று கொள்கைக் குறியீடு வளுவாது பேசிக்கொண்டும் எழுதிக்கொண்டுமிருந்த ஊடகப் போராளியாக சத்தியமூர்த்தி அண்ணனை நான் அறிந்திருந்தேன். அடுக்கு மொழியில் துள்ளல் சுவையில் சொற்களைச் சுழற்றுவதில் வல்லவராகவும் விரலசைத்து எழுத்துலகில் விந்தைகள் செய்வதில் விற்பன்னராகவும் இருந்த அந்த சமூகக் குரலும் எழுத்தும் ஓய்ந்துபோனமை ஈழப்பரப்பிலொரு இடை வெளியே. ஒரு யுக முடிவொத்த அழிவின் ஆண்டு பத்தைக் கடந்த பின்னர் காலத்தால் மூடப்பட்டிருந்த பழைய ஞாபகக் குறிப்புகளை மீண்டும் இற்றைப்படுத்துவதில் துயரப் புன்னகையைத் தூவ விடு கின்றேன்.

●

**சமுதாயப் பத்திரிகைகள் ஊடகப் பயிற்சிப் பட்டறைகளை உருவாக்குதல்**

நம் சமுதாயத்தின் பிரபலமான பத்திரிகைகள், குறிப்பாக வார இதழ்கள், பத்திரிகைத் துறையில் ஆர்வமுள்ள, எழுத்தாற்றல் மிக்க இளைஞர்களுக்குக் கட்டுரைப்போட்டிகள், செய்திசேகரிப்புப் பயிற்சிகள் ஆகியவற்றை நடத்துவதன் மூலம், திறமையானவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு அனுபவம் உள்ள ஊடகவியலாளர்களைக் கொண்டு பயிற்சி அளித்து சிறந்த பத்திரிகையாளர்களாக உருவாக்க வேண்டும். இத்திட்டத்தின் மூலம் ஆண்டு தோறும் சிலரையாவது தேர்ந்தெடுத்து அதற்கான பயிற்சியை அளித்தால் நம் சமுதயத்திலும் நாளடைவில் சிறந்த பத்திரிகையாளர்கள் உருவாக வழிபிறக்கும்.





கண்ணதாசன் மோகனகுமாரி

# விழுதுகளினூடே – நின்னை வியந்துகொண்டே இருப்பேன்...



*அன்பு நண்ப சத்தியமூர்த்தி!*
*நின்னை*
*நினைத்திடும் போதெல்லாம்*
*நெஞ்சு கனக்குதையே .*

*மனிதர்களை மதிப்பதிலும்*
*மனிதர்களின்*
*மாண்புகளை "மதிப்பதிலும்" - நீ என்*
*மதிப்பிற்குரியவன்.*
*சின்னக்குழந்தைபோல்*
*சிரிப்பதனூடே - எந்த*
*செயல்களையும் - எளிதாய்*
*வெல்வதனையும்*
*கண்டு கண்டு வியந்தவன் நான்.*

*அன்பு நண்ப , - "மண்ணவர்களெல்லாம்"*
*சாவு மலிந்து - மனங்களெல்லாம்*
*சலித்து - இனியெமக்கு*
*வாழ்வு ஏது ஏது என*
*வருந்தியொடுங்கி*
*கனவுகள் தீய்ந்துபோனவர்களாய்*
*ஓங்கியடித்த புயலில்*
*ஒதுங்கிய சிறு சருகாய்*
*உணர்வுகள் நிறைந்திருந்தும்*
*ஒடுங்கியிருக்கும் நாட்களின்*
*நிமிட த்துளிகளிலெல்லாம்*
*உந்தனது நிமிர்வும்*
*நாளை நாளை - என*
*நம்பிக்கை மலை சுமந்த வார்த்தைகளும்*
*எந்தனை நிமிர்த்தி*
*எழுப்பிய மணித்துளிகள்தான்*
*எத்தனை எத்தனை .!*

*அன்பு நண்பா*
*வன்னி மையக்கருத்தென்றும்*
*எம்மை*
*கருத்தியல் வறுமையாளரென்றும்*
*போரியல் வாழ்வை*
*புறம் தள்ளி -தாம் ஏதோ*
*சாதிப்பதாயும்,*
*எங்கோ எவரோ*
*சத்தியெடுத்த நாற்றங்களை*
*சப்பிச்சப்பி*

*சொந்த இரத்தங்களின்*
*சுவையைக் கிலாகித்த*
*"சம்பளக்கல்வியாளர் " -இன்னும்*
*சப்பிக்கொண்டுதான்*
*சப்பிக்கொண்டுதான்*
*உள்ளனர் ஐயே !*

*நீ*
*உயிருகும் வாழ்வின்*
*உயர் சாட்சி.*
*நீ*
*உத்தம வாழ்வின்*
*மனச்சாட்சி.*
*என்னைப்பொறுத்த அளவில்*
*ஊக்கத்தில் எனது அன்ப ,*
*நீ*
*உலக அதிசயம்.*
*நீ*
*ஊற்றி வளர்த்த*
*ஊறி ஊறி வளர்த்த*
*"எழு எழு" -எனவுன்னால்*
*உரமூட்டப்பட்ட விழுதுகள்*
*இன்னும் உயிர்ப்போடே*
*இன்னும் உயிர்ப்போடே !*

*அன்ப,*
*யான்,*
*காலத்தோல்வியினால்*
*வீசியெறியப்பட்ட*
*சிறுகுப்பையே எனினும்*
*யான்,*
*விழுதுகளினூடே -நின்னை*
*நிதம்*
*வியந்துகொண்டே இருப்பேன்.*

இரா.ராஜன்



# உணர்வுகளில் உயிர் வாழும் சத்தியமூர்த்தி அண்ணா

**வி**டுதலையை அவாவி நிற்கும் தமிழ்த்தேசிய இனத்தின், நெறிதவறா அறம் தாங்கிய, உரிமைசார் உண்மைகளையும், தமிழினத்தின் தொன்மைகளையும், சுதந் திர மூச்சுக் கொண்ட எம்மினத்தை நீர்த் துப்போகச் செய்வதற்காய் சிங்கள ஆட்சியா ளர்கள் காலத்திற்கு காலம் கட்டவிழ்த்து விடப்பட்ட திட்டமிட்ட வன்முறைகளையும் ஊடகப் போராளியாய் நிமிர்ந்து நின்று, நிதானமிழக்காது, மிகைப்படுத்தாது வெளிப் படுத்திய ஆற்றலோனாய் உணர்வுகளில் உயிர் வாழ்கின்றார் சத்தியமூர்த்தி அண் ணா.

தமிழர் தேசமும், உலகெங்கும் பரந்து வாழும் தாய்த்தமிழ் உறவுகளும், நீதியின் பால் நிதானிக்கும் பல்தேசிய மொழியாளர் களும் அறிந்து கொண்ட ஊடக உழைப்பா ளர்களில் சத்தியமூர்த்தி அண்ணாவும் தவிர்க்க முடியாத ஒருவராகி, ஊடக தர்ம உணர்வுகள் சுமந்தவராய் எங்கள் நெஞ்சப் பசுமையில் மாலை சுமந்து இன்றும், இனி என்றும் வாழுகின்றார், வாழுவார் என்ப தில் ஐயமில்லை.

1992 இன் பிற்பகுதி அல்லது 1993 இன் ஆரம்பப் பகுதியாக இருக்கலாம், தமிழீ ழத்தின் யாழ். தாவடியில் அமைந்திருந்த தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக (பின்னாளில் நிறுவன மயமாகியது) செய்திப்பிரிவில் "ஆதாரம்" இதழோடு அறி முகமாகிறது அந்தச் சிரித்த முகம்... மெல்லி தான, வெள்ளைநிற, உயரம் குறைந்த



அந்தத் தோற்றம். இவை அனைத்தின் இடைவெளிகளையும் மிகைநிரப்பும் நிறைந்த புன்னகை....எத்தனை ஜாம்ப வான்கள் சுற்றி இருந்து அரசியலோ, பொருண்மியமோ பற்றிப் பேசினாலும், அமைதியாக செவிசாய்த்து மெல்ல மெல்ல ஆனால் உறுதியாக, திடமாக, நிதானமாக பதிலுரைத்து வியக்க வைக்கும் ஆற்ற லோன். இணுவையூர் சிதம்பர திருச்செந்தி நாதன், கவிஞர் வேலணையூர் சுரேஷ் இவர்களோடு பு.சத்தியமூர்த்தி என்ற எழுத் துருக்களும் ஆதாரம் இதழை அலங்கரித் துக்கொண்ட காத்திரமான தருணங்கள்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறு வனம், தற்சார்புப் பொருளாதார பேண்தகு நிலையினை ஏற்படுத்த நிறுவிய சுமார் பதினெட்டு வரையான பகுதி, கிளைகளின் துறைசார் வெளியீடுகளை முழுமைப்படுத் திக் கொள்வதற்காய், முழுமையாகப் பயன் படுத்தியோரில் சத்தியமூர்த்தி அண்ணா வின் எழுதுகோலும் நிறை பணியில் துல க்கம் கொண்டிருந்த பொற் காலம்... விவ சாயம், சூழல் பாதுகாப்பு, விலங்கு வேளா ண்மை, கடல்வளம் ஆகிய நான்கு பகுதிக ளின் பொறுப்பாளராக இருந்த உமை நேசன்(சஞ்ஜை) அவர்களின் பொறுப்பில் எமது கடமைகள் பகிரப்பட்டபோதிலும் செய்திவெளியீட்டுப் பிரிவில் எங்கள் பொழு துகள் மகிழ்ச்சியுடன் கடந்து சென்றிருக் கிறது.

சத்தியமூர்த்தி அண்ணாவை அறி முகம் பெற்ற காலத்தின் விம்பமாக இவையே முன்தெறிக்கின்றன. அதன் பின் னான காலப்பகுதி, அவர் சாவைத் தழுவிய கணம் வரை தடம் பதித்துச் சென்றவை ஏராளம். முற்றுப்பெறாத எங்கள் விடுத லைத் தாகமும், எட்டிப் பிடிக்காத விடுதலை வாசலும் முழுமையாக சாத்தியமாகும் கணம் வரை, சத்தியமூர்த்தி அண்ணா வின் சாட்சிகளும், எங்கள் நீதியை முன் னுந்தும் நெம்புகோலாய் துணையிருக்கும்.

ஆதாரம், ஈழநாதம், ஈழமுரசு, ஈழ நாடு, வெளிச்சம், சாளரம், எரிமலை போன்ற அச்சு ஊடகங்களிலும், IBC, தமி ழீழ தேசியத் தொலைக்காட்சி, தரிசனம் போன்ற ஒலி ஒளி ஊடகங்களிலும் தன் நெறி தவறாத ஊடகப் பணியினை செவ் வனே முன்செலுத்தி, தமிழ்த் தேசிய இனத் தின் பூர்வீக உண்மைத் தன்மைகளையும், இழந்துபோன இறையாண்மையை மீளப் பெறுதலின் தெளிவுகளையும் ஏற்படுத்திய படி மக்கள் மனங்களில் மாறாத, மறவாத உருவாகிப் பதிவாகிக் கொண்டவர்.

உலகமெங்கும் பரந்து வாழும் தமிழர் களின் முகமாகவும், முகவரியாகவும் அமை யப் போகும் தமிழீழ தனியரசின் உரு வாக்கத் தளத்திலே நிலைகொண்டு, தமி ழீழக் கோட்பாடுகளையும், நிழலரசின் இயங்கு விசையினையும், துறைசார் நிபு ணர்களும், பல்தேசிய மொழியாளர்களும், எமது மக்களும், ஏன் எதிரியும் கூட ஏற்க வேண்டிய வகையில் மிக எழிமையான எழுத்துருவிலும், பேசு தமிழிலும் காட்சிப் படுத்தல்களோடு முன்னுந்திச் சென்ற, தேச நலன் சார் படைப்பாளிகளில் சத்தியமூர்த்தி அண்ணா தனித்தகமை பெற்றிருந்தார் என்பதை மறுக்க முடியாது.

போரும் போர்சூழ்ந்த வாழ்வுமாகி நின்ற வன்னிப்பெருநிலப் பரப்பின் மையத் தில் வாழ்ந்தபடியே, தமிழ்தேசிய விடுதலை என்ற மையம் கரையாமல், தென்தமிழீழம் வடதமிழீழம் மீதான எதிரியின் ஆக்கிரமிப புக்களையும், அவை தமிழர் தேசம் மீது செலுத்திய கோரங்க ளையும், குறிப்பாக





எதிரி திட்டமிட்டு நிகழ்த்திய மனிதப் பேரவலங்களையும் எடுத்தியம்பிய மூச்சும், வரிவடிவம் கொண்டு நிமிர்த்திய எழுதுகோலும் சாய்க்கப்பட்ட பின்னும், உணர்வால் உயிர்வாழ்கிறது என்றால், அது சத்தியமூர்த்தி என்ற அழியா உருவம் தாங்கி நின்ற தாகத்திற்கே சமர்ப்பனமா கிறது.

12.02.2009 அன்று காலை சுமார் 10.00 மணியைக் கடந்திருக்கும், வட தமிழீழம் முல்லை மாவட்டத்திலுள்ள தேவி புரப் பகுதி ஸ்ரீலங்கா அரச படைகளின் எறிகணைகளாலும், கிபிர்த்தாக்குதலாலும், துப்பாக்கி ரவைகளாலும் சல் லடை போடப் பட்ட வண்ணமிருந்தது. இரண்டு மூன்று நாட்களாக தேவிபுரம் பகுதியெங்கும் எழும்பிய மக்கள் அவல மும், மரண ஓலமும் இடம் பெயர்ந்து ஓடிக் கொண்டிருக்கும் மக்களை தரிக்க விடாது, இடைத்தங்கல் செய்ய விடாது துரத்தி யது......பிரதான வீதியில் பயணிக்க முடியாது மக்கள் காடுகளை ஊடறுத்து, ஆற்றுப் பள்ளங்களைக் கடந்து அவலம் நிறைந்த பயணங்களில் தம்மை ஆட்படுத்திக் கொண்டிருந்தனர்.

தேவிபுரம் பகுதியில் இருந்து இரணைப்பாலை பகுதிக்கும், இரணைப் பாலைப் பகுதியில் இருந்து தேவிபுரத்திற்குமாக அத்தியாவசிய தேவையின்பால் பயணங்கள்..... பீதியைச் சுமந்து வீதிகளை நிறைத்த அவசரப் பயணங்கள். ....

தேவிபுரம் பகுதியில் இருந்து இரணைப்பாலைப் பகுதிக்கு உந்துருளியில் ஆரம்பித்த என் பயணம் இடைவழியே குறுக்கிடும் ஒரு ஆற்றுப் பள்ளத்தை இறங்கிக் கடக்கின்றேன்.....

ஆற்றின் குறுக்கே கடந்த மக்கள் கூட்டத்தில் இருந்து ராஜன். ....என்ற ஒரு குரல் என்னைத் தட்டி எழுப்பியது போலிருந்தது......! நிமிர்ந்தேன் என் எதிரில் சத்தியமூர்த்தி அண்ணா....! வழமையாக இருந்தவை எல்லாமே மாறிப் போனதால் உயிருள்ள ஆத்துமாவாக உலாவந்த என்னால் பதிலுரைத்து முகம் பார்க்க முடிய வில்லை.

ஆனாலும் அந்த தியாக குணாளன் எனதருகில் ஓடிவந்து, என்னைக் கட்டியணைத்து, முகத்தைத் தடவி, முதுகைத் தடவி...." சொறி ராஜன் கேள்விப்பட்டேன். கவலையடைந்தேன் வரமுடியவில்லை" என்றார். 08.02.2009 அன்று நள்ளிரவில் தேவிபுரம் பகுதியில் எறிகணை அதிர்வுகளால் இதயம் செயலிழக்க விழி மூடிய எனையீன்ற தாயவளை வீதியோர மாய் புதைத்துவிட்டு, வெறுமையோடு நகர்ந்த என்னைத் தேற்றிய நிமிடங்கள் அவை. பத்துமாதம் சுமந்தவளுக்காக பத்து நிமிடமேனும் அழமுடியாத பாவிகளா நாங்கள்...? விதியே என் செய்வோம்.....!

தோழமை உணர்வோடு என்னைத் தடவித் தேற்றிய அந்த நெருக்கடிகால கரங்களை நான் இறுகப் பற்றிய போதுதான் அம்மாவுக்காக ஓலமிட்டு அழவேண்டும் என்ற அடி மன உணர்வை தூண்டியது..... என்னதான் இருந்தாலும் குடும்பத்தின் தலைவர்கள் அழுகையில் உறைந்தால் அடுத்த நகர்வில் விபரீதம் விளையும் சூழல்....

நிதானித்தோம் விடைபெற்றோம்.

இரண்டடி முன்சென்றவர் மீண்டும் திரும்பி ராஜன்.....என்னால் வர முடியவில்லை. உங்களைக் கண்டதாய் நந்தினியிடம் (தன் மனைவியிடம்) சொல்லுவேன் அவதானமாக போய்வாருங்கள் என்றார். நானும் பதிலுக்கு ஏனண்ணா இப்ப தேவிபுரம் போறியள்.....அங்கே ஒரே ஷெல் விழுகிறது என்றேன். எல்லாப் பொருட்களையும் விட்டு விட்டு வந்துவிட்டேன்......அதில் முக்



கியமான பொருளை மட்டுமாவது எடுத்து வரப்போகிறேன் என்றார். அவதான மண்ணா தேவிபுரம் பள்ளிக்கூடத்தில் இயங்கும் ஆஸ்பத்திரியில் ராஜா "டொக்ட ரோட" என்ர அக்காட மகன் நிக்கிறான், ஏது ம் தேவை யெண்டால் போங்கோ......எனது இறுதி வார்த்தைப் பரிமாற்றத்தோடு விடை பெற்றோம்.

அந்த அற்புதமான பிறவியை, அன் பான உபசரிப்பாளனை, நெஞ்சம் மறவாத, மற் றோரை வஞ்சிக்காத தூயவனைக் காண்கின்ற கடைசி நிமிடங்கள் என்பதை யார்தான் நினைப்பது, நினைத்தது.

மீண்டும் பி.பகல் சுமார் 2-3 மணி யிருக்கலாம், நான் இரணைப் பாலைப் பாலையில் இருந்து தேவிபுரத்திற்கு தவிர்க்க முடியாத காரணமாக செல்கி றேன்... விரைந்து பணிகளை முடித்து திரும்புகையில் இடைவெளிகளையும் மிகை நிரப்ப எறிகணைகள் சரமாரியாக இரைந்து வெடிக்கின்றன.... தேவிபுரம் பாட சாலை வளாகத்தில் இயங்கு நிலையில் இருந்த வைத்தியசாலைக்குள் நுளைகின் றேன்....மருத்துவப் போராளியாய் நின்றா லும் அக்கா கேட்பாளே என் பிள்ளையை கண்டியா என்று....அவளின் மன ஆறுத லுக்காக நல்ல பதிலளிக்கவே உள் நுளை கின்றேன். .....

என்னைக் கண்டதும் மருமகன் ஓடி வந்தான்....ஏன் மாமா கண்டபடி திரி கிறீர்கள்.....உரிமையோடு கடிந்தவன் அருகே வந்து, இங்கு ஒரே ஷெல்லடி, காயப் பட்டும், இறந்தும் கனபேரை கொண்டு வந் திருக்கு.......நீங்கள் கெதியாய் போங்கோ என்றான்.

தங்களைக் களத்தில் நிலை நிறுத்தி னாலும், தான் நேசிக்கும் உறவுகளில் காட் டும் கவனத்தை, அக்கறையை மருமகன் என்ற நிலையினைத் தாண்டி போராளிக்கு உரிய பண்பாய் உணர்ந்து, அவனது கோரிக்கையை ஏற்று, திரும்ப முற்பட்டேன். அப்போதுதான் அந்தப் பேரதிர்ச்சியை தளதளத்த குரலில் கொப்பளித்தான்.

மாமா.... சத்தியமூர்த்தி அண்ண ஷெல்லடியில சாவடைஞ்சிட்டார்.......

நம்ப முடியவில்லை, ஆனால் நம் பித்தான் ஆகவேண்டும். வெளியே செல்ல சென்ற நான் மீண்டும் உள்ளே ஓடினேன்..!

அங்கே தரையில் ஒரு பாயில் எங்கள் சத்தியமூர்த்தி அண்ணா அசைவற்று நித்திய உறக்கம் கொள்ளும் காட்சி இதயத் தைப் பிழிந்து எடுக்கவும்...... என்னை நானே ஒரு முறை அல்ல பலமுறை கேட்கி றேன் உண்மையா, உண் மையா வென......! அதே புன்சிரிப்புடன், குறைக் கண்விழித்தபடி, ஒரு சிறு துளி கூட இரத் தம் வெளியேறாமல், இடப்புற விலா எலும் புப் பகுதியால் உள்ளிறங்கிய எறிகணைச் சித றல் இதயப்பகுதியை ஊடறுத்திருக் கலாம். உள்ளகக் குருதிப் பெருக்கு ஏற்பட்டு தாய் மண்ணை முத்தமிட் டுக் கொண்டார்.

ஓ...! எங்கள் நேசத்திற்குரிய, நெஞ் சினிய அந்த அற்புதன் எனக்கு ஆறுதல ளித்த நிமிடங்கள் தொலைந்து போக..... இனி நான் உனது குடும்பத் திற்கு எப்படி ஆறுதலளிப்பேன் என்ற உணர்வு நெஞ்சை நெருடியது.... மன் னித்துவிடு அண்ணா உன் துணைவியும், குட்டியம்மாவும் உன் வரவுக்காய் காத்தி ருக்க நீயோ நிரந்தரமாய் துயில்கின்றாய் என்ற துயர்மிகு செய்தியை நான் கொண்டு செல்லமாட்டேன்....... மனதை இறுக்கியபடி நகர்கிறேன்.

ஆயிரமாயிரம் ஆத்துமாக்களின் அவ லங்களை உலகப் பரப்பெங்கும் அகலத்





திறந்து காட்டியவனே! உந்தன் எழுதுகோல் சாய்க்கப்பட்டது... ஆயினும் உந்தன் உணர்வுகள் சாயாது. பொற்காலம் தொலைத்த பெருமக்கள் கூட்டமாய் முடி வுரை எழுதா இடைவெளி தன்னில் தரித்து நிற்கின்றோம்.

நாங்கள் அள்ளிக் கொடுத்த உயிர்களின் பட்டியலில் நீங்களும் நீள்கிறீர்கள்....! உங்கள் தியாகங்களின் துணை கொண்டு எமக்கான இன்றைய அரசியல் பெருவெளியின் மிகை நிரப்பல் நிகழ்ந்தாக வேண்டும். நீதியின் கதவுகள் திறந்தாக வேண்டும். இழந்துபோன இறைமை மீண்டும் எமதாகும் நாளுக்காய் விசை கொண்டு எழுவோம். அங்கு தான் நீங்களும் துலக்கம் பெறுவீர்கள்.

●




பாரெங்கும் பரந்து வாழும் பலதரப்பட்ட மக்களிடம் தகவல் களைக் கொண்டு சேர்ப்பதில் மீடியாக்கள் எனப்படும் ஊடகங்களின் பணி மகத்தானது. உலகின் ஒருகோடியில் நடைபெறும் ஒரு நிகழ்வை மறுகோடியில் வசிப்பவர்களால் உடனுக்குடன் அறியவும் அது குறித்து பேசவும் முடிகிறதெனில் பத்திரிகை, வானொலி, தொலைக் காட்சி, இணையம் ஆகிய ஊடகங்களின் மூலமே இது சாத்தியமாகிறது. ஊடகத்துறையால் மனித சமூகம் அடைந்த பயன்கள் கணக்கிலடங்கா.

மனித குல நன்மைக்காக உருவாக்கப்பட்ட ஊடகங்களில் சிலவற்றைத் தவிர பெரும்பாலும் வியாபாரத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டிருப்பதும், பரபரப்பை ஏற்படுத்தும் நோக்கத்தில், இல்லாத வற்றை இட்டுக்கட்டுவதையும் உள்ளவற்றை மறைப்பதையும் திரிப்ப தையுமே தமது குறிக்கோளாகக் கொண்டிருப்பதும் வேதனை தரும் உண்மை.

அகில உலகத்தையும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் இந்த ஊடகங்கள் மூலம் பரப்பப்படும் செய்திகளும் தகவல்களும் நல்லவையாக இருப்பின் மனித குலத்திற்கு நன்மை அளிக்கவும் தீயவையாக இருப்பின் தீமை அளிக்கவும் செய்கின்றன. ஊடகங்கள் மூலம் உரத்துச் சொல்லப்படும் கருத்துகள்தாம் மக்களின் உள்ளங்களில் ஊடுருவி ஓர் இனத்தை அல்லது தேசத்தை வழிநடத்தவோ வழி கெடுக்கவோ செய்கின்றன. சீர்கேடு-சீரமைப்பு ஆகிய இரண்டுமே ஊடகங்களால் சாத்தியப்படும்.



**கி.ஜெய்சந்தர்**
பொறுப்பாசிரியர்
ஈழமுரசு



# சாவிற்குள் வாழ்ந்த ஊடகவியலாளன்!

களத்திற்குள் நின்று ஆயுதம் தாங்கிப் போராடுவபவனை விடக்கடினமான பணி, களத்தில் நின்று ஊடகப் பணியாற்றுவது, போராடுபவனுக்கு, வரும் எதிரியைச் சமாளிக்க ஆயுதப்பலம், பின்னணிப் பலம் இருக்கும்,ஆனால், ஊடகவியலாளனிடம் அவை எதுவும் இருக்காது. சில வேளை களில் தன்னைக் காத்துக்கொள்ளும் தற்காப்புக் கவசம்கூட இன்றி களப்பணி யாற்றி உயிர் விட்ட ஊடகவியலாளர்கள் இந்த உலகில் நிறைய உண்டு. எங்கள் சத்தியமூர்த்தியும் அவர்களைப்போல் ஒருவராகி தசாப்தம் கடந்துவிட்டது.

போரே வாழ்வாகிப்போன பூமியில், குண்டு மழைக்கு மத்தியில் சாவிற்குள் வாழ்ந்துகொண்டும், மக்கள் படும் அவலங்களையும் இழப்புக்களையும் ஒரு நேரடிச் சாட்சியாக உலகின் முன் கொண்டு வந்து நிறுத்திய ஊடகவியலாளர் சத்தியமூர்த்தி அந்த இழப்புக்களுக்கு ஆதாரமாக தானே மாறியது வரலாற்றின் கொடுமை.

எழுத்துக்களாக இருந்தாலும் சரி, செய்தி ஆய்வுகளாக இருந்தாலும் சரி தெளிவுமிக்க, அறிவு சார்ந்த அவரது கருத்துக்கள் பாமர மக்களும் புரிந்துகொள்ளக் கூடிய வகையிலேயே எப்போதும் இருக்கும். ஒவ்வொரு கருத்துக்களையும் தர்க்க ரீதி யாக மிகவும் தெளிந்த நிதானத்துடன் உச்சரிக்கும் சத்தியமூர்த்தி போன்ற ஊடக ஆய்வாளர்களை தமிழ் ஊடகப் பரப்பில் காண்பது அரிது.





தமிழீழ தேசியத் தொலைக்காட்சியில் இடம்பெற்று வந்த நிலவரம் அரசியல் ஆய்வு நிகழ்ச்சி மற்றும் அரசியல் ஆய்வுப் பத்திகள், தாயக நிலவரம், வாராந்த அரசியல் கண்ணோட்டம் போன்றவற்றில் இடம் பெற்ற இவரது ஆய்வுகள் தர்க்க ரீதியாக ஏற்றுக்கொள்ளத் தக்க வகையிலும், அனைவராலும் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் மிகவும் எளிமையாக இருந்தன. அதுவே, இவரது எழுத்துக்களும், பேச்சுக்களும், ஆய்வுகளும் உலகத் தமிழ் மக்களால் அதிகளவில் விருப்புடன் வரவேற் கப்பட்டதற்கு காரணமாக அமைந்திருந்தது.

ஈழமுரசிற்கும் இவருக்கும் இடையிலான தொடர்பு மிகவும் காத்திரமானது. ஈழமுரசுக்கு தனது ஆய்வுகளை மட்டுமல்ல ஆலோசனைகளையும் வழங்கி அதன் வளர்ச்சிக்கு பக்க பலமாக நின்றவர். குறிப்பாக ஈழமுரசில் வருகின்ற -மகிந்த சிந்தனைப் படுகொலை- என்ற கறுப்புப் பக்கத்தின் வருகையை இவர் பாராட்டியதுடன், அதன் கனதியும் எதிர்காலத்தில் அதன் தாக்கம் எவ்வாறு இருக்கும் என்பதையும் தனது ஈழமுரசிற்கான வாழ்த்துரையின் போது எடுத்துக் கூறியிருந்தார்.

மகிந்த சிந்தனைப் படுகொலைகளை ஆவணப்படுத்துவதற்கும் அதனை வேற்று மொழிகளில் மொழிபெயர்த்து உலக நாடுகளின் பார்வைக்கு வைப்பதற்கும் அந் தப் பக்கம் எத்தனை தூரம் அவசியமானது என்பதை தனது வாழ்த்துரையின்போது மிகவும் தெளிவாக எடுத்துக்கூறியிருந்தவர். ஆனால், அதே மகிந்த சிந்தனைப் படுகொலைக்குள் சத்தியமூர்த்தி அவர்களும் உள்ளடக்கப்படுவார் என்பது நாம் சற்றும் கூட எதிர்பார்க்காத ஒன்று.

இளம் வயதிலேயே மிகவும் சிறந்த ஒரு ஊடகவியலாளராக பரிணமித்து வந்த இவர், நீண்ட காலம் எங்கள் மண்ணில் வாழ்ந்து தமிழ் ஊடகத்துறைக்கு ஒரு பாரிய பங்களிப்பை வழங்குவார் என எதிர்பார்த்திருந்த நிலையில், சிறீலங்கா அரசின் கொடூர இனப்படுகொலைக்குள் ஏற்கனவே பல ஊடகவியலாளர்களை இழந்திருந்த தமிழினம், சத்தியமூர்த்தி என்ற இன்னொரு சிறந்த ஊடகவியலாளரையும் இழந்து விட்டது.

இவரது இழப்பு தமிழ் ஊடகத்துறைக்கு இட்டு நிரப்பமுடியாத பேரிழப்பு.

ஊடகவியலாளன் என்பவன் ஓர் அறிவு களஞ்சியமாக இருக்க வேண்டும். வரலாறு களையும், தகவல்களையும் தன் விரல்நுனியில் வைத்திருக்கவேண்டும். ஒரு சாதாரண ஊடகவியலாளன் தான் அமெரிக்க ஜனாதிபதி நிக்சனையே பதவியைவிட்டு ஓடவைத்தவன். வரலாற்றையே மாற்றி அமைக்கக் கூடிய சக்தி படைத்தவர்கள் ஊடகவியலாளர்கள். ஆனால், அரசியலில் தெளிந்த அறிவும் இன்றி, வரலாறுகளின் படிப்பினைகளுமின்றி,ஏன் ஊடகக் களப் பணியாற்றிய அனுபவங்கள் கூட இன்றி, ஊடகவியலாளர்கள் என்று இன்று பலர் வலம் வந்துகொண்டிருக்கின்றார்கள். இவர்களுக்கு மத்தியில், தமிழர் அரசியலில் நிறைந்த அனுபவும்,தெளிவும், ஈடுபாடும் கொண்ட சத்தியமூர்த்தி போன்றவர்கள் தமிழர்கள் மத்தியில் நின்று களப்பணியாற்ற இப்போது இல்லையே என்ற ஏக்கம் இருந்து கொண்டே இருக்கின்றது.

●



ஊடகவியலாளர்
**இதயச்சந்திரன்**



# ஊடகத் தோழனின் நினைவாக....

**த**மிழீழ தேசத்தின், முதன் மையான ஊடக களப்போராளியாக விளங்கிய பு.சத்தியமூர்த்தி அவர்கள் மறைந்து 10 ஆண்டுகள் ஆகிவிட்டன.

ஆனாலும் தமிழ் ஊடக வெளியில் அவர் ஆற்றிச் சென்ற பணி என்றென்றும் ஆழப்பதிந்து வேரூன்றி நிலைத்து நிற்கும் என்பது உறுதி.

வன்னியைத் தளமாகக் கொண்டியங்கிய ஊடக மையத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த சத்தியமூர்த்தி, இறுதிப் போரில் சிறிலங்கா அரச படைகளின் எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

பாதுகாப்புவலயமென சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சினால் உத்தியோகபூர்வமாக இனங்காட்டப்பட்ட சில பகுதிகளில் கொல்லப்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்களில் ஊடகச் சமராடிய பு.சத்தியமூர்த்தியும் அடங்குவார்.

களநிலவரங்கள் தொடர்பான உண்மைத தன்மைகளை, ஆரோக்கியமான ஊடகப் பண்புகளோடு, நேர்த்தியான வகையில் வெளிக்கொணர்ந்த தலைசிறந்த ஊடகர்களுள் சத்தியமூர்த்தியையும் அவரோடு இணைந்து பல சமகால அரசியல் நிகழ்வுகளை தொகுத்து வழங்கிய கஜனையும் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

தொலைபேசி வழியாக பல தடவைகள், இவர்கள் இருவரோடு உரையாடும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. எனது பத்தி





எழுத்திற்குத் தேவையான தகவல்களை அவர்களிடமிருந்து பெற்றிருக்கிறேன். ஏற் கனவே கிடைத்த தகவல்கள் சரியா என் பதனை இவர்களூடாகவும் உறுதிப்படுத் தியிருக்கிறேன்.

தர்க்கபூர்வமற்ற வகையில் அமைந்த முடிபுகளை, அவர் இயலுமானவரை தவிர் த்து வந்ததை அவரின் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளில் பார்த்துள்ளேன்.

மிகவும் நிதானமாகவும், அதே வேளை ஆணித் தரமாகவும் தான் கூற வந்த கருத்தினை தெளிவுற முன்வைக்கும் பண்பான ஊடக மனிதன் எங்கள் சத்திய மூர்த்தி. போரின் உக்கிரம், இவரின் ஊடகப்பணியைத் தடுத்து நிறுத்தவில்லை.

எறிகணை வீச்சுக்களின் நடுவே ,சம ராய்வு செய்யும் பேராளுமை கொண்டவர் மாமனிதர் சத்தியமூர்த்தி.

"மக்கள் மீது அன்பும் அக்கறையும் உடைய, எளிமையான பண்புமிக்க மனிதர் களால் போராட்டக்களம் இயங்கியது" என பது, தேசிய இன விடுதலை வரலாற்றிற்கு பெருமை சேர்க்கும்.

இப்படிப் பல உன்னதமான ஆளுமை மிக்க வரலாற்று மனிதர்களை, நாம் எமது விடுதலைப் போரில் இழந்துள்ளோம். நண்பர் சத்தியமூர்த்தி எமதினத்தின் ஊடக முகம். அது தெளிவான நேர்த்தியான, ஆனாலும் கனதியான முகம். பத்தாண் டுகள் கழிந்தாலும் பத்திர மாய் எம் நெஞ்ச மதில் நிலைத்திருப் பாய் தோழா!.




**தொலைக்காட்சிகளுக்கு மறுப்பைத் தெரிவித்தல்**

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் இவ்விதம் தவறான தகவல்கள் வரும்போது, தொலைபேசி மூலம் நேயர்கள் நேரடியாக தொடர்பு கொள்ளும் நிகழ்ச்சிகள் நடக்கும் தருணத்தைப் பயன்படுத்தி, நம் சமுதாயம் தொடர்பாக தவறான தகவல் வெளியிட்ட அவர்களின் தவறான போக்கை கண்டிக்க வேண்டும். உடனே இணைப்பை அவர்கள் துண்டித்தும் விடலாம் ஆனாலும் நடுநிலையான நேயர்கள் அவர்களை இனம் கண்டு கொள்வார்கள் அல்லவா?



திருமதி ப்ரியம்வதா பயஸ்
(காயத்திரி பயஸ்ராஜா)

## சத்தியமூர்த்தி ஒரு ஊடகசகாப்தம்.....

**எ**ன்றும் மாறாத புன்னகைக்குச் சொந் தக்காரன் சத்தியமூர்த்தி அண்ணை எம் உயிர்பிரிந்து போகும் வரை நாம் மறந்து வாழ்ந்துவிட முடியாது.

தமிழரின் அவலங்களை,நாம் வகை தொகை இன்றி அழித்தொழிக்கப்பட்ட உண் மைச்சம்பவங்களை ஒற்றைத்தமிழனாய் வன்னியில் இருந்து உலகம் முழுவதும்அறி யச்செய்த எம் உண்மைச்சாட்சி ஊடக விய லாளர்.

பு.சத்தியமூர்த்தி அண்ணன்-என் கணவர் பயஸ் மூலம் எனக்கு அறிமுக மான அரிய நண்பர்.பயஸ் போலவே நானும அண்ணை என்றே அழைத்துக் கொள்வேன்.

கிளிநொச்சியில் இருந்த அண்ணனை பல தடவைகள் பார்த்துப் பேசியிருந்தாலும், எம்திருமணத்துக்குப் பின்னர்தான் எனக்கு நன்கு அறிமுகமானார் அண்ணன். அந்த இனிய உறவு 2009 வன்னியில் போர் உக் கிரமடையும்வரை நெகிழ்வாகவே இருந் தது.

2006 ஆம் ஆண்டு எமக்கு அதிக ஆடம்பரமில்லாமல் திருமணம் நடந்தது அண்ணனும் வந்து வாழ்த்திவிட்டு சென் றார். அன்றுதான் இத்தனை திடமான வன்மமான மனதுக்குள் இவ்வளவு நகைச் சுவை உணர்வும் இருக்கிறதே என்று எண்ணி வியந்து கொண்டேன்.





உறவுகள் கடந்த நட்பு வட்டத்துக்குள் எமக்கான முதல் விருந்தை அண்ணன் ஏற்பாடு செய்திருந்தார் .எழு கலை இலக்கியக்குடும்பம் அன்று விருந்துக்குக் கூடியது - சத்தியமூர்த்தி நந்தினி தம்பதியரின் விருந்துபசாரமே என எண்ணிக் கொண்டு போன எமக்கு வன்னியின் அத்தனை பெரும் ஊடகர்களையும், கலைஞர்களையும், கவிஞர்களையும் ஒன்று கூட்டி திருமணவைபவம்போல் விருந்து பசாரத்தை விமரிசை ஆக்கியிருந்தார் சத்தியமூர்த்தி அண்ணன்.

அன்று அண்ணனின் இன்னொரு பரிணாமத்தை கண்டுவியந்தேன் - அழகான கம்பீரமான குரல்வளமும், மிடுக்கான சொற்பிரயோகங்களும் அண்ணனை தனித்துவமான ஊடகவியலாளனாய் வெளிப்படுத்தியது.

எம்மை வாழ்த்திப்பாடிய வாழ்த்துக் கவியிலும் நடைமுறை வாழ்வைக்கடந்து போகும் துல்லியமான பார்வையையும் தெளிவான வாழ்வியல் நெறிப்பாடு களையும் புகுத்தி கவிதை வாசித்திருந்தார்.

எங்கள் திருமணவிருந்துக்கு நந்தினி அக்கா தன் மகள் சிந்துவை கருவில் சுமந்திருந்தார். அந்த மகிழ்ச்சிப்பொழுதில் ஒரு கணம் கூட நான் நினைத்தில்லை அந்த கூட்டத்தில் பலரை விரைவில் இழக்கப் போகிறோம் என்று.

எமது இனத்தின் அவலங்களை உலகத்துக்கு அறிவித்து அடுத்தகணமே நீ மாண்டுபோவாய் என்று நாம் கனவிலும் நினைக்கவில்லை அண்ணா .

கம்பீரமான நடை, உள்ளதை உள்ளபடி நிதானமாக எடுத்துச்சொல்லும் சீரிய பார்வை,பிழை என்றால் பிழைதான் அது கடவுள் வந்தாலும் சரியாக்கமுடியாது அண்ணனின் மனதில் இருந்து அப்படி ஒரு நியாயமான பிடிவாதமும் நேர்த்தியும் - சத்தியமூர்த்தி அண்ணனின் தனி அடையாளங்கள். எப்போதும் ஒரு குறிப்புப் புத்தகமும் இரண்டு வர்ணப் பேனாக்களும் அவரின் நிரந்தரமான சொத்துடைமையாக இருக்கும்.

அந்த பேனா மைகளைத்தவிர அவர் வேறுயாருடனம் அதிகமாகப்பேசி இருப்பார் என்றால் அது ஆச்சரியமான விடயமாகத் தான் இருக்கும்.

வன்னியில் போர் உக்கிரமடைந்து விட்டது - கிளிநொச்சியில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்துவிட்டார்கள், விசுவமடு, றெட்பானா,உடையார்கட்டு,சுதந்திரபுரம், வள்ளிபுனம்,தேவிபுரம்,புதுக்குடியிருப்பு என மக்கள் நெருக்கமாக குடியேறுகின்றனர்.

அன்று ஒரு வியாழக்கிழமை - சிறிலங்கா இராணுவத்தின் எறிகணைத் தாக்குதல்கள் அன்று மிக அதிகமாக இருக்கிறது. எறிகணைகளையோ மற்றும் எதையுமோ பொருட்படுத்தாது வள்ளி புனத்தில் இருந்த எமது வீட்டுக்கு சத்திய மூர்த்தி அண்ணன் வருகிறார்.

அவரது முகத்தில் அதிகமான கலவரம் தெரிந்தது, அது போரின் உச்சக்கட்டமான குரூரத்தையும்,அழிவுகளையும், நேரில் பார்த்துப்பார்த்து அதிகப்படியான மன வெறுப்போடும் வலிகளின் ஆற்றாமையோடும் இருக்கிறார் என்பதை வெளிப்படுத்தியது.

ஆனாலும் அவர் எம்மைக்கண்டதும் குபீர் என்று சற்று முகம்மலர்த்தி சிரிக்கத் தவறவில்லை.

"அறம்புறமாக செல்லடிக்கிறான் எங்கே அண்ணை வெளிக்கிட்டீங்கள்



கொஞ்சம் பொறுமையாக வீட்டுக்குள் இருக் கலாமே" என்றேன்.

வழமையாக இடக்குமுடக்காக நாம் திருப்பி பதில்சொல்ல முடியாமல் ஒரு வார்த் தையிலேயே எங்கள் வாயை அடைக்கும் அண்ணன் அன்று நான் சொன்ன விடயத் துக்கு பதிலே பேசவில்லை. என் மகன் குழந்தையாக இருந் தான் அவன் கன் னத்தை கிள்ளிவிட்டு அப்பாவைப்போல "மைதான் பூசப்போகி றாயா" எனக் கேட்டு விட்டு பயசையும் அழைத்துக்கொண்டு அவசரமாக கிளம் பிச்செல்ல ஆயத்தமா னார். நீண்டதூரம் பயணமாகப்போகிறார் கள் என்பதை உணர்ந்த நான் அவசர அவசரமாக திரிபோசா மாவைக்குழைத்து திரணை களாக உருட்டி இருவருக்கும் கொடுத்தேன் அவ்வளவு விருப்பத்தோடு ஆவல் இல் லாமல் ஒரு உருண் டை மாவை சாப்பிட்டு விட்டு தேநீர் வேண்டாம் தண்ணீர் போதும் என சுடும் தேநீரை வைத்துவிட்டு குளிர்ந்த நீரை குடித்து விட்டு அவசரமாகப் புறப்பட்டனர்.

கண்டிப்பாக அது ஊடக ஆய்வுக்கான களப்பயணமாகத்தான் இருக்கவேண்டும் , இன்னமும் ஓரிரு நாட்களில் இந்த உயிரை துச்சமாக நினைத்து களப்பணியாற்றும் ஊடகனை இழக்கப்போகிறோம் என்று நினைக்கவில்லை - போகும்போது கைய சைத்து முகம்மலர்ந்து போன அந்தப் பொழு துதான் அந்த உத்தம ஊடகவிய லாளனை, சிறந்த கட்டுரையாசிரியரை, துணிச்சல் மிகக்கொண்ட சொற்செல்வனை உயி ரோடு பார்த்த இறுதித் தருணமாகியது.

இன்னலுக்குள்ளும், தன் மனை வியையும், பிஞ்சுமகளையும் தவிக்கவிட்டு போகப்போகிறேன் என எண்ணாது எல்லா உயிர்களையும் தன்னுடைய உற்ற உறவு களின் உயிராக எண்ணி தன்னால் முடிந்த வரை நம் அவலங்களை உலக றியச் செய்து கொண்டிருந்தார்.

வெளிநாட்டு ஊடகங்களுக்கு மக்க ளின் அவலங்களை நேர் கண்ட சாட்சியாக அண்ணன் வழங்கிக்கொண்டிருந்தார். ஒவ்வொரு உயிரின் பெறுமதியையும் ஊட கங்கள் வாயிலாக தெரிவித்து நாம் எப்படி ஆக்கிரமிக்கப்பட்டோம் என்பதை வெளிப் படுத்திக்கொண்டிருக்கும்போதே மடிந்து போன அந்த வீரம்மிக்க தூய உயிரை இப் போதும் பணிந்து போற்றுகின்றேன்.

தன்னுயிரைவிட தன் மக்களின் உயிர் கள் பறிபோவதை தாங்க முடியாத உத்தம ஊடகவியலாளன் 12-02-2009அன்று எம் புலக்கண்ணில் இருந்து மறைந்து போய் அகங்களுக்குள் நிரந்தர மாக குடிகொண்டு விடுகிறான்.

தன் வேலையை தொழிலாக செய் தால்போதும் என்று செய்யாமல், தன் நாட்டு மக்களுக்கு செய்த ஊடகப்பணியை கடமை என எண்ணிச் செய்த அரிய உயிர் எமைப்பிரிந்தது.

என்றும் மாறாத மிடுக்கான அவரது அறம் சார்ந்த ஊடகப்பணி அவர் பெயரா லேயே என்றும் நிலைக்கட்டும்.

கார்த்தி ஜனனி

# சத்தியமூர்த்தியெனும் சத்தியதேவன்...



**2009**ஆம் ஆண்டு, சாவோலங்களே பொழுதைப் புலர்வித்துக்கொண்டிருந்த காலப்பகுதியது.

அத்தனைபேருக்கும் அழுகை தந்த நாட்களில் தான் பாசத்திற்குரிய எங்கள் அண்ணனை சிறிலங்காப்படையினரின் எறிகணை வீச்சினில் பறிகொடுத்தோம்.

பெப்ரவரி 12 ஆம் நாள் அன்றும்....கிபிர் குண்டு வீச்சு விமானத்தாக்குதல்களோடும், எறிகணை வீச்சுத்தாக்குதல்களோடும், துப்பாக்கிச்சூடு, படையினரின் முன்னேற்ற நடவடிக்கைகளோடும் பொழுது புலர்ந்திருந்தது.

பறவைகளின் கிண்கிணியோசையும். கோவிலின் காண்டாமணியோசையும் காணாமல் போய்.....

எங்கள் உறவுகளின் கதறல் ஒலிகளே துயிலெழுப்பின. அன்றைய நாளிலும் புலிகளின் குரல் நிறுவனத்திற்கு பணியாற்றச் சென்றிருந்தேன்.

இடம்பெயர்வின்போது காணாமல்ப் போன உறவுகளை ஒன்றுசேர்க்குமுகமாகவும் உயிரிழந்த எம் உறவுகளின் விபரங்களை வெளிக்கொணருமுகமாகவும் புலிகளின் குரல் வானொலி தொடர் சேவை யாற்றிக் கொண்டிருந்தது. அந்நேரப் பொழுதில் நானும் சக அறிவிப்பாளர் கொற்றவை அவர்களும் கடமையாற்றிக் கொண்டிருந்த வேளையில்தான் பிரதம செய்தியாசிரியர்



தி. தவபாலன் அவர்களால் செய்தியொன்று வாசிக்குமாறு தரப்படுகிறது. எங்கள் ஊடகப் பேரொளி.....

சத்தியமூர்த்தியை சிறிலங்காப்படையி ரின் எறிகணை சாகடித்ததென செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

எங்கள் தேசத்தின் மாமலைகள் ஒவ் வொன்றாய் சரிந்து விழுகின்றதே..என கண்ணீரில் கரைந்தபடி காற்றேறியது அத்து யரச் செய்தி. எனக்கும் சத்தியமூர்த்தி அண் ணனுக்குமான உறவை புலிகளின் குரல் நிறுவனமே ஏற்படுத்தித் தந்திருந்தது. அறிவும், ஆற்றலும், அறநெறிப்பண்புகளும் கொண்ட சான்றோனை நினைவுகொள்வ தில் ஆத்ம திருப்தியாக இருக்கிறது.

பாடசாலை மாணவனாய்திகழ்ந்து, பல் கலைக்கழக மாணவனாய், உயர்ந்து, ஒரு அரசியல் ஆய்வாளராய், ஊடகவியளாள ராய் எழுத்தாளனாய், கலைஞனாய், என பன்முக ஆற்றல் கொண்ட பழம்பெரும் ஆற்றலுள்ளவனாய் இந்த இளம் அகவை யில் எப்படி மாபெரும் மேதையானான் என நினைக்கத்தோன்றுமளவிற்கு இவனது செயலாற்றல் எல்லோருக்கும் வியப்பையூட் டியது.

" அறிவின் அதியுயர்ந்த பண்பாகப் பிறப்பதுதான் எளிமை. தன்னலமும், தற் பெருமையும் அகன்று நற்பண்பாக எளிமை தோன்றுகிறது என்று தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாக ரன்அவர்கள் கூறியதுபோல .....அறிவும் ஆற்றலும் மேம்பட்டு வளர்ந்தாலும் அவ னது எளிமை மாறாமல் இருந்தது. ஆடம்பர மில்லாத அமைதியான வாழ்க்கை வாழ்ந்த எங்கள் சகோதரன் எல்லோருக்கும் எடுத் துக்காட்டாய் விளங்கினான். அவனது அன் பும், பண்பும், பரிவும், கருணையும் தான் இன்றுவரை அவனது குடும்பத்தி னரோடு இறுகப்பிணைத்துள்ளது.

வாழ்வது ஒருமுறைதான்
வாழ்வோம் தலைமுறை
போற்றும்படியாக என்று

வாழ்ந்து காட்டிய எங்கள் அன்புக்குரிய அண்ணன் சத்தியமூர்த்தியெனும் சத்திய தேவனை அகங்களிலே நிறைத்து நிற் கின்றேன்.

●



**தர்மலிங்கம் சிவா**



# சிறந்த ஆழுமை கொண்ட ஒரு ஊடகவியலாளன் சத்தியமூர்த்தி அண்ணா!

**யு**த்தம் முடிவுக்கு வரும் முன்பு நானும் ஊடகவியாலாளர் பு.சத்தியமூர்த்தி அண்ணா அவர்களும் இணைந்து பல வேலைகள் செய்திருக்கிறோம். அப்போது சத்தியமூர்த்தி அண்ணா பல நிகழ்ச்சி தொகுப்பாளராகவும் என்னுடன்இணைந்து செயல்பட்டிருக்கிறார். அப்போது எனக்கு பல விடையங்களை பலமுறைகளில் விளக்கங் கள் தந்து கலந்து ஆலோசிப்பார். அரசியல் நிகழ்வுகள் இவரின் முன்னேற்றத்தின் திருப்பத்துக்குரிய நிகழ்ச்சியாக இருந்தது. அதில் சத்தியமூர்த்தி அண்ணா அவர்கள் அரசியல் நிகழ்ச்சிக்கு வரும் பிரதிநிதி களுடன் நிகழ்ச்சி பதிவுகள் தொடங்கும் முன் கலந்து பேசமாட்டார். இது அவரின் இயல்பு நான் அவரிடம் "அண்ணா நிகழ்ச் சிக்கு பிரதிநிதிகள் வந்துவிட்டார்கள் அவர்க ளுடன் சும்மா கலந்து ஆலோசித்தால் நிகழ்சியில் தடுமாற்றங்கள் வரமாட்டாது" என்று நான் சொன்னால் சத்திய மூர்த்தி அண்ணா அவர்கள் சொல்லுவார் "சிவா இவர்களுடன் இப்போது கதைத்தால் இவர் களிடம் சரியான பதில் எடுக்கமுடியாது இவர் களை நிகழ்ச்சியில் இருத்தி கதைத்தால் எப்ப டியும் பதில் சொல்லித்தான் ஆகவேண் டும்" என்பார். இவரின் ஆக்கபூர்வமான கருத்துக்கள் மெய்சிலிர்க்கவைக்கும்.

இவர் அரசியல் நிகழ்ச்சி மட்டும் செய்ய வில்லை ஒரு தொலைகாட்சிக்கு முக்கிய மான நிகழ்ச்சி அதிகாலை பத்திரிகைக்



கண்ணோட்டம் இதில் இவரின் சிறப்பு என்னவென்றால் பத்திரிகைச் செய்தியை வாசித்து கொண்டிருக்கும்போது அதன் ஆய்வையும் படித்தவர்கள் முதல் சற்று கீழ்நோக்கியவர்களையும் சென்றடையும் விதத்தில் ஆய்வு செய்வார். அப்படிப்பட்ட மனிதன் தான் ஊடகவியாலாளர் சத்திய மூர்த்தி அண்ணா அவர்கள். இவரின் திறமைகள் பல.

யுத்தம் நடந்து கொண்டுயிருக்கிறது மக்கள் இடம்பெயர்ந்து இடம் விட்டு இடம் சென்று கொண்டிருக்கின்ற வேளையில் உடையார்கட்டு பகுதியில் மக்களின் வேதனைகளை தொலைகாட்சியின் ஒளிபரப்புக்கு பதிவு செய்து கொண்டிருக்கும்போது வீட்டின் அனைத்து உடைமைகளையும் ஏற்றிக்கொண்டு சென்ற உழவு இயந்திரத்தின் சாரதி ஒருவரின் தலையில் எறிகணை வீழ்ந்து வெடித்த காட்சி எனது கமராவில் பதிவாகியது. அந்த சம்பவத்தை அவரின் குரலூடாக இன்றும் கேட்கக் கூடியவாறுள்ளது. இப்படி பலவிடையங்கள் இவரின் செயல்களில் இருக்கிறது.

சத்தியமூர்த்தி அண்ணாவுடன் இணைந்து பணியாற்றியமைக்கு நான் இப்போதும் பெருமைப்படுகின்றேன்.

# பத்திரிகை

சரசரக்கும் உன்
ஓசையில்
காலை விடிகிறது..
நீ வந்து
குதிப்பதாலே பல
வாசல் திறக்கிறது.
பொழுது விடிவதும்
மடிவதும் உம்
மடியில்..
பலர் எழுவதும்
விழுவதும்
உன்னடியில்.
முதல்நாள்
மடித்து
கொடுக்கப் படுவாய்.
மறுநாள்
கிழித்துக்
கொடுக்கப்படுவாய்.

ஓர் நாள் பிறந்து
மறுநாளே
இறந்தும் போகிறாய்.
எது எப்படியோ
வாழும் வரை
வரலாறு நீ.
வரலாறுகளை
உருவாக்குவதும்
நீ!
ஓர் நாள் உலகம்.
ஒவ்வொரு நாளும்
நீதான் உலகம்





கை. சரவணன்



# செயல் வழிகாட்டிய நினைவுகளுடன் பேசுகின்றேன்

சத்தியமூர்த்தியுடன் பேசுதல் என்பது அலாதியானது. ஆனால் சத்தியமூர்த்தியின் நினைவுகளுடன் பேசுதல் என்பது. கடின மானது. ஏன்னெனில், எங்கே, எப்படி, எதிலி ருந்து, எதை, எதுவரை என ஒரு நீள்கேள்வி களைக் கண்டெடுத்துப் பேசவேண்டியிருக் கும். இருக்கிறது நேரில் அவருடன் பேசுதல் என்பது அனேகமாக பரந்துபட்ட விரிந்த ஒரு வெளியில் எல்லைகள் அற்று நேரவரை யறை யற்று பேசமுடியும். பேசியும் இருக் கின்றோம் ஒன்று இரண்டல்ல ஏராளம் முறை அதிலும் அவரும் நானும் சேர்ந்தி ருந்த வெறும் பத்தாண்டுகளுக்குள்.

எனக்கும் சத்தியமூர்த்திக்குமான உறவுகாலம் வெறும் பத்தாண்டுகள் என் பது காலவரையறை கொண்டு அளவிட்டுக் கொள்ளும் ஒரு அளவிடை ஆண்டுகள் மட்டும் தான் என்பது இப்போது பல்வேறு சூழ் நிலைகள், செயற்பாடுகளில் ஈடுபடும் தருணங்களிலும் அவையவை தொடர்பில் செவிவிழும் கதைகளிலும் செய்திகளில் வரும்போதும் உணரமுடிகிறது. அவருடன் பழகிய, இணைந்திருந்த காலம் உணர்வு கொண்டு அளவிட முடியாததே.

எழுத்துலகில் அப்போதுதான் கற்று குட்டித்னமான அவசரகதி எழுத்துகளுடன் நுழைந்திருந்த என்னை எடுத்த எடுப்பி லேயே சகோதர படைப்பாளி என்று பெரு மையுடன் அரவணைத்த போது சத்திய மூர்த்தியாகவும், சிந்துயனாகவும் ஹம்சத் வனியாகவும் இன்று சில பெயர்களுடனும்



பிரபலம்மடைந்து அப்போதைய ஊடகங்க ளில் தனக்கென இடம் பிடித்திருந்தவர் நன்கு அறியபட்டிருந்தவர் தனக்கு சமமாக ஏற்றுகொண்டார் என்பது எப்படி என்பது பின்னாட்களில் உணரமுடிந்ததாயினும் தொடக் கத்தில் குழப்பமாகவே இருந்தது.

ஒருவனை மனிதனாக ,அவனது உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்து ஏற்றுக் கொள்வதும்,கருத்து பிறழ்களை கருத்துக ளால் மட்டுமே சுட்டிக்காட்டி சரிவராத போது கருத்து ரீதியாக மட்டுமே ஒதுக்கி வைத்தி ருப்பதும் சத்தியமூர்த்திக்கு எப்படிச் சாத்திய மாயிற்று? என்பதை அவரிடமே கேட்டிருக் கிறேன். "அப்படியோ எனக்கும் தெரியாது அறிஞ்சு சொல்லுறன்" என்று சொல்லிச் சிரித்த சிரிப்பு இப்போதும் இருக்கிறது நினை வுகளில். பதில் இனிமேல் இல்லையென் றான ஒன்றுகளில் அடங்கிப் போய்விட்டது.

வெளிப்படையாகவும் முகத்துக்கு நேரேயும் படக் கென்று பேசுகின்ற இவரது பேச்சு சிலருக்கு வெறும் உணர்ச்சி வசப் பட்ட பேச்சாக இருந்திருக்கிறது. இவருடன் பழகத் தொடங்கிய நாட்களிலும் "எழு" வினது தொடக்கக் காலங்களிலும் எனக்கும் சொல்லப்பட்டு எச்சரிக்கப்பட்டது. "ஆபத்த தான பேர்வழி எல்லோருடனும் முரண்படு பவன். கவனம்" என்று விரிவுபடுத்தப்பட்ட அறிவுரைப்பு எச்சரிக்கைத் தொனியில் எனக்கும் வழங்கப்பட்டது. இது 98ன் இறுதி மற்றும் 99ன் முன் பகுதிகளில் எனக்குக் கிடைத்தது.

அவர்கள் சொன்னதில் ஒரு பகுதி சரி யாகவே இருந்தது. "ஆபத்தானவன்" எனும் பதம் பலருக்கு அவர்களது நிலைப்பாடு தொடர்பாக சத்தியமூர்த்தியால் சுட்டிக் காட்டப்பட்டது அவர்களுக்கு ஆபத்தாயிருந் தது. சத்தியமூர்த்தியின் உறுதியான வெளிப்படையான நிலைப்பாடு முரண் பாடாயும் அவர்களுக்கு இருந்தது. எனக்கு அறிவுரை கூறியவர்களின் உடலாரோக்கி யம் உள ஆரோக்கியம் பற்றி எனக்கு ஓர ளவு தெளிவு இருந்தது. அதனால் மரியாதை யாக அவர்களது கருத்தை ஏற்றுக் கொண் டேன். சத்தியமூர்த்தியுடனான உறவை முன்பை விடவும் இறுக்கமாக்கிக் கொண் டேன்.

ஒளிவு மறைவற்ற அந்த இறுக்கம் இறுதிவரை தொடர்ந்தது. உணர்வுகளால் இன்றுவரை தொடர்கிறது இடையில் மோதல்கள் ஏராளம் அடிக்கடி ஏற்படும். அவ ரும் விடமாட்டார். நானும் விடமாட்டேன். ஆனால் என்ன இருவரதும் கருத்துக்கள் ஒரெ திசைப்பட்டவை. ஆயினும் பிரயோகம், நடைமுறை சார்ந்ததாயே முரண்படுவோம். ஆனால் உடனேயே இருவருமே ஒத்துக்கெ காண்டோ ஒத்துக்கொள்ளாமோ சுமுகமாகி விடுவது உறவை தொடர்வதில் தடையை ஒருபோதும் ஏற்படுத்தவில்லை. நாமும் அனுமதிப்பதில்லை.

ஒரு நாள் நான் நினைக்கிறேன் அது 2002 ஏப்ரல் மாதாமாயிருக்கலாம். சமாதா னப் போர்வையில் போக்குவரத்துக்கள் இலகு படுத்தப்பட்டிருந்த காலம். சிறுவயதி லேயே பெற்றோரிடமிருந்து கல்விக்காகப் பிரிந்து அவரது அம்மம்மாவுடன் வாழ்ந்த வருக்கு பெற்றோருடன் நெருக்கி வாழ ஒரு சந்தர்ப்பமாக இவர் கோரியிருந்த இடமாற் றம் கிடைத்தது.

கிழக்கிற்கு -மட்டக்களப்பு- இடம்மாறிச் செல்லப்போகிறார். எல்லோருக்கும் பய ணம் சொல்லியாகிவிட்டது. புதுக்குடியிருப்பு பேருந்து தரிப்பு நிலையத்தின் முன்னா லிருந்த எனது தங்கிடத்தில் இரவு தங்கி அதி காலை முதல் பேருந்தில் பயணப்படுவதாக இருந்தது. நல்லநிலவு. பொழுதுபடும் நேரம் அப்போது காதலியாக இருந்த நந்தினியுடன்





அவர்கள் அதிகமாக பழகிய கதிரவன் பதிப்பகம் முன் நின்ற ஆலமரத்தின் கீழ் சிறிது நேரம் பேசினார். பின்னர் விசும்பல் மட்டும் கேட்டது. யாருடையதோ தெரியாது. நான் சற்று எட்டவாக நின்றதால் தெரிய வில்லை அறியவும் முடியவில்லை.

மூக்குச் சிந்தியபடியே கண்களைத் துடைத்தபடி நான் நின்ற இடத்திற்கு இரு வரும் வந்து "சரி போவம்" என்றார். வழமைபோல "காமதேனு"வில் உண் டோம். வழமையாக மனமும் நிறையும் வயிறும் நிறையும் இடம் அது. அன்று வயிறு நிறைந்தது மனம் கனத்தது. வழமை போல படுக்கையை விரித்து அதிலி ருந்தும் படுத்தும் எனக்கும் அவருக்குமான உரையாடல் நீண்டுகொண்டே இருந்தது. "டேய்... இந்தச் சமாதானம்... ஒரு முரணி லைப்பட்டது.. சேர்க்கிறது.. பிரிக்கிறது. நினைக்க வைக்கிறது.. மறக்கவும் வைக் கப்போகிறது... இது வராமலே இருந்தி ருக்கலாம்" என்று திடீரெனச் சொல்லிவிட்டு பெருமூச்சொன்றை விட்டார்.

அன்று சொன்ன அந்தத் துண்டு வார்த்தைகளின் அர்த்தத்தை பகுதியாகவே விளங்கியிருக்கிறேன் என்பதை பின்னாட் களில் நிகழ்ந்த அத்தனையும் உறுதிப்படுத் துகின்றன. அன்றைய அவரது பயணமும் பின்னர் மட்டக்களப்பில் ஏற்பட்ட உயிரச் சுறுத்தலால் அவர் வன்னி வந்த போது நான் திருகோணமலைக்குப் போக வேண் டியதாகிப் போயிருந்ததால் சில ஆண்டுகள் தொடர்புகள் நேரடி உரையாடல்கள் செயற்பாடுகள் மிகக் குறைந்திருந்தன.

மட்டக்களப்பில் இவருக்கிருந்த உயிரச் சுறுத்தல் காரணமாக இவர் வன்னி திரும்பி யிருந்த காலத்தில் "சத்தியமூர்த்தி ஆபத் தானவன்"என்று என்னுடன் கதைத்த ஒருவர் நாடுமுழுவதும் சுற்றித்திரிந்தார். என்பது பற்றி சத்தியமூர்த்திக்கு பழைய அறிவுரையைப் பற்றி அப்போதான் முதன் முதலாக வாய் திறந்த போது "இவ்வளவு நாளும் பயப்பிடாம பழகியிருக்கிறாயடாப்பா நீ! துணிஞ்ச ஆள்தான்" என்று கூறிச் சிரித் தார்.

மட்டக்களப்பு கல்குடா கல்வித் திணைக்களத்தில் பணியேற்றிருந்த காலத் தில் எனக்கு மட்டக்களப்பைத் தெரியாது. "வீட்டாருடன் தானே இருக்கிறியள் வேலைக்கு என்னத்தில போய் வாறனி யள்?" என்றபோது "எனக்கு றூம் தான் ராசி வீடு கிட்டத்தட்ட 70km லும் கூடின தூரம். சனி ஞாயிறு தான் போறனான்" என்று சிரித்த சிரிப்பில் ஒரு ஏக்கத்தை உணர முடிந்தது.

மட்டக்களப்பில் இவரிருந்த காலந்தான் கிழக்கு குழப்பப்பட்டது. வீதிகளில் சடலங் கள் காணாமலாக்கப்படுதல் போன்றவை தாராளமான நாட்கள் அவை. அப்போது கூட சத்தியமூர்த்தி தனக்கான ஆபத்தை உண ராமல் தனது சக உத்தியோகத்தரான இஸ் லாமியப் பெண்மணி தான் அன்று காலை பணிக்கு வரும்போது வீதியில் ஒரு சடலத்தைக் கண்டதாகக் கூறி மிரண்டு போய் இருந்தபோது "நீர்! நீர் என்ன ஐசே ஒரு பொடிக்கு (body) உப்பிடி நடுங்கிறீர் நாங்கள் 1500 பொடீஸை (bodies) வரிசை யாக அடுக்கி வைச்சுப் பாத்தனாங்கள்" என்று முல்லைத்தீவு இராணுவ முகாம் தாக்குதலை நினைவுபடுத்தியிருக்கிறார். சில வாரங்களின் பின் சத்தியமூர்த்தியை தேடிப் போனவர்களுக்கு லிங்கேஸ்தான் அகப்பட்டிருக்கிறார். சுட்டுவிட்டு போய் விட்டார்கள். லிங்கேஸை கடைசிவரை நினைவில் வைத்துப் பேசியிருக்கிறார்.

அப்படித்தான் வாமக்காந்தின் நினை வுகளையும் கடைசிவரை பேசிக் கொண்டே



யிருந்தார். பிரிவுகளைப் பற்றிப் பேசி வருந்தியவர் தன் பிரிவால் பிறர் வலி சுமந்து கொள்வர் என்று ஏன் எண்ணாமல் போனாரோ தெரியவில்லை?. தானே போய் விட்டார். பிறர் துன்பம் கண்டு வருந்துவது இவரது இயல்பு. அவர்களது துன்பம் துடைப்பதுற்கு தன்னாலானதைச் செய்ய ஒரு போதும் பின்னிற்பதில்லை. தன்னால் பிறருக்கு எந்த இடையூறும் ஏற்படக் கூடாது என்பதில் அதீத கவனமெடுப்பது இவரது இயல்பு.

தெருவோரம் சோளம்பொத்தி விற்கும் சிறுவர் கச்சான் விற்போர் தொடர்பில் மிக மரியாதையும் அவர்களது வறுமை தொடர்பான இரக்கமும் இவருடனிருந்ததால் தனக்குத் தேவையில்லை என்றாலும் தவறாமல் வாங்குவதுடன் பேரம் பேசுவதோ மிச்சக் காசைக் கேட்டுப் பெறுவதோ கிடையாது. வாங்கியவற்றை வழியில் எதிர்ப்படும் நண்பர்களுக்கோ போராளிகளுக்கோ கொடுத்து விடுவார். உடையார் கட்டு முதல் வட்டக்கச்சி வரை மட்டும்தான் நான் செலவிடலாம். அதுவும் நானாக சண்டையிட்டு அவரிடம் பெற்ற அனுமதி தான். மற்றும்படி எமது பயணம் தங்கல் என எப்போதும் செலவுகளைத் தானே செய்வார்.

எப்போதும் பிறரை உபசரிக்கும் இவரது இயல்பு திருமணமான பின்னரும் தொடர்ந்தது என்பது இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டியது. புதுக்குடியிருப்பில் காமதேனுவில் கணக்கே இதற்காக வைத்திருந்தார். நான் சுதன் மயூரன் ஆகியோர் விசுவமடுவிலிருந்து அடிக்கடி புதுக்குடியிருப்பு செல்வது வழமை. இவருடனான சந்திப்பு காமதேனு விருந்துடன் தான் நிறையும். நான் பணி காரணமாக புதுக்குடியிருப்பில் இருந்த போதும் எனக்கான உபசரணையை நான் எவ்வளவு மறுத்தும் "உன்ர கத்தரிக்காய் சாப்பாடு எனக்குத் தெரியும். வா பேய்க் கதை கதையாதை" என்று இழுத்துப் போய்ச் செய்தவர்.

எனது திருமணம் சுரேசின் திருமணம் எல்லாமே மாப்பிள்ளை வீடாக தனது சிறிய வீட்டையே ஏற்பாடு செய்து முன்னின்று நடாத்திவைத்தவர். "உன்ர கதைச்ச கலியாணம் சுரேசின்ர பேசின கலியாணம் எல்லாமே! என்னவாயிருந்தாலும் மாப்பிள்ளை வீடு நான்தான்" என்று முன்னின்று செய்து வைத்தவர். அது மட்டுமல்ல எமது முதல் பிரசவங்களையும் திருச்செந்தியக்காவின் தனக்கான ஆலோசனையையும் தனது அனுபவத்தையும் அறிமுகங்களையும் கொண்டு வழிப்படுத்தியவர்.

உபசரிப்பு என்று வரும்போது எமது இறுதி ஒன்றுகூடலாக அமைந்த "அறிவியல் நகர் கூழ்ப்பாட்டி 2008" என்று இவரால் பெயர் சூட்டப்பட்ட கூழ்விருந்து குறிப்பிட்டேயாக வேண்டியதொன்று. ஏனெனில் அது புதுவையண்ணரின் அறுபதாம் அகவைக்காக விசேடமாக ஏற்படுத்தப்பட்டதொன்று. அப்போது வெளிச்சம் 100வது இதழ் வேலைகள் இடம்பெற்றுக்கொண்டிருந்தன.75வது இதழில் வேண்டாதவர்களாயிருந்த திருச்செந்திநாதன் அண்ணர் சத்தியமூர்த்தி ஆகியோர் தான் 100வது இதழைத் தோழ்களில் சுமந்து கொண்டிருந்தகாலம் அது. "எழு" இலக்கியப் பேரவை தனது முதலாவது உத்தியோக பூர்வ அமர்வை முடித்த மறுநாள் (20.02.1999) எமது பேரவை பற்றிக் கலை பண்பாட்டக் கழகத்தில் தெரியப்படுத்த சத்தியமூர்த்தி முல்லைக்கமல் மயிலை.தருமராசா மற்றும் நான் சென்று உரையாடிய போது "புதிசாய் ஒரு இயக்கமோ எண்டு யோசிச்சன்" என்று நக்கலாகச் சிரித்து "உங்களால உதை





தொடர்ந்து நடத்த ஏலுமோ" என்று கேட்ட புதுவையண்ணரின் 60 வது பிறந்த நாளுக்கான கூழ்ப்பாட்டி தான் அது.

நெருக்கடியான நேரம். சண்டை வீரச்சாவுகள் ஆட்சேர்ப்புக்கள் என வன்னி அதிர்ந்துகொண்டிருந்த காலம் அது. எனவே அறிவியல் நகர் சத்தியமூர்த்தி வீட்டிலேயே அமைதியாகச் செய்யத் தீர் மானித்தோம். கூழுக்கான பொருட்பட்டியலி லிருந்து கொள்வனவு வரை சத்தியமூர்த்தி சுரேசின் துணையுடன் முழுதையும் செய்தி ருந்தார். சமையல் ஜோசப் மாஸ்டரும் நானும். எல்லாக்குடும்பமும் (புதுவையண் ணரும் அவரது மனைவியும் திருச்செந்தி நாதன் அண்ணர் குடும்பம் ஜோசப் மாஸ்டர்- சுரேஸ்- இத்தாவில் சிவராசா அண்ணர்- எனது குடும்பம்) தனிநபர்களா யிருந்த சிலருமாக ஒன்றாயிருந்த அந்த நாள்தான் எல்லோருமாயிருந்து மகிழ்ந்த கடைசி நாள் என்று ஒருவருமே எண்ணியி ருக்கவில்லை.

அப்போது புதுவையண்ணர் "மூர்த்தி!..." என்று கூப்பிட்டு "எழு தொடங் கிப்போட்டு என்னட்டை வந்தனி! ஞாபகம் இருக்கோ! அப்ப நீ சொன்னது! அதைச் சாதிச்சுப் போட்டாயடா!" என்று உரத்துச் சிரித்த போது தான் சத்தியமூர்த்தி சொன் னதை நினைத்தோம். அது "அண்ணை தொடர்ந்து செய்வம். தடையள் அழுத்தங்க ளைத் தாண்டி நிமிருறது தான் வெற்றி. நம்பிக்கையிருக்கு. படைப்பாளியள் இருக்கி றாங்கள். செய்து காட்டுவம்." இது புதுவை யண்ணர் அப்போது எதிர்பாராத பதில். சத்தியமூர்த்தியின் இயல்பே இதுதான். இதனால் தான் சத்தியமூர்த்தி சிலருக்கு வேண்டாதவரானார்.

எதையும் வெளிப்படையாகப் பேசு வதும் கேட்பதும் இவரது பண்பு. வலிந்த ஆட்சேர்ப்பு சலசலப்பை ஏற்படுத்தியிருந்த நேரம். இவரது தமிழ்த் தொலைக்காட்சி வலையமைப்பிற்கான (ttn) நேர்காணல் நிகழ்ச்சி ஒளிப்பதிவாகிக்கொண்டிருந்தது. பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனை இவர் நேர்கண்டுகொண்டிருந்தார்.

போரிற்கான அரசியல்- ராணுவக் காரணிகள் அரசியல் நிலைவரம் என்று இவரது கேள்விகளும் தமிழ்ச்செல்வன் அண்ணரின் பதில்களு மாக நிகழ்ச்சி தொடர்ந்துகொண்டிருந்தது. அப்போது இவர் "தற்போதைய புதிய போரா ளிகள் இணைப்பு தொடர்பாக கடும் விமர் சனங்கள் உள்ளதே!" என்று கேள்வியை முடிக்கவில்லை ஒளிப்பதிவாளர்கள் கமராக் களை நிறுத்தி விட்டுத் திகைத்துப் போயி னர். தமிழ்ச்செல்வன் அண்ணரின் முகம் சிவந்து ஒளிப்பதிவாளர்களைக் கடும் வார்த் தைகளில் ஏசத்தொடங்கிவிட்டார். "நான் இந்த ஒரு கேள்வியை ஆர் கேப்பினம் எண்டு தவங்கிடக்கிறன். இன்டைக்குக் கதைக்கவேண்டிய முக்கிய பிரச்சனை இது. சத்தியமூர்த்தி ஒராள்தான் கேட்டிருக்கிறார். குழப்பிப் போட்டியளேடாப்பா" என்று கூறி சத்திய மூர்த்தியைப் பாராட்டியதோடு முழு மையாகக் கேள்வியைக் கேட்கச் செய்து விரிவான விளக்கத்தை அளித்திருந்தார்.

இது சத்தியமூர்த்தியின் துணிவை மட்டுமல்ல உரிய நேரத்தில் உரியதுக்கு முக்கியத்துவம் வழங்கவேண்டிய ஊடகவி யலாளனின் பொறுப்பையும் காட்டுவதற் கான ஒரு வகைமாதிரியே ஆகும். இப்படிப் பல சம்பவங்கள். ஒரு செய்தி ஒரு தகவல் மூலத்தை மட்டுமே நம்பி கூறியது கூறி அதற்கு வியாக்கியானம் செய்யும் வறுமை நிலை கண்டு கொதிப்பதுண்டு. மிக அண்மையில் (தற்போதைய நாளிதழ் வார இதழ்களில் இதுவே வழமை) அமரர் திருச்செந்திநாதன் அண்ணர் "சத்திய



மூர்த்தி இன்று வாழ்ந்திருந்தால் இரத்தக் கொதிப்பு வந்து அவதிப்பட்டு எடிட்டரோட சண்டை போட்டிருப்பன் என்று கூறியது உண்மைதான். "செய்தி எழுதும் போது தகவல் விளக்கம்- தெளிவு- பொறுப்புணர்வு கட்டாயம் வேணும்" என்று கூறும் சத்தியமூர்த்தி அவையனைத்தையும் முன்னிலைப்படுத்தி எழுதி முன்னுதாரண மாகயும் இருந்தவர்.

தனது திறமை, தனக்கிருந்த அறிமுகம் என்ற எதையுமே தனது தனிப்பட்ட நலனுக்கோ, தனது புகழுக்கு வலுவூட்டவோ ஒரு போதும் விரும்பியவரல்ல. அப்படி இருந்திருந்தால் இன்று உலகத்துக்கு வியாக்கியானம் சொல்லும் ஒருவராக இருந்திருக்கலாம். பிழைகளை மட்டுமல்ல சரிகளுக்குள்ளே கூட தரம் பிரித்து வெளிப்படுத்தும் இவரிடமிருந்த ஒரு பண்பு இன்று முளைவிட்டிருக்கிற மேதாவிகள் வரலாற்றை மே 2009ற்கு முன், பின் என கோடு பிரித்து தலையில் தூக்கி கரகமாடும் ஒரு அணியாயும் காலில் மிதித்து துப்பும் ஒரு அணியாயும் மாறி போட்டி போடும் சூழலில் சத்தியமூர்த்தி போன்ற ஒருவர் இருந்திருந்தால்? என்று அங்கலாய்க்க மட்டுமே முடிகிறது.

சத்தியமூர்த்தி இன்று இருந்திருந்தால் நிச்சயம் பலர் வாயடங்கி பேனாக்களை மறைத்து வைத்துக் கொண்டு இருந்திருப்பார்கள். சத்தியமூர்த்தி, அசோக்குமாரண்ணர் தனது வோக்கிக்கு இனி உதவாது என்று கழித்த மின்கலங்களை கடித்து வெயிலில் வாட்டி வானொலியை இயக்கியும், ஒருவாரம் கடந்து வரும் வார இதழ்களை வைத்தும் சாதித்தவற்றை, அதிலொரு பகுதியைத் தானும் செய்ய இயலாதிருந்தவர்களும் முயலாதிருந்தவர்களும் இன்று "அப்ப நாங்கள் எவ்வளவைச் செய்தம்" என்று எமக்கே கூறும் போது அச்சூழலே தெரியாதவர்களுக்கு எவ்வளவைக் கூறுவார்கள என்பதைநினைத்து அழுவதா? சிரிப்பதா??

சத்தியமூர்த்தி பற்றி எழுத அமரும் போது அவருடனான எனது நாட்களின் நினைவுகள் ஒவ்வொரு புறமாய் பல கோணங்களிலுமிருந்தும் கொப்பளிககிறன. எழுத முடியவில்லை. எதை எழுதுவது எதைத் தவிர்ப்பது? புலம்பெயர்ந்திருந்தால் சிலவேளை பலதையும் எழுதியிருப்பேனோ தெரியாது. மண்ணிலிருந்து உணர்வுகளை வெளிப்படுத்தும் வாய்ப்பு சிறு வெளிகூட இல்லை என்பது வலிக்கிறது. "காலத்தை உணர்ந்து பொறுப்போடதானராப்பா தகவலுகளை வெளிப்படுத்த வேணும்! அது தான் எழுத்து.. எடுத்தமாம் கவிட்டமா மெண்டு எழுதுறது போட்டுக் குடுப்பு" என்று சாமங்கடந்தும் நீண்ட உரையாடலில் கமல் வீட்டுத் திண்ணையில் படுத்தபடி சத்திய மூர்த்தி சொன்ன வார்த்தைகளின் பெறு மதியை இப்போ உணர்கிறேன். இன்னும் நிறையச் சொல்லியிருக்கலாம்.எழுத்தின் வழி எழுவின் இருப்பின் வழி நினைவுகளுடன் பேசிக் கொண்டே!





**நா.எழில்**



## மாமாவுக்கு ஓர் மடல்

மாமா....
மனது வலிக்கிறது உங்களுக்காக
இந்த சின்ன பெண் என்ன
பெரிதாக எழுதி விட முடியும்.

மாமா என்ற உறவுக்கு
அர்த்தம் தந்த புண்ணியவான்
மனிதம் என்ற மகத்துவத்தின்
விளக்கம் தந்த வித்தகன்.

உங்கள் பேச்சின் மென்மை கேட்டு
எதிரி கூட அடங்கிப் போனான்
உங்கள் முகத்தின் மலர்வு கண்டு
பூக்கள் கூட அதிசயிக்கும்.

ஒரு மனிதனுக்கான பண்புகளுக்கு
அறமுறை வகுத்து வாழ்ந்தவர்
வாழும் போதே புனிதராக வாழ
எப்படி முடிந்தது மாமா

உங்களை இழந்து இங்கு
வருடங்கள் பல
உருண்டோடிப்போயின
ஆனால் நினைவின் சுவடுதனில்
நீங்காமல் உங்கள் முகம்

காலங்கள் பல கிடக்கட்டும்
மாற்றங்கள் பல நிகழட்டும்
எது எவ்வாறு மாறினாலும்
எங்கள் மனதோடு
நீங்கள் என்றும் வாழ்வீர்கள் .



**ஆனந்தி**
**சகோதரி**



# எங்களின் நினைவில் அவன்...

இலங்கையின் வட மத்திய மாகாணம் பொலநறுவை மாவட்டத்தின் மன்னம்பிட்டி என்னும் தமிழ் கிராமத்தைச் சேர்ந்த கதிர்காமத்தம்பியினதும் வட மாகாணமாம் யாழ்ப்பாண மாவட்டத்தின் இணுவில் எனும் கிராமத்தைச் சேர்ந்த நல்லம்மா தம்பதியினரினதும், மன்னம்பிட்டியைச் சேர்ந்த சோமசூரியர் அமுதம் தம்பதியினரினதும் பேரன் ஆவார் புண்ணியமூர்த்தி சத்திய மூர்த்தி...

புண்ணியமூர்த்தி பற்குணமலர் தம்பதியினரின் மகனாவார் சத்தியமூர்த்தி. இவரின் உடன்பிறப்புகளாக சுசீலா, கணேசமூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி ஆகிய மூவரும் இருந்தனர்.

இவர் 1972ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி இணுவில் எனும் கிராமத்தில் பிறந்தார். வீட்டில் இவரை செல்லமாக கண்ணன் என்றே அழைப்பார்கள். சிறுபிராயத்தில் இருந்து மன்னம்பிட்டியையே வசிப்பிடமாக கொண்டார். ஆரம்பக் கல்வியை மன்னம்பிட்டி மகாவித்தியாலயத்தில் ஆரம்பித்து பின் பெற்றோரின் விருப்பப்படி மண்டைதீவுக்கு வந்து பேரன், பேர்த்தியுடன் வாழ்ந்தார். மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் தனது ஆரம்ப கல்வியைத் தொடர்ந்தார்.





சிறு வயது முதல் அதிக வாசிப்பு பழக்கத்தையும் எழுத்தாற்ற லையும் கொண்ட இவர் அப்பாடசாலையில் தலைசிறந்த மாணாக்கனாக விளங்கி அதிபர், ஆசிரியர்களின் பாராட்டுக்களையும், பல போட்டிகளில் வெற்றியையும் தனதாக்கிக் கொண்டார். பாடசாலையின் ஊக்குவிப்பு காரணமாக தரம் ஐந்து புலமைப் பரீட்சையில் அப்பாடசாலையில் அதி கூடிய புள்ளிகளை பெற்று, யாழ்.மாவட்டத்தில் உள்ள யாழ். இந்துக் கல்லூரியான இலங்கையின் தேசியப் பாடசாலைக்கு தெரிவானார்.

அவ்வேளையில் தமிழ், நாடகம், மற்றும் இதர கணிதப் போட்டிகளிலும் ஆர்வம் கொண்டு பங்குபற்றி வெற்றியையும் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்தார். தொடர்ந்து கல்விப் பொதுத் தரா தரப் பரீட்சையிலும் உயர் பெறுபேறுகளைப் பெற்று உயர் கல்வியையும் அங்கேயே தொடரலானார்.

உயர்கல்விக்காக அக்காலப் பகுதியில் வர்த்தக துறையைத் தேர்ந்தெடுத்து அத்துறையில் அதி கூடிய புள்ளிகளை பெற்று மாவட்டத்தின் முதலிடத்தை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்தார். 1990 இல் ஏற்பட்ட போரினால் மண்டைதீவை விட்டு பேரன் பேர்த்தியுடன் இணுவிலுக்கு வந்து கல்வி கற்று யாழ்.பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவத் துறைக்கு தெரிவானார்.

1995 இடம்பெயர்ந்து வன்னிக்குச் சென்றார். அங்கு எழுதுநர் போட்டிப் பரீட்சையில் முதலாவதாக தெரிவாகி வேலை செய்தார். முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற இடங்களில் எல்லாம் வாழ்ந்து... தனது விருப்பப்படி திருமண பந்தத்தில் ஈடுபட்டு அழகான பெண் குழந்தைக்கு தந்தையாகி போரின் காரணமாக 2009.02.12 அன்று எம்மை யெல்லாம் விட்டு சென்றாலும் அவரின் நினைவு என்றும் எம்மோடு......!



ஊடகவியலாளர்
உமா

# உன் குரல் ஒலித்துக்கொண்டே இருக்கும்



**வா**ழ்க்கை பயணத்தில் நாம் பல்வேறுபட்ட மனிதர்களை சந்திப்போம்,. அதில் பலரை மறந்து விடுவோம் . சிலரை நினைவில் வைத்திருப்போம் ஒருசிலரை எப்போதும் நினைவிற்கொள்வோம். ஏனெனில் அவர்கள் எமது பயணத்தில் உறுதுணையாக , வழிகாட்டிகளாக இருந்தார்கள் என்பதனால். அவர்களில் ஒருவர்தான் சத்தியமூர்த்தி அண்ணை.

எழுத்துப்பணிகளில் ஆர்வம் இருந்த எனக்கு "ஊடகப்பணி" ஆற்ற வேண்டும் என்ற விரும்பம் எப்போதும் இருந்து கொண்டே இருந்து . அதற்கு உரிய மிகச்சிறிய சந்தர்பங்கள் அவ்வப்போது கிடைத்தன. ஆனால் அது தொடர் பணியாக அமையவில்லை.

2002 ஆம் ஆண்டு ஈழநாதம் பத்திரிகையில் மு/புதுக்குடியிருப்பு சிறிசுப் பிரமணிய வித்தியாலையத்தில் "முறை சாரக்கல்விப்பிரிவின் ஊடாக ஊடகக் கல்வி" என ஒரு விளம்பரம் வெளியாகி இருந்தது.

அதில் இணைந்து கற்பதற்கு என் பணி நேரத்தில் சாத்தியம் ஆகுமா? என்ற கேள்வி என்னை வருட வைத்தது. எதற்கும் முயன்று பார்ப்போம் என எண்ணியபடி எனது மேலாளர் பாமினி அக்காவிடம் அனுமதி வேண்டி நின்றேன்.

"நீ வகுப்பிற்கும் போகும் வேளை அந்த இடத்தை நிரப்ப மற்றவர் உதவுவார் கள் ஆயின் செல்" என்றார். என் சக தோழி களான அகநிலாக்கா, கிருசாந்தி எனக்கு தோளோடு தோள் கொடுத்தார்கள்.





நேர்முகத்தேர்விற்கு சென்றேன். அங்கு புன்னகை முகத்துடன் ஒரு அண்ணை என்னை "வாங்கோ வாங்கோ" என வரவேற்றார். யார் இவர்? தமிழ்ச்செல்வன் அண்ணையைப் போல சிரித்துக்கொண்டே இருக்கிறார் என எண்ணிய படி நேர்முக தேர்வை எதிர்கொண்டேன்.

பின்னர்தான் இவர் பு. சத்தியமூர்த்தி என தெரிந்து கொண்டேன். வகுப்புக் காலங்களில் அடிக்கடி எம்மை வழிபடுத் திய ஒருவராக சத்தியமூர்த்தி அண்ணை இருந்தார்.

"பூராயம்" என்னும் சஞ்சிகை உரு வாக்கத்திற்கு வழி அமைத்து தந்தார். அக்காலப்பகுதியில் ஊடகக் கல்விசார்ந்த அடிப்படை விடயங்களை மட்டுமல்ல பல அனுபவங்களையும் நல்ல நட்புகளை யும் பெற்றுக்கொண்டேன்.

மீண்டும் 2004 ஆம் ஆண்டு ஊடக அறிவியல் கல்லூரிக்கு மாணவர்கள் இணைந்துக் கொள்ளும் நடவடிக்கை யினை அறிந்து. அதில் இணைவதற்கு பணி இடத்தில் அனுமதி வேண்டி நின்றேன்.

நேர்முக தேர்வு நடை பெறும் நாளி லேயே அனுமதி கிடைக்கபெற்றேன். கிளி நொச்சி பாடசாலை ஒன்றில் நேர்முக தேர்வு நடைபெற்றுக்கொண்டிருந்தது. நான் புதுக்குடிருப்பில் இருந்து எனது தோழியுடன் உந்துருளியில் சென்றேன்.

நான் முன்பு விபத்திற்கு உள்ளாகி இருந்தமையால் காலுக்கு பீ.ஒ.பி போடபட் டிருந்தது. நேர்முக தேர்விற்கு உள்ளே செல்வதற்கு என்தோழி என்னை தூக்கி சென்று கொண்டிருக்க தேர்வுகளுக்கான நேரம் முடிவுற்று சத்தியமூர்த்தி அண் ணை யும் , ராதேயன் அண்ணையும் வெளியில் வந்து கொண்டிருந்தார்கள் . அவர்கள் முன் உடனே தோழி என்னை இறக்கி விட்டார்.

"இயலாத நிலையில் ஏன் நீங்கள் வரவேண்டும்?" உங்களுக்கு முன் உரிமை உள்ளது . நிச்சயம் அனுமதி கிடைக்கும் எனக் கூறி வழியனுப்பி வைத்தார் சத்தியமூர்த்தி அண்ணை.

பின்னர் நிமல் அண்ணையின் உதவியால் நானும் அகநிலாக்காவும் ஊடக அறிவியல் கல்லூரியில் கற்கும் அனுமதி பெற்றோம்.

சத்தியமூர்த்தி அண்ணை அவரின் பெயர் போலவே சத்தியமாய் வாழ்ந்தார். ஊடக பணிசார்ந்த அச்சு ஊடகம், இலத்தி ரனியல் ஊடகம் என பலவற்றிலும் நேர்த்தி யாக பணியாற்றினார். அதற்கு அவரது தேடலே காரணமாக இருந்தது. அறிவு வளங்கள் குறைவான யுத்த பிரதேசத்தில் இருந்த வேளையிலும் கூட இவரது தேடல் அளப்பெரியது. அவரது வாழ்க்கை எமக் கோர் பாடம். இன்று இணையம் தேடலை இலகுவாக்கி தந்த போதும் நாம் புதிய விடயங்களை அறிய ஆர்வம் இருந்தும் ஆர்வம் இல்லாதவர் போல செயற்படுகின்றோம்..

தேசிய ,சர்வதேசிய அரசியல்களை அறிவதில் மட்டுமல்ல, அதை விவாதிப்பது, கருத்துகளை இலக்கிய வடிவில் விதைப் பது புதிய சொற்களை பயன்படுத்து வது போன்றவற்றில் சத்திய மூர்த்தி அண்ணை ஒரு தனி ரகம். "அபத்தம்" என்ற சொல்லா டலை முதன் முதலில் சத்திய மூர்த்தி அண்ணையின் சொல்லாடலில் இருந்தே கண்டு கொண்டேன்.

சத்தியமூர்த்தி அண்ணை சாவைத் தழுவுதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு தேவிபுர பகுதியில் சந்தித்து கதைத்தேன்.

இறுதி மூச்சு அடங்கும் வரை களத்து நிலவரங்களை சர்வதேசத்திற்கு உரக்க கூறிக்கொண்டிருந்தார். அவரது குரல் அண்ட பிரபஞ்சம் எங்கும் ஒலித்துக்கொண்டே இருக்கும்.



**க.ஆதித்தன்**
(யாழ் இந்துவின் மைந்தன்)
பொறுப்பாளர்
ஊடகமையம், பிரான்சு.



# யாழ்.இந்துவின் விழுது சத்தியமூர்த்தி....!

தமிழீழ விடுதலைப்போராட்டம் முகிழத் தொடங்கிய காலமது. தமிழ் இளைஞர்கள் மத்தியில் அங்கொன்றும் இங்கொன்றுமாக மனதில் விடுதலைத்தீ சுடர் விட்டு எரியத்தொடங்கியது.பல வீரத்தளபதிகளைக் கொடுத்த யாழ் இந்துவின் மைந்தனே நாட்டுப்பற்றாளர் புண்ணியமூர்த்தி சத்திய மூர்த்தியும் ஆவான். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் காத்திரமான பங்களிப்பை வகிக்கும் யாழ். இந்து வின் மைந்தர்கள் என்ற வகையில் இவ்வரலாற்று நாயகர்கள் பெருமைக்குரியவர்களே.

1972 இல் பிறந்து மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியைத் தொடங்கி, யாழ்.இந்துக் கல்லூரியில் உயர்தரக்கல்வியை முடித்து, யாழ்.பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ கல்வியுடன் பட்டப்படிப்பில் அரசியலை ஒரு பாடமாக படித்துக்கொண்டிருந்தான் சத்திய மூர்த்தி. சத்தியமூர்த்தியின் இளைய சகோதரன் விடுதலைப் போராட்டத்தில் இணைந்து 1995 இல் கப்டன் சிந்து ஜனாக விதையானான்.சகோதரனின் நினைவாகவே தனது ஒரே மகளுக்கும் சிந்து என்று பெய ரும் சூட்டினான்.

1995இல் யாழ். இடப்பெயர்வின் பின்னர் வன்னியில் எதிரியானவனின் எறிகணைத் தாக்குதலில் சாவடையும்வரை அவனது படைப்புக்கள் ஏராளம். தாயகத் தில்





ஈழநாடு, ஈழநாதம், ஆதாரம் சஞ்சிகை, புலம்பெயர் தளத்தில் ரிரிஎன் தமிழ் ஒளி மற்றும் பிரான்சில் இருந்து வெளிவரும் ஈழ முரசிலும் தனது எழுத்துக்களை பல புனை பெயர்களிலும் சொந்தப்பெயரிலும் மிகவும் காத்திரமாக எழுதினான்.

கிளிநொச்சியிலிருந்து ஊடகஇல்லத்தின் ஊடாக ஐரோப்பாவில் எமக்கான செய்திகள் மற்றும் பத்திகளை பெற்றுக் கொண்டிருந்த காலத்தில், வாராவாரம் தொடர்பிலிருந்த சத்தியமூர்த்தியை நான் ஒருபோதும் முகம் பார்க்கமுடியவில்லை. அவரும் அப்படியே தொடர்பிலிருந்தார். ஒரு கட்டத்தில் ஊடகஇல்லத்தின் பொறுப்பாளருடன் உரையாடிக்கொண்டிருந்தபோது உங்களுடன் யாழ். இந்துவில் படித்தவர் தான் சத்தியமூர்த்தி என்றதும் அன்றிலிருந்து அவனுடனான உறவில் புதிய மாற்றம் ஒன்று என்னுள் எழுந்தமையை உணர்ந்து கொண்டேன். எமக்கான தொடர் புகள் இறுக்கமானது. ஈழமுரசு பத்திரிகையில் வரும் பத்திகள் தொடர்பாகவும் அடிக்கடி பேசிக்கொள்வோம். 2008 இறுதி வரை பிரான்சில் வெளியான ஈழமுரசின் அனைத்துப் பதிப்புக்களும் உடனுக்குடன் கிளிநொச்சிக்கு கிடைக்கச் செய்திருந்தோம். யுத்தம் இறுக்கமான நேரத்திலும் பத்திரிகைகள் அங்கு பார்க்கப் பட்டு அதற்கான கருத்துக்களையும் சத்திய மூர்த்தி பதிந்திருக்கத் தவறவில்லை.

போர்க்காலத்தில் ஓர் ஊடகன் எப் படியெல்லாம் தனக்கான ஆபத்துக்கள் வரும் என்று தெரிந்த நிலையிலும், அவன் தனக்கே உரித்தான துணிச்சலுடன் இறுதிக் காலத்தில் பணியாற்றியிருந்தான். தினமும் சாவுகள், இடப்பெயர்வுகள், குண்டுவீச்சுகள் என்று அனைத்துவிதமான தாக்குதல்களிலும் நிராயுதபாணியாக எவ்வித தடுப்புக்களும் இன்றி அவன் பயணித்திருந்தான். தினமும் சாவை அவன் நிச்சயம் எதிர்கொண்டிருப்பான்.தமிழ் மக்களின் பாதுகாப்பிற்காகவும், தற்பாதுகாப்புக்காகவும் ஆயுதம் ஏந்தியவர்களாகப் போராளிகள் நின்றிருக்க, மூர்க்கத்தனமான தாக்குதல்களுடன் சிங்கள அரசு தமிழர் நிலங்களை விழுங்கியவாறு முன்னேறியவேளை, தமிழர்களின் அவலச்சாவுகளையும் அவர்களின் கண்ணீர் ஓலங்களையும் பட்ட துன்பங்களையும் அவன் குண்டுமழைக் குள் இருந்து பதிவுசெய்தான். அவனுடைய போர்க்கால பதிவுகள் முக்கியமானவை. அவை இன்றும் எமது தேசியப் பயணத் திற்குப் பொருத்தமானவையாக அமைந் துள்ளன.

இப்படியானதொரு கட்டத்தில்தான் அவனுடைய இழப்புச்செய்தியை ஊடக இல்லம் எமக்கு அறிவிக்கின்றது. 12.02.2009 அன்று காலை வேளையில் வந்த செய்தி எம்மை புரட்டிப்போட்டது. எம்மால் நம்பவே முடியவில்லை. களத்தில் இருந்து நித்தம் தொடர்பிலிருந்தவனின் இழப்பு எம்மைத் துயரில் தள்ளியது. பரபரப் பாக நீ தரும் செய்திகளை வழங்கிக் கொண்டிருந்த நாம். அன்றைய தினம் உனது இழப் பையும் செய்தியாக்க வேண்டிய நிலைக் குள்ளானோம். ஊடகப் போரா ளியே உனது இழப்பு ஈடுசெய்ய முடியாததே. இருப்பினும் நீ விட்டுச்சென்ற பணியை நாம் தொடர்வோம் என உறுதி எடுத்துக்கொள் கின்றோம்!



ஊடகவியலாளர்
**பரா பிரபா**



# ஊடகவியலாளர் சத்தியமூர்த்தியின் நினைவு

**ஒரு** ஊடகவியலாளன் தனது பணியை வெறுக்கும்அல்லது நொந்து கொள்ளும் சந்தர்ப்பங்களில் ஒன்று, இணைந்து பணியாற்றும்சக ஊடகவிய லாளன் ஒருவரது இழப்பைபற்றி செய்தி எழுதுவது, அல்லதுஇலத்திரனியல் ஊடகங் கள் வாயிலாகச்சொல்வதாகும்.

இவ்வாறான கொடுமையான சந் தர்ப்பங்களை கடந்த 15 ஆண்டுகள்ஊடகப் பணியில் பல தடவை சந்திக்கநேர்ந்தமை இந்தத் துறையில் இருந்துஒதுங்கி விடு வோம் என்றுஎண்ணியபோதிலும், இதே இழப்புக்கள்தான் இன்னும் செய்ய வேண் டும் என்ற ஓர்மத்தையும் தக்கவைத்துக் கொண்டிருகின்றன.

மயில்வாகனம் நிமலராஜன், நாட்டுப் பற்றாளர் ஐயாத்துரை நடேசன்(ஜி.நெல்லை நடேசன்), மாமனிதர் தர்மரட்ணம் சிவராம் (தராகி) வரிசையில் நாட்டுப்பற்றாளர் புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தியின் இழப்பு பற்றிய செய்தியையும் எமது உறவுக ளுக்கு அறிவிக்க நேர்ந்த காலகட்டம் மிகவும் இக்கட்டானது.

முன்னயை ஊடகயவிலாளர்கள் போன்றுநாட்டுப்பற்றாளர் சத்தியமூர்த்தியும் மிகஇக்கட்டான காலகட்டத்தில் மக்களு டன் நின்று மக்களிற்காகப் பணியாற்றியவர். அதுவும் இறுதிப்போரை சிறீலங்கா அர சாங்கம் வன்னிமீது தொடுத்த நிலையில்





இடம்பெயர்ந்தவாறே தனது ஊடகப் பணியைத் தொடர்ந்தவர்.

2009ஆம் ஆண்டு இதே நாளில் (பெப்ரவரி12) அவர் முல்லைத்தீவு தேவிபுரத்தில் குடும்பத்துடன் இடம்பெயர்ந்து தங்கியிருந்தபோது சிறிலங் காப்டையினர் வீசிய எறிகணை அவரதுஉயிரைப் பலியெடுத்தது.

இதில் கொடுமை என்னவென்றால், தனது தந்தை சாவைத்தழுவிக் கொண்டதைக் கூட அறியாத அவரது இரண்டரை அகவை மகள் அவரது உடலத்தின் அருகில் இருந்து அப்பா, அப்பா என தட்டியெழுப்பிக் கொண்டிருந்தது.

1990 களில் தனது ஊடகப் பணியை ஆரம்பித்து தமிழ் மக்களிற்குப் பணியாற்றிய இந்தஊடகன், மக்களிற்கு நன்றாக விளங்கும் வகையிலும், இயல்பான மொழிநடையிலும் தனது ஆய்வுகள் முன்வைப்பது மிகவும் வரவேற்பைப்பெற்றிருந்தது.

ஊடக அடக்குமுறை உச்சக்கட்டத்தில் இருந்து, ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் வன்னி செல்ல அனுமதி மறுக்கப்பட்டிருந்த காலத்தில், வன்னிக்கு வெளியே இருந்த ஊடகவியலாளர்கள் உயிரச்சுறுத்தல் காரணமாக உண்மையைச் சொல்ல முடியாது தவித்தபோது, உள்ளே இருந்து மக்களின் அவலங்களை உலகறியச் செய்தது மட்டுமன்றி, போர் முறைகள் பற்றி நன்கு அறிந்திருந்தகாரணத்தினால் அதன் போக்கு பற்றியும்பக்குவமாய் எடுத்துக் கூறியவர்.

இவரது இழப்பின்போது வழமை போன்று அறிக்கை வெளியிட்டிருந்த பிரான்சின் எல்லைகளற்ற ஊடயகவிலாளர் அமைப்பும், கொழும்பின் தமிழ், சிங்கள, ஆங்கில ஊடக அமைப்புக்களும் இன்று வரை தொடரும் ஊடகங்கள், ஊடகவியலாளர்கள் மீதான அடக்கு முறைகளை தடுத்த நிறுத்த உரிய நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்பதுதான் யதார்த்தம்.

நாட்டுப்பற்றாளர் புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி அவர்களை நாம் இழந்தது தமிழ் ஊடகத்துக்கு பேரிழப்பாகும்.அவர் விட்டுச் சென்றபணியையும் வெற்றிடத்தையும் எமக்கு உணர்த்தும் என நம்புகின்றேன்.



சிவப்பிரகாசம் றாஜ்

# நாட்டுப்பற்றோடு இயங்கி மறைந்திருக்கிறார் சத்தியமூர்த்தி



பத்திரிகைப் பணியிலே என் முதல் நாளில் இருந்து ஊக்கப்படுத்தியவர். என் ஒவ்வொரு கட்டுரைகளையும் வாசித்து அதில் திருத்தங்கள் செய்து மேலதிக விபரங்கள் தந்து எழுதக் கற்றுத்தந்தவர்.

தனக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் எனக்கும் இடம் தந்து தன்னைப் போலவே இராணுவ/அரசியல் விடயங்களை எழுத விட்டு தட்டிக் கொடுத்தவர். விடுதலை மூச்சும் தடம்மாறா மனப்போக்கும் தன்னகத்தே கொண்ட உணர்வாளர்.

என்னைக் கவனம் கவனம் என்று சொல்லி வற்புறுத்தியவர் தன்னைக் கவனத்தில் கொள்ளாமல் நாட்டுப்பற்றோடு இயங்கி மறைந்திருக்கிறார்.



# தமிழ் ஊடகத்துறைக்கு ஒரு பேரிழப்பு

*சத்தியமூர்த்தியின் இழப்புக் குறித்து*

**ஈழமுரசு**



**கு**ண்டு மழைக்கு மத்தியில் நின்று கொண்டு உலகிற்கு உண்மைகளை எடுத்துக் கூறிவந்த ஊடகவியலாளர் சத்திய மூர்த்தி அவர்களின் சாவு எங்களுக்கு பெரும் வேதனையை அளித்துள்ளது என ஈழமுரசு இதழ் வெளியிட்டுள்ள அஞ்சலி அறிக்கையில் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக ஈழமுரசு வெளியிட் டுள்ள அறிக்கை வருமாறு.

குண்டு மழைக்கு மத்தியில் நின்று கொண்டு உல கிற்கு உண்மை களை எடுத்துக் கூறிவந்த ஊடகவியலாளர் சத்திய மூர்த்தி அவர்களின் சாவு எங்களுக்கு பெரும் வேதனையை அளித்துள்ளது.

சாவிற்குள் வாழ்ந்துகொண்டு தாயக மண்ணில் நடக்கின்ற நிகழ்வுகளை மிகவும் திறமையாக எடுத்துக்கூறியும், எழுதியும் புலம்பெயர்ந்து வாழுகின்ற மக்கள் மனங்களில் தனக்கென ஒரு இடத் தைப் பிடித்துக்கொண்டவர் சத்தியமூர்த்தி.

புலம் பெயர் மக்களால் நன்கு அறியப் பட்ட இவர், தொலைக்காட்சிகள், வானொலிகள், நாளேடுகள் மற்றும் இணையத் தளங்களில் இவரது அரசியல் ஆய்வுகள் இடம்பெற்றுள்ளன.

குறிப்பாக தமிழீழ தேசியத் தொலைக் காட்சியில் இடம்பெற்று வந்த நிலவரம், அரசியல் ஆய்வு நிகழ்ச்சி மற்றும் அரசியல் ஆய்வுப் பத்திகள், தாயக நிலவரம், வாராந்த அரசியல் கண்ணோட்டம் போன்றவற்றில் இடம்பெற்ற இவரது ஆய்வுகள் தர்க்க ரீதியாக ஏற்றுக்கொள்ளத் தக்க வகையிலும், அனைவராலும் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் மிகவும் எளிமையாக இருந்த இவரது எழுத்துக்களும், கருத்துக்களும் உலகத் தமிழ் மக்களால் அதிகளவில்

இவரது ஆய்வுகள் விருப்புடன் வரவேற்கப் பட்டதற்கு காரணமாக அமைந்திருந்ததை இங்கு சுட்டிக்காட்டலாம்.

ஈழமுரசிற்கும் இவருக்கும் இடையிலான தொடர்பு மிகவும் காத்திரமானது. ஈழ முரசுக்கு தனது ஆய்வுகளை மட்டுமல்ல ஆலோசனைகளையும் வழங்கி அதன் வளர்ச்சிக்கு பக்க பலமாக நின்றவர். குறிப்பாக ஈழமுரசில் வருகின்ற மகிந்த சிந்தனைப் படுகொலை என்ற பக்கத்தின் வருகையை இவர் பாராட்டியதுடன், அதன் கனதியும் எதிர்காலத்தில் அதன் தாக்கம் எவ்வாறு இருக்கும் என்பதையும் தனது ஈழ முரசிற்கான வாழ்த்துரையின் போது எடுத்துக் கூறியிருந்தார்.

மகிந்த சிந்தனைப் படுகொலைகளை ஆவணப்படுத்துவதற்கும் இதனை வேற்று மொழிகளில் மொழிபெயர்த்து உலக நாடுகளின் பார்வைக்கு வைப்பதற்கும் இந்தப் பக்கம் எத்தனை தூரம் அவசிய மானது என்பதை தனது வாழ்த்துரையின்போது மிகவும் தெளிவாக எடுத்துக்கூறியிருந்தவர். ஆனால், அதே மகிந்த சிந்தனைப் படு கொலைக்குள் சத்தியமூர்த்தி அவர்களும் உள்ளடக்கப்படுவார் என்று நாம் சற்றும்கூட எதிர்பார்க்கவில்லை.

இளம் வயதிலேயே மிகவும் சிறந்த ஒரு உடகவியலாளராக பரிணமித்து வந்த இவர், நீண்ட காலம் எங்கள் மண்ணில் வாழ்ந்து தமிழ் ஊடகத்துறைக்கு ஒரு பாரிய பங்களிப்பை வழங்குவார் என எதிர்பார்த் திருந்த நிலையில், சிறிலங்கா அரசின் கொடூர இனப்படு கொலைக்குள் ஏற்கனவே பல ஊடகவியலாளர்களை இழந்திருந்த தமிழினம், இப்போது இன்னொரு சிறந்த ஊடகவியலாளரையும் இழந்திருக்கின்றது.

இவரது இழப்பு இவர் பணியாற்றிய ஊடக இல்லத்திற்கு மட்டுமல்ல, தமிழ் ஊட கத்துறைக்கே பெரும் இழப்பு.

●





**நேரு குணரட்ணம்**
கனடா



# ஒடுக்கப்பட்ட மக்களின் ஊடகத்துறையும் – சத்தியமூர்த்தியும்

ஒடுக்கப்பட்ட மக்களின் உயிராயுதங்களில் ஒன்று தான் ஊடகத்துறை. மக்களை வழிப்படுத்துவதற்கும் விழிப்புடன் வைத்திருப்பதற்கும் அவர்கள் சார்ந்த ஊடகத்துறை பெரும்பங்கு வகிக்கிறது. இங்கு அது சார்ந்தவர்களிடம் கடும் உழைப்பு இருந்தாக வேண்டும். எழுத்துக்களில் உண்மையும் சத்தியமும் அவர்களின் பேனா முனையாக இருக்க வேண்டும். மக்களின் வலிகள் சர்வதேசத்தை சென்றடைவதற்கு அவர்கள் பாலமாக அமைய வேண்டும். இம்முயற்சி என்பது மரணத்தின் விழிம்பில் இருந்து பயணிக்கும் சவால் நிறைந்த பணி. இப் பணியை இதயசுத்தியுடன் ஏற்றுப் பயணித்து மரணத்தை ஒரு கொடூர படுகொலையினூடாக 2009 இறுதிக்கட்டப் போரில் தேவிபுரத்தில் அணைத்துக் கொண்டவர் தான் சகோதரர் புண்ணியமூர்த்தி சத்திய மூர்த்தி.

அப்போது அவரது 36 வயதில் தனது மனைவி, இரண்டரைவயது மழலை மகள் என எதுவும் அவர் பணியை நிறுத்திவிடவில்லை. மரணத்தை கையில் பிடித்துக் கொண்டு அபலைகளாக கதறி அலையும் மக்களுடன் தானும் வாழ்ந்து அவர் பேரவலங்களை நேரடிச் சாட்சியாக சர்வ உலகின் முன்வைக்கும் பணியை அந்த முள்ளிவாய்க்கால் வரை அயராது செயலாற்றி ஈற்றில் அம்முயற்சியில் தன்னை ஆட்டிலறியின் ஆட்பசிக்கு இரையாக்கிக் கொண்டார். நாளும் பிய்த்து எறியப்படும்



மக்கள் மருத்துவ வசதிகள் மறுக்கப்பட்டு எவ்வாறு கொடூரமாக அவலச்சாவிற்கு உள்ளாகின்றார்கள் எனப் பதிவு செய்தவர் தானும் அதே மருத்துவ உதவியின்றி சாவினை அணைத்துக் கொண்டார்.

உலகப் பரப்பில் ஒடுக்கப்பட் மக்களின் பேரவலங்களை உலக்கிற்கு சொல்வதற் காக துணிச்சலுடன் பயணித்து மரணித்துப் போன வணக்கத்திற்குரிய ஊடகர்களில் ஒருவராக சகோதரர் சத்தியமூர்த்தி நீங்கா நிலைபெற்றுவிட்டார். அதேவேளை ஊட கத்துறையும் அதன் வளர்ச்சியும் அதன் மக் கள் சார்ந்த அர்ப்பணிப்பும் ஈழத் தமி ழினம் சார்ந்து எவ்வளவு முக்கிய மானது என்பது வும் சத்தியமூர்த்தி ஈழத் தமிழினத் திற்கு கற்றுத்தரும் பாடங்களில் ஒன்று. அதை இன்றைய இளைய தமிழர் சமூகம் கருத் தில் கொள்ள வைப்பதுவும் அதை நோக்கிய அவர்கள் முன்னெடுப்புகளை ஊக்கப்படுத்தி அணுசரனையாக திகழ்வதுவும் தமிழினத் திற்கு சத்தியமூர்த்தி சார்ந்திருக்கின்ற பெரும் பணி என்பதையும் இங்கு வலியுறுத் தியாக வேண்டும். ●

"...Covering a war means going into places torn by chaos, destruction, death and pain, and trying to bear witness to that. I care about the experience of those most directly affected by war, those asked to fight and those who are just trying to survive. Going to these places, finding out what is happening, is the only way to get at the truth. Despite all the videos you see on television, what's on the ground has remained remarkably the same for the past 100 years. Craters. Burnt houses. Women weeping for sons and daughters. Suffering. In my profession, there is no chance of unemployment. The real difficulty is having enough faith in humanity to believe that someone will care."

- Marie Colvin, A British journalist blinded in one eye by shrapnel while covering the Sri Lanka war front.





**செந்தமிழினி பிரபாகரன்**
கனேடியத் தமிழ் வானொலி, கனடா.



# வரலாற்றில் நிலைத்து நிற்கும் ஊடகவியலாளர் பு.சத்தியமூர்த்தி

**"மாமா** இது யார் தெரியுமா?" இந்தக் குரல் ஜெனிவாவின் வாசலில் ஒலித்ததைப் பற்றி பெரும்பாலான தமிழர்களுக்கு தெரி யாது....

"நான் தான் அப்பா இறந்தபொழுது அப் பாவைக் கொஞ்சிக் கொண்டிருக்கிறன்" சிந்து குட்டி சொன்ன பொழுது ஜெனிவா முன்றலில் ஆவணப் படங்களை கூடாரம் கட்டி ஆதாரம் காட்டும் பணியில் அயராது ஈடுபட்டு வரும் கஜன் கண்கலங்கினார். உடனே ஓடிச்சென்று ஆவணப் படங்களை ஒன்று சேர்த்து வெளியிட்ட புகைப்படத் தொகுப்பு நூலை எடுத்து காட்டிய போது சிந்து குட்டி மீண்டும் " இஞ்ச இருக்கிறேன் அப்பாவோடு" என்றாள். அவளைக் கட்டிய ணைத்த படியே கஜன் என்னிடம் "அக்கா இது ஒரு வரலாறு இதைப் பதிவாக்குங்கள்" என்றார்.

நானோ ஊடகவியலாளரும் நாட்டுப் பற்றாளருமான சத்தியமூர்த்தி அண்ணா வின் இறுதி சடங்கு படத்தை வெறித்தபடி என்னை இழந்து கரைந்து கொண்டு இருந்தேன்...

சத்தியமூர்த்தி என்ற ஊடகருடன் தொலைபேசியில் பேசிய அந்த நினைவு கள் நெஞ்சில் இறுக்கத்தை உருவாக்கியது. இறுதிக் கணம் வரை மரணத்திற்கு அஞ்சாத அந்த ஊடகவியலாளன் புகைப்படத்தில் மட்டுமல்ல வரலாற்றிலும் நிலைத்து நிற்பதோடு என்னை போன்றவர்கள் எழுத்துக் களையும் வடம் இழுக்கின்றான்....

விழிகளை துடைத்து விட்டு சிந்து குட்டியை இறுக்க கட்டி அணைத்து முத்தம் கொடுத் தேன். சத்தியமூர்த்தி அவர்கள் அவளில் உயிரையே வைத்திருந்தார். அவரின் தேவதை அவள்... இன்று எங்கள் இனத்தின் தேவதைகளில் ஒருத்தியாக.... ஒரு எழுத்தாளனுக்கு மரணம் இல்லை. அவனின் எழுத்துக்கள் இதோ....என்போன்றோர் எழுத்துக்களூடாக உலக வலம் வரும். வீழ்கின்ற விதைகள் நாளைய விதிகளுக்கான விருட்சங்களை சுமக்கின்றன. நாட்டுப்பற்றளர் சத்தியமூர்த்தியின் நிளைவுகள் அந்த பொழுதில் மனதுள் பீறிடும் உறுதியின் செறிவை வலுவாக உணர்ந்தேன்.



**சக்தி பரமலிங்கம்**
கனடா.



## "அம்மணி! ஆறுகள் என்றும் பின்னோக்கி பாய்வதில்லை"

**கா**ற்றுள்ளவரை ஒலித்துக்கொண்டிருக்கும்- உங்கள் குரல்.

பன்முக திறமை கொண்ட அவனை காலம் கட்டாயமாக கவர்ந்திழுத்து சென்று விட்டது...

அவன் பிரிவு காயமாக வலிக்க...

அவனுடன் பழகிய நாட்களில் நனைகிறோம்...

உங்கள் நினைவுகளுடன் உங்கள் வழி தொடர்ந்து சில நிமிடங்கள்...

கடந்த 20+ ஆண்டுகளுக்கு மேலாக ஒரு தமிழ் தேசிய ஊடகவியலாளராக பயணிக்கும் பாதையில் பல கலைஞர்களை சந்தித்தவள்.

பொதுவாகவே இந்த கலை உலக அனுபவ அறிவில் ஒரு கலைஞரை இன்னும் ஒரு கலைஞர் வாழ்த்துவதோ அல்லது அவர்களின் பணிகளை ஊக்கப்படுத்தி வளர்வதற்கான வாய்ப்புக்களை வழங்குவதையோ மிக அரிதாகவே காணக் கூடியதாக இருந்தது. இன்னும் இருக்கின் றது.

எப்படி ஒரு கலைஞரை மற்றையவர் இழுத்து வீத்துவது அல்லது அவரை இல்லாமல் செய்வது என்பது தான் இந்த பயணத்தில் நான் அதிகம் எதிர்கொண்ட சவாலாக இருந்தது. எதிரிகளை விட கூட இருந்து குழி பறித்தவர்களே அதிகம். இந்த சவால்களை முறியடிக்க எனக்கு என்றுமே உண்மை





யும் உழைப்பும் அர்ப்பணிப்புமே பலமாக இருந்தது.

"உலகத்தில் அநீதி கண்டு கோபமும் வெறுப்பும் கொண்டு நீ குமுறி எழுவாயா னால் நீயும் நானும் தோழர்கள்" -

சே குவரா-

கலை உலகம் இந்த வசனம் பேசும். ஆனால் கண்டுக்கொள்ளாது. அங்கே தத் தமது இருப்புக்களை எப்பாடு பட்டாவது தக்க வைக்க அது போட்டிபோடும் போட்டுக் கொடுக்கும் அல்லது காட்டியும் கொடுக்கும்.

சரி விடயத்துக்கு வருவோம்

எனது ஊடக பயணம் ஆரம்பிக்கும் நேரம் தாயகத்தில் போர் மிக உக்கிரமாக நடைபெறும் காலம் . அதுவே எனது இந்த பயணத்திற்க்கும் அடித்தளம் .

அதை நன்கு அறிந்த "கலைஞன்" சினிமா மட்டுமே எனக்கு என கட்டளை இடுகின்றார்(ன்).

ஆண்டுகள் போயின ..
காலம் வலியது..
காட்சிகள் மாறின...

அரசியல் செய்யவேண்டிய களங்கள் வெற்றிடமாக தாயக தேசிய அரசியல் என் னையும் இணைத்தது. சற்றே பயத்துடன் தயங்கிய பொழுது இதனை நீ இன்னும் சிறப்பாகவே செய்வாய் என இந்த காற்றின் களத்தினை தந்து நம்பிக்கை கொடுத்த வரை நன்றியோடு நினைத்துக்கொண்டு

"அம்மணி!!!!.....
ஆறுகள் என்றும் பின்னோக்கி பாய்வ தில்லை" என்ற அன்பின் அழைப் போடு ஆரம்பிக்கிறது உங்களுடனான பயணம்.

வா... நீ எம்மோடு வா..
இந்த அரசியல் பெரு மைதானத்தில் நீ சாதிக்க வேண்டியவள் . உன்னால் முடியும் என சொல்லி எனக்கு வேண்டிய ஊடக அறங்களையும் அரசியலையும் கற்று தந்து இரு கரம் கொடுத்து வாரி எடுத்துவளர்த்த முதன்மையும் பெருமையும் நீங்கள்.

சக கலைஞனை தனக்கு நிகராக வளர்த்து விடுகின்ற அந்த உயரிய பண்பை உங்களிடத்தல் (மட்டுமே) கண்டேன்.

காலம் கொடிது..
காலன் கொடியவன்.

ஒரு முள்ளிவாய்க்காலை சந்திக்கப் போகின்றோம் என்பதன் குறியீடாக நீ FEB 12.2009 கள சாவடைகின்றாய்...

பன்முக திறமை கொண்ட அவனை காலம் கட்டாயமாக கவர்ந்திழுத்து சென்று விட்டது...

ஒரு ஊடகவியலாளனாக ஒரு போரா ளியாக ஒரு சகோதரனாக சிந்துவின் அன் புத்தந்தையாக நந்தினியின் அன்பு துணை வனாக... எல்லாவற்றுக்கும் மேலாக இன்று நீங்கள் ஒரு நாட்டுப்பற் றாளனாக

ஆம்..

நாட்டுப்பற்றாளர், ஊடகவியலாளர்
புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தியின் நினைவு பத்து ஆண்டுகள் கடந்தும்....

கடைசி உரையாடல் இன்றும் அப்ப டியே காதில் ஒலித்துக்கொண்டே இருக் கிறது. காலம் உள்ளவரை காற்று உள்ள வரை வாழ்வீர்கள் .



அ.யோ.கொலின் (அன்பழகன்)



# நீங்கா நினைவினில் ஊடகவியலாளர் புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி

நேரிய பார்வையும், தெளிந்த சிந்தனையும், நிமிர்ந்த நடையும் இளகிய மனித நேயமும், மக்களுக்கு உதவும் பண்பும் கொண்டவராக இவர் இருந்தார்.

யாழ்ப்பாணம் இணுவில் வைத்திய சாலையில் 30.10.1972ஆம் ஆண்டில் பிறந்தார். மட்டக்களப்பு பொலநறுவை மன்னம்பிட்டி என்ற தமிழ்கிராமத்தில் எட்டு வயதுவரை அங்கு வளர்ந்து பின் யாழ்ப்பாணம் மண்டைதீவில் வசித்து வந்தார். ஆரம்ப கல்வியை மண்டைதீவு மகாவித்தியாலயத்திலும் பின்பு உயர்கல்வியை யாழ்-இந்துக் கல்லூரியிலும் கற்று. பின்பு முகாமைத்துவபட்ட படிப்பினை யாழ் பல்கலைக் கழகத்தில் தொடர்ந்தார். பட்டப் படிப்பில் அரசியலை ஒரு பாடமாக கற்றுக் கொண்டிருந்தார். படிக்கும் காலத்தில் கவிதை, சிறுகதை, கட்டுரை என அவரின் எழுத்தாற்றலை வளர்த்து கொண்டு வந்தார்.

விடுதலை புலிகளின் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் வெளியீடான "ஆதாரம்" மாத இதழில் இவரது படைப்பு வெளியாகிக் கொண்டிருந்தது. நிதர்சன வெளியீடான ஒளி வீச்சில், பொருண்மிய வெளியீட்டுக்காக இவரின் படைப்புக்கள் வெளியாகின. பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஒழுங்கமைப்பில், பேராசிரியர் சிதம்பரநாதன் நெறியாள்கையில் அரங்கேறும் அரங்க நிகழ்வுகள் வீதி நாடகங்களிலும் இவரின் பங்களிப்பு இருந்





துள்ளது. ஈழநாடு, ஈழநாதம் நாள் இதழிலும், புலிகளின் குரல் வானொலியிலும் இவரது படைப்புக்கள் வெளியாகிக்கொண்டிருந்தது. பொங்கு தமிழ்"நிகழ்வுகளிலும் இவரின் பங்கு முக்கிய இடம் பிடித்திருந்தது.

இவரின் இரண்டாவது தம்பி 1990ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் அமைப்பில் தன்னை முழுமையாக இணைத்து கொண்டார். 1995ம் ஆண்டு படையினருடனான நேரடி மோதலில் கப்டன் சிந்துஜனாக மண்ணில் விதையானார். 1995 ஐப்பசி 30ம் நாள் படையினர் மண்டைதீவில் இருந்தும், பலாலி படை முகாமில் இருந்தும் யாழ.குடாநாட்டை கைப்பற்றும் நோக்கில் "சூரிய கதிர்"படை நடவடிக்கை மேற்கொண் டனர். அதனால் யாழ் குடாநாட்டில் வசித்து வந்த 5 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம் பெயர்ந்து வன்னிக்கு சென்றனர். தமது பட்டப்படிப்பினை தொடர முடியாத துர்ப்பாக்கிய நிலை இவருக்கு ஏற்பட்டது.

இவரது படைப்புக்கள் தொடர்ந்தும் கிளிநொச்சியில் இயங்கிவந்த புலிகளின் குரல் வானொலியிலும் பொருண்மிய மேம்பாட்டு "ஆதாரம்" மாத இதழிலும், ஈழநாத இதழிலும் வெளியாகிக் கொண்டிருந்தது.

1998இல் இருந்து புலிகளின்குரல் வானொலியும், நிதர்சனமும் முல்லைத்தீவு முள்ளியவளை தண்ணீரூற்று என்ற இடத்தில் இயங்கியன. புலிகளின் குரல் நிறுவனத்தினால் மாதம் மாதம் நடத்துகின்ற "முத்தமிழ் கலையரங்கம்" மேடை நிகழ்வில் இவரின் கவியரங்கம், பட்டிமன்றம், அரசியல் ஆய்வுரைகள் என பலதரப்பட்ட நிகழ்ச்சிகள் இடம்பெற்று வந்தன. விடுதலை புலிகளின் கலை பண்பாட்டு கழகத்தின் மாத வெளியீடான கலை இலக்கிய "வெளிச்சம்" இதழிலும் இவரின் ஆக்கங்கள் வெளியாகின. அக்காலப்பகுதியில் போராளிகளுக்கான "வழிகாட்டி" இதழிலும் "கடுகு" இதழிலும் ஈழநாதம் வார பத்திரிகையிலும் இவரின் படைப்புக்கள் வெளியாகின. முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் இயங்கி வந்த "எழுகலை இலக்கிய பேரவையில்" முக்கிய செயற்பாட்டாளராகவும் தன்னை ஈடுபடுத்தி கொண்டார். முல்லைத்தீவு சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினரின் துணையுடன் - முல்லைத்தீவு முறைசாரக் கல்வி பிரிவினரின் ஒழுங்கு படுத்தப்பட்ட "இதழியல் கற்கைநெறி" பட்டறையில் இவரும் பங்கு கொண்டார். இந்த பட்டறையில் வானொலியில் இயங்கிய ஊடகவியலாளர்கள், படைப்பாளர்கள், ஆசிரியர்கள் பங்கு கொண்டிருந்தார்கள்.

எல்லைப்படையில் பயிற்சி பெற்று களமுனைக்கும் சென்று வந்தார். 2001இல் இருந்து புலிகலின் குரல், நிதர்சனம் மீண்டும் கிளிநொச்சியில் செயற்பட்ட காலத்தில் இவர் சுகாதார திணைக்களத்தில் தமது பணியினை தொடங்கினார். ஊடக செயற்பாட்டிலும் ஒரு சேர இயங்கி வந்தார்.

விடுதலைப்புலிகளின் அனைத்துலக தொடர்பகத்தின் கீழ் இயங்கி வந்த ரீ.ரீ.என் (தமிழ் ஒளி) தொலைக்காட்சிக்கான நாளாந்த செய்திப்பார்வை, அரசியல் கலந்துரையாடல், உள்ளூர் நிகழ்வுகள் உட்பட பல நிகழ்வுகளை முன்னெடுத்து வந்தார். இதனால் புலம்பெயர்ந்த தமிழர்களிடம் நன்கு அறியப்பட்ட ஊடகராக விளங்கினார். பிரான்சில் வெளியான "ஈழமுரசு" பத்திரிகையிலும், "எரிமலை" மாத இதழிலும், கனடாவில் வெளியான உலகத்தமிழர் பத்திரி கையிலும் இவரின் படைப்புக்கள் இடம்பெற்றன.

தமிழீழ தேசிய தொலைக்காட்சியில் நாள்நோக்கு மற்றும் நிலவரம் நிகழ்ச்



சியிலும் இவரது நேர்காணல்,அரசியல் ஆய்வுரைகள் இடம் பெற்று வந்தது.

தமிழ் ஊடக அறிவியல் கல்லூரியின் தோற்றம் முதல் இறுதி காலம் வரை ஓயாது பணியாற்றி வந்தார். வன்னி நிலப்பரப்பில் நடைபெறுகின்ற அரசியல் சந்திப்புக்களில் இவர் நேரடியாக செய்தி சேகரிப்பில் ஈடுபட்டு வந்தார். 2005ஆம் ஆண்டு ஆனி மாதம் 18ம்திகதி கமலநந்தினி என்பவரை திருமணம் செய்தார். இவருடைய திருமணத்தில் பலர் பங்கு கொண்டு ஆசிவழங்கினார்கள்.

பின்னர் இவர்கள் கிளிநொச்சி அறிவியல் நகரில் காடு வெட்டி சுத்தம் செய்து வீடு அமைத்து குடி ஏறினார்கள்.

12ம்திகதி சித்திரை 2006ம் ஆண்டு இவர்களுக்கு பெண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு "சிந்து" என்று பெயர் சூட்டினார்கள்.இது அவரின் தம்பியின் நினைவாக சூட்டப்பட்ட பெயர் ஆகும்.

இறுதி காலத்தில்,2008ம் ஆண்டு புரட்டாதி மாதம் அறிவியல் நகரில் இருந்து படிப்படியாக இடம்பெயர்ந்து வெவ்வேறு இடங்களில் வசித்து வந்தார்கள். இவர் எந்த சந்தர்ப்பத்திலும் தனது ஊடகப் பணியை நிறுத்தியதே இல்லை.

இராணுவம் வள்ளிபுனம் பகுதியை முற்றுகையிட்ட போது இவர் தனது குடும்பத்தை இரணைப்பாலையில் தங்கவைத்து மீண்டும் வள்ளிபுனம் தேவிபுரம் "ஆ" பகுதியில் தமது மிகுதியாக இருந்த உடமைகளை எடுக்க சென்ற வேளையில் இராணுவத்தின் எறிகணை வீச்சில் காயப்பட்டு 12.02. 2009 அன்று அவர் உயிர் பிரிந்தது. "நாட்டுப் பற்றாளர் சத்தியமூர்த்தி" என்று விடுதலைப்புலிகளால் மதிப்பளிக்கப்பட்டார்.

1993 ஆம் ஆண்டில் இருந்து சத்தியமூர்த்தியை சக ஊடகவியலாளராகவும் நண்பராகவும் 2005 இல் இருந்து எனது குடும்ப நண்பராகவும் என்னோடு பயணித்தார். 11.02.2009 அன்று நான் தேவிபுரம் "ஆ" பகுதியில் கடமையில் இருக்கும் போது அவருடன் கடைசியாக உரையாடியதை மறக்கமுடியாது. அதுவே என் இறுதி உரையாடலாக இருக்கும் என்பதை நான் நினைக்கவில்லை.

**சிறி. இந்திரகுமார்**
முன்னாள் ஈழநாதம்
(வெள்ளிநாதம்)
வார இதழ் ஆசிரியர்
சுவிட்சர்லாந்து.



# சத்தியமூர்த்தி இன்னும் வாழ்ந்திருக்க வேண்டும்!

சத்தியமூர்த்தி இலக்கியவாதி, விமர்சகர், நிகழ்ச்சிநெறியாளர், ஊடகவியலாளர்....

தனது திறமையால் ஒரே நேரத்தில் பலதளத்திலும் இயங்கிய ஒரு துணிச்சல் மிகு ஊடகவியலாளன். நான்கு புறமும் மரண அச்சுறுத்தலால் சுற்றி வளைக்கப்பட்ட வன்னி மண்ணில் அவர் வாழ்ந்தார், கடமையாற்றினார். அங்கேயே அவர் இறந்து புதைந்தும் போனார்.

முடிவின்றி நீடித்த யுத்த நெருக்கடிகளால் வன்னியின் நிர்வாக கட்டமைப்புகள் ஒரு கட்டத்தில் சிதைந்து செயல் இழந்தன. தங்கள் வாழ்நாள் உழைப்பின் பயனாக மக்கள் தமக்காக தேடிய அவர்களின் வாழ்வாதார வழித்தடங்கள் வலுவிழந்தன.

பலமான கட்டமைப்புகளின் பெருவாரியான இயந்திரங்கள் இயங்காது இறுகிப் போயின. மக்கள் மனித வலுவை மட்டுமே நம்பி வாழவேண்டியிருந்தது.

இறுதிப்போர் அது ஒரு பயங்கரமான யுத்தகளம். மொழியால், கலாச்சாரத்தால், பண்பாட்டால், தன்னுடைய பாரம்பரிய வாழ்விட அழகியலால் மிடுக்கோடிருந்த வன்னியின் அழகிய பசுமை முகம் சிதைக்கப்பட்டு கொடூரமாக்கப்பட்டது.

போரின் முற்றுகைக்குள் அகப்பட்டு நாள் தோறும் ஓடிக்கொண்டிருந்த மக்களோடு மக்களாக சத்தியமூர்த்தி நின்றார்.



அந்த மக்களின் வலிகளை எடுத்துரைக்க முடிந்தவரை பாடுபட்ட, எல்லா ஊடகவியலாளர்களுக்கும், சகநண்பனாக துணைநின்றார். சத்திய மூர்த்தி தன் முன்னிருந்த சாத்தியமற்ற சூழலில் அசாத்தியமாக செயற்பட்டார் .

பல இலட்சம் மக்கள் அங்கு பசித்திருந்தார்கள். எங்கும் பயணிக்க முடியாமல், பல இடங்களில் தரித்து நின்றார்கள். தங்கள் துயரங்களை வெளியுலகுக்கு சொல்ல வலியற்றிருந்தார்கள்.

அவர்களின் கதைகளை சொல்லும் அவர்களின் சாட்சியாக, துணையாக, அவர்களின் குரலாக சத்தியமூர்த்தி ஒலித்தார்.

ஆனால் அவரின் அந்த பயணத்தில் அவரின் குரல்வளை அறுக்கப்பட்டது. இடை நடுவே நிறுத்தப்பட்டது. அவரின் உயிர் அவரிடமிருந்து பறிக்கப்பட்டது

ஆம். அவரின் மரணத்தின் மூலம் அவர் மௌனிக்கப்பட்டார். அன்று நல்ல இலக்கியவாதியை, நல்ல ஊடகவியலாளனை, எல்லாவற்றுக்கும் மேலாக நாம் நல்ல நண்பனை இழந்து போனோம்.

சத்தியமூர்த்தி தன் பணி நிமிர்த்தம் எந்த சாலையில் எந்த மண்ணில் பல முறை பயணித்தாரோ அதே பரந்தன் முல்லைத்தீவு பிரதான சாலையில் அவரின் உயிர் பறிக்கப்பட்டது.

ஒரு நல்ல ஊடகவியலாளனுக்கு, நல்லதொரு கருத்தாளனுக்கு, துணிவோடு கேள்விகேட்கும் துணிச்சல்காரனுக்கு, ஒரு நீதியற்ற அரசு நேரடியாகவோ, மறைமுகமாகவோ,என்ன பரிசளிக்குமோ அதே பரிசை சத்தியமூர்த்திக்கும் இலங்கை அரசு அளித்து தன் கோரமுகத்தைகாட்டிநின்றது.

சத்தியமூர்த்தி இன்னும் பழுத்த நீண்ட வயதனுபவம் கொண்ட ஊடகவியலாளனாக எம் மத்தியில் வாழவேண்டியவர். ஆனால் நாம் அவரை இழந்து விட்டோம்.

ஆயினும் சத்தியமூர்த்தி தன் வயதுக்கு மீறிய அனுபவங்களால் புடம் போடப்பட்டவர். தன் இளம் வயதிலேயே அந்த அனுபவங்களை கற்றுக்கொள்ளும் வாய்ப்பை தனதாக்கிக் கொண்டவர். ஒரு நீண்ட யுத்தம் கற்று கொடுக்கும் அரிதான அனுபவங்களை அவர் பெற்றிருந்தார்.

எமது பத்திரிகைக்காக சத்தியமூர்த்தி பல கட்டுரைகளை, படைப்புகளை பல்வேறு பெயர்களில் தொடர்ந்து எழுதினார். அவர் எனக்கு நல்ல நண்பனாக இருந்தார். அவர் தொலைக்காட்சி அரசியல் நிகழ்ச்சி நெறியாளராக கடமையாற்றிய காலங்களில், பலமுறை என்னை தன்னுடைய நிகழ்ச்சிக்கு அழைத் திருக்கிறார். அவ்வேளைகளில் அவர் கேள்வி கேட்கும் பாங்கு, அவரின் பரந்துபட்ட அறிவு கேள்விக் கணைகளாக வெளிவரும். ஒரு நண்பனாக நான் பலமுறை வியந்திருக்கிறேன்

சத்தியமூர்த்தியை எழுதும் வேளை அங்கு பல்வேறு வழிகளிலும் பல்வேறு தளங்களிலும் கூடவே பணியாற்றிய, உழைத்த, வாழ்ந்த.... வாழ்ந்து கொண்டிருக்கும் இனிய பல ஊடக மற்றும் இலக்கிய நண்பர்கள் நினைவுக்கு வருகிறார்கள்.

அன்று வன்னியில் பலமான ஊடகவியல் தலைமுறை ஒன்றை உருவாக்குவதில் அயராது உழைத்த திரு.ராதேயன் ஆசிரியர், திருச்செந்திநாதண்ணை, ஜெயராஜ் அண்ணை, காக்காண்ணை போன்றவர்கள் என்றும் மதிப்புக்குரியவர்கள்.

கடும் யுத்த நெருக்கடி களுக்குள்ளும் தொடர்ந்து வன்னியில் வெளி வந்து கொண்டிருந்த ஒரே நாளிதழான ஈழநாதம் பத்திரிகையின் வாரஇதழ் (வெள்ளிநாதம்) ஆசிரியராக கடமையாற்றிய எனக்கு பெரும் துணையாக





விருந்து என்னோடு கூடவே பணியாற்றிய நாட்டுப்பற்றாளர் ஜெயசீலன் தமிழ்ச்செல்வன் , சத்தியமூர்த்தி யின் அன்பு மனைவி நந்தினி, சுபா, றெயினா, கயல்விழி, சுரேன் இவர்கள் என்றும் நினைவில் நிற்பவர்கள் .

இலக்கிய உலகில் இயங்கிக்கொண்டிருந்த கருணாகரண்ணை, யோகேந்திர நாதண்ணை, சிவராசண்ணை, தமிழ்க்கவி அன்ரி, ஆதிஅக்கா மற்றும் சுயாதீனமாக தங்கள் படைப்புகளையும் விமர்சனங்களையும் தொடர்ந்து வைத்துக்கொண்டிருந்த மு.திரு நாவுக்கரசு(திரு மாஸ்டர்),நிலாந்தண்ணை.. நண்பர்களாகவும் கருத்து மோதல் களின் போது அறிவார்ந்த கருத்துக்களால் மோதும் தவபாலன், சத்தியமூர்த்தி, மற்றும் எனது நண்பர்களான வேலணையூர் சுரேஷ், வீரா, கை.சரவணன், கஜன் ,இளங்கீரன், சிவா மற்றும் , பொன் காந்தன்....

மறைந்த அன்பு நண்பர்கள் ஓவியர் பயஸ்,போராளிகள் ஜெயந்திரன், ராணி மைநதன், செந்தோழன் இப்படி எத்தனை எத்தனையோ பேர்....

அந்த கொடிய யுத்தத்தில் பத்திரிகை பணியின் போது உழைத்து மறைந்த சுகந்தன், அன்ரனி இப்படி எத்தனையோ பேர் இங்கு பெயர் குறிப்பிடப்படாத ஊடகவியல் நண்பர்கள்!

சத்தியமூர்த்திக்காக எங்கள் நண்பர்களுக்காக நாம் சிந்திய கண்ணீர் போதும். அவர்களுக்கு நன்கு தெரியும், தம் பணி நிமிர்த்தமாக அல்லது அந்த மண்ணில் வாழ்வதன் ஒரு அங்கமாக தாம் என்றோ ஒரு நாள் வீழ்த்தப்படலாம் என்று. அவர்கள் அவ்வாறே வீழ்த்தப்பட்டார்கள்.

இப்போது அவர்களோடு கூடவே பயணித்த நாம் ஒவ்வொருவரும் எம்மிடமிருக்கும் அனுபவங்களையும் நினைவுகளையும் பதிவு செய்வதும் பகிர்ந்து கொள்வதுமே அவர்களுக்கு நாம் செய்யும் அஞ்சலி யாகும்.



தமிழன்பன் அருண்நிலா



# சத்தியம் என்ற சொல்லுக்கும் பெயருக்கும் ஏற்ற சத்திய மூர்த்தி மாமாவே.....!

உங்கள் தியாகங்களைச்
சொல்ல வார்த்தைகள் இல்லை.
ஊடகத்துறையை உயிராக நேசித்தீர்கள்,
உண்மைக்கு குரல் கொடுக்க எழுந்தீர்கள்,
உரிமை மீட்க்கும் போராட்டத்தில்
உங்கள் பங்கு அளப்பெரியது.

எழுதுகோல் கொண்டு
எம் இனம் பட்ட கொடுமைகளை
உலகுக்கு உரைத்திட்டீர்கள்.
உயிருக்கு அஞ்சாது உழைத்த
ஊடகப் போராளி நீங்கள்.

இறுதியில் இனவெறி பிடித்த சிங்களவனின்
இலக்குக்கு பலியாகினீர்களே மாமா....!

உங்கள் தியாகங்கள் எங்கள்
ஈழ வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும்.
மாமா உங்கள் கனவுகளை சுமந்து
எங்கள் பணி தொடர்வோம்.

தமிழீழ தேசத்தின் ஊடகவியலாள ரான சத்தியமூர்த்தி மாமாவான உங்களை அன்று எனதுஅப்பா நான் சிறியவளாக இருந்த போது அறிமுகப்படுத்தி வைத்தார். உங்கள் பணி, உழைப்பு, தியாகங்கள் பற்றி கூறிப் பெருமைப்பட்டார். உங்களின் ஆளு மையையும், அரசியல் அறிவையும் ஊட கம் சம்பந்தமான பணியையும் எனக்கு கூறி னார். அன்று எனக்கு அதன் தன்மை விளங்கா விட்டாலும், பின்நாளில் அவர் பற்றி புரிந்து தெரிந்து கொண்டேன். ஈழ தேசத்தின் மிகப்பெரும் உயர்ந்த மனிதரா வார்.

நீங்கள் கொல்லப்பட்ட அந்த நாள் நாங்களும் அருகில் இருந்தோம். உங்க ளின் செய்தி எம்மை அதிர்ச்சி அடைய வைத்தது. உங்களின் இழப்பை இன்று கூட ஏற்க முடியாது. உங்களைப் போன்று பலரை இழந்து விட்டோம். உங்கள் தியா கத்தை ஈழதேசம் என்றும் மறந்து விடாது. நீங்கள் எங்கள் வழிகாட்டியும் வரலாறும் ஆவீர்கள் மாமா...!

அந்த இனிமையான நினைவுகள் இன்றும் என் மனதில் தித்திக்கின்றது உங்களுடன் பழகிய நினைவுகள் என்றென்றும் அழி யாத காவியமாக நிலைத்திருக்கும் மாமா...!



காவலூர் இ.விஜேந்திரன்.



# ஊடகத்துறைக்கு தன் வாழ்க்கையை அர்ப்பணித்த ஊடகவியலாளர் பு.சத்தியமூர்த்தி..!

அரச ஊழியர், அரசியல் ஆய்வாளர், ஊடகவியலாளர், இலக்கிய ஆர்வலர் என பன்முக ஆளுமை கொண்ட இவர் இருபது வருடங்களுக்கு மேற்பட்ட ஊடக அனுபவம் கொண்டவர். நேர்மையும், கனிவான பேச்சும், ஆழ்ந்த புலமையுமுள்ள இவர் மென்மையான புன்னகையுடன் வலம் வரும் நல்ல மனிதரும் கூட... ஊடகத் துறையே தன் வாழ்வெனச் செயற்பட்டவர் புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி.

இவர் சிறுவயது முதல் யாழ்ப்பாணம் மண்டைதீவில் வாழ்ந்து மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று பின் யாழ். இந்துக் கல்லூரியில் கல்வியை கற்று யாழ்பாணப் பல்கலைக் கழகத்துக்கு தெரிவானார். 1995இல் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற இடப்பெயர்வுடன் பல்கலைக் கழக கல்வியை இடைநிறுத்தி விட்டு வன்னி பகுதிக்கு சென்றவர். தன் இறுதி காலம் வரை வன்னி பகுதியையே வாழ் விடமாக கொண்டவர்.

சுகாதார திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளராக பணியாற்றிய இவர், ஊடகப்பரப்பில் தேசிய ரீதியில் அறியப்பட்டதைவிட சர்வதேச ரீதியில் அதிலும் புலம்பெயர் தமிழ் மக்களி டையேயும் அவரகளது ஊடகங்களிலுமே அறியப்பட்டது அதிகம். அவர்களிடையே நன்கு பரீட்சயமானவர். வீரகேசரி வாரவெளியீட்டில் சமகால அரசியல் சார் கட்டுரைகளை சிலகாலம் எழு



தியவர். ஈழநாடு, ஈழநாதம், வெள்ளிநாதம், நமது ஈழநாடு, ஈழமுரசு, கனடா உலகத் தமிழ் பத்திரிக்கை ஆகிய பத்திரிகைகளில் அரசியல் விவகாரங்களையும் நடப்புசார் நிகழ்வுகளையும் எழுதியவர்.

TTN தொலைக்காட்சி சேவையின் நிகழ்ச்சி தொகுப்பாளராக பணியாற்றியது டன் பல ஊடகங்களில் அரசியல் ஆய்வா ளராக பிரத்தியேக நிகழ்ச்சிகளில் பங்கேற்ப வர். இவற்றுடன் சங்கதி, பதிவு என்ற இணையதள செய்தியாளராகவும் பணி யாற்றி தான் சார்ந்த மக்களுக்கு ஊடகங் களின் வாயிலாக பெரும் பணியாற்றிய அவை அடக்கமான மனிதர்.

வன்னிப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட ஊடக அறிவியல் கல்லூரியின் ஆரம்பத்திற் காக உழைத்தவர்களில் இவரும் ஒருவர். பின் நாட்களில் இக் கல்லூரியில் விரிவுரை யாளராகவும் செயற்பட்ட பெருமைக்குரிய ஊடகவியலாளன். ஒரு ஊடகவியலாளன் எவ் வகையான தகமைகளை கொண்டி ருக்க வேண்டுமோ அத்தனை தகமை களையும் தாங்கியதான ஒருவர்.

சமாதான காலப் பகுதியில் வன்னி யில் பல உள்ளூர், வெளியூர் ஊடகவிய லாளர்களுடன் நட்பு பாராட்டிய சத்திய மூர்த்தி, அவர்களால் நன்கு மதிக்கப்பட்ட வரும், நேசிக்கப் பட்டவருமான ஒரு ஊடக வியலாளர். அக்காலப் பகுதியில் நடைபெற்ற அனைத்து பத்திரிகையாளர் மாநாடுகளி லும் இவரைக் காணமுடியும். ஆங்கில மொழியில் நன்கு பரீட்சயமான இவரால் வெளியூர் ஊடகவியலாளர்களுடன் தொடர்ச்சியான உறவைப் பேணக் கூடிய தாக இருந்தமை இவரது திறமைக்கும் சிறப்புக்கும் சான்றாகின்றது.

வன்னியில் இடம்பெற்ற மிகப்பெரிய இடப்பெயர்வில் எறிகணை தாக்குதலுக்கு இலக்காகி 12.02.2009 இல் கொல்லப் பட்டார் என்ற செய்தி ஊடக நண்பர்களி டையே பெரும் தவிப்பையும், தாக்கத் தையும் ஏற்படுத்தியது. ஊடகத்துறையில் பணியாற்றும் போது தாக்குதலுக்கு இலக் காகி உயிர் நீத்த புண்ணியமூர்த்தி சத்திய மூர்த்தி" நாளை நானாக இருப்பேன்" என்று சொன்னவர் சகாப்தம் கடந்தும் இன்றும் வாழ்கிறார்.





பிரேமினி அற்புதராஜா



# உண்மையின் குரலாய் என்றும் ஒலிப்பாய்

"இந்தக் கோட்டைய யார் கட்டினது..." "என்னத்தால இதக் கட்டியிருபபினம்." "இந்தச் சங்கிலிப்பாலம் கட்டமுதல் எதால ஆக்கள் போய் வந்திருப்பினம்" "இந்த றோட்டுப்போட முதல் நயினாதீவு நெடுந்தீவு மாதிரி மற்றத் தீவுக்காரரும் கடலாலதான் போய்வந்திருப்பினம் என்ன.."

இப்படி மூச்சுவிடாமல் கேள்விக் கணைகளால் மற்றவர்களைத் துளைத்தெடுத்துக் கொண்டே இருக்கும் அந்தப் பதின்ம வயதுக்காரன் வேறுயாருமல்ல,எங்கள் சத்தியமூர்த்தி அண்ணாதான்.

மண்டைதீவிலிருந்து யாழ்நகரை நோக்கிப் பயணிக்கும் அந்தப் பாடசாலை வாகனத்தில் பெரியவர் சிறியவர் என அனைத்து வெளிப் பாடசாலை மாணவர்களும் பயணம் செய்வார்கள். அந்த வாகனத்தில் யாழ் இந்துவின் புதிய மாணவனாய் சத்தியமூர்த்தி அண்ணாவும் வந்திருந்தார்.

சத்தியமூர்த்தி அண்ணா வாகன இருக்கையில் பக்கத்தில் வந்தமர்ந்தால் உயர்தரங்களில் கல்வி கற்கும் அக்காக்கள் அண்ணாக்களுக்கு ஒருவித பயம். ஏனெனில் அவர் அடுக்கடுக்காய்க் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லியே அவர்கள் திணறிப்போய் விடுவார்கள். அதைவிட அவரது ஆராய்ச்சித் தன்மையோடு கேட்கப்படும் பல கேள்விகளுக்குப் பதில் அவர்களிடமே இருக்காது. அந்தளவுக்கு ஒன்றைப்பற்றித்



தெரியவேண்டுமென்றால் அதை அக்கு வேறு ஆணிவேறாகத் தெரிந்து கொள்ளா மல் அவர் விடமாட்டார்.

யாழ்நகரப் பாடசாலைகளில் கல்வி கற்றவர்கள் யாழ் குடாநாட்டில் நிலவிய போர்ச்சூழ்நிலை காரணமாக தத்தமது ஊர்களிலேயே தற்காலிமாக கல்வியை தொடரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டி ருந்தது. அப்படியான ஒரு சூழலில்தான் சத்தியமூர்த்தி அண்ணாவும் மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் கல்வியைத் தொடர் வதற்காக வந்திருந்தார். அந்தக் காலப் பகுதியில்தான் அவரின் இன்னுமொரு பக் கத்தைப் பற்றி அதிகம் அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது.

வகுப்பில் முதல் மாணவர்களாக இருப்பவர்களில் பலர் புத்தகப் பூச்சிகளாகப் பாடப்புத்தகத்தை மட்டும் படித்து சிறந்த புள்ளிகளைச் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதையே நாம் அதிகம் பார்த்திருக் கின்றோம். ஆனால் அதற்கும் அப்பால், சிறந்த தேடலுடனும் ஆராய்ச்சித் தன்மை யோடும் எதனையும் ஆய்ந்து அறிகின்ற பக்குவத்தோடும் பொதுஅறிவினையும் வளர்த்து தன்னை தகவமைத்துக்கொண்ட சிறந்த மாணவனாக மட்டுமல்ல முதல் மாணவனாகவும் அவர் இருந்தார்.

வகுப்பறைக்கு ஆசிரியர் சமூகம்தராத பொழுதுகள் கிடைக்கும் ஒய்வை எல்லா மாணவர்களும் கலகலப்பாகப்பேசிக் கழிக்க அந்த நேரத்தைக் கூட வீணடிக்காது தனியே நூலகத்தில் போயிருந்து புத்தகம் எடுத்து வாசித்துக்கொண்டிருப்பார் சத்தியமூர்த்தி அண்ணா.

பாடசாலை நூலகத்தில் மட்டுமல்ல, பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரத் தில் பாடசாலைக்கு அருகில் இருக்கும் பொதுநூலகத்தில் எந்த நேரம் பார்த்தாலும் புத்தக அடுக்குகளுக்கிடையில் அவரைக் காணலாம். உண்மையிலே வாசிப்பு ஒரு மனிதனைப் பூரணமாக்குகின்றது என்ப தற்கு சிறந்த எடுத்துக்காட்டாக சத்தியமூர்த்தி அண்ணாவை நான் பார்த்திருக்கின்றேன்.

விரைந்தோடிய காலச்சுழற்சியில் அவரது ஒரேதம்பி விடுதலையை நேசித்து வீரவரலாறாகிப் போக தேசவிடுதலை யின் பால் அவருக்கிருந்த நேசிப்பும் பொறுப்பும் அதிகரித்தது.

சின்ன வயதில் இருந்தே அப்பப்போ எட்டிப்பார்க்கும் அவரது ஆளுமையான எழுத்துக்கள் யாழ் பல்கலையில் கல்வி பயின்று கொண்டிருந்த நேரத்தில் இன்னும் முனைப்புப் பெற்றன. அரசியல் தெளிவோ டும் முதிர்ச்சியோடும் அவர் எழுதிய ஆய் வுக் கட்டுரைகள் பல மக்கள் மனங்களை நிறைத்தன.

தனது அரச பணிக்கு அப்பால் தேசவிடுதலையை முனைப்போடு நகர்த்தி விடுதலைப்போரின் உண்மையை உலக றியச்செய்கின்ற ஊடகப்பணியை விருப் போடு ஏற்று அதற்காக தன்னை மேலும் மேலும் பட்டைதீட்டிக் கொண்டே இருந்தார். சஞ்சிகைகளில் மட்டும் அன்றி, நாளாந்த வாராந்த பத்திரிகைகள், புலிகளின்குரல் வானொலி, தமிழீழத் தேசியத் தொலைக் காட்சி என இவரது ஊடகப்பணி விரிந்து சென்றது. எங்கள் மண்ணில் அன்றைய போர்ச் சூழலில் விரல் மடித்து எண்ணக் கூடிய அரசியல் ஆய்வாளர்களில் சத்திய மூர்த்தி அண்ணா தனக்கென்றோர் இடத்தைப் பிடித்திருந்தார்.

எங்கள் மண்ணில் நடந்து கொண்டி ருந்த இன அழிப்புப்போரின் அவலங்களை, தமிழ்மக்கள் நாளாந்தம் அனுபவிக்கும் இன்னல்களை போரின் சாட்சியமாக





போருக்குள் வாழ்ந்து கொண்டு புலம்பெயர் தேசத்தின் ஊடகங்களின் ஊடாக நிலை மைகளை தன்குரலாலும் பேனாவாலும் பதிவு செய்தார்.

சாட்சிகள் இன்றி,போரியல் தர்மங்க ளைக் கடந்து கட்டவிழ்த்து விட்ட அரச பயங்கரவாதத்தின் கோரத்தாண்டவத்தை உலக அரங்கிற்கு உறைக்கும்படி எடுத்துச் சொல்லிக் கொண்டே இருந்தார்.

தன் இறுதி மூச்சுவரை தேச விடுத லையை நேசித்த நாட்டுப்பற்றாளன். நெருக் கடிகளும் இடர்களும் சூழ்ந்த பொழுதுகளில் கூட தன் குடும்பம் என்ற கூட்டைத்தாண்டி தன் கடமை என்கின்ற பெரும்பணியைச் சுமந்து திரிந்த மனிதன். இனஅழிப்பின் சாட்சியமாய் ஓங்கிக் குரல்கொடுத்த தேசத் தின் மைந்தன். பகை ஏவிய எறிகணை யால் விழுப்புண்தாங்கி 12.02.2009 அன்று சாவை அணைத்துக் கொண்டார்.

தாய்மண் நாட்டுப்பற்றாளனாய் மதிப் பளித்து உங்கள் பணியைப் பெருமைப் படுத்தியது. இடர்சூழ்ந்த பொழுதுகளில் கூட தன் வாசிப்பையும் தேடலையும் விட்டுக் கொடுக்காத ஒரு ஊடகப்போராளியை நாம் இழந்து தசாப்தம் ஒன்று கரைந்து விட் டது.ஆனாலும் உண்மையின் குரலாய் உலக முற்றத்தில் அவர் குரல் என்றும் ஒலித்துக் கொண்டே இருக்கும்.





ஊடகவியலாளர்
**எஸ்.வி.ஆர்.கஜன்**



# சத்தியமூர்த்தியின் நினைவுகளைத் தாங்கி....

**தொ**ண்ணூறுகளில் தொடங்கிய பல நட்புகள் கை நழுவி சென்றுகொண்டிருக் கையில் இறுதிவரை என்னுடன் இறுக்க மான நட்பை உளப்பூர்வமாக நேசித்த ஒரே அன்பன் நண்பர் பு. சத்தியமூர்த்தி.

சத்தியமூர்த்தியின் நினைவு மலருக் காக வடிக்கின்ற வசனங்கள் அல்ல இவை. ஆழ்மன உணர்வுகளை புரிந்துகொண்டு நண்பர்களை உயரிய நட்புடன் நேசிக் கின்ற பண்புகளுக்கு அவனுக்கு அவன் தான் நிகர்.

இவ்வாறான ஒரு உயரிய நட்புடன் கூடிய நல்லுள்ளம் ஒன்றினை இன்னும் நான் தேடுகின்றேன் சத்தியமூர்திக்கு பின் அது இதுவரை கிடைக்கவில்லை இனியும் கிடைக்கபோவதுமில்லை.

தொண்ணூறுகளில் ஆதாரம் என்ற சஞ்சிகையினூடாக ஆரம்பித்த ஊடக நட்பு ஈழநாடு என்று தொடர்ந்து நாளிதழ் நேரம் என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிவரை நீடித் தது.

உள்ளத்தை ஆழமாக புரிந்துகொள்ள கூடியவன் வலுவூட்டும் உறவை பேணுப வன் உயர்ச்சிக்கு உரமூட்டும் நட்புடை யவன் என சத்தியமூர்தியை பற்றிய பண் பியல்புகளை அடுக்கிக்கொண்டே போக லாம். ஏறத்தாழ இருபது ஆண்டுகள் அது வும் பல்வேறுபட்ட பரிமாணங்களிலான ஊடகத்துறையிலேயே நட்புடன் உறவாடிய உன்னத நட்புகளில் சத்தியமூர்த்தி மட்டுமே மனதில் நிழலாடும் ஊடக நண்பராக இடம்





பிடித்து தடம்பதித்து விட்டகலாத பதிவை ஏற்படுத்தியவராவார்.

கடும் போர் சூழலில் தற்துணிவோடு நின்று பதுங்கு குழிகளுக்குள் தற்காப்பில் நின்று ஒளிப்பதிவு செய்து நாளிதழ் நேரம் நிகழ்சிகள்தான் தாயகத்தின் நிலவரங்க ளை நாளாந்தம் புலம்பெயர் மக்களுக்கு தெரிவித்து வந்தன இதற்கு சத்திய மூர்தி யின் தற்துணிவுதான் என்னை அந்த நிகழ்ச்சியை முழுமையாக தயாரிக்க வைத்தது.

ஊடகவியலாளன் சோரம் போதல் கூடாது என்பதை அடிக்கடி மனதில் நிலை நிறுத்தி ஈழநாதத்தின் வெள்ளி நாதத் தில் எனது வாரம் ஒரு ஆக்கத்தை பிரச விக்க வைத்த பண்பான ஊடகவிய லாளன்.

போர் முழுமையாக சூழ்ந்திருந்த போதிலும் அப்போது ஊடகக்களத்தில் பணி யாற்றும் ஊடகவியலாளர்கள் ஊடகப் பயிற்சி பெற வேண்டுமென்பதில் அக்கறை கொண்டு எழுகலை இலக்கிய பேரவையூ டாக சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஊடகவி யலாளர்களுக்கு ஆறுமாத கற்கை நெறி யொன்றை திறம்பட தனது சொந்த முயற்சி யில் நடாத்தி தரம் வாய்ந்த பல ஊடக வியளாளர்களை பணியாற்ற வைத்த தூர நோக்கு கொண்ட ஊடகவியலாளன் சத்திய மூர்த்தி என்பதை ஆணித்தரமாக கூற முடியம்.

இந்த களத்தில் பயிற்சி பெற்ற ஊடக வியலாளர்கள் பின்னர் தாயக நிகழ்ச்சி களை சர்வதேசம்வரை கொண்டு செல்வ தற்கு சத்தியமூரத்தியின் இந்த தன்னல மற்ற சேவைதான் அடிப்படை காரணமாக அமைந்தது என்பதை பதிவிட்டே ஆக வேண்டும்.

தான் சார்ந்த பணி எதுவாக இருப்பி னும் அதில் ஒரு பக்கத்தை இறுதி வரை ஊடகத்துறைக்கென்றே அர்ப்பணித்து தன்னோடு சார்ந்த சக ஊடகவியளார்களை யும் சோரம் போகாது கால் பதிக்க வைத்த அற்புத ஊடகவியலாளன் சத்தியமூர்த்தி.

சிறந்த கட்டுரையாளன் கவிதையா ளன் சிறுகதை எழுத்தாளன் என பல பரி மாணங்களில் தனது ஊடக செயற்பாட்டை விரிவுபடுத்திய சத்தியமூர்தி சிறந்த அரசியல் ஆய்வாளனாகவும் செயற்பட பரிண மித்த துதான் அவனுடைய தனிச்சிறப்புக்கு கிடைத்த முத்திரை என்பதை பதிவு செய்தே ஆகவேண்டும்.

இலக்கியத்துறையின் செயற்பாட் டாளர்கள் ஊடகத்துறையில் கால்பதிப்பது மிகக்குறைவு ஊடகவியளார்கள் இலக்கி யத்தை தழுவிச்செல்வார்களே தவிர இலக்கியவாதிகளாகவும் செயற்படுவது மிக குறைவு ஆனால் நண்பன் சத்தியமூர்த்தி இரண்டு தடங்களிலும் கால்பதித்து பிரச வித்த பல பதிவுகள் இன்னும் எம்மை அசை போட வைக்கின்றது.

ஏறத்தாழ நான்கு வருடங்கள் நானும் சத்தியமூர்தியும் இணைந்து தயாரித்த தொலைக்காட்சி நிகழ்வொன்றை தங்கு தடையின்றி இடைவிடாத செல்வீச்சுகளுக்கு மத்தியிலும் வெற்றிகரமாக வழுங்கியிருந் தோம். இதன் தொடர்ச்சியாக அகோர செல் வீச்சுகளுக்கு மத்தியில் 2009ம் ஆண்டு தைப்பொங்கல் தினத்திலும் எமது நிகழ்ச்சி தற்காலிக கலையகத்தில் ஒளிப்ப திவு செய்யப்பட்டது. அது தான் அந்த நிகழ்ச்சி யினதும் சத்தியமூர்த்தியினதும் இறுதி நிகழ்ச்சி என்பது காலம் தீர்மானித் திருந்தது என்று ஒருவருக்கும் புலப்பட வில்லை.

நீ இவ்வுலகில் இல்லை உன் பணிச் சிறப்பு என் எழுதுகோல் இருக்கும் வரை ஓயாது வரையும்.



**ஜெ.கோகுலவாசன்**
அதிபர்,
வட்டு/சுப்பிரமணிய
வித்தியாசாலை



# ஒரு புகழ்பெற்ற ஊடகவியலாளன் சத்தியமூர்த்தி

**1981** ஆம் ஆண்டு மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் எங்களுடைய பாலர் வகுப்பு, முதலாம் வகுப்பு, இரண்டாம் வகுப்புக் கல்வியை நிறைவு செய்து கொண்டு 3ம் வகுப்பிற்கு வகுப்பேற்றப்பட்டிருந்தோம். அப்போது 3ம் வகுப்பிலிருந்து 4ம் வகுப்புக்கு வகுப்பேற்றம் செய்யப்படாத 10 வரையான நண்பர்களும் எங்களுடன் இணைந்து கொள்ள மாணவர் எண்ணிக்கை 45 ஆகக் காணப்பட்ட பெரிய வகுப்பு எங்கள் மூன்றாம் வகுப்பு. நான், தெய்வகுமார், சாயீஸ்வரன், கேதீஸ்வரன் ஆகியோர் படிப்பில் கெட்டிக்காரர்கள் என்று பெயர் வாங்கியிருந்த காலம். 3ம் வகுப்புத் தொடங்கி 1 மாத காலத்தின் பின்னர் புதிதாக ஒரு அழகிய மாணவன் எங்கள் வகுப்பில் சேர்ந்தான். நாங்களெல்லாம் காலிலே செருப்பில்லாமல் கையிலே புத்தகம் கொப்பியுடன் சென்ற காலத்தில் அந்த மாணவன் அழகிய புத்தகப் பையுடன் பாதணிகள் அணிந்து வகுப்புக்கு வந்திருந்தான். அவன் அதற்கு முன்னர் மட்டக்களப்பு மாவட்டத்தின் மன்னம்பிட்டிக் கிராமத்தில் படித்ததாகவும் தற்போது மண்டைதீவில் உறவினர் வீட்டில் தங்கியிருந்து படிக்க வந்திருப்பதாகவும் கூறினான். தன்னுடைய தந்தையார் ஒரு கிராமசேவகர் - (விதானையார்) எனவும் கூறியிருந்தான். அப்போது - 3ம் வகுப்பின் முதலாம் தவணைப் பரீட்சையும் வந்தது. அது தான்





அச்சடிக்கப்பட்ட வினாத்தாள்களுக்கு விடை யெழுதும் முதல் பரீட்சையாக எமக்கிருந்தது. அந்தப் பரீட்சையில் எங்களையெல்லாம் பின்தள்ளிவிட்டுச் சத்தியமூர்த்தி முதலாம் பிள்ளையாக (Rank1)ஆக வந்திருந்தான்.

அந்த நேரத்தில் எங்களுக்கு அவன் மீது ஒரு விதமான போட்டி பொறாமை ஏற்பட்டதை மறுக்க முடியாது. அதற்குப் பின்னரான காலத்தில் சத்தியமூர்த்தியை முந்த வேண்டுமென்றே படித்திருக்கின்றோம். நான்காம் வகுப்புக்கு தாங்கள் செல்லும் போது மாணவர் எண்ணிக்கை அதிகமென்று 4A, 4B என்று பிரித்துவிட்டார்கள். அப்போது நான் A வகுப்பிலிருக்க சத்தியமூர்த்தி B வகுப்பில் முதலாம் பிள்ளையாக இருந்தான். பின்னர் ஐந்தாம் வகுப்பில் இரண்டு வகுப்புக்களையும் ஒன்று சேர்த்து விட்டார்கள். ஐந்தாந்தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்காகவும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அனுமதிப் பரீட்சைக்காகவும் படித்தோம். இந்துக்கல்லூரி அனுமதிப்பரீட்சையில் சத்தியமூர்த்தி கூடுதலான புள்ளிகளைப்பெற புலமைப்பரிசிற் பரீட்சையில் தெய்வகுமார் கூடுதலான புள்ளிகளைப்பெற இரண்டு பரீட்சைகளிலும் இரண்டாவது நிலைப் புள்ளியை நான் பெற்றிருந்தேன். நான் தெய்வகுமார் சத்தியமூர்த்தி மூவரும் 1984 இல் 6ம் வகுப்பில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் இணைந்து கொள்ள மண்டைதீவு கிழக்கிலிருந்து நவராஜனும் எங்களுடன் இணைந்து கொண்டான். அப்போதுதான் யாழ்ப்பாணத்தில் தீவிரவாதப் போராட்டங்கள் வலுப்பெற்றிருந்ததோடு பல இயக்கங்களும் தோற்றம் பெற்றிருந்தன. ஒரு வருடத்துக்கும் சற்றுக் கூடுதலான காலம் மண்டைதீவிலிருந்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு வந்து போய்க் கொண்டிருந்தோம். யாழ்ப்பாணம் Town இல் இறங்கிச் சத்திய மூர்த்தியும், நாங்களும், ஜெயக்குமார் அண்ணாவும், சசிகுமார் அண்ணாவும், நவராஜனின் அண்ணா யோகேஸ்வரன் அண்ணாவுமாக கஸ்தூரியார் வீதி வழியாக பாடசாலைக்கு ஓட்டமும் நடையுமாக வந்து சென்ற நாட்கள் இன்றும் என் மனக்கண்முன் நிழலாடுகின்றன.

நாங்கள் ஏழாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த காலத்தில் மண்டைதீவுக்கான தரைவழிப் போக்குவரத்துத் தடைப்பட்டுப் போக சத்தியமூர்த்தி, நவராஜன் ஆகியோர் பாடசாலை விடுதியிற் தங்கியி ருந்து படிக்க நாங்கள் உறவினர் வீடுகளில் தங்கியிருந்து படித்தோம். இவ்வாறு காலங்கள் கடந்து 1989 February இல் O/L பரீட்சை எழுதிவிட்டு மீண்டும் அனைவரும் மண்டைதீவில் இணைந்து கொண்டோம். அக்காலத்தில் சத்தியமூர்த்தியும் நாங்களும் கிரிக்கெட் பைத்தியங்களாகத் திரிந் திருக்கிறோம். மண்டைதீவு நூலகத்தில் பத்திரிகை, புத்தகங்கள் வாசிப்பதும் கிரிக்கெட் விளையாடித் திரிவதுமாக எங்கள் பொழுதுகள் மகிழ்ச்சியாகக் கழிந்திருக்கின்றன. நூலகத்தில் வாசித்துக் கொண்டிருக்கும் போது ஒருவர் அவ்வப்போது மெய்மறந்து வாய்விட்டுச் சிரித்துக் கொண்டிருப்பார் அவரே நண்பன் சத்தியமூர்த்தி. இரண்டு அணிகளாகப் பிரிந்து Cricket Match விளையாடி இடையிடையே பிரச்சினைகள் ஏற்பட்டு நானும் சத்தியமூர்த்தியும் சில காலம்



கதைக்காமல் இருப்பதும் பின்னர் கதைப பதும் வழமையான விடயங்கள். இந்திய இராணுவக் காலத்தில் EPRLF கலைத்துப் பிடிப்பதைச் சாட்டாகக் கொண்டு நாங்களும் நீண்டகாலம் ஊரிலேயே விளையாடித் திரிந்தோம். பின்னர் க.பொ.த உயர்தரத் தில் சத்தியமூர்த்தி வணிகப்பிரிவுக்கும், தெய்வகுமார் உயிரியல் பிரிவுக்கும் செல்ல நான் கணிதப்பிரிவுக்கும் சென்றேன். நவ ராஜன் வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டான் போலும். 1990 இல் பிரச்சினைகள் வலுப் பெற்று மீண்டும் பாடசாலைகள் மூடப்பட மண்டைதீவுக்குச் சென்றோம். மண்டை தீவை இராணுவம் கையகப்படுத்த தீவுப் பகுதி மக்களில் பெரும்பாலானோர் இடம் பெயர்ந்து யாழ்ப்பாணத்தின் வெவ்வேறு பகுதிகளில் வாழத் தொடங்கியிருந்தோம். சத்தியமூர்த்தியுடனான தொடர்புகளும் குறையத் தொடங்கியிருந்தன. 1992 ஏப்ர லில் உயர்தரப் பரீட்சை நடைபெற்று தெய்வ குமார் மருத்துவ பீடத்துக்குத் தெரிவு செய் யப்பட்டு கொழும்பு பல்கலைக்கழகத்துக்குச் செல்ல, சத்தியமூர்த்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவக் கல் வியைத் தொடர தேசியப் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத நான் கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்தில் பொறியியல் தொழில்நுட்பக் கல்வியைத் தொடர்ந்தேன்.

1995 ஒக்டோபரில் யாழ்ப்பாண இடம்பெயர்வுக்குப்பின் சத்தியமூர்த்தியை நான் சந்திக்கவோ, தொடர்புகொள்ளவோ முடியவில்லை. எனினும் அவனை நான் ஒரு சிறந்த ஊடகவியலாளனாகத் தொலைக்காட்சியில் பார்த்திருக்கிறேன். காலக்கணிப்பு நிகழ்ச்சியைச் சிறந்த முறையில் வழங்கிக் கொண்டிருந்தான். முகாமைத்துவ உதவியாளராகத் தன்னு டைய வேலையைத் தொடர்ந்ததோடு உலகப்புகழ் பெற்ற ஊடகவியலாளனாகவும் தன்னை உருவாக்கியிருந்தான். 2009 பெப்ரவரி 12ம் திகதி வன்னியில் இறுதிப் போர் நடைபெற்ற காலத்தில் ஷெல் தாக்குத லில் அவன் இறந்து விட்டதாக அறிந்து மிகவும் வேதனைப்பட்டேன். ஒரு கெட்டிக் கார மாணவன், கள்ளங்கபடமற்ற உன்ன தப் பண்பாளன், முற்போக்குச் சிந்தனை வாதி, ஒரு புகழ்பெற்ற ஊடகவியலாளன் என் பால்ய நண்பன் இவ்வுலகைப் பிரிந்து 10 ஆண்டுகள் நிறைவு பெறும். இக் காலத் தில் அவனுடைய நினைவுகளை மீட்டு அதற்கு எழுத்துருக் கொடுப்பதில் என் மனம் சற்று ஆறுதல் கொள்கின்றது. அவன் ஆத் மாசாந்தி பெறவும் அவன் கனவுகள் நன வாகவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிறைவு செய்கின்றேன்.

●





நட்புடன்
**ந.நவராஜன்**



## சத்தியமூர்த்தியின் நினைவுகளுடன்...

இருந்தது இருவரும் ஓர் ஊர்தான்.
என்றாலும்
அறிந்தது யாழ் இந்துவில்
இணைந்த பின் தான்
பேரூந்தில், மிதிவண்டியில், பின் விடுதியில்
என தொடர்ந்த நட்பு
மண்டதீவின் குறுக்கும் நெருக்குமாய் அளந்த
நாட்கள் நினைவினில் இன்றும்
மெய்மறந்து தலை அசைத்து நீ படிக்கும்
நினைவுகளுடன் கண்களில் நீர் ததும்ப
நீ சிரிக்கும் காட்சிகளும் நெஞ்சை விட்டு அகலா!
தன்னலமற்ற உனது வாழ்வில் உன்னதமான
நண்பர்கள் வட்டம் எனைப் போலவே ஆசிரியர்களாகவும்
மருத்துவர்களாகவும்
நற்பண்பாளனாய், நல்ல சிந்தனையாளனாய்,
சிறந்த வாசனையாளனாய், நகைச்சுவையாளனாய்,
ரசிகனாய் மனிதாபிமானியாய், ஊடகவியலாளனாய்
பல பரிமாணங்கள் எடுத்தாய்
பார்த்தேன், வியந்தேன் பரவசமடைந்தேன்!
உன்னால் உனைச்சார்ந்த தமிழ் சமூகமும் பெருமை கொள்ளும்.
உனது ஆன்மா உன் குடும்பத்தை வழி நடத்தும்
இறைவன் அவர்களை ஆசீர்வதிக்கட்டும்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.



பு.சிந்துஜன்



## யாழ்ப்பாணத் தரிசனம்

மீளவும் உயிர்த்திருக்கிறது பசுமை
தமிழரின் நிமிர்தலின் குறியீடாய்
இயக்கச்சியைத் தின்றிருந்து
"அயன்சைற்" றின் நிழலில் அறித்தெறியப்பட்ட
தாலங்களின் 'அடிக்கட்டைத் தோப்பில்'
மீளவும் உயிர்கிறது பசுமை.
'உடையவன் கண்டால் தற்கொலைதான் செய்வான்'
என்றவிந்த நெஞ்சுகள் குளிர்ந்தன....
வயிறெரிந்து சாபமிடல். கழிவிரக்கம்
என்பதல்ல எங்கள் வாழ்வியல்
மீண்டும் தொடங்கும் மிடுக்கு' எங்கள் வழி!
வாழ்க தோப்புடையோனே.
நீ எங்கள் வாழ்வின் துளி.

பளை தாண்டிப் போகிறது வண்டி
வட்டற்ற தென்னைகள் பனைகள்.
எறிகணைச் சிதறல்களைத் தாங்கி





பலப்பல கோலங்களில் மரங்கள்.
குறுக்கறுத்த புலிகளைச் சூழ்ந்து
அறுபதாயிரம் படையினர் புரிந்த சாதனை!

பதைக்கிறது மனது.
இதனுள் நின்றவர் எப்பாடுபட்டிருப்பர்!

வினாவுகின்றன விழிகள்
உயிரிழந்து பல்லிளித்து நிற்கிறது
துருப்புக்காவி ஒன்று அப்பாலே ஒரு ட்ரக்.
இதனுள்ளிருந்தா கேட்டாய் எம் தளபதியைச் சரணடைய
காப்போம் அவற்றை
எம்பிள்ளைகளின் வீரத்தின் சின்னமாய்.

வாய்விட்டுச் சிரித்தேன்
மறுகணம் இறுகிக் கொண்டது மனம்
முட்கம்பியும் காவலரணும் சூழ்ந்த
நாவற்குழிப் பாலத்தின் சுவர்க்கரையொன்றில்
'Sri Army Is Best' என்கிறது.
திருப்பிப் பார்த்தேன்
யாழ். வளைவும் செம்மணி வெளியும்
தெளிவாய்த் தெரிந்தன.

எட்டாவது ஆண்டில் உன்னைத்
தரிசிக்க வந்தேன் உன் துயிலிடத்தில்
நள்ளிரவில் சுடரேற்றி நாமழுது உரமேற்ற
நாட்கள் எழுந்தன மனதில்
இப்போதும் மஞ்சள் மாலையில்
ஆயிரங்களாய்க் கூடினோம்.
'சந்திகளில் நின்றோர்' முகமும் மனமும் அதிர
மீண்டும உயிர்ந்த உன் துயிலிடத்தில்
ஏற்றுகிறேன் சுடர்கள்
சுடர்கிறது ஒளியென் மனதில்.



நட்புடன்
**சுதர்சன்**



# செய்தி....

நணபன், அதிபர், ஊடகவியலாளன், குடும்பஸ்தன்....
என்று அடுக்காகக் கூற, எதில் குறை கூற
எல்லாம் முதல் நிலையே.
1984, நான் கண்ட யாழ். இந்து அன்னை மடியில்
நவம், தெய்வம், வாசன் உடன் சத்தியமூர்த்தி
முன்பு எல்லோரும் அறிந்திட்ட
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் மண்டைதீவும் இங்கிருந்துதான்
முளைத்திட்டனர் நம் நண்பர்கள்
சளைத்தவர்கள் அல்லர் நால்வரும்.
ஊர்போற்ற வாழ்கின்றனர்.
நண்பனுக்கு துக்கம் என்றவுடன் முந்தியவர்கள் அவர்களே.
சத்தியம் மூர்த்தியாகி தூர நிற்பினும்
சத்தியம் நிலைக்க அவன் செய்த செயற்பாடுகளும்
மழலையாக விட்டுச் சென்ற கன்று இன்று
அப்பா வழியில் அப்பா பெயர் நிலைக்க அதிரும் நிதம்.
எமக்கு அவன் என்றும் மூர்த்தியைக் காட்டும்.
ஆண்டு ஆறு மூர்த்தி ஊரான் நவம் கொடுத்தான்
ஆளு வடு தோன்ற, எம் வகுப்பு நல் ஆசான்
புண்ணியங்கள் பல செய்த புண்ணியமூர்த்திக்கு
ஆறாத கொதி நீர்.
ஊரான் செய்த செயல் அவன் ஊரான் சத்தியத்தை புண்ணியம்





எட்ட வைக்கவில்லை.
சத்தியத்தின் செயற்பாடு யாரையும் எட்ட வைக்கா செயற்பாடு.
ஏனைய ஆசான்களிற்கும் இவன் நாமம் அத்துப்படி.
இன்று எழுத்தை எழுப்பிய “ராதை அண்ணரும்”
இவன் இதழியல் கல்விக்கொரு நல் ஆசான்.
ஆசான்கள் மனதில் பதித்த நல் விழுமியங்களே
சமூகத்தின் பால் அக்கறை கொண்ட சத்தியம்
தனக்கு மேலான பொறுப்பாக சட்டக் கல்லூரி அதிபர் மாலை
மாலையினை கட்டி முடிப்பது முடிந்த விடியமல்ல.
இன்று கல்லூரிக்கு மாணவரை சேர்க்கும் அதிபரை கண்டால்
எல்லாம் வெளிப்படை.

காலுக்கே காலணி பெறமுடியா நிலை
காலணி சென்று கற்க யாவரவர் முன்வருவர்.
இவன் திறமை கொண்டு வந்து சேர்த்தது நல் குழாத்தை
இவன் நண்பர் வட்டமும் சேர்ந்தவர் நண்பர் வட்டமும்
என்ன புலகாங்கிதம் அனைத்து துறையினரும் இருந்தனர்.

முதல் வெளிவாரிப்பட்ட அணியில்
தமிழுக்கு செய்த உச்சம் அவ்வணியில் “தமிழ்கவியும்” ஒருவர்
இன்று எம்மை விட்டு சிவமாகி போன
ஒருவன் எமது இந்து 91 அணி சிவகரனும்
ஒருவன்.

எழுகலை இலக்கியப் பேரவையாம் அதன் உயிர் சத்தியம்
இவன் இட்ட வித்தும் இவன் கூட இருந்த சுற்றாரும்
இடுகின்ற உரம் இன்றும் வளர்ந்து நிற்பது கண்கூடு.
இன்று இவன் குழாம் உயர் குழாம் என்பதை வெளிச்சமிடுகிறது.

கற்ற கல்வி ஏட்டுச் சுரக்காயல்ல
பணி என்பது நுனி புல் மேய்வதல்ல
என்பதை நிறுவினான் எங்கள் மூர்த்தி

இதற்கு சான்று சட்டக் கல்லூரியின் முதல் அதிபர் ஆன
இவன் செயற்பாடுகள்
இவன் கீழ் நானும் ஒரு மாணாக்கன் என்பதில் எனக்கும் பெருமை.

உயர் சிந்தனையாளன் நற்பணியாளர்களுக்கு வழங்கிய குடியிருப்பு
அத் தொகுதியில் மனை நிறுவன மனையாளுடன்
கடன் மனு தந்த சத்தியம்.
அவரிடம் விட்டகன்று பல இடர்கள் தாவி
பல நாட்கள் கடந்த போதும்
இவர் பணியின் சிறப்பை சில நாட்கள் முன்னரும்
டைனமோ சுற்றி ஒலித்துக்கொண்டிருந்த வானொலியில்
கேட்டது இன்றும் என் செவிகளில் ஒலிக்கிறது.
அது போதாது இன்றம் வெளி உறவுகளுக்கு
தெரிவிக்கும் துடிப்புடன் பணி என்பது பகை கண்டு ஓடுவது அல்ல.
நாம் பகைவனின் எறிகணைகள் எல்லாம் திசையும் சிதறுவதைக்
கண்டு கடந்தோட
இவன் எதிர்த் திசையில் செல்வதைக் கண்டு
கண்கள் வியந்து மறித்தன.

சென்ற இடமோ தேவிபுரம் பாடசாலை. அன்று தமிழன்
உயிர் காக்கும் உயர்குலத்தோன் பணியாற்றும் வைத்தியசாலைச் சூழல்.

செல்வது அங்கு நடக்கும் ரண களங்களை வெளி உலகிற்கு
தெரிவிப்பதற்கு என நண்பனை பெருமிதமாக எண்ணிச் சென்ற வேளை

என் குடும்பத்தாரின் நிலையினை அடிக்கடி அக்கறையோடு
விசாரிக்கும்நல் நண்பன். இனத்தின் மீது காதல் கொண்ட
நல் ஊடகவியலாளன் எம்மை விட்டுத் தூர சென்ற செய்தி.....



**ச.சஜீவன்,**
வலி.வடக்கு
பிரதேச சபை உறுப்பினர்
யாழ்ப்பாணம்.



# கீர்த்தி மிகு மூர்த்தி...

அவரை நேரில் பார்த்து பேசி அறிந்து கொண்ட சந்தர்ப்பம் மிகவும் சொற்பமே.

ஆனால், அவர் குறித்து பலரும் மூலம் அறிந்து கொண்ட தகவல்களும், செய்திகளும், அவர் எழுதிய இலக்கியப் படைப்புக்களை, அரசியல் மற்றும் சமூக பிரச்சினைகள் தொடர்பான ஆக்கங்களை படித்தும் அறிந்து கொண்டவை ஏராளம்.

அவை அனைத்துமே சத்திய மூர்த்தி என்ற அந்த ஆர்வமும், சுறுசுறுப்பும் ததும்பிய விழிகளுடன் எப்போதும் காணப்படும் இளைஞர் மீது ஒரு அக்கறையுடன் கூடிய அன்பு கலந்த ஈர்ப்பு அவர் மீது ஏற்பட க் காணமாயிற்று.

ஆகவே, தூரத்தில் இருந்தாலும் அவர் குறித்த மதிப்பீடு என்னுள் வளர்ந்து கொண்டேயிருந்தது.

தமிழ் மொழி மீதும் தமிழினம் மீதும் தமிழ்த்தேசியம் மீதும் அவருக்கிருந்த விருப்பார்வத்தின் வெளிப்பாடே அவரை ஓர்மம் மிக்க ஊடகப் போராளியாக மிகக் குறுகிய காலத்தில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் அவரை இனங்காட்டக் காரணமாயிற்று என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு.



தேடிச் சென்று நிதம் தின்று - பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி - மனம்
வடித் துன்பமிக உழன்று- பிறர்
வாடப் பல செயல்கள் புரிந்த - நரை
கூடிப் கிழப்பருவம் எய்தி - தொடும்
கூற்றுக்கிதை யெனப்பின் மாயும் - பல
வேடிக்கை மனிதர்களைப் போல...

என மகாகவி பாரதி பாடியதைப் போன்று ஒரு வெறும் மனிதனாக அவன் வாழ விரும்பியது கிடையாது என்பதை நான் ஆழமாக அறிந்திருந்தேன். அதனால் தான் அவன் வீழ்ந்து படும் ஒரு சமானிய னாக இந்தமண்ணில் வாழ்ந்து சென்ற ஒரு வனாக இல்லாது ஒரு தசாப்தத்திற்குப் பின்னரும் அவனை நன்கறித்த மக்கள் அனைவர் மனதிலும் உயிர்ப்புடன் கம்பீர மாட்டி வாழும் மனிதனாக தன்னை அடை யாளப்படுத்தி வைத்திருக்கிறான் என்றால் இரு வேறு கருத்துக்கு இடமில்லை.

அவனுக்கு மிகவும் பிடிக்காதது சந்தர்ப்பவாதம். மிக உக்கிரமான சிந்தனை கொண்ட இளம் ஊடகப் போராளியான அவ னது காலை, இலக்கிய, அரசியல் மற்றும் சமூகச் சூழல் அவனை ஓய்வற்ற தேடல் கொண்ட பல்துறை ஆர்வாளனாகஅவனை மாற்றியிருந்தது.

அது அவனை எப்பொழுதும் ஒரு உத்வேகமும் பரபரப்பும் கொண்ட இளைஞ னாக அவனை உருவாக்கி இருந்தது.

இதற்கு அவன் வாழ்ந்த காலத்து போர்க்காலச் சமூகச் சூழலும் ஒரு மிக முக்கிய காரணியாகவும் இருக்கலாம்.

இது தவிர்க்கமுடியாத ஒரு அம்சம் ஆகும்.

அவனது இலக்கியப் படைப்புக்களா கட்டும், யதார்த்தத்தை மீறிய கருத்தியல் நேர்மையை ஒரு போதும் புறந்தள்ளிய தில்லை.

இது அவனது சுயம் குறித்த எனது எண்ணப்பட்டை வலுப்படுத்தியது என லாம்.

மனச்சாட்சிக்கு மாறாத அறியாயங் களைச் சமாளித்து செல்லும் அற்பத்தனம் அவனை அடிமை கொண்டதில்லை.

இதுவே அவனை வீழா மனித னாக இன்னும் வாழ வைத்துக்கொண்டு இருக்கிறது. மறைந்தும் தசாப்தம் கடந்த பின்னரும் மக்கள் மனதில் வாழ்தல் அது வும் உயிர்ப்புடன் வாழ்தல் என்பது எல் லோருக்கும் சாத்தியமான விடயமல்ல.

- அது சத்திய மூர்த்திக்கு வாய்த்தி ருக்கிறது.

அவன் தன்நெஞ்சுக்கு நேர்மை யாக வாழ்ந்தமையே அதற்குக் காரணம்.

●





சி.நிஷாகரன்



# சத்தியமூர்த்தி நினைவுகளின் குறிப்புகள்

சத்தியத்தின் பாதையில் சாமானியர்கள் எல்லோரும் பயணிப்பதில்லை. அது சாகாவரம் பெற்றவர்களின் தெரிவு. மிகவும் கடினமான அங்குமிங்கும் துருத்திக் கொண்டு வெளித்தெரியும் தோற்றங்களுக்கூடாக சகிப்புணர்வுடன் கடக்க வேண்டிய பாதை. ஓர் இனத்தின் விடுதலையை வேண்டி மாபெரும் உயிர்த்தியாகங்கள் நிகழ்ந்தேறிய அதே பாதையில் வழித்தடங்கள் மாறாது இறுதி வரை பயணித்தவர் தான் சத்தியமூர்த்தி.

மனித மாண்பில் உயர்ந்த பண்புகளை தன்னகத்தே ஒடுக்கிக் கொண்ட ஒரு மொத்த அடையாளமாக அவரை நாம் பார்க்கலாம். சிரித்த முகம் சீரிய சிந்தனை பக்குவ எண்ணங்கள் எல்லாமே ஒரு மனித மூளையில் பதிய வைக்க முடியாது. ஆனால் எல்லாவற்றையும் அவரிடம் தரிசித்தோம். தேவையறிந்து வலிந்து உதவி செய்யும் பண்பு இயல்பாகவே அவரிடம் இருக்கும். ஒட்டு மொத்த சமூகமே விடுதலையை வேண்டி நிற்கும் போது அவர் என்ன செய்திருப்பார். எமது இனவிடுதலைப் போராட்டத்தின் முழுப்பரிமாணத்தினை அறிந்து வைத்திருந்தார் . அவரது நிறுத்தமில்லாத சிந்தனையோட்டம் முழுவதும் போராட்டம் பற்றியதாவே பரிணமித்திருந்தது.

அடக்குமுறைகள் உச்சமாக நடைபெறுகின்ற போது தன்னை தனது உணர்



வுகளை தளர்த்துவதற்கு மிகச் சிரமப்பட்ட தனை நான் நேரில் அவதானித்திருக் கிறேன்.பல்கலைக் கழகத்தில் நடைபெறு கின்ற "ராக்கிங்" கிற்கு எதிராக தனது பல் கலைக் கழக புகுமுக நேரத்தில் எதிர்ப்பு காட்டிய விதம் இதனையே காட்டி நிற்கிறது. மாட்டுவண்டியில் பல்கலைக் கழகத்திற்கு சென்றமை கண்டனம் தெரிவித்தமை எல்லோராலும் விதந்து பாராட்டியமை என் நினைவிற்கு வருகிறது. தான் சார்ந்த சமூகத்திற்கு அநீதி நிகழும் போது தலைமையேற்று தட்டிக்கேட்கும் துணிவு அவருக்கேயானது.

எனது அலுவலகப் பணிக்கு மேலாக பத்திரிகைத்துறையுடனான பணி அத்துடன் இன்னும் வேறு பணிகளையும் சமாந்தர மாக செய்து கொண்டிருந்தார்.இது சாதா ரண விடயமல்ல.அவருக்கு இருக்கக் கூடிய புறவயமான திறமைகளாயே செய்து காட்டினார்.இத்தனைக்கும் அலுவலகப் பணிகளில் எவ்விதமான தொங்கு வேலை களையும் விடுவதில்லை.மிக வேகமாகவே செய்து முடித்திருப்பார்.தனது மேசை இலாச் சிக்குள் வாசிக்கக்கூடிய புத்தகங்கள் வைத் திருப்பார்.மீத நேரங்களில் வாசித்துக் கொண்டேயிருப்பார்.அவரின் வாசிப்பு எல் லையற்றது.வரையறையற்றது.தேடலும் அவ்வாறே.

அலுவலகத்தில் ஒருநாள் வாசித்துக் கொண்டிருக்கும் போது "என்ன அண்ணை வேலையெல்லாம் முடிஞ்சுதா? என்று கேட்ட போது தனக்கேயுரித்தான ஒரு சிரிப் புடன் கோவைகள் மீது பார்வையைக் காட்டி புத்தகத்தை வாசித்தபடி "ஒவ்வொரு நிமிட மும் ஏதோ ஒரு விடயத்தை கற்றுத்தந்தபடி காலம் நகர்கிறது.அதை அறிந்தவனும் புரிந்தவனுமே வெற்றி பெறுகிறான்.என்று உதிர்த்தார்.அதைக் கிரகிக்க எனக்கு சில விநாடிகள் எடுத்தாலும் அவரின் வாசிப்புக்கு இடைஞ்சல் செய்யாது பேச்சை முடித்தேன்.

புத்திரிகைத்துறையில் இருக்கின்ற ஆர்வத்தின் விளைவாக ஒரு டிப்ளோமா கற்கைநெறி ஒன்றை எழு கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து முல்லைத்தீவு வலயக் கல்வி வலயத்தின் முறைசாரா பிரிவின் அனுசரணையோடு தனது முழு முயற்சியினால் ஆரம்பித்தார்.இதற்கு அப்போது கல்விப் பணிப்பாளராக இருந்த குருகுலராசா தனது ஒத்துழைப்பை வழங்கி யிருந்தார்.நானும் சத்தியமூர்த்தியுடன் அருகி ருந்து உதவினேன்.இதன் போதே சத்திய மூர்த்தியுடனான நட்பு மிகுதியாகியது. இப் பயிற்சி நெறி இரண்டு அணிகளாக நடை பெற்றது.இவற்றில் சுமார் 100 வரையான பயிற்சியாளர்கள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.இன்றும் எமது தமிழ் பத்தி ரிகை எழுத்து துறைகளில் பிரகாசிக்கக் கூடியவர்களில் குறிப்பிடக்கூடியவர்கள் இதில் தளம் அமைத்தவர்களே என்பதை பெருமையுடன் குறிப்பிடலாம்.

இப்பயிற்சிக்காக "பூராயம்" எனும் சஞ் சிகை ஒன்றை பிரசுரித்தோம்.இது நான்கு தடவைகள் வெளியிட்டோம். அச் சிட லுக்கு மிகுந்த சவாலான காலம். எல்லா வற்றுக் குமே தட்டுப்பாடு ஆனால் எமது அலு வலக வளங்கள் எமக்கு உதவின. ஏவ்வித தடையுமின்றி பயன்படுத்துவதற்கு பணிப் பாளர் அனுமதியளித்திருந்தார். ஏற்படும் மேலதிக செலவுகளை சத்திய மூர்த்தி தனது சம்பளத்திலிருந்தே ஈடு செய்தார்.இங்கே ஒரு விடயம் நினைவுக்கு வருகிறது. இச் சஞ்சிகையின் ஆக்கத்திற்காக செய்தி





சேகரிப்பதற்கு குழுவாக பயிற்சியாளர்கள் களப்பணிகளுக்குச் சென்றனர்.அப்போது ஒரு பாடசாலையை தரிசிக்க நேர்ந்தது. அப்பாடசாலையின் குறைகளை கேட்டறிந்து செய்தியாக்குவதே நோக்கம். ஆனால் அங்கே வேறுவிதமான செய்தியாகியது. அப்பாடசாலையில் ஆசிரியர்கள் எவரும் இருக்கவில்லை.மாணவர்கள் மட்டுமே அங்குமிங்குமாக ஓடித்திரிந்தனர்.ஆசிரியர்கள் காலையில் வந்து கையொப்பத்தை வைத்துவிட்டு சென்றுவிடுவார்களாம்.இச்செய்தி வரலாறாகியது தனிக்கதை.இவ்விடத்தில் பணிப்பாளர் சத்தியமூர்த்தியை பாராட்டி ஊக்குவித்தார்.

எமது கன்ரீனில் இவர்தான் பிரதம வாடிக்கையாளர். தன்னைத் தேடி வருபவர்களை உபசரிக்கும் இடம் அதுதான். அவருடைய வீடு மாதிரி. மாத இறுதியில் சம்பளத்தில் பாதி கன்ரீன் கணக்கில் போய்ச் சேரும். நெருக்கமானவர்களுக்கு பிறந்த நாளில் புத்தகத்தை பரிசளிப்பது இவரின் விசேட பண்பு.

2002 மாவீரர்நாள் கோப்பாய் துயிலுமில்லத்திற்கு தனது சகோதரனின் நினைவுத்தடத்திற்கு சுடர் ஏற்றி வணக்கம் செலுத்த கூடவே நானும் சென்றிருந்தேன். அங்கே ஒவ்வொரு நினைவுக்கல் அருகிலும் தென்னம்பிள்ளை ஒன்றை வைத்திருப்பார்கள். திரும்பிவரும் போது அவர் அதை எடுக்கவில்லை.அதனை எடுத்தாலும் எங்கே நாட்டுவது என்ற வினவலுக்கு பதிலாக எங்கட வீட்டை நடலாம்தானே என்று நான் சொல்ல அடுத்த நாள் தனது கையாலே நாட்டியும் வைத்தார்.அது இப்போது பச்சை முகம் காட்டி சிரித்தபடி நிற்கிறது.சத்தியமூர்த்தியின் பச்சைக் குழந்தையின் உள்ளம் போல.

●



## STUDY COURSE OF JOURNALISM

"EZHU" ARTS AND LITERARY ASSOCIATION
PUTHUKKUDIYIRUPPU
MULLAITIVU

This certificate is awarded to ~~Mr./Mrs.~~/Miss. Sinnathurai Maithra of Sithamparam Scheme, Ward No 8, Manthuvil, Puthukkudiyiruppu.

for having completed a study course in Journalism conducted in collaboration with the **Non-Formal Education Unit of the Zonal Education Office, Mullaitivu** and **"The Eelanatham" People's Daily** from 1st August 2001 to 27th January 2002.

The course comprises the following areas:

1. Mass Media
2. Journals, Journalism & Journalists
3. History of Journals & Journalism
4. Reporting & Reporters
5. Psychology of Journalism
6. Varieties of Journalism
7. Varieties of Publications
8. Newspaper & Magazines

*T. Thiruchchelvarajah*
*ADE (Non-Formal Education)*
*Mullaitivu*

*P. Sathiyamoorthy*
*Course Co-ordinator*

*T. Gurukularajah*
*Zonal Director of Education*
*Mullaitivu*

Date: 20th march 2002

No: 12

புதுக்குடியிருப்பில் ஈழநாதம், எழுகலை இலக்கியப் பேரவை ஆகியன முல்லைக் கல்வி வலயத்துடன் இணைந்து முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் சத்தியமூர்த்தியின் நெறிப்படுத்தலில் நடாத்திய இதழியல் கற்கைநெறியின் போது வழங்கப்பட்ட சான்றிதழின் வடிவம்.

# எம்மண்ணின் இந்நாட்கள்
# அல்லது
# இரு பரிமாணங்கள்

நிலவு மறைந்த இரவு
சூழ்ந்திருந்த புல்வெளியின்
இடுப்புயரப் புல்நுனிகள்
சூடிய பனித்துளியை மனமுணரும்,
பசும்பாயின் மேல்விரித்த வெண்துகிலாய்.
குடை விரித்த 'ஆத்தி' யின் கீழ்
போட்டிருந்த சிறு குடிலுள்
தென்னோலை மேற்கிடக்கும் நண்பர்கள்
சென்றியிலே நான் ஊசியாய்த் தோல்புகும் பனி 'சுகமாய்த்
தழுவும் பார்வையிலோ
தூரத்தே உச்சியிலே
பனிமுகர்ந்த காடும் – அதன்
வேரளைந்து ஒடும் சிற்றாறும்
இவையூடே வரக்கூடும்
"அவனும்; கண்தெரியா இருளெனினும்
தெரியுமென் மனதுக்கு"
வீடுவரும் என்நினைவில்
ஊர் உறங்கும் பிள்ளைகளும்
அவனுங்கூடு



பு. சிந்துஜன் (சத்தியமூர்த்தி)



Evergreen Printers, #693, K.K.S Road, Jaffna, Sri Lanka. +94 21 221 9893